## 60-வது திருப்பாடல்

என்ன விதமாம எடுத்துநின் ருடலாம் சிங்கி அது
ஏற்றவு மாற்றவு மிணங்கிநின் ருடிப்பார் சிங்கா.

## திரவிய உறை

வினா:—ஆமா மஉஷூக்கானவளே! அந்த வாசி என்ற நடன சக்கிரத்தை எடுத்தாடுகிற விதம் என்ன மாதிரி.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது இல்லல்லா என்று எற்றி ஹூ என்று இறக்கி விடுகிறது. இப்படியாகப் பழகிக்கொண்டு வருவதுதான் இன்ஸான் கோலத்தை மறதி என்பதை விட்டும் மாற்றிப் பிடிக்கிறதாக இருக்கும். இதன் முழு தாற்பரியங்களையும் நான் எழுதி வெளிப்படுத்தியிருக்கின்ற ஞான மணிமாலை தாற்பரிய உரையில் நல்ல வெட்ட வெளிச்சமாக எழுதிக்காட்டி யிருக்கின்றேன். அதில் போய் பார்த்துக்கொள்ள வேண்டியது என்பதாம்.

## 61-வது திருப்பாடல்

மாற்றிப் பிடிக்க மருந்தென்ன சொல்லடி சிங்கி அது
மாளாமல் மாண்டு மறந்து மிருப்பது சிங்கா.

## திரவிய உரை

வினா:—ஆமா மஉஷூக்கானவளே! அந்தப்படியாக மாற்றிப் பிடிக்கிற ஸாதனம் எப்படி செய்தால் அது மாறும், அதற்கு உபாயங்கள் என்ன.

விடை:—கேளடா ஆஷிரீகானவனே! அதாவது சாகாமல் சாகிறது. கருத்தாகிறது என்னவென்றால் இந்த துனியாவின் ஆசாபாசங்கள் அற்று ஒரு இடத்தில் தனித்திருந்து "நான்" என்கிற அநாதியத்தைப் பஹ செய்கிறதாக இருக்கும் என்பதாம்.



## 62-வது திருப்பாடல்

அட்ட கஜங்க ளறிந்திட மெய்விடம் சிங்கி அது
எட்டு விதமாக எழுதும் பலனடா சிங்கா.

## திரவிய உரை

வினா:—ஆமா மஉஷூக்கானவளே! இன்னொரு விடையைப் பற்றிக்கேட்கிறேன் அதாவது அஷ்டகஜங்கள் என்று ஞானவான்களின் சபையில் பேசிக்கொள்ளப்படுகிறதே! அதன் கருத்து என்ன தான் சொல்ல வேண்டியது.

விடை:—கேளடா ஆஷிக்கானவனே! அதாவது உன்னை கன்ஸுல் மக்பியாகிய கைபான நிலையில் நின்றும் இன்ஸான் ஜடலமாக உற்பத்தி செய்த தாத்துர் றகுமானிய்யு வானது எட்டு விதமான முதங்கொண்டு எழும்பி சிரத்தில் எட்டு ஸ்தலங்களைச் சமைத்து எட்டு வகையான கற்பனையில் எழுதியிருந்த ஸாஸனத்தில் எழுதி முடித்து வெளியாக்கிற்று. இதுதான் அஷ்டகஜம் என்பது. இது ஜடலத்தில் எண்கோணமாகப் பிரிந்து ஸ்தூலத்தின் அஸ்திபாரமாக நின்று கொண்டிருக்கின்றது என்பதாம்.

## 63-வது திருப்பாடல்

உற்ற ஞானப்பொரு ளுத்தியாய்ச் சொன்னதார் சிங்கி அது
உத்தமர் பிருமு ஹம்ம துரைத்தது சிங்கா.

## திரவிய உரை

வினா—ஆமா மஉஷூக்கானவளே! இந்த மஹா ஞான புதையலான இரத்னக் குறவஞ்சியை இந்த பூலோக வாசிகளுக்கு அவசியம் வேண்டி தெய்வ ஸாதனமாக செய்து உதவிய மஹான் யார் தெரியுமா அவர்களைச் சொல்வாயாக.

விடை:-கேளடா ஆஷிக்கானவனே! அவர்கள் யார் தெரியுமா, அவர்களாகிறது இமாம் ஹல்லாஜி மன்ஸூர் றஹ்மத்துல்லாஹி

உடைய ஞானத்துறையில் மூழ்கிய சங்கைக்குரிய சற்குரோதயத்தை வாய்ந்துள்ள ஸ்ரீமத் ஞானமணிக் கர்த்தாவாகிய நாயகம் தக்கலை உத்தமசீல விசால மேதாவாகிய பீர்முஹம்மது சாஹிபு ஒலியுல்லா அவர்களாக இருக்கும் என்பதாம்.

இந்தக் குறவஞ்சியின் திரவிய உரையை ஆராய்ச்சி செய்கிறதற்கு வந்த மகனே! நான் இதில் கொட்டிவைத்திருக்கின்ற திரவியங்களை அள்ளிக் கொள்ளையாடிக்கொள். ஞானமணி, பிஸ்மில் குறம், மஅரிபத்துமாலை, ஞான முச்சுடர் பதிகம், ஞான குறம் ஞான பால், ஞான பூட்டு, ஞான ஒப்பாரி, முதலிய அரிய பெரிய ஞான வேதங்களில் நான் நுழைந்து மூடிகளைத் திறந்து விட்டிருக்கின்றேன், அல்லாஹ்வுடைய ஆண்பிள்ளையாக நீ இருக்கும் பட்சத்தில் தேவையான அளவு அள்ளி வாரிக்கொண்டு பதனமாக வைத்து எஞ்ஞான்றும் அழியாத செல்வாக் குவ்வளவுகை நிலைத்துக் கொள்வாயாக ஆமீன் என்பதாம்.

ஞானரத்தின குறவஞ்சி,
ஞானதிரவிய உரை
முற்றிற்று.

பிஸ்மில்லாஹி

## 2-ம் திருப்பாடல்

# ஞான ஆநந்தக் களிப்பு

## 2-ம் அவதாரிகை உரை

——o——

*தீன் தீன் முஹம்மது தீனே - எங்கள்*
*தீனெங்கள் தீனெங்கள் தீனெங்கள் தீனே*
*தீன் தீன் முஹம்மது தீனே. (தீன்)*

*தீனபி யன்ன குருவாய்த்-திசை*
*ஆயிரத் தெட்டும் ஜபறூத்தி லாடித்*
*தானொளி தான்கண்டு கூவ - இறை*
*தானவ ஞசையால் நோக்கியே பார்க்க*
*ஆன புகழிறை யாசை - அந்த*
*அன்னத்தின் மீதி லனுப்போற் றரிக்கத்*
*தானே சுடராய் வழிந்து - கடற்*
*றன்னிற் றரித்தானைக் கண்டுகொண் டேனே (தீன்)*

(அவதாரிகை உரை) இந்த வரையானது ஆசிரியரின் சொந்த ஞானக் கருத்தைப்பிடித்து எழுதிக் கொண்டு போகிறதாக இருக்கும். அதாவது நேர்வழியான மெய்ஞ்ஞான ஒளியில் தரிப்பட்ட ஆதி முஹம்மதாகிறது ஓர் அன்னப்பட்சியின் சொரூபத்தில் ஆயிரத்தெட்டுத் திசையாகிய ஜடலத்தின் ஆயிரட்டெட்டு நரம்பு ஸ்தானங்களிலும் ஆடி நின்றுக்கொண்டிருந்தது இதற்கு ஆலம் ஜபறூத்து என்று ஹதீது குதுஸியில் வெளியாயிற்று. இதன் உள்ளபடியான கருத்தாவது என்னவெனில், தாய் தகப்பனுடைய ஜடலத்தின் ஆயிரத்தெட்டு நரம்பு ஸ்தானங்களிலும் இரத்த ஊசாட்ட ஓட்டத்துடன் இச்சையில் கலந்து ஆடி யோடி வந்து நின்ற அடி அன்னமானது என்ன? அன்னத்தின் நிறம் என்னவென்று யோசித்தீர்களா? அது வெள்ளையல்லவா! இதைக்கூட வெளிப்படையாய்ச் செல்ல வேண்டுமா! சொல்ல வேண்டுமானால் சொல்

லியும் விடுகிறேன். அதுதான் விந்துநாதம் அதைத்தான் ஞான வான்கள் ஞான தந்திர சம்பிர தாயமாய் அன்னப்பட்சி யென்று சொன்னார்கள் அறியவும். அந்த அன்னமானது ஜபறூத்துடைய ஆலத்தில் இருந்து, தன்னுடைய ஒளிவைத் தான்கண்டு. அதாவது தனக்குள் மர்ம இந்திர ஜாலமாய் வந்து நுழைந்து உஷ்ணமான ரப்பைக் கண்டு கூவிற்று. அவ்விதம் கூவின அன்னத்தை அந்த உஷ்ண வடி வானது தன்னாசையாலே உற்றுக் கிருபையுடன் பார்த்தவுடன் அந்த றப்பாசையானது ஷி அன்னத்தில் அதாவது இந்திரியத்தின் பேரில் ஒரு அணுப்போல் தரித்தவுடன் "இந்த அணுவைத் தான், உமறுப்புலவர் சீறாவில் அணுவினுக் கணுவாய் என்று கடவுள் வாழ்த்தில் சொன்னார்கள்" கண்டு உறுதியைத் திடப்படுத்திக்கொள். அப்பால் அந்த பிரம பரஞ்சோதியானது தன் கபாலத்தின் அணுத்தனையான தூய வொளியின் சாக்கிரமத்தைக் கொண்டு சரீரமான பெரிய கோடி யண்டங்க ளெல்லாம் வெளிச்சஞ் செய்து அதாவது சூடு செய்து "கடல் தன்னில் தரித்தானைக் கண்டு கொண்டேன்" என்ற கருத்தாவது சரீரத்தில் கடல் என்ற நீருடைய உறுப்பானது எது? அதுதான் நேத்திரம். அதற்குள் நின்றாடும் நிருபியாகிய "றூஹால் குதுஸியைக்" கண்டேன் என்பதாம்.

தன்னாசை யால்வந்த நாதம் - அவன்
ரூனே கடலுயி ரோதிய வேதம்
அன்ன தெவையும் படைத்து - வகை
யாவு முருவுக் குயிராய்ச் சமைத்துப்
பின்னா லேவந்து பிறக்கப் - பல
கோல மெடுக்கப் பிரபலஞ் செய்து
மின்னிய மங்குல முன்ன - இந்த
மேதினி நிறைந்தானைக் கண்டு கொண்டேனே (தீன்)

(அவதாரிகை உரை) அவ்விதம் தான் தானாய் எழுந்த ஆசையானது, அக்கினியின் கோலங் கொண்டு இந்திரிய மாயிற்று. அது தானே கடல் என்கின்ற "ஐனில்" பீடங்கொண்டு, ஜடலத்திற்குள் பரம ஆத்மாவாக நிற்கின்றது. இதைப்பற்றி



வேதங்களெல்லாம் சாட்சி சொல்லி விட்டது. இது இப்படியிருக்க மேற்படி உஷ்ணமானது எவ்வகையான சிருஷ்டிப் பொருள்களையும் உற்பத்தி செய்து, அந்தந்த சுருபங்களுக்குள்ளேயும் தானே உயிராக நின்று, ரூபங்களைச் சமைப்பித்து, கடைசியில் ஆலமம் இன்ஸான் என்கின்ற மனுஷகோலத்தில் தான் வந்து பிறந்து, தன்னைக் கண்டு கொள்ளும் பொருட்டு உதயமாகித் தனக்கு உதாரணமாக பலபல பேதாபேதமான சுருபங்களையும் நினைவுக்குள் காணும்படியாக நிர்மித்து அதுவேறு இதுவேறு என்று பேதகப்படுத்திப் பிரபலமாகப் பேசிக்கொள்ளச்செய்து, அவைகளுக்கு ஆகாரமாக மின்னலையும், அந்த மின்னலில் நின்றும் மழை நீரையும் ஏற்படுத்தி, அதன் சம்பந்தமாக இந்த பெரிதான உலகத்தில் எங்கு நோக்கினாலும் ஜீவாத்மாக்களாக நிரப்பிவிட்ட சுயம்பை நான் கண்டு கொண்டேன் என்பதாம்.

வானத்தின் மேகம் பொழிய - இந்த
வையகத் தானிய மெங்கும் நெளிய
ஊனினுன் மாதா பிதாவும் - அவ
னுதிரமே நாதமா யோசை முழங்கி
ஆனொடு பெண்ணு மிணங்கி - வந்த
வாசையி னவனெளி வாசந் துலக்கித்
தானத்தில் வந்து தரித்தே உருத்
தானெடுத் தானையான் கண்டுகொண்டேனே (தீன்)

(அவதாரிகை உரை) ஆகாயத்தில் மேகமானது பொழிந்து வருஷிக்கவும், இந்த பூலோகத்தில் அதன் காரணத்தைக் கொண்டு பலபல தானியாதி விளை பொருள்களையும் விளையச் செய்து, அதன் ஆகாரத்துள்ளே மெதுவாக நுழைந்து இந்திரியமானதால், மாதா பிதாக்களின் நினைவில் தன்னுட்டமாயிருந்த சுபமானது, ஆணுடன் பெண் இணங்கச்செய்து, அவர்களின் இரத்தமே நாதமாக வேலைமானஞ்செய்து, கற்பம் என்ற கலிமாவின் அச்சு இயந்திரத்தில் வந்து பதிவாகி, ஜடலத்தை உருவாக்கி, தானும் அந்த உருவுக்குள் உருவாக ஒளித்துக்கொண்டிருந்த "ரகசிய வடிவை" நான் இன்னதென்று கண்டுகொண்டேன் என்பதாம்.

அந்தக் கருவிந்து நாதப்-அதில்
    அன்னை யுதிரமுங் கூடின சூதம்
அந்த கருவைந்து பூதம்-அது
    ஐந்தெழுத் தாகுமே யோதிய வேதம்
விந்துக்குள்ளே தழல் நீதம்-அது
வீசும் புகையிலே யோடுஞ் சுவாசம்
அந்தக் குதிரைமே லேறு - நந்தம்
    ஆதியைக் நன்ருகக் கண்டுகொண் டேனே. (தீன்)

(அவதாரிகை உரை) அந்த மாதிரியாக உருவுக் கொண்ட கருப் பொருளான (விந்து நாதமானது) தன்னுடைய தாயின் மாதவிடாய் என்ற சூதகத்தால் கோலஞ் சமைந்த குணத்திஞலே, அது ஐந்து பங்காய் மண், நெருப்பு, காற்று, தண்ணீர், ஆகாயம் என்றும், ஐந்து பூதங்களாய் ஐந்து பஞ்சாட்சரமாக வடிவுகொண்டும், நான்கு வேதங்களையும் தனக்கத்தாட்சியாக ஏற்படுத்தி விட்டு வி விந்துக்குள்ளே அமைந்திருந்த அக்கினியானது வெளி தோன்றி, ஆனந்த பிரம சொரூப சுடர்விட்டு எரிந்துகொண்டு நின்றது. அப்படி சுடர் விட்டு நின்ற சுடரானது. அச்சுடரில் நின்றும் ஒரு புகையை எழுப்பி விட்டு அப்புகையே சுவாசமாக ஆடவைத்து நமது ரந்திரங்களில் ஆடிகொண்டிருக்கின்றதே அந்த சுவாசக் குதிரையின்மேல் தானே சவாரி செய்து கொண்டு நிற்கின்ற ஆதிவஸ்துவாகிய இராஜக்கருவியை அதாவது ''றப்பை'' நான் இன்ன வஸ்து தான் என்று திருஷ்டாந்திர மாகக் கண்டு கொண்டேன் என்பதே.

உச்சித மாளிகை கட்டி - அதில்
    உறுப்புக ளாயிரத் தெட்டையு மொட்டி
வச்சிரத் தால்வளை பூட்டி - வளை
    சரியாமல் நரம்பெல்லாம் கயிராகக் கட்டி
மச்சு வீட்டுலகிற் பிறந்து - கொலு
    மண்டபத்துக்குள் ளேதாஞ யிருந்தே
வைச்சுக் கைபிற்சூட்ச மாட்டும்-நம்மை
    வருத்த குதாவையான் கண்டு கொண்டேனே. (தீன்)

(அவதாரிகை உரை) இன்னது தான் என்று எண்ணமில்லாமல் இருந்த நினைவானது, கடைசியாக யாரும் அதிசயப்படும்படியான



ஒரு சிறுதுளி இந்திரியத்தாலே ஜடலம் என்ற ஒரு வீட்டைக் கட்டி முடித்து, அதிலே உறுப்புகளாகிய ஆயிரத்தெட்டு கருவிகளையும் அதிலே ஒட்டியிருக்கச்செய்து, வச்சிரம் என்ற உஷ்ண நாடியை அதில் விளக்கெரியச் செய்து, அவ்விதம் எரியும் காந்தியானது அமர்ந்து விடாமல் சரீரத்தை நரம்பு என்ற கம்பிகளால் தொங்கித்துக்கட்டி, சிரசு என்கின்ற மெத்தை வீட்டில் பொற்கட்டில் விமானக் கண்ணுடியாகிய நேத்திரத்தில் தன் உதய பீடத்தை ஏற்படுத்தி, தன் வல்லமையை மூச்சென்கிற ஒரு கச்சைக்கயிற்ருல் சூட்சம் ஆடிவருகின்ற ''குதா என்னும் றப்பை'' நான் கண்டு கொண்டேன் என்பதாம்.

கண்டதுங் கேட்டது மல்ல - அங்குக்
    கருதி முடிந்த தலங்களு மல்ல
அண்டமும் பிண்டமு மல்ல - நல்ல
    அகார வுகார சிகார மு மல்ல
மண்டல மூன்றுக்கு ளல்ல - மறை
    வாக நின்றிடும் வாசியு மல்ல
அன்ருதி யெங்கு நிறைந்து - நம்மை
    ஆளும் றஹ்மானைக் கண்டுக்கொண் டேனே. (தீன்)

(அவதாரிகை உரை) நாம் காணக்கூடிய பொருளுமல்ல. அல்லது நாம் இது பரியந்தம் அறிவுடைய தெளிவு இல்லாமல் சாஸ்திரிகளின் வாயிலாகக் கேட்டோமே அந்த மாதிரியுமல்ல. அதில் இதில் என்று பலபல ஷெய்குமார்களும் பலபல விதமாக யோசித்துச் சொன்னர்களே அந்த ஸ்தலங்களுமல்ல அல்லது வானத்தில் இருக்கிறதாக சில ஐக்கியங்கள் ஏற்பட்டிருக்கிறதே அப்படியுமல்ல. பூமியிலா என்று நோக்கும் போது அப்படியுமல்ல, அல்லது அலிபா அதுவுமல்ல. அல்லது ஹா என்ற ஊமை எழுத்தா அதுவுமல்ல. அல்லது ஸீன் அதுவுமல்ல, அல்லது பூமி முதலிய மற்ற மூன்று உலகங்களிலும் இருக்கிறதா என்று யோசிக்கும் போது அப்படியுமல்ல. அல்லது இரகசிய தோற்றத்துடன் நின்றேடக்கூடிய உதானவாயுவா அதுவுமல்ல அப்படியான குணத்துடன் எல்லா தோற்றப் பொருள்கள் தோறும் பொதுவற

நிறைந்து ஜீவபொருள்களை நடத்திக்கொண்டு வருகின்ற சுயம்பான ''ஹக்கை'' நான் கண்டு கொண்டு விட்டே என்பதாம்.

கண்டதுங் கேட்டதுந் தானே - அங்குக்
கருதி முடிந்த தலங்களுந் தானே
அண்டமும் பிண்டமுந் தானே - நல்ல
அகார வுகார சிகாரமுந் தானே
மண்டல மூன்றதுந் தானே - மறை
வாக நின்றிடும் வாசியுந் தானே
அன்ருதி யெங்கு நிறைந்து - நம்மை
ஆளும் றஹ்மானைக் கண்டுக்கொண் டேனே (தீன்)

(அவதாரிகை உரை) அருப தோற்றத்தில் மேலே சொல்லிய மாதிரியினுல் சொருப தோற்றத்திலேயே நாம் பார்க்கிற மலுஹர்கள் எல்லாம் அதுதான், கேட்கின்ற வேத நூல், பிரசங்கம் எல்லாம் அதன் அத்தாட்சிதான் ஞானவான்கள் திட்டப்படுத்திக் காட்டிய ஸ்தலங்களெல்லாம் அதனுடையதுதான். ஆகாயமும் அதுதான் பூமி என்பதும் அதன் ஸிபத்துதான், அலிபும் அதுதான். ஹூ என்ற ஊமை அட்சரமும் அதுதான். ஸீன் என்ற எழுத்தும் அதுதான் மூன்று உலகமும் அதாவது முக்கமலங்களும் அதன் வெளிச்சஞ் செய்யக்கூடியதுதான். இவைகளுக்கிடையே சுவாச மயத்துடன் மயமாய் நிற்கும் பிராணவாய்வும் அதுதான் இவ்வித அநந்தக்கோடி ஜீவஜந்துக்களாக உருவெடுத்து ஜாலம்பர ஹிதமாக அரசு செலுத்திக்கொண்டு வருகின்ற ''றஹ்மான்'' என்ற சுத்தபரிபூரணத்தை நான் கண்டுகொண்டேன் என்பதாம்-

ஊத்தைச் சடலம் படைத்து - உலை
யாமலே யுப்புக் கடலைப் புகட்டி
வார்த்தைப் பசப்பிட்டு வைத்து - வகை
யாகவே ஒன்பது வாசலு மிட்டு
ஆத்தும மென்றும்பேர் வைத்து - ஐந்து
பேரையுமொன்ருக வாடவும் வைத்துக்
காற்றைப் பிடித்தே யடைத்தே - ஆர்க்குங்
காணமல் நின்னைக் கண்டுக்கொண் டேனே (தீன்)



(அவதாரிகை உரை) எந்த நேரமும் அழுக்கும் சிக்கும் உடைய சரீரத்தை உற்பத்தி செய்து, இந்த சரீரம் உலைந்து கெட்டுப்போகாதபடி உப்புக் கடலான வியர்வை நீரை அங்கு ஆதிக்கமும் ஏற்படுத்தி, அதற்கேற்ற ஒரு பரஞ்சோதி அக்னியின் இயந்திரத்தைக்கொண்டு, நாட்டம், ஒட்டம், தேட்டம், ஆட்டம் இவைகளை உண்டாக்கி, இவைகளினுலே பலபல விதமான பாஷைகளாலும் பேச்சு வார்த்தைகளை உதயமாக்கி, வகை வகையான கோட்டை வாசல்கள் ஒன்பதும் திறந்து வைத்து, இவ்விதம் கட்டிய ஒரு சரீர வீட்டுக்கு ஆத்மம் என்று பேர் நாமமும் சூட்டி, இன்னும் அதற்கு மண், தண்ணீர், அக்னி, காற்று, ஆகாயம் என்கிற ஐந்து சுத்த வீரர்களைக் கொண்டு அந்த வீடு அன்ருடம் ஆடவோடச் செய்து, அந்தத் துருத்திக்கு சுவாசம் என்ற காற்றை வேண்டிய அளவு உள்ளே செலுத்தி அடைத்து வைத்து அதற்குள்ளே ஒரு பூதங்களுக்கும் தெரியாமல் நிற்கின்ற ''றப்பை'' நான் பிரயாசையின் வைராக்ய மஹிமையாலே ஒரு மட்டும் இன்னது தான் என்று கண்டு கொண்டேன் என்பதாம்.

ஓதிய வேங்காரக் கோட்டை - யதி
லொன்பது வீதி யொழுங்கான தோட்டஞ்
சாதிக் குதிரைதான் வேகஞ் - சவு
தாரி மேற்கொண்டு நடத்தினு னிதம்
வீதிக்கு வீதி குதிரை - விட்டு
வேடிக்கை யாகப் பரியை நிறுத்திப்
பாதமில் லாப்பரி யேறும் - நம்மைப்
படைத்த பிரானையான் கண்டுகொண்டேனே. (தீன்)

(அவதாரிகை உரை) அடே, ஞானத்தை உணர்ச்சி பண்ண வந்த மகனே! நீ பள்ளிக்கூடத்தில் இருந்து அரி என்று படித்தாயே, அந்த ஒ வன்னுவைக்கொண்டு அமைத்து இருக்கின்ற கோட்டையான தலையின் கண் ஒன்பது வகையான வீதிகளும், ஒரு ஒழுங்கான தோட்டமென்கிற புருவமத்தியும் இருக்கிறது பார்! அதில் ஜாதியாகிய றூஹுல் குதுஷியின் உஷ்ணத்தின் ஆவியால் புகைந்து வருகின்ற சுவாசத்தின்மேல் சவாரி செய்து, ஜடலத்தின் எல்லா

அவயங்க ளெல்லாவற்றிலும் தன் நீதம் என்ற காந்தியை எழுப்பிவிட்டு நடத்தி வருகிறது. அவ்வாறு வருகிற அந்த ஜனுல் எகினுனது தான் உதயஞ்செய்து அந்த சுவாசத்தை அங்கிருந்து மற்ற கீழ் வீதிகளான உந்தி, முண்டகம், மூலாதாரம் முதலிய பிண்டஸ்தலங்களிலும் செலுத்தி, அன்ருடம் விஜாரனை செய்து, வேடிக்கை காண்பித்து, அந்தக் கால் இல்லாத குதிரையான வாசியில் நேசித்து இருக்கின்ற நம்மைப்படைத்த ''றப்பானவனை'' நான் கண்டு கொண்டேன் என்பதாம்.

கொள்ளைக் குதிரைகள் கோடி - அவன்
கோட்டை யழிக்க வருகுமே யோடி
வெள்ளைக் குதிரைமே லேறி - வீதி
தப்பாமற் சுற்றிப் பரியை நிறுத்திக்
கள்ளனைக் காவலாய் வைத்துத் - தானும்
கள்ளனுக் குள்ளே கலந்தே யிருந்து
உள்ளுற்றுக் கோட்டையே யாளும் - நமக்
குள்ள பிரானையான் கண்டுகொண் டேனே. (தீன்)

(அவதாரிகை உரை) இன்னமும் அந்த சரீர மென்னும் கோட்டையை அழித்து விடுவதற்கு கொள்ளைக் குதிரைகளாகிய நோய்கள் அனேககோடி ஓடிவருகின்ற ஸ்தலமாகயிருக்கும். ஆனதால் அதில் கொள்ளைக் குதிரையாகிய விந்து நாதத்தின் பேரில் ஏறி இருந்துகொண்டு, ஜடலத்தின் ஒவ்வொரு உறுப்புகளிலும் பரியாகிய வாசியை வையாளிவிட்டு, அப்பாலே தன்னுட்டம் என்ற நினைவில் தரிபட்டு, ஊசாட்டம் ஒடுங்கி, இன்னும் அந்த மாநுடத்தில் கள்ளனுகிய பித்தென்னும் பகையாளியைக் காவல் செய்பவனுக வைத்து ''தான்'' என்ற நினைவும் அந்த பித்தத்துடன் உஷ்ண வாவுகளாகக் கலந்திருந்து, உடலுக்குள்ளே ஒளிமயமாக அமர்ந்து, சரீரக்கோட்டையை அடவளைத்து, அரசாட்சி புரிகின்ற உள்ளமை வஸ்துவாகிய அந்த உஜூதை, அதாவது மெய்யான ஒளிவாகிய '' அல்லாவை '' நான் கண்டுகொண்டேன் என்ருர்.



உச்சிக்கு நேரே கிழக்கே - நந்த
மூருக்கு மேலே பெருவெளி தன்னிற்
பச்சைப் புருவந்து மேயும் - அதைப்
பாங்குடன் மெல்லப் பழகிப் பிடித்துக்
கச்சைக் கயிற்ருலே கட்டிக் - கலி
மாவுடன் தேனைக் கலந்து புசட்டி
அச்சமில் லாக்கூட்டி லடைத்து - நந்தம்
ஆதியை நன்ருகக் கண்டுகொண் டேனே. (தீன்)

(அவதாரிகை உரை) தலையில் உச்சி என்றது எல்லோருக்கும் தெரிந்த தல்லவா? அதற்கு நேரே கீழ் பாரிசமாக இருப்பதாகிய மூக்கு முனையாகிய புருவமத்தியிலே, இன்னும் இன்ஸான் உடைய சுய ஊராகியது மண் மண்ணுடைய மகாமானது ஜடலத்தில் தாவு அல்லவா? அதற்கு மேலே தெரியப்பட்ட உள்நாவின் கோட்டை வாசலைத் திறந்து பார்த்தால் ஆலம் கபீர் தெரியும் அதாவது:- ஒரு பிரமாண்டமான ஆகாயவெளி தெரியும். அதுதான் ஓங்காரக் கோட்டை யென்று ஞானவான்கள் அறிகுறியாகச் சொல்வார்கள். அதற்குள்ளே பச்சைப் புருவாகிய காற்றுடை சுவாச கலையானது வந்து உலாவும். அதை மகா இன்பமான வைராக்கியத்துடன் நாளா வட்டத்தில் பழக்கஞ் செய்து பிடித்து, ஒடியாத கயிருகிய உறுதியைக் கொண்டு, நல்ல வரைந்து கட்டி, அந்தக் கட்டுடன் கலிமாவில் இன்பந்திரண்ட தேனுயிருக்கின்ற ''லாஹூ'' அர்த்தப் நான் இல்லை. அதுதான் என்னும் நினைவைக் கலந்து ஊட்டி. அதிலே பின்னடையாத சந்தேகமற்ற தன் நாட்டத்தைப் பொருத்திவிட்டு, காரியம் ''இது'' என்பதைத் தெரிந்து கண்டு கலி தீர்ந்து கொண்டேன் என்பதாம்.

உள்ளக் கடலுக்கு மேலே - அதி
லோங்காரமொன் றிமான் வட்டத்துக் குள்ளே
வெள்ளைப் புருவந்து மேயும் - அதை
மெல்லப் பிடித்து விதனப் படாமல்

கள்ளக் கயிற்ருலே கட்டக் - கலி
மாவெழுத் தாலே கரைத்துப் புகட்டி
அல்லா திருக்கூட்டி னின்ற - நந்தம்
ஆதியை நன்ருக கண்டுகொண்டேனே. (தீன்)

(அவதாரிகை உரை) இருதயம் என்னும் வற்ருத சமுத்திரத்திற்கு மேலாலே, தெரிகின்ற ஓங்காரக் கோட்டை என்னும் முக மண்டலத்தில் ஈமான்னுடைய வட்டவடிவு தெரிகிறதே, அதுதான் நேர்ர மத்திபம். இதில் வெள்ளைப் புருவாகிய கபாலம் அதாவது:—மூளை மண்டலத்தின் ஒளிவாகிய றூஹுல் குதுஸியானது அங்கே ஒரு கஸகஸாவைப்போல் ஒரு ஒளித்தோன்றி நிற்கும். அந்தப் பரஞ் சிவத்தை மெல்ல மெல்ல மனவாசியின் பழக்க நடையால் உறுதிப்பிடியால் பிடித்து, சந்தேக மென்னும் கசட்டைக் கொண்டு வேதனையில் ஆக்கிவிடாமல், கள்ளக் கயிறு என்கிற மௌனம் என்றதால் அதை ஓர் மையாகக் கட்டி, கலிமாவின் ஓர் எழுத்தாகிய "ஹூ" என்ற ஏற்ற இறக்கத்தால் திருப்பி மாற்றிக் கொண்டு, அல்லா என்னும் வேறு இணைதுணை யன்றிய தன்னுட்டமே தான் என்கின்ற வைராக்கிய கூட்டில் அடைத்து, வைத்திருத்திய பிறகு அது எதுவாகத் தோன்றிற்ரு? அதையே, "றப்பாக" நான் கண்டுகொண்டேன் என்ருர் பிரபு.

இல்லென் றெழுத்தைப் பற்றி - இரு
வாசலைப் பூட்டி யடைத்துப் பிடித்துக்
கொல்லன் றுருத்திக்கொண் டூதி - நல்ல
கோலமாய் மூலக் குகையை யெழுப்பி
வில்லின்மேல் நாணம்பை ஏற்றி - வெகு
வேகப்மா யொன்பது வாசலடைத்து
அல் ஹப்தி லொன்ருகி நின்ற - நந்தம்
ஆதியை நன்ருகக் கண்டுகொண் டேனே, (தீன்)

(அவதாரிகை உரை) யாரடா உண்மையான வல்லகையைப் பற்றி விஜாரிக்க வந்த கனவானே! இந்த இந்த இடத்தில் பெரிதான உடைவுகள் வெளியாகிற படியாலே நீ இந்த இடத்தில் அறிவைத்



தெளிவாக்கிக் கொண்டு வியாபகமாக சற்று நில்லப்பா. கலிமாவில் மத்திய ஸ்தான மாகவும், ஆராதாரத்தின் கமல அஸ்தி வாரமாகவும் ஆகிய "இல்" என்ற மணிமந்திரத்தை சற்குரு காட்டிக் காட்டிய உறுதி யென்னும் வைராக்கியப் பிடியால் கடைபிடித்து நின்று, இருவாசலாகிய ரேசகம், கும்பகம், என்னும் சூரிய சந்திர கலைகளையும் அந்த வைராக்கியத்தோடும் பொருந்தச் செய்து, நேரான பழக்கத்தில் நடத்திக் கொண்டதின் பின்னல், அந்த ஒரே பொருளான மனவாசியை "நப்ஸ் முத்ம, இன்னுவின்" கோலத்தையுடைய தாமரைக் கமலத்தில் நிறைந்து நிற்கும் படியாக பூட்டி யடைத்துக் கொண்டு, இந்த சரீரத்தை ஸ்வாச பந்தத்தினுடன் சம்பந்தப் படுத்தி சஹிக்கும் பொருட்டு ஊதியெழுப்பி விட்டு, இந்த இன்ஸானிய்யா என்னும் உருப்பிண்ட மானது தான் இருந்த அசலை யெந்திக் கொள்ளும்படி ஒன்ருன யாதை அஸ்தியில் அதாவது:—மூலாதாரத்தில் அக்னி பிரவேசப்படுத்தி, துடக்கைக் கழுவி, ஒரு ஜோதியமாய் புருவ மத்தியில் வீசி மறைகின்ற ஐனுல் எகீன் அல்லது றூஹுல் குதுஸியின்மேல் நாட்டத்தை நாணுகவும், ஒன்றுபட்ட சுவாசத்தை அம்பாகவும் கொழுகி, அதி சீக்கிரத்தில் நவ துவார வாசல்களையும் அடைத்து, அலிபு, லாம், ஹே, மீம், தால் இந்த ஐந்து அட்சரங்களிலும் ஒன்ருகிய "ஹூ" என்ற தஜல்லியாக நின்ருடுகின்ற ஆதி வஸ்துவை யாதொரு சக்கின்றி நான் தெரிந்து கொண்டேன் என்பதாம்.

கோலமா மூலக் குகையைப் - பல
கோடிசெய் விந்தைக் கடலுக்கு மேலே
மேலொளி வாலைந்து கோட்டை - நடு
வோங்காரமொன் றீமான் வட்டத்துக் குள்ளே
நீலமாய் நின்றதை விட்டு - அதை
நீங்காத பச்சைநி றத்தையும் விட்டுச்
சீலமாய் நினற தெளிவைத் - திற
மாகக் குதாவையான் கண்டுகொண் டேனே, (தீன்)

(அவதாரிகை உரை) வல்லமையரான தெளிந்த அறிவைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வந்த கனவானே! இதோ பிரபு என்ன சொல்லு

கிருர் பார்! இந்த ஜடலத்தின் தற்சொருபத்தில் வடிவுகொண்டு அமைந்திருக்கும் மூலமென்ற அக்னி மயத்தை பலடல கோலத்தில் பிரித்து வைத்திருக்கும் விந்தின் நிறமாகிய வெள்ளைக் கடலுக்கு சற்றுமேலே அதாவது;- ஒரு இஞ்சி தூரத்திற்கு மேலாலே உண்மையான மெய் ஒளிவானது ஐந்து விதமான வர்னக்கோட்டைகள் தெரியும். அதன் குறிப்பை உன் பிர்மார்களுக்குப் பதிலாக நான் அறிவிக்கிறேன் கூர்ந்து உணர்ந்து கொள். அந்த வெள்ளைக்கு நடுவாலே ஓங்கார மென்னும் ஈமான் வட்டம் இருக்கிறது அதற்குள்ளே நீலம்போல் ஒரு வட்டவடிவு தெரியும். அதை நீங்காமல் சப்பர்தமாகவே, ஒரு பச்சை வீடு தெரியும் அதையும் விட்டு, அதற்கு மப்பாலே அறிவுக்குள் அறிவாய் ஒரு ஜோதி விளக்கானது கடுகுப்பிரமாணம் பளிரென்று துலங்கும். அதுவே திட்டமாக ''றப்பென்று'' நான் கண்டு ஷாகிது சொல்லுகிறேன் என்ருர்.

ஒன்ருக்கு ளேவர் பிறந்து - இந்த
உலகத்தை யாண்டேய யிருந்தே யிறந்து
ஒன்றையு நால்வ ரிழந்து - அந்த
வொன்றையே நால்வருங் கொலுவிற் சிறந்து
பண்டுள்ள நீதஞ் செலுத்திப் - பர
மைந்துமப் போதங்கொன் ருக நிறுத்தி
அன்று மின்று மென்று முள்ள - நந்தம்
ஆதியை நன்ருகக் கண்டுகொண் டேனே (தீன்)

(அவதாரிகை உரை) ஒன்ருகிய ஆகாயத்தில் நின்றும் அதாவது:—நினைவுக்குள் இருந்து மற்ற ஐந்து வகையான பூதங்களும் உண்டாகி, அவைகளின் சுய கிருத்தியங்களைக் கொண்டே உலகப் பொருள்களை உண்டுபடுத்தி, தனித்தனியே அரசாட்சி செய்து, பின்னல் அந்த பொருட்கள் சென்று போகும்போது மற்ற நான்கு பூதங்களும் அந்த ஒன்ருகிய நினைவின் உதயத்தைக் கையிழந்து, மேற்படி உயிர்கள் இருந்து வாழுங்காலத்தில், மேற்படி நான்கு பூதங்களும் தங்கள் கிருத்திய நாட்டங்களையல் அந்த ஒன்ருகிய



தன்ஞட்டமென்னும் நினைவுக்கு ஒற்றுணர்ச்சி காட்டி, தேத்திரங்களின் மூலியமாக கபாலமென்னும் மண்டை மூளைக்கு நடுவே கொலுவாசனம் இருக்கும் படியாகச் சிறப்புச் செய்து, ஆதியில் அதாவது:— அஹதியத்தில் தான் எப்படி கன்ஜுல் மகுபியாவாக நாட்டத்தில் அமைந்து இருந்ததோ! அப்படி தாய் தகப்பன்களுடைய நாட்டத்தில் மறைவாக இருந்து, தன்னுடைய ஊறு குணங்களை நடத்திக்கொண்டு வந்து, அப்பால் அசல் வஸ்துக்களான பூதங்கள் ஐந்து தனக்கு அருகில் இருந்து வாழும் படியாக திட்டப்படுத்திக் கொண்டு வந்து, அன்றும் ஆதியில் தகப்பன் தாய்களின் நாட்டத்திலும், இன்றும் அப்பால் தானுகிய ஜடலத்தின் தேத்ரங்களிலும் மென்றும் இனி யெப்போதும் அழியாமல் சித்தி பெற்றுள்ள முதன்மை வஸ்த்தாகிய ''றப்பை'' இன்ன வஸ்து தான் என்று சந்தேஹமறக் கண்டு கொண்டேன் என்ருர்.

நூறுநூ ருயிரங் கோடி - காலம்
அறிவெல்லா மானந்தக் களிப்பாகப் பாடிப்
பாரெல்லாந் தீனை ரறிய - என்றன்
வாக்கு மனதுடன் வையகர்க் குரைத்தேன்
பாருள்ள தீன்குலத் தோர்க்கு - இன்ற
பாரக் கடலைக் கடுகினைப் போலே
பீரு முஹம்மது செஞ்சொன் - மிகப்
பிரியமா யுரைத்திட்டேன் ஆமீன் ஆமீன். (தீன்)

(அவதாரிகை உரை) இந்த இடத்தில் மஹான் அவர்கள் ''ஆறு நூருயிரம் கோடிகாலம், என்று ஒரு துல்லியமான கணக்கு உள்ள வருஷ காலத்தைக் குறிப்பிட்டதற்கு நிர்மூடஞானிகள் தங்கள் மனதில் வந்தபடி யெல்லாம் பொருள் பிதற்றி ஒழிகிருர்கள். அதன் மர்மம் அப்படியெல்லாம் அல்ல, உண்மை யெப்படி யானல் ஸாஹிப் யவர்கள் இந்தப் பூலோகத்தில் 300-வருஷகாலம் ஜீவித்திருந் திருப்பதினலே சுவாசக் கணக்குடன் அன்றடம் நாள் கணக்கையும் ஒரு சேரச்செய்து, நான் ஆறுநூறு ஆருயிரம் கோடி காலம் ஜீவித்திருந்து அறிவைத் தெரியாமல் உலக மயக்கத்தில் மருண்டலையும் பாமர ஜனங்கள் கண்டு தெளிந்து ஈடேற்

றம் பெற்றுக்கொள்ளட்டும் என்று, ஆநந்தக் களிப்பான அறிவை யெல்லாம் பாடலாகப்படி நேர்வழியான மெய்யைக் துடந்தவர் கள் அறியும் படியாக, ஏழு சப்த சாகரங்களையும் ஒரு கடுகுக்குள் நுழைத் தடைத்து விட்டது போல் அந்த ஆனந்தக் களிப்பை தற் கலையூரில் இருந்து வசிக்கும் பீர் முஹம்மதாகிய நான் திரும்பவும் பிரீதியுடன் சொல்லி வைத்தேன் என்றுர்கள்.

ஆனந்தக் களிப்பின் உரையில் நான் ஒரு விதமான விளக்க நடையால் வெளிப்படுத்தினேன். கூறிய அறிவுடைய தனவான் களுக்கன்றி மற்ற பண்டி அறிவுடைய தோஷிகளுக்கு இது ஒரு சிறிதும் பயன்படாது. அப்படித் தனக்கு விளங்காது போன புண்ணியவான்கள், தங்கள் வாயை இதனளவில் பிதற்ற விடாமல் மூடிகொள்ளும் பொருட்டு அவர்களை நான் மிக்க வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆமீன் ஆமீன்.

அவதாரிகை உரை

முற்றிற்று.

# திருமெய்ஞ்ஞான சரநூல்

## திருமணி உரை.

———:o:———

### 1-வது திருப்பாடல்

————

எண் சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

பொன்னுன மெய்ஞ்ஞான சரநூ லென்னும்
புகழ்பெரிய சாஸ்திரத்தின் புதுமை தன்னை
இந்நிலத்தில் லறியாத மாந்தர்க் கெல்லா
மெடுத்துரைக்கும் பரிசுதனை யியம்பக் கேண்மோ
முன்னுன சாஸ்திரமாங் குசக லத்தின்
முன்னிலையிற் றடியென்ற பெருமை தோன்றக்
கன்னல்ரசச் செந்தமிழின் கவிதை யாகக்
கருத்துறையான் கவலலுற்றே னுலகத் தோரே.

(திருமணி உரை) ஓ. உலகவாசிகளே! அழகற்ற பொன்னைப் போன்ற மெய்ஞ்ஞான சரநூல் என்கிற புகழ்ச்சிக் குரிய யெரிய சாஸ்திரத்தின் உண்மைப் புதுமைகளை இந்த உலகத்தில் அறிந் தில்லாத மானுடவர்க்கங்களுக்கு நான் எடுத்து விபரிக்க, வந்த மாதிரியைச் சொல்லுகின்றேன் கேளுங்கள். முன் செய்து வைத் தார்களே! அந்த நாதாக்களின் சரநூல் சாஸ்திரங்களான குசவன் செய்த பானைப் பண்டங்களுக்கு எதிரே தடிகொப்பு காரன் புகுந்த பெருமையாக, கருப்பு இரசந்தோன்றும் இனிதான செந் தமிழ்ச் சொல்லைக் கொண்டு பாடலாக கருத்தை விளக்கி விட்டேன் என்பதாம்.

இந்தப் பாடல் உண்மையும் அவயடக்கமும் பெரும்படியாக, மஹான் அவர்கள் பாடியதை காண்க.

## 2-வது திருப்பாடல்

உலகவர்க்குச் சாநூலை யொழிப்பில் லாம
லோதும்வகை யேதெளவே யுவந்து கேளாய்
நிலைகருமம் நிலையாது நெறியாய்க் கூறும்
நீடூழி வாழ்வரசு நிலைப்பதோடு
விலங்குவதும் வருங்காலஞ் செல்கா லங்கள்
வியனுறவே நிகழ்காலம் மரணகாலம்
கலைபெரிய விந்நூலின் கார ணத்தின்
காட்சிதனைக் கருதிப்பார் காணுந் தானே.

(திருமணி உரை) இந்த பூமியின் கண் உள்ள மானுடர்களுக்காக வேண்டி சுவாசம் என்னும் சரத்தை விபரிக்கும் படியான சாஸ்திரத்தை யாதொரு ஒளிப்பும் வஞ்சகமும் இல்லாத படியாக நான் சொல்ல வந்திருக்கிறேன். அது எப்படி என்றால் :— கேளுங்கள் உலகவாசிகளே! எந்த ஒரு கருமத்தைப் பற்றியும் இது நிலையாகுமா? அல்லது நிலையாகாதா? என்று திட்டப் படுத்திக் கொள்ளவும், எக்காலமும் சரீர சுயாதின அரசாகிறது நிலை வரப் படவும், விலகி நிற்கும்படியான கை கூடாத வஸ்துகள் சமீபித்து வந்தடுக்கவும், இன்னமும் வருங்காலம், செல்காலம், நிகழ்காலம் இவைகளுடன் மரணத்தை அறியக்கூடிய காலமும், வேத சாரங்களெல்லாம் தொடர் பிடியாக கலந்துபோய் இருக்கும் இந்த மஹா கனதியான மெய் சாஸ்த்திரத்தை நல்ல உணர்ந்து அதன் வல்லமை தெரிசனமான ஏற்ற இறக்க நடையால் பழகிப்பார். அப்போது தெரிந்து கொள்ளக் கூடும என்பதாம்.

## 3-வது திருப்பாடல்

கருநிலையிற் றரித்தகனத் பொறியின் காட்சி
கதித்துலவும் வாயுவொடு கலந்தொன் றுகி
உருவெடுத்தே யுயிரென்று முடலைச் சூழ
வோடிவருஞ் சரமாக வுடலுக் குள்ளே



திருநிலையி லைவரையும் பிரியா நாடித்
திசைவாயு திரிகோண மறுகோ ணத்திற்
சுருக்குவலை தாமசை நூற் சொருகும் வாறுய்ச்
சுழன்றுவரும் ராட்டினத்தின் சுழலைப் போலே

(திருமணி உரை) யாரப்பா ஞானசரத்தை அறியவந்த வல்லமையாளவனே! இந்த இடத்தில் சற்று ஊன்றி யுணர்ந்துபோ. விந்து நாதத்தின் சம்பந்தப் பட்ட அக்னியின் சுடரானது, ஜடலத்தின் அவயவ ஸ்தாணங்கள் தோறும் உலாவி வராநின்ற சுவாசத்துடன் கலந்து, இரண்டும் ஒன்றுகி, இந்த இன்ஸான் கோலத்தைத் தானே சுமந்துக் கொண்டு வந்தது முதற்கொண்டு, இந்த சரீரக் கூட்டைச் சூழ்ந்து வியாபித்து ஓடி வரக்கூடிய மூச்சாக அந்தந்த மகாம்களில் ஒளிவுடன் நிலைத்துக் கொண்டு நிற்கிற, குருநாடி என்னும் றூஹூல் குதுஸின் சொந்த நாட்டத்தைத் தன் நாட்டமாகக் கொண்டு சரீரத்தின் திசைகளான சிரசில் முக்கோணங்களிலும், சிரசுக்குக் கீழ் திசைகளான ஆருதாரம் என்னும் அறு கோணங்களிலும் சென்று மீன் பிடிக்கும் அகன்ற வலைகளுக்குள்ளே சுருக்கு கயிறு எந்த விதம் சொருகி யிருக்குமோ அந்த விதமாக ஊடாடி இராட்டின மானது சுழன்று வருவது போலே சுற்றிக் கொண்டு வரும் என்பதே.

## 4-வது திருப்பாடல்

சுழன்றுவரு மிருகலையு மொன்றே ரண்டாய்
செல்லுகிற விடகலைசந் திரனே யாகும்
உழன்றுவரும் வடகலைசூ ரியனே யாகும்
ஒருமித்த விருகலைதான் சுழினைத் தீயாம்
எழும்பிவருஞ் சரமொன்றின் விதமே யஞ்சு
வியல்பாக வியம்புகிறே னறிந்து பாராய்
வளம்பெரிய வாயுவுதான் மேலே நோக்கி
வந்தோடும் நாழிகையொன் றேய்ந்தி டாதே.

(திருமணி உரை) அவ்விதம் சுழன்று சுற்றிக்கொண்டு வருகிற சுவாசத்தில் இரண்டு பிரிவினைகள் உண்டு. அவைகளில் இடகலை

என்பது சந்திரனாக யிருக்கும். வடகலை என்பது சூரியனாகயிருக்கும். இவைகள் இரண்டும் ஒன்று சேர்ந்ததானால் அதுசுழி முனை என்னும் அக்னியாக இருக்கும். இவ்விதம் அந்த சுவாச கலையானது ஐந்து விதமான தோற்றத்தில் ஓடும். அந்த ஐந்து விதங்களையும் நான் ஒழுக்கமாகச் சொல்லுகின்றேன். கூர்ந்த அறிவைக் கொண்டு நோக்கிப்பார். அந்த சுவாசமான மேலுலகமாகிய சிரசு ஸ்தானங்களை நோக்கி ஒரு நாழிகையாவது ஓயாமல் வோடிக் கொண் டிருக்கும் என்பதே.

## 5-வது திருப்பாடல்

நாழிகைதா னென்றரையாய்ப் பூமி யோடு
நலமான கீழ்த்திசையே நளின மாக
நாழிகைதா னென்றேகால் மூக்கந் தண்டின்
நடுவாக வோடுமது வப்புத் தானே
நாழிகைமுக் காற்பக்க விளிப்பு பற்றி
நன் ருக வோடுமது தேயு வாகும்
நாழிகையா காசமரை நடுவ தாக
நாடாம லோடுமடா நாளிற் பாரே.

(திருமணி உரை) அவ்விதம் மேல் மண்டலங்களில் ஓயாது வோடின சுவாசமானது சற்று நிதானித்து, மகாமன் மஹ்மூது என்கின்ற விற்புருவ ஸ்தானங்களில் ஒன்றரை நாழிகை வரைக்கும் அதே குணத்தில் ஓடிவரும். அதுதான் மண்ணுடைய பங்கில் சேர்ந்த சரமாக இருக்கும். அதுபோல் சரீரத்திற்கு நன்மைகளைச் செய்யுப் பொருட்டு கீழ்திசையான காதளவுக்குக் கீழேயுள்ள தாமரைக் காய்க்கு மேலே உள்ள இரு குழாய்களின் வழியாக ஒன்றே கால் நாழிகை வரைக்கும் மூக்கந்தண்டின் நடுவாக ஓடும். அதாவது தண்ணீருடைய பங்கில் சேர்ந்த சரமாக இருக்கும். இன்னம் முக்கால் நாழிகை புருவத்தின் விளிம் பீடங்களில் ஓடிக் கொண் டிருக்கும். அது நெருப்பின் பங்கிலுள்ள சரமாக இருக்கும். இன்னும் ஒரு நாழிகை வரை தாமரைகாயின் நடு மத்திபமாக ஓடிக் கொண் டிருக்கும். அதாவது ஆகாயத்தின் பங்கிலுள்ள சரமாக யிருக்கும் என்பதே.



## 6-வது திருப்பாடல்

நாழியொன் றுக் கரையாகக் கலையொன் றுக்கு
நடக்குமினி யறுகலையில் நத்தும் போது
நீளாம லிருகலையுஞ் சேர்ந்தே யோடும்
நிலையாது சுழிமுனையே நெருப்பு மாச்சு
நாழிகைதா னென்றிற்குச் சரத்தி னேட்டம்
நடக்குமடா முந்நூற்றே டறுப தாக
நாளொன் றுக் கிருபத்தோ ராயி ரத்து
நாடுமறு நூறுசரம் நடக்கும் பாரே!

(திருமணிஉரை) இவ்விதமாக ஐந்து வகைகளைச் சொன்னேன் இனி வரும் விபரத்தைப்பார். நாழிகை ஒன்றுக்கு அரையாக கலைகள் ஒன்றை ஒன்று கூடிக்கொள்ளும். ஒவ்வொரு நாழிகையிலும் சந்திர சூரியரில் நின்றும் அரைவாசியான ஆறு சரங்கள் கூடிவேறு பிரிந்தோடும். அப்படி அன்றி ஒன்று சேரும் போது சந்திர சூரியரின் இரண்டு வகையான சரங்களும் ஒன்று சேர்ந்து ஓடிவரும். இதற்கு என்ன பெயர் என்று கேட்டால் சுழிமுனை என்று சொல். இதன் முழுக்குணமும் அக்னியன்றி வேறுகுணமே இல்லை. இனி சரமாகிய மூச்சியின் அப்பியாசக் கணக்கைப்பற்றி சொல்லுகிறேன். சாதாரணமாக நாழிகை திட்டமாக முந்நூற்று அறுபது சுவாசகலை ஏற்ற இறக்கங்களாக நடைபெறுகிறது. இவ்விதமாக ஒரு நாள் முழுவதும் இரவுபகல் இருபத்தோராயிரத்து அறுநூறு சாமானது இந்த சரீரக்கூட்டுக்குள்ளே இருந்து வெளிவருவதும், உட்செல்லுவதுமாக நடைபெறுகிறது. இதன் உண்மையை நீ அந்த வல்லமை நோக்கத்தில் தரிபட்டவனாகப் பார்த்தறிந்துக்கொள் என்பதே.

## 7-வது திருப்பாடல்

பாரப்பா திங்கள்வெள்ளி புதனை மூன் றும்
பக்குவமாய் விடிகாலஞ் சந்த்ர னேடும்
சேரப் பா ஞாயிறெடு சனிசெவ் வாயுஞ்
செங்கதிரோ னேடுமடா விடியுங் காலம்

வாரப்பா வினியொருநாள் வியாழன் மட்டும்
    வளர்பிறைக்குச் சந்திரனே வளர்த்தங் கோடும்
கூரப்பா தேய்பிறைக்குச் சூரியன்றான்
    குதிகொண்டே யோடுமடா கோணந் தானே.

(திருமணிஉரை) அடே ஞானசெங்கோல் சக்ரமாகிய சரத்தில் பழகிக் கையாடவந்தவனே! நல்ல தெளிந்த அறிவைக் கொண்டு ஊர்ந்துபார். மானுட வர்க்கத்திற் பிறந்திருக்கின்ற ஒவ்வொரு ஜனங்களுக்கும் சரம் ஓடுகிற திட்டமான கணக்கையும் தினங்களையும் சொல்கிற விபரத்தைக்கேள். அதாவது:—திங்கள் புதன் வெள்ளி இந்த வாரங்களில் மூன்று நாளும் விடியற்கால நேரத்தில் மனுஷனுக்கு திட்ட வட்டமாக சந்திர கலையான இடது நாசியின் ஓட்டம் ஓடிக்கொண்டிருக்கும். சனி, ஞாயிறு, செவ்வாய் இந்த மூன்று நாளும் அதே விடியற்காலந்தொடுத்து சூரிய கலையாகிய வலது நாசி யோட்டம் ஓடிக்கொண்டிருக்கும். இந்த சூரியகலையாவது சந்திரகலையாவது ஒரு வேளைகளில் வியாழக்கிழமை வரைக்கும் அதிகரித் தோடிக்கொண்டிருக்கும். இதில் வளர்பிறை நாள்களில் சந்திரகலையும், தேய்வு பிறைக்குச் சூரியகலையும் ஓடிவரும். இப்படியே சரீரத்தில் வியாபித்திருக்கின்ற எல்லா கோணங்களிலும் குதிகொண்டு வோடிக்கொண்டிருக்கும் என்பதே.

## 8-வது திருப்பாடல்

தானான வாரமது வேழுஞ் சொன்னேன்
    தப்பிவருஞ் சரத்துடைய பயனைக் கேளாய்
வேனான ஞாயிறிலெ சரமே தப்பில்
    வியாதியது மெய்தனிலே வளரும் பாராய்
ஆனான திங்களிலே சரமே தப்பில்
    அறுதியினு லவர்காலம் முடிவுமாகும்
கானுலவுஞ் செவ்வாயிற் சரமே தப்பிற்
    கலக்கமுறும் பெரியவொரு கலக மாச்சே

(திருமணிஉரை) நான் இந்த உலக வாசிகளான நமது மானிட இனத்தாரின் மேல் பெரிது பிரதி வைத்து மஹாப் பாரதூரமான ஞானசர நூல் சாஸ்திரத்தைப் போதிக்கவந்து இதுவரை ஏழுதினங்களில் ஓடியசரத்தின் பிரிவினைகளையும் தெளிவாகச் சொல்லி விட்டேனல்லவா? இனிமேல் அந்த சரமாகிய சுவாசங்கள் இவ்விதமான ஒழுங்கின்படி நடை பெறாமல் தப்பி வோடி வருமேயானால், அதினால் என்னென்ன குற்றம் ஏற்படும் என்பதை இதன் கீழ்வரும் கலன்களில் எடுத்துக் காண்பிக்கின்றேன். நன்றாய்க்கேள். எப்படியானால்:—ஞாயிற்றுக்கிழமையில் ஓடக் கூடியது எதுவோ அந்த சரமானது தப்பி வேறு சரமானது ஓடிற்றானால், உடனே ஏதாகிலும் உஷ்ணத்தை அல்லது சிலேஷ்மத்தைப் பற்றிய வியாதிக்குள்ளாவான். திங்கட்கிழமை எந்த சரம் ஓடவேண்டுமோ அது தப்பி வோடினால், அந்தக் கிழமையிலே அவன் காலம் குறைசியாக மரணம் வந்து லபிக்கும், செவ்வாய்க் கிழமையில் எது ஓடவேண்டுமோ அது தப்பி மற்றது வோடுமாகில், ஜனங்களெல்லாம் திடுக்கிடக்கூடிய ஒரு பெரிய கலகம் வந்து சம்பவிக்கும் என்பதே.



## 9-வது திருப்பாடல்

ஆச்சப்பா புதனதிலே சரமே தப்பில்
    அபாயமடா தொடுத்தவகை பலியா தப்பா
நீச்சப்பா குருவாரஞ் சரமே தப்பில்
    நிலையாது பொருட்சேதம் நினைந்தவெல்லாம்
சூட்சமமாய்ச் சுக்கிரனிற் சரமே தப்பிற்
    சொல்லுகிறேன் மக்களுக்கு சேத மாகும்
தாழ்ச்சியடா சனிவாரஞ் சரமே தப்பில்
    தனக்குமொரு தத்துவந்து தப்புந் தானே.

(திருமணி உரை) இன்னம் புதன் கிழமையில் ஓடுகிற சரமானது மாறி வேறுசரம் நடக்குமேயானால், அகஸ்மாத்தான அபாயம்வந்து நேரிடும், அவன் எண்ணியிருந்த காரியம் பலிதமாகசது. வியாழக்கிழமையிலே வழக்கமாக ஓடக்கூடிய சுவாசமானது மாறிவிடும் பட்சத்தில் அவன் எவ்வளவு தலைமுறை கடந்த சாஸ்வதப்பட்ட ஆஸ்தியுள்ளவனாக இருந்த போதைக்கும் நிலையற்று நஷ்

டத்திற்குள்ளாவான். இன்னும் அவன் நினைத்த எந்த ஒரு கருமமும் கைகூடாமல் தவரிவிடும். வெள்ளிக்கிழமை சாதாரணமாக வோடுகிற சுவாசந் தப்பிற்றேயானால், திட்டமாகச் சொல்கிறேன் அவன் புத்திரர்களுக்கு உடனே ஆபத்து வந்து சேதமாகும். சனிக்கிழமையில் வழக்கமாய் நடக்கும் சுவாசமானது தப்பி வந்ததானல், அவனுக்கு நின்ருப்போறிருந்து ஒரு தத்து வந்து அதாவது.—கண்டம் வந்து அவஸ்தைப்பட்டு இறுதியில சொஸ்தமடைவான் என்பதே.

## 10-வது திருப்பாடல்

தப்பாக விருகலையுந் தவரி யோடிற்
றனக்குவருஞ் சனிதோஷம் தடையில் லாமல்
ஒப்பாக லொருபுறத்தி லொ றநா ளோடில்
ஒருமூன்று வருடத்தி லிருந்து போவான்
அப்படியே யொருபுறத்தி னுளா ரோடில்
ஆருத மாதமடா வறுதிக் காலம்
செப்புகிறேன் சந்திரனி லிரவே யொன்றுஞ்
செங்கதிரோன் பகலொன்று மியங்கிற் ருனல்

## 11-வது திருப்பாடல்

ஆனலு மருளான யோகி யாவான்
அவன்பெருமை யெவராலு மறியொண் ணுது
போனசர மீளாமற் சுழலு மாகிற்
போகுமடா வொருமூன்று மாசத் துள்ளே
தாளும லிருசரமு மொன்ரு யோடில்
நாற்பதாம் நாளிலன்ருே தமனைக் காண்பான்
போனசரம் மீளாமன் மேலே வாங்கிற்
பொய்யல்ல வறுதியென்று மறிந்து பாரே.

(திருமணி உரை) இப்படி தப்பி ஒடின கலைகளில் ஒன்றையே அன்றி இரண்டு கலைகளும் அப்படியே தவரியோடினுல், உடனே அவனுக்கு ஜன்னியைப்பற்றி தோஷங்கள் வந்து நேரிடும் இதற்கு



ஒரு விதத்திலும் ஆட்சேபமே இல்லை. அவ்விதமான சரமானது சந்திரனிலாவது, சூரியனிலாவது, நாள் முழுவதும் ஓடும் பட்சத்தில அதிலிருந்து சரியாக மூன்று வருஷத்தில் மரணமடைவான். அவ்விதமாக ஒரு புரத்தில் நின்ற சரமானது ஆறுநாள் வரைக்கும் ஓயாமல் ஓடிக்கொண்டிருக்குமேயானுல், திட்டமாக அவன் ஆறே மாதத்தில் மரணமாவான். இன்னமும் ஸூரிய கலையானது ஒரு பகல் முழுவதும், சந்திரகலையானது ஒரு இரவு முழுவதும், ஓடிக்கொண்டிருந்ததானுல், அவனுகிறவன் அல்லாஹுத்த ஆலாவின் சொந்தக் கிருபையுள்ள பெரிய ஞானவானுகிய ஒலியாவான். அவனுடைய வல்லமைக்காரியங்களை உலகவாசியான எவனுலும் சொல்லமுடியாது. அவ்விதப்போன சரமானது கீழ் மனஸில்களில் இறங்கிவராது. அப்படியே நின்று விடுமாகில், திட்டமாக அவன் ஆத்மாவானது மூன்று மாதத்தில் போய்விடும் அவ்விதம் இருசரமும் ஒன்று சேர்ந்து சுழிமுனையாக ஓடிற்ருனுல் திட்டமாக அவன் ஒரு மண்டலம் நாற்பது நாளைக்குள் மலக்கல் மவுத்தென்னும் எமனைக் கண்ணில் கண்டுகொள்வான் அவ்விதப்போன சுழிமுனை என்ற சரமானது மீளாமல் மேலுக்கே வாங்கி சொக்கிற்ருனுல், அன்றைக்கே மரணம் என்று திடமாக அறியவேண்டியது என்பது.

## 12-வது திருப்பாடல்

அறிந்துகொள்ளச் சொல்லுகிறே னின்னுங் கேளாய்
மப்பப்பா சந்திரன்ரு னியங்கும் போது
சிறந்தமனை குடிபுகுதத் தனம் புதைக்கச்
சேராம லிருந்தவரைச் சேர்த்து வைக்க
வினர்ந்தேறும் விஷமிறக்க விதை விதைக்க
வேந்தர்களை தெரிசிக்கக் கேள்வி செய்யப்
பிறந்தபிள்ளைப் பேர்குறிக்கப் பிணியுந் தீர்க்கப்
பிரியமுடன் வியாபாரம் பலவுங் கொள்ள.

## 13-வது திருப்பாடல்

கொள்ளமனங் கோதையரை நாட்டு றிக்கக்
கொடிதான பகைவரிடங் கொழுகிச் செல்ல
வெள்ளமடா கீழ்க்கிணறு வெட்டிக் காண
வேந்தர் முத லமைச்சருக்குத் தூத னுப்ப

அள்ளியிரு கையாலு மைய மீய
வாருமடா வித்தனையுஞ் சந்த்ரன் மீது
தெள்ளியதோர் சூரியன்ரு ளியங்குப்போது
தீர்க்கமாய்ச் செய்வகையைச் செப்பக் கேளே.

(திருமணி உரை) அறிவை யுணர்ச்சிசெய்ய வந்தவனே! நான் இதுமட்டிலும் சுவாசத்தின் குண குணங்களைப் பற்றி விபரத்தை இன்னது இனியது என்று சொல்லிக்கொண்டு வந்தேன். இப்போது அவைகளின் பலா பலன்களைப் பற்றி விபரிக்கின்றேன். எப்படியானால், சந்திர கலையானது வோடிக்கொண்டிருக்கும்போது புதிதாகக் கட்டி முடித்த வீட்டில் குடியெறுகிறதற்கும், தான் தேடிய ஆஸ்தியை பூமியில் நிலவரை தோண்டிப் புதைத்து வைப்பதற்தும், இன்னும் ஒருவரை ஒருவர் ஆண், பெண் இருபாலருள் விரோதப்பட்டு மாருட்டமாக பிரிந்துப் போனவர்களை ஒன்றுகூட்டி வைப்பதற்கும், ஸர்ப்பத்தால் தீண்டப்பட்டு ஏழாம் வேகம் வரையிலும் ஏறிவிட்ட கொடிய விஷத்தை இறக்கி விடுகிறதற்கும், நஞ்சை புஞ்சை நிலங்களில் தான் செய்யக்கூடிய வேளாண்மைக்காக வேண்டி விதைகளைக் கொண்டுபோய் விதைத்து விடுகிறதற்கும், ஒரு அபுருப மான காரியத்தைப்பற்றி யாரிடத்திலாவது போய்க்கேட்டு வருவதற்கும், தனக்குப் பிறந்திருக்கின்ற குழந்தைகளுக்கு நாமகரணஞ் சூட்டுவதற்கும், வைத்தியனாக உள்ளவன் பெரிதான் நோய்வாயகப்பட்ட ரோகஸ்தர்களுக்குச் செய்து முடித்த அவிழ்தங்களைக் கொடுப்பதற்கும், இன்னும் தனைக்குப் பிரியப்பட்ட வர்த்தகங்கள் பலதுஞ் செய்யவேண்டி புதுக்கணக்குத் துடங்குவதற்கும். கலியாணஞ் செய்து கொள்ளும் பொருட்ட்டு பெண்ணைத் தேடிப்போய் நிட்சயநாள் குறிப்பதற்கும். கொடிய வன்நெஞ்சனாக இருக்கிற மோசக்கார பகைவனை ஸ்நேகம் செய்து சொள்வதற்கும். நல்ல அதிகப்பற்றுன தண்ணீரை நாடி முதலாவது கிணறு வெட்டுவதற்கும், இராஜாக்கள் முதலிய, மந்திரிகளுக்கும் எழுத்து முதலான தூதனுப்புவதற்கும், ஆண்டவன் சொன்னதுபோல் சகாத்து முதல்களை அன்னதான தருமங்கள் கொடுப்பதற்கும் ஆகக்கூடிய இத்தனையும் சந்திரகலை



யோடும்போது ஆகுமானதாக இருக்கும். இனிமேல் சூரியகலையானது ஓடும்போது செய்யவேண்டிய கருமங்களை இன்னின்னவைகள் என்று அவிழ்த்துச் சொல்கிறேன் கேளப்பா என்பதே.

## 14-வது திருப்பாடல்

செப்பக்கே ளரண்மனைக ளம்பலங்கள
சிறப்புடைய மாளிகைகள் சித்ர கூடம்
ஒப்பரிய சித்திரபடா மொளிர்வி தான
முடைமைவகை மருந்துவகை யாவுஞ் செய்யக்
கப்பலடா கடல்மேலே பயணம் பண்ணக்
கடிதான பேய்பூத மலகை யோட்டச்
செப்பணியு முலையாளைச் சேர்ந்து வாழச்
செயமாகப் படைபொருத வழக்கு ரைக்க.

(திருமணி உரை) அதாவது:—இராஜ சமஸ்தான கட்டடங்கள், இராஜதர்பார் அல்லது தெய்வஸ்தலங்கள், பார்க்க விநோதமான ஒரு விசித்ர மாளிகைகள், சித்ர கூடங்கள் சடேரென்று கட்டலாம். விசித்ரமான ஞானகச் சின்னங்களை ஊர்கோலஞ் செய்துகொண்டுபோய் நிலைநாட்டி வைக்கலாம். மணவரை தம்பதிகள் சயனிக்கக்கூடிய மணிக்கல கட்டில் ஜோடிக்கலாம். கலியாணப் பந்தல்களுக்கு மஞ்சட்கால் நாட்டலாம். இன்னும் தன் ஸ்திரீகள் அல்லது புதுமணப் பெண்களுக்கு ஆபரணங்கள் செய்யலாம், பெரிதான அபுருபமான அவிழ்தத்தின்புடம் இரசவாத முதலியவைகள் எல்லாஞ் செய்யலாம். இன்னும் புதிதாய்க் கட்டிய கப்பல்களை சடேரென்று சமுத்திரத்தில் யாத்திரை செய்யவிடலாம். கொடியமான பேய் பிசாசுகளை ஆட்டி யோட்டி விடலாம் சாதிலிங்கச் செப்பைப் போன்ற ஸ்தன்னியங்களையுடைய புதுப்பெண்களைக் கலியாணஞ் செய்து கொள்ளலாம். முதலாவது வீடு கட்டுகிறதற்கும், அமோகமான படைக்களங்களில் நின்று யுத்தஞ் செய்வதற்கும், நியாயஸ்தலங்களில் ஒரு வழக்குகளை கொண்டு போய் ஸ்தாபிப்பதற்கும்.

## 15-வது திருப்பாடல்

உரையான மந்த்ரமுத லேதுஞ் செய்ய
வொழுங்காகக் கலையோதச் சரங்க ளுன்னத்
திருவான தேவர்முதற் பெரியோர் மற்றத்
தேவரையுந் திருமுன்னே வரவ ழைக்க
குருபாதம் பணிந்துமுப தேசங் கேட்கக்
கொள்ளையிடப் பதியேறக் குளிக்க நீரில்
தருகாத பூமியுள்ள தனமெ டுக்கத்
தம்பனமே செய்யநல மாகும் பாரே

(திருமணி உரை) இன்னும் மணிமந்த்ர முதலிய அட்டமா சித்து வேலைகள் அஞ்சனைக் கோல்கள் ஆகிய யாவற்றும் செய்வதற்கும், சடேரென்று உபாத்தியாயரிடம் குழந்தைகளைக் கொண்டு போய் விட்டு கல்வியைப் படிக்க வைப்பதற்தும், சர்குருவின் தீட்சை உத்திரவின் ஞானநிஷ்டை சமாதியில் தரிபட்டு வாசியை நிறுத்தி மாற்றிக கொள்ளுவதற்கும், திருவென்று சொல்லாநின்ற புண்ய நிலையிற் கடைப்பிடித்து நிற்தும்படியான நபிமார்கள் ஒலிமார்கள் முதலிய பெரிய பெரிய மஹாத்துமாக்களையுப், இன்னும் வானவர் கூட்டங்களையும் தன்னுடைய சமூகத்தில் வரவழைப்பதற்கும், மெய்ஞ்ஞான நெறியில் காமிலான அதாவது:— பரிபூரணமான உத்தம குருமார்களின் மாட்டு அடுத்து நின்று வேதாந்தத்தின் இன்ப நுகர்ச்சியான இல்முகளை முரீதீன்கள் பெற்றுக்கொள்வதற்கும். திருடராயுள்ளவர்கள் ஒரு கோயில் அல்லது ஒரு வல்லமையான ஆச்சிரம சாலைகளைக் கொள்ளைகொள்ளும் பொருட்டுப்போய் கன்னக்கோல் வைப்பதற்கும், படைத்தலைவனுகயுள்ளவன்தான் யுத்தத்தால் ஜெயித்த பட்டணத்தின் கோட்டைக் கதவுகளைத் திறந்து அந்த நகரத்தளவில் முதலாவது பிரவேசிப்பதற்கும். தனக்கு வழக்கமில்லாத ஒரு புதிதான அருவி அல்லது ஜுனைமடுவு, கிணறு முதலிய தண்ணீரில் ஸ்நானபானஞ் செய்வதற்கிம், தான் அகஸ்மாத்தாக கண்டுபிடித்த புதையற் பொருளை அந்த ஸ்தலத்தை விட்டும் வெளியே யெடுப்பதற்கும்



கருத்து. அந்த ஸ்தலத்தில் செய்ய வேண்டிய பலி முதலான சடங்குகளை நிறைவேற்றிய பிறகுதான் அந்த பூஸ்த்திகளை அகிர்த்திப்படுத்திக் கையாட்சி செய்து கொள்வதற்கும், தான் ஒரு அருமையான வஸ்துவை தனதாக்கிக்கொள்ள அல்லது வசியப்படுத்திக் கொள்வதற்கும் விசேஷ நேர்த்தியானதாகக் கைகூடி யிருக்கும், என்பதே.

## 16-வது திருப்பாடல்

பாடியவோ ரிருசரமு கியங்கும் போது
பலியாது சுழி முனையே பழியு மாச்சு
ஆடியவோர் ஈரமோடும் புறத்தைத் தானே
யதிகமதாய்ப் பூரணமென் றுரைக்க லாச்சு
சாடியவோர் சரமோடப் புறத்தைத் தானே
சாற்றுகிறேன் சூனியமென் றறிதற் காகத்
தேடிமிக வந்தொருவ னுன்னைக் கேட்டாற்
றீர்க்கமாய்ச் சொல்குறிலைச் சொல்லக் கேளே.

(திருமணி உரை) இதுவரையும் நான் சொல்லி வந்த பிரகாரம் நடைபெறுகிற சரமானது, எந்த விதத்திலேயோ சிக்கலாடி ஒரு சரமாக இரண்டும் ஒன்றும் சேர்ந்து ஓடிற்ருனல் அதுவாகிறது சுழிமுனையாக இருக்கும் என்று திடமாக உணர்ந்து கொள். இதில் ஒன்றுபட்ட இரண்டையும் எப்படி இழுத்து வாங்க வேண்டுமோ அந்த விதம் ஒரு நிமிஷமாவது கணக்கு கணக்கைப் போல் ஓடினுல் நல்லதாக இருக்கும். அன்றி ஒன்று பட்டது, ஒன்று பட்டதாகவே நடந்து வரும் பட்சத்தில் திட்டமாக அதில் அபாயங்கள் வந்தே நேரும். அதில் நீ எடுத்த கருமங்களும் நீ என்னதான் சாமார்த்தியங்கள் செய்த போதைக்கும் ஒன்றுங்கைகூடப் போகிற்தே இல்லை. இது நிட்சயம்.

அவ்விதம் ஒருபுறமோடும் ஸ்வாசமானது, அளவு மீறி நடக்குமானுல் அதுதான் பூரணகலை என்று நிதானித்துக் கொள்? அந்த சாமும் நின்று போய் அமர்ந்து வேற்றிடம் பாய்ந்து

சரமானது, மெலிவு கொடுக்குமேயானால் அதுதான் சூனியம் என்று பதித்து உணர்ந்துகொள். இதில் சில சொல்குறி நாடிகள் தோற்றாவாகும். அதன்பயனை இதோ கீழே குறிக்கிறேன் கேட்டுக் கொள்வாயாக என்பதே.

## 17-வது திருப்பாடல்

செல்லக்கேள் கெற்பனியாள் கெற்பந் தன்னிற்
    சூலானோ பெண்ணோவென் றுன்னைக் கேட்டால்
வல்லகலை சூரியனில் வலமே கேட்கில்
    வளர்ந்திருக்கும் பாலகன்ரு ணே யாகும்
அல்லவலன் சூனியத்தி னின்று கேட்கி
    லாணது மதன்கால மற்றுப் போகும்
நல்லகலை சந்திரனிற் பூர ணந்தான்
    நாரியின்சூல் பெண்ணென்று நாட்டு வாயே.

(திருமணிவுரை) யாராகிலும் ஒருவன் உன்னிடத்தில் ஒரு கற்ப ஸ்திரீயைக் கொண்டு வந்து விட்டு இவளுடைய கற்பத்தில் முதிர்ந்திருக்கிற சிசுவானது ஆணா? அல்லது பெண்ணா? என்று குறி கேட்கும் பட்சத்தில் அப்போது நீ அவளை நாடி உன கலையை நோக்கி வல்லமையுள்ள சூரிய சரமானது வலது பாரிசம் பாயும் பட்சத்தில் உறுதியாக அது ஆண் பிள்ளை என்று சொல்லிவிடு, அல்லது நான் மேலே சொன்ன விபரத்தின் படியான சூனிய சாத்தில் நின்று கேட்கும் பட்சத்தில் அந்த சிசுவானது ஆண்தான். ஆனால் பிரசவித்தவுடன் அல்லது கற்பத்தில் வைத்தே மறித்துவரும். என்று கட்டளை செய்துவிடு, அல்ல அவ்வாறு இல்லாமல் அந்தஸ்திரீயின் சரமானது சந்திரன் இடத்தில் நின்றும் வருமாகில் உடனே அந்த சிசுவானது பெண் குழந்தை என்று கூறுவிடு அப்படி பெண்ணாக இருக்கும் பட்சத்தில் சந்திரனில் இருந்து பாயும்படியான சரமானது அதிக உஷ்ணமான பூரண வாசியில் குதிகொண்டு ஓடவேண்டும் இதை நன்ருகக் கவனித்து சொல். இது போலவே ஆண் குழந்தைக்குச் சொல்லும்போது சூரிய சரமானது பூரணங் கொண்டோடுவதை நோக்கித்தான் சொல்ல வேண்டியது என்பதே.



## 18-வது திருப்பாடல்

நாட்டிடுவாய் சூனியத்தி னின்றே கேட்கில்
    நாரியின்சூல் பெண்ணதுவு நமனைச் சேரும்
நாட்டிலின்ன மாதினுக்கு மதலை யுண்டோ
    நன்ருகச் செல் லுமென்றே யொருவன் கேட்கில்
கூட்டியதோர் பூரணமே குழந்தை யுண்டு
    கொடிதான சூனியமே குலமற் றுப்போம்
தீட்டியநாள் சூரியனுந் திங்கண் மாது
    தீர்க்கமதாய் நீயெவர்க்குஞ் செப்ப லாமே.

(திருமணிவுரை) அப்படி சந்திரனில்கேட்ட வாசியானது அதிலும் ஒட்டமெலிந்த நாடியில் அசந்து வரும் பட்சத்தில் அந்த சரமாது சந்திர சூனியம் என்று உணர்ந்து அந்தப் பெண் குழந்தையும் உடனே இறந்து போய்விடும் என்று உத்திரவு செய்து போடு. இது நிற்க உன் முகம் ஒருவன் வந்து இந்த ஸ்திரீயானவளுக்கு உலகத்தில் பிள்ளைகள் உண்டாகுமா? என்று உன்னைகேட்டால் அந்த சமயம் அந்த ஸ்திரீக்கும் உனக்கும் வாசியானது பூரணத்தில் பேசுமானால் அதே மாதத்தில் குழந்தை ஜனிக்கும் என்று சொல், அல்லது இவ்வாறே சூனிய சாம் பேசுமானால் கருவே கிடையாது வங்கிஷத்தின் வேருனது அற்றுப் போகும் என்று கூறிவிடு. உண்டும் என்று சொல்கிற குழந்தையானது என்ன பால் என்பது அதாவது:—பூரண கலையானது, சந்திரனுல் பெண்பால், என்றும் சூரியனுல் ஆண்பாலென்றும், சொல்லிவிடு என்பதே.

## 19-வது திருப்பாடல்

செட்பியதோர் கருவகைதா னேதென் ருலுஞ்
    செயமாமோ குறைவாமோ வென்று கேட்டால்
தப்பாது சூரியனிற் பூரணந்தான்
    தப்பிவிட்ட நாளாகுஞ் சூனி யத்தில்

மெய்ப்பான சந்திரனின் மெதுவாய்ச் சேரும்
வேறுகுஞ் சூனியத்திற் கரும மெல்லாம்
ஒப்படனே காணுத முதலைக் கேட்டு
லுடன்வருமே பூரணசந் திரனிற் றுனே.

(திருமணிவுரை) இன்னும் ஒரு கேள்வி உன்னிடம் ஒருவன் வந்து இந்த பெண்ணுனவளுக்கு வயிற்றில் செற்பஞ் சேர்ந்து வருமா? அல்லது கரைந்து போகுமா? என்று கேட்டால் அந்த சமயத்தில் அது கேட்டவனுடைய வாசியானது சூரிய பூரணத்தில் பேசுமாகில் உடனே திட்டமாக சேர்ந்து வருமென்று உத்திரவு பண்ணு. அங்ஙனமன்றி சூனியத்தில் வாசி பேசுமாகில் அட்சணமே ஒன்றும் சேராது, மலடிதான் என்று பேச்சை ஒப்பித்துவிடு. அதுவுமன்றி சந்திரனில் வாசி பேசும் பட்சத்தில் கருவானது மெதுவாக நாளாவட்டத்தில் கூடித்தரிக்கும் என்று உறுதி கூறு வாயாக. (இன்னும்) ஒருவன் என் திரவியம் காணுமற் போய் விட்டது. அது வரும்வழி எவ்விதம் என்று கேட்டால் உடனே சந்திர பூரணத்தில் வாசி இடது பால் பேசினுல் அந்தப் பொரு ளானது உடனே அகஸ்மாத்தான வழியில் வந்து சேரும் என்று கட்டுரைத்துச் சொல் என்பதே.

## 20-வது திருப்பாடல்

சந்திரனிற் சூனியமும் பிரயா சந்த்ரன்
சார்ந்துபோஞ் சூரியனிற் பூர ணந்தான்
எந்திரமாஞ் சூரியனிற் சூனி யந்தா
னெத்தேச காலமில்லை யிழந்து போச்சு
சந்திரனில் யாத்திரைசெய் வோர்க்கு மேற்குத்
தப்பினதாற் றங்கடங்க டமக்கே யாச்சு
உத்திவருஞ் சூனியனிற் கீழ்வ டக்கு
முற்றவகை தப்பினதா லுனக்கா காதே.

(திருமணிவுரை) இன்னும் கேட்பாயாக, சந்திரனுகிய சுவா சத்தில் சூனியங் கலந்தால் ஒன்றும் பலியாமற் போய்விடும். இன்னும் சூரிய பூரணமானது ஓடும்போது தானே எடுத்தவன்



கொண்டுவருவான். நடக்கையில் சாதாரணமாக ஓடும் வகை யானது தப்பிப் போய் சூரிய சூனியமே ஏற்பட்டாலோ இனி ஒரு நாளாவது அவனுக்கு நிட்சயமென்று சொல்வதற்கிடமில்லை யென்று சொல்லிவிடு. மேற்கு திசை யானதல்லாமல் மற்ற எந்த திசைக்காவது சந்திர ஒட்டத்தில் யாத்திரை போவானுகில் தடை யன்றி அவனுக்கு போகும் பாதையில் பெரிதான தோஷ ஆபத்து வந்து மெதுவாக நீங்கும். சூரிய ஓட்டத்தின் கிழக்கு அல்லது வடக்கு திசையாக இருக்காமல் மற்ற திசை யெதுவானுலும் சரியே திடனுக அவனுடைய பிராணனுக்கே சேதம் வந்து சம்பவிக்கும். யாரப்ப இதை மனதில் ஆராய்ச்சி செய்து வந்தவனே! இது உனக்குந்தான் ஆனதால் நீ இதில் பலே ஜாக்கிரதையுடன் வேலை பார்த்து வரவேணும் என்பதே.

## 21-வது திருப்பாடல்

உனக்காச் சூரியனிற் பயணம் போக
வொற்றையடி மூன்று தரம் வலது காலால்
இனிதாகக் குதித்தன்றே தத்திப் போத
லியல்பாகு மிருசரமு மொன்று மாகில்
தனக்குள்ள விருகாலு மொன்ருய்க் கூட்டித்
தத்திப்போ மூன்றுதர மூச்சு டக்கித்
தனையல்லான் மற்றொருவ ரறியொண் ணுது
தங்காம விரைத்துவரும் படையைக் கண்டால்

(திருமணிவுரை) உண்மையை விசாரணை செய்ய வந்தவனே! இது உனக்காகச் சொல்கின்றேன். சூரிய வாசியில் அதற்குடைய கிழக்கு வடக்குக் திசையாக நீ யாத்திரை செய்ய எத்தனித்தாலும் இடது காலை மேலே தூக்கி வலது காலை நிற்பாட்டிவைத்து மூன்றே மூன்று அடி மாத்திரம் குதித்து நடந்து அப்பால் சாதாரணமாக நடந்து போக வேண்டியது. சரநூல் சாஸ்திரி களான நாதாக்களின் அதிக கண்டிப்பான கட்டளையாக இருக் கின்றது. அங்ஙனமன்றி சந்திரனும் சூரியனும் ஒன்று சேர்ந்து

ஓடிற்ருனல், உன் இரண்டு கால்களையும் ஒன்ருகக் கூட்டி குதித்துக் குதித்து மூன்று அடிவைத்து, அப்பால் நடக்கவேண்டியது. அது சமயம் உன் சுவாசத்தை அடைக்கி வைக்க வேண்டியது. இது ரகசியம் நீயே அன்றி மற்ற யாருக்குத் தெரியவே படாது. அதாவது, உன் குதியான நடையையல்ல நீ மூச்சடக்கி விட்டதை யாக இருக்கும். இதில் அநேக பாய்தாக்கள் இருக்கிறதினுல் தான் மஹாத்மாவாகிய நாயகமவர்கள் அதைவற்புறுத்திக் கூறினுர்கள். இதினை றப்பைச் சொல்ல வேண்டுமாஞன் அந்த நிலைமையில் ஆகி என்னிடம் வந்து கேளு அப்போது அந்த ரகசியம் இதுதான் என்று நான் சொல்கிறேன். உரையாசிரியன் என்பதே.

## 22-வது திருப்பாடல்

படைபொருதச் சந்திரனிற் கச்சை கட்டிப்
பரிவுடனே சூரியனிற் பாய்ந்து செல்லச்
சடுதிவரும் படையாளுற் சந்த்ர ஞகிற்
சறுகுதலாய்ப் பின்பற்றித்து முன்னே செல்ல
அடவுடனே சுழிமுனைதா னியங்கு மாகி
லகலாம விருகாலுங் கூட்டி யொன்ருய்
இடைகாணு நிலைபிரியா திருத்து மூச்சை
யெழும்பிநின்று மேனேக்கி யேற்று வாயே.

## 23-வது திருப்பாடல்

ஏற்றிடுவாய் சூரியனில் மாற்ருன் றன்னை
யேறிடுவாய் பூரணத்தி லெ்திரி பட்டான்
ஒற்றையாட சூரியனு ரானே யாகு
முத்தமியான் சந்திரனு மொருரண் டாகும்
ஒன்றைநிலை கைக்கருவு மாண்பா லப்பா
வோடிவருஞ் சந்திரனி லொருபெண் ணதும்
வித்தையடா வுடலுக்கு ளடைந்த வாவு
வெளிகழன்று வெறுங்கூடாம் விதத்தைக் கேளே.



(திருப்பணி உரை) இன்னும் போர்க்களத்திற் போய் நின்று யுத்தஞ் செய்ய வேண்டுமாஞல். அதற்குரிய முஸ்தீபுகளை சந்திர வாசி யோடும்போது அணிந்துகொண்டு ஆயுததாரியாக தயாராகி, சூரிய வாசியானது திரும்பின உடனே படை முகத்திற் பாய வேண்டியது. அதே சமயத்தில் சந்திரவாசி நடைபெற்ற தாகில் உடனே அந்த மாற்ருன் படையானது சீக்கிரம் வெள்ளம் போல் வந்துவிடும். அந்த சமயம் நீயும் உன் தளங்களும் சற்றுப் பின்வாங்கிக்கொண்டு அப்பால் முன்னேறு. அங்ஙனம் அன்றி பூரணத்தில் சுழிமுனை சரமானது வாங்கிற்ருனல் உன் இரண்டு பாதங்களையும் ஒன்ருய்க் கூட்டி ஒன்ருய் வைத்துக் கொண்டு நிறுத்தும் நிலையானது பிரியாமல் மூச்சை நிலையளவில் நிதானித்து இருத்தி வைத்துக்கொள். அவ்விதம் இருத்திய வேகத்துடனே ஸ்வாசத்தை சற்று மெதுவாக எழுப்பி நிறுத்தி மேல் நாடிகள் என புருவஸ்தானத்தளவில் ஏற்றிக்கொண்டால், அப்படி ஏற்றுகிற சுவாசம் சூரியனுனல் உடனே மாற்ருனுடைய தளமுழுவதும் நின்றது நிற்க எல்லாம் பாடுசாய்ந்து அர்த்தநாசம் அடைந்து போகும். அது பூரணமாக இருக்கும். பட்சத்தில் அரசனும் உன் வாளால் வெட்டுப்படுவான், ஏனென்ருல் சூரியன் என்பது உன் தந்தையின் இந்திரியத்துடன் கலந்து வந்த வாசியாக இருக்கும். சந்திரனே உன் தாயின் சுரோணிதத்தில் கலந்து வந்து சேர்ந்த பெண் வாசியாக இருக்கும். ஆகவே இவை இரண்டு வெற்றியையே தரும் என்று நீ ஒவ்வொரு கருமங்களுக்கும் உபயோகித்து வரவேண்டியது. இதுபோலவே சந்திர நடையில் தரிக்கின்ற கருவானது பெண் சொருபமாகவும், சூரிய வாசி நடக்கும்போது தரிக்கின்ற கருவானது ஆண் சொருபமாகவும் தரிக்கும். இனி வரக்கூடிய அபுருபமான சர நடைகளைச் சொல்கின்றேன் கேட்பாயாக என்பதே.

## 24-வது திருப்பாடல்

விதமாக வுடலுக்கு ளடைந்த மூச்சு
விருத்தியொடு சூஸ்திரமா யிருக்கும் போது

இதமாக விராறங் குலமே யோடு
மிருநான்கு வங்குலமே யேறு முள்ளே
துதியாகப் பேசுகையிற் பதினு ரேடுந்
துடியாக விருநான்கு தொடுத்துள் ளேறும்
கதி நடையி லிருபதுபோய்ப் பத்து மீளும்
கடும்வேலைக் கறுநான்கின் முந் நாள் கேறும்.

## 25-வது திருப்பாடல்

முன்னேறுஞ் சண்டையிலே யாறு ரேடின்
மூவெட்டு வங்குலமே முறையிற் செல்லும்
கண்மூடிச் சயனமிடி லாறெட் டோடிக்
கடுகிவரு மையாறு கருதிப் பாராய்
உன்னியுன்னி யோடுகையி லொன்ப தாறி
லொன்றுக்குப் பாதியடச வுயர வேறும்
இன்முலையாள் சேர்க்கையிலே யெட்டெட் டோடி
யென்மூன்று வங்குலமே யேறும் பாரே.

(திருமணிவுரை) சரயோகஞான தந்திரத்தைக்காண வந்த வனே! கேள் பலபல விதங்களாக ஜடலத்திற்குள்ளே நுழைந்து கொண்ட சுவாசமானது, நல்ல விர்த்தியான குஸ்திரமாக இருக் கும்போது, கலையானது 12. அங்குலம் கீழ்நோக்கி ஓடி, 8-அங்கு லம் மேல் நோக்கி ஓடும். மனிதன் பேசும்போதும், கலையானது, 16. அங்குலம் கீழே ஓடி, 8-அங்குலம் கலைகள் மேலே ஓடும். மனி தன் நடக்கும் போது, கலையானது 20-அங்குலம் கீழ் நோக்கி ஓடி, 10-அங்குலம் மேல் நோக்கி செல்லும். கடுமையான தொழில்கள் செய்யும்போது கலையானது 24-அங்குலம் கீழ்நோக்கி சென்று, 12-அங்குலம் மேல் நோக்கிச் செல்லும், சண்டை சச்சரவு நடக்கும் போது கலையானது 36-அங்குலம் கீழ் நோக்கி சென்று, 24-அங்கு லம் மேல் நோக்கிச் செல்லும், மனிதன் தூங்கும்போது கலையானது 48-அங்குலப் கீழ் நோக்கி சென்று, 30-அங்குலம் மேல் நோக்கிச்



செல்லும். குதித்து ஓடும்போது கலையானது, 54-அங்குலம் கீழ்நோக்ச் சென்று, 27-அங்குலம் மேல் நோக்கிச் செல்லும். ஸ்திரிகளுடன் சல்லாப்செய்யும்போது கலையானது 64-அங்குலம் கீழே நோக்கிச் சென்று, 24-அங்குலம், மேலே செல்லும், இதை நல்ல ஆராய்ந்துபார் அப்பொழுது தெரியும் என்பதே.

## 26-வது திருப்பாடல்

பாரப்பா யிவ்விதத்தா லாவி யெல்லாம்
பறந்தோடிப் போறதினாற் பிராணன் போச்சு
நீரப்பா கால்வயிறே யருந்த வேண்டும்
நித்தியமு மரைவயிறே யமுத ருந்தல்
நேரப்பா முப்பாகந் தினமொன் றுக்கு
நித்திரையை நெடுநாளி னிறுத்திப் போடு
சீரப்பா வறுகோணத் தெழுந்த வாய்வைச்
சிந்தையிலே யுள்ளடக்க விதத்தைக் கேளே.

(திருமணிஉரை) நீ நன்ருக உணர்ந்துபார். இந்த விதங் களினுலேதான் ஒவ்வொரு ஆவியாகப் பறந்து போகிறதினுலே தான் நாளாவட்டத்தில் குறைந்துபோய் கடைசியாக றாஹூ என்கிற பிராணனும் இல்லாமற் போகின்றது. ஆனதால் நீ சாப்பி டும்போது சோற்றை அறைவயிறுக்குத்தான் தின்னவேண்டியது. தண்ணீர் கால்வயிறுதான் அருந்த வேண்டியது. இதுபோலவே ஒருநாளை மூன்று பங்கு வைத்து அதில் ஒரு பங்கு நேரந்தான் நீ நித்திரை செய்து, அப்படியே நாளாவட்டத்தில் சிறிது சிறிதாகத் தூக்கத்தைத் தேய்த்துப் போடவேண்டியது. இன்னும் ஆறு ஆதாரம் என்ற பிண்டத்தில் எழுந்த பிராணவாய்வை சிந்தையாகி இருதயத் தில் உள்ளடக்கி வைத்துக்கொள்ள தந்திரம் என்னவென்ருல் அதைக் கேட்பாயாக என்பதே.

## 27-வது திருப்பாடல்

விதமென்ன வொழியாம லோடு நாடி
 வீசிவரு மோரெழுத்தை விளர்பிக் கொண்டு
இதமான வாசாலை யெழுத்தைக் கேட்டே
 எள்ளளவும் பிசகாமற் சரத்தி னூன்றி
ஓதுறவே வாய்திறந்தா லொழுகிப் போச்சு
 ஓகோகோ சரமதனை யொன்றாய் மாட்டி
மாதிரத்தின் வாய்மூடி மனதிற் பூட்டி
 வாசித்தால் மரணகலை சாகாதப்பா.

(திருமணி உரை) அப்பா! அந்த விதமாகிறதென்ன வென்றாலோ! எந்த நேரமும் ஒழியாமல் ஓடிக்கொண்டிருக்கின்ற நாடியானது சரீர ஆதிக்கமும் வீசிவருகின்ற (ஹூ) என்று சொல்லக்கூடிய கலிமாவின் உயிர் எழுத்தானதை நல்லபடியாக ஆசானது சமூகத்தில் தீர்ச்சையாக வரம் வாங்கிக் கொண்டு, அவர் சொல்லக்கூடிய முறையில் ஒரு எள்ளளவும் பிசகுவரா தபடி, சரத்தை நான் இந்த சரநூலில் பூரணமார்க்கம் கூறிவந்த ஆஸ்பத நேர்த்தியைப்போல நீ தவறி விடாமல் ஊன்றிப் பிடி. அந்த சமயம் நீ அந்த அட்சரத்தை மனதில்தான் நினைத்து சரம் உன்னவேண்டியதே அல்லாமல், வாய்திறந்து ஓத நினைத்தால் உடனே வாயின் இடமாக ஒழுகி ஓடிவிடும். ஓகோகோ இந்த தந்திரத்தில் அமர்ந்து எல்லாப் பூரண சரங்களையும் ஒன்றாக மனதிடத்தில் கூட்டிப்பிடித்து ஒரே சூரிய பூரணத்தில் கொண்டுபோய் மாட்டிக்கொண்டு, மாட்டிக் கொள்வையேயானால் மரணகலையானது ஒருபோதும் சாகாமல் உன் ஜடலத்திலேயே தங்கிவிடும் அப்போது நீ எப்போதும் சாகாவரம்பெற்று நீடூழிகாலம் சிரஞ்சீவியாக இருந்து வருவாய். இதன் திறமைகளைத் தெரியாத மூடர்கள் நம்பவே மாட்டார்கள் என்பதே.

## 28-வது திருப்பாடல்

சாகாது நவருமலோடும் நாடி
 சரமொன்று தப்பிவிடிற் சற்றே போச்சு



வாகாக வோரெழுத்தா லிழுத்து மூச்சை
 வாசித்து வெளிவீச வழக்கமாகும்
ஓகோகோ வெளிமூச்சுக் கிருக்கா லோதே
 உத்தமனே யொருமூன்று நாளிற் றேறு
பாகமதா யொருபதுநா ளுயி ரந்தான்
 பழக்கமதாய்க் கொண்டுவச மணையே நாளில்

(திருமணி உரை) அவ்விதம் சாகாமல் நிலைநின்று ஓடக்கூடிய குருநாடியானது ஒரு சரம் அதில் தப்பிவிட்டால் சற்று தனுவானது குறையும். அதை அந்த (ஹூ) வென்ற திருவெழுத்தின் மந்திர தந்திரத்தாலே உயிரே இழுத்துக்கட்டி சுழற்றி வீசவீச அதுதான் பழக்கப்பட்டு விடும். வெளிபோய்த் தங்கின சூனியசு வாசங்களுக்கு இரண்டு தடவை (ஹூ) உச்சரிக்க வேண்டும். அது மூன்று நாளைக்குள் நடப்பிலே பழக்கமானவுடன் உன் அடங்காத சரீரகட்டையானது ஈடேற்றம்பெறும். அதற்கடையாளம் தானே தெரியவரும், இப்படியாக பதினாயிரம் சரநிலைகளாக நீ ஏற்ற இறக்கங்களில் மாற்றிவந்து உன் ஜனனகண்டங்களை நீக்கிக் கொள்ள வேண்டியது. அதாவது:—வாசியை வசஞ்செய்து கொள்ள வேண்டியது. இது நாளாவட்டத்தில் சிறுகச் சிறுக பழகிக்கொள்ள வேண்டியது.

## 29-வது திருப்பாடல்

நாளுக்கு நாட்பழக்க மதிகமாக
 நடந்தேறு நாதத்தை நன்றாய்ச் சூட்டி
வேழத்தைத் தும்பியிலே கட்டொண்ணாது
 விதமென்ன கலையதையே விரும்பிக் கொள்ளு
நாளுக்கு நாளாவி வளர்ந்தே யேறும்
 நலமான சுத்திதனைச் செய்து கொள்ளு
ஊழூழி காலமெல்லா முண்டே நானு
 முலகவர்க்கு விந்நூலை யோதினேனே

(திருமணி உரை) அப்படி நாளுக்குநாள் பழக்கஞ்செய்து அதிக நீதத்தில் வந்து கூடினவுடனே வேழம் என்ற ஆண்யானை போல் மதங்கொண்டு கழன்று செல்லாநின்ற சூரிய பூரணத்தை தும்பி என்ற பெண் ஆனையைப்போல் சாந்துங்கொண்டோடுகிற சந்திர பூரணத்துடன் ஒன்றுசேர விடாமலும், ஒன்றுய்க்கட்டி இணங்கிவிடாமலும் என்னவிதம் எந்தக்கலையால் நிறைவேறுமோ அத்தகைபோல் சக்ரம் ஆடிக்கொள்வாயாக. இனிமேல் உன் ரூஹானது பரிபூரணத்தின் சகவாசத்தாலே கொஞ்சங் கொஞ்சமாக எற்றங்கொண்டுவரும். அதிலும் சுவாசசுத்தி என்கின்ற சூனிய சரத்தை எதிலுங் கலக்கவிடாமல் தடுத்துக்கொள்ளு. இந்த ஊழூழிகால வாழ்வாகிய பூரணநிலையில் நான் கண்ட பராமாநந்தத்தை இனி ஒரு அனுத்தளையேனும் வஞ்சகம் இல்லாமல் உலகவாசிகளுக்கு நான் சொல்லிவிட்டேன்! சொல்லிவிட்டேன்! அறிவும் அன்பும் உடைய கெட்டிக்காரர்களாக இருப்பீர்களானால், இந்த வல்லமை குணத்தில் பிரயாசையெடுத்தால் முத்தி மோட்சம் பெற்றுக்கொள்வீர்கள். இந்த என்னுடைய சரநூலானது உலகத்தார்களுக்கு இன்றியமையாத ஒரு பெரிய தெய்வ அமிர்தத்திரளுக் கொப்பாக அதற்கு மேலானதாகவே இருக்கின்ற தென்பதை அந்த நடையில் வந்தவர்களுக்கே தெரிந்து ஷுக்று செய்வார்கள் என்பதே.

## 30-வது திருப்பாடல்

ஓதுகின்ற சரமதனை யுலகத் தோர்க்கு
    மொளியாம லுரைத்தவித முவந்த போக்கு
வேதகுல வ்ாவாஞ்சி பேர னான
    வேந்தரெனும் சிறுமலுக்க ரீன்றபாலன்
நீதமிலா திந்நூலைப் பொய்யென் னுமல்
    நிலைநிறுத்தப் பீர்முஹம்ம தென்போன் யானே
வேதமெலு மெய்ஞ்ஞான சரநூ லென்றே
    விளப்பினேன் கவிமுப்ப தாக முற்றே



(திருமணி உரை) இந்த உலகத்தில் சுவாசத்தைப் பற்றிய சாஸ்திரவிதியை மானிடவர்க்கத்தார்களுக்கு யாதொரு ஒளிப்பு மறைப்புமில்லாமல் தீர்க்கையான வழியாக சொல்லியவர் யாரென்றுலோ? இஸ்லாம் மார்க்கத்திற்கிறந்த தோத்திரவந்தராகிய வாவாஞ்சி அவர்களின் பேரப்பிள்ளையாகிய சிறுமலக்கரவர்கள் பெற்ற குமாரராகிய தற்கலையூர் மெய்ஞ்ஞான சொரூபராகிய பீர் முஹம்மது சாஹிபு என்னும் மஹாத்மாவால் ஞானசரநூல் இன்னமாதிரிதான் என்று நிலைநாட்டும் பொருட்டுச் செய்த திருக்கவிதை முப்பது ஆகும் என்பதே.

இந்த இடத்தில் ஆசிரியர் தன்னைத் தாழ்த்திச் சொல்லியிருந்த உண்மையுடன் பாட்டின் முறையில் கவி நடத்தினதாக இருந்த போதைக்கு அதை உரை வகுத்த எனக்கு அவ்விதம் தன்மை முன்னிலையில் எடுத்துக் காண்பிப்பது அவ்வளவு உசிதமாகாது என்று கருதி படாக்கையுடன் பாட்டாக எழுதினேன் என்று ஆன்றோர் கண்டு கொள்ளவும்.

### திருமணி உரை முற்றிற்று.

# ஓர் அறிவிப்பு.

சில கனவான்களிடம் அப்பா, அவர்களின், ஞான பாடல்கள், ஏடுகளாய் இருக்கின்றது, அதுகள் எல்லாம், புழுக்கள் அழித்து விட்டு கிடைக்கின்றது. அவர்கள் அப்படி புழுக்களுக்கு இரையா கினும், அச்சடிப்பதற்கு கொடுக்கமனம் மில்லாமல் இருக்கின்ருர்கள். அச்சகோதரர்களுக்கு நாம் சொல்லிகருேம்! நீங்கள் அப்பா உடைய பாடலே வெளியாகாமல் மறைத்து வைப்பீர்களாஞல், அதஞல் உங்களுக்கு பெறும் கஷ்டத்தை கொடுப்பதை தவிர யாதும் லாபம் கிடையாது. ஏனென்ருல் அப்பா பாடியது உலக பாமர ஜனங்களுக்கு நல்லறிவை புகட்டி மோட்ச சாதனத்தை பெற்று, இஸ்லாமிய தத்துவங்களே சரிவர உணர்ந்து நபிகள் நாயகத்தின் ஷபா ஹத்தும் பெற்று, வாழ்கவேனும் என்றே, தன் உள்ளமையில் இருந்த மருலுக் காத்துகளே வொளிபடுத்திஞர்கள். ஆகையால், இஸ்லாமான இச்வான்கவே! நீங்கள் அப்படி படும் போக்காய் எடுகளே வைத்து பாழ்படுத்தாமல் நீங்களே போட்டு வெளிபடுத்துங்கள், அப்படி இல்லேயாஞல் நம்மிடம் கொடுத்தால் நாம் அச்சடித்துக கொள்கின்ருேம். அதர்க்கு யேர்படும் ஹதியாவையும் கொடுக் கின்ருேம்.

சகோதரர்களே!

சென்னே, திருஅல்லிக்கேணி, சூரியப்பமுதலி தெருவு, 12-நெ. வீட்டில் இருக்கும், மகாகனப், ஜனுப் செ. அ. யூஸஉப் லெப்பை அவர்கள் இடம் நமது மஹோ மஹான் குத்துபுல் ஸமான் ஷெய்குல் ஆரிபீன் தர்கலே பீர் முஹம்மது சாஹிப் அவர்களால் பாடப்பட்ட "ஞான அமூர்தகலே" என்னும் பேரானந்த பாடல் பத்து, கவிதைகள் இருப்பதாய், தெரிந்து நான் போய் கேட்டதும், ரொம்பவும் சந்தோஷம் கொண்டு, தம்பி என்னிடம் இது இருப்பதால் என்ன பிரயோஜனப்படும். நீ தயவுசெய்து உலகமானிடர்களுக்கு உபயோக மாகும்படி செய்வாய்யாஞல், இதை நீ கொண்டுபோய் அச்சிட்டு கொள்ளென்று எடுத்து, வெகு ஆனந்தமாய் கொடுத்தார்கள். இந்த படி ஒவ்வொரு கனவான்களும் தங்கள் இடம் இருக்கும் வெளிவராத நம்பெரியாருடைய நூல்கள் இருக்குமாஞல், உடனே நமக்கு அனுப்பிஞல் நாம் அதை பிரசுரிக்கவும், அதற்கு ஏதும் கேட்டாலும் கிரையம் கொடுத்து பெற்றுக்கொள்ளவும், தயாராய் இருக்கின்ருேம.



பிஸ்மில்லாஹி.

ஞானமணிமாலே தாற்பரிய உரை

இதில்

தற்கலே மெய்ஞான சொருபரான

ஆரிபுபில்லாஹி

பீர்முகம்மது சாகிபு ஒலியுல்லா அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# ஞானமணிமாலே மூலமும்,

அதற்கும்

பாண்டியமண்டலம், செவ்வல் மாநகரம்

மஹாவித்துவான்

ஸ்ரீல்ஸ்ரீ

எம் ஏ. நெயினு முகம்மதுப் பாவலர் அவர்கள்

எழுதிய

# தாற்பரிய உரையும்

அடங்கியிருக்கின்றன

இதனே

மதுராஸ் திருவல்லிக்கேணி

யூநானி மதாரிய்யா மெடிக்கல் ஸ்டோரின்

சொந்தக்காரராகிய ஸ்ரீமான்

டாக்டர். எம். ஏ. ஷேக்மதார் சாகிபு,

அண் ஸன்ஸ், அவர்களால்,

தமது

மதாரிய்யா அச்சியெந்திரசாலேயிற் பதித்து

வெளியிடப்பெற்றது

---

இரண்டாம் பதிப்பு

ரிஜிஸ்டர் காபிரைட்] 1923. [விலே ரூ. 1—8—

## சிறப்புப்பாயிரம்

இது

இந்நூல் உரையாசிரியரின் அத்தியந்த மித்திரராகிய

இராயபுரம் ம-ா-ா-ஸ்ரீ,

டாக்டர்

### தி. வீ. கந்தசாமி பிள்ளையவர்கள்

### இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

ஒருபெரும் பொருளா யிருவினை துறந்து
முத்தொழி னடத்து முழுமுதற் கடவுள்
அன்பிற் பெருகு மின்ப வெள்ளத்
தொருமுத் தவதா ரங்கொண் டிருந்த
முகம்மதெம் மாண்டகை யகநிலை காண்புகு
எழுவார் யாத்திரைப் பழுதறப் போகிப்
பிர்மத் திடத்துக் கிடைத்ததோர் மர்ம
ஞானப் பிழம்பைத் தியானமோ டறியா
இருட்டடை கிடக்குங் குருட்டுக் கண்ணர்க்
கூட்டி யுணர்த்துவான் பூட்டிய ஞான
மணிமாலை யொன்றை யணிவரை மீமிசை
யேற்றிய விளக்கன வாற்றினர் தற்கலை
அடங்கி விளங்குஞ் ஞானக் கடவுள்
மூந்நா ருண்டு முழங்குகடல் ஞாங்கர்
ஜீவித் திருந்தசஞ் சீவியாந் தேசிகர்
பீரு முகம்மது ஸாஹிபு ஒலியே
அந்நா லுலகம் அறிந்தீ டேறுவான்
தாற்பரி யஞ்செய் தேற்பவருளின்
ஞெண்டு மணல்பரிக்கும் வண்டல் சாலருவி
யங்கரை தோறுஞ் சங்குமுத் தீனுஞ்
செந்தமிழ்ப் பாண்டி நாட்டுழி செவ்வல்
மாநகர் பிரந்தஞான சமுத்திறம்
பெரும்பு லமைவகித்த அருப்புகழெம் ஏ.

நயினார் முகம்மதென் நிபுண பாவலனே
திருவரு மிந்நூற் பொருளரு மரங்க
மேற்றரு ளச்சிற் பதிப்பித் தீந்தனன்
திருவல்லிக் கேணி சூரப்ப முதலி
வீதியில் வாழும் மாதவச் செல்வன்
யூநான் மதாரிய்யா மெடிக்கலிஸ் டோரின்
சொந்தநற் சீமான் சந்தன மார்பன்— அதான்று
அருட்பெரும் பொருளையோர் துரும் பெனக்கருதி
நல்வழி நோக்கிச் செலவழித் திடுவோன்
மொ, அ. ஷெய்கு மதாறு
சாஹிபென் றோது தயாள பூமானே.

---

இது
திருசிபுரம் ம-ா-ா-ஸ்ரீ
ஆண்டானடிமை
ஸ்ரீமத்
**வைத்திலிங்க ஆச்சாரியாரவர்கள்**
*மாணவர்*
திருவல்லிக்கேணி
*திராவிட மஹோபாத்தியாயர் ஸ்ரீமத்*
**க. முருகப்ப முதலியாரவர்கள் இயற்றியது**

---

நேரிசை வெண்பா.

மாலை யணிபீர்மு கம்மதொலி ஞானமணி
மாலைக் குரைவகுத்து மாண் புற்றான்—ஞாலமிசை
கற்பகநேர் செவ்வல் நெயினான்மு கம்மதெனும்
நற்பாவலப் பெருமானும்.
இன் னவரு நூலுக் கிருநிதிய மிட்டரங்கேற்
றுன்னதமா யச்சிட் டுலகளித்தான்—பொன்னவரை
நேருப்பு யத்தானெஞ் ஷேக்கு மதாரென் றுஞ்
சீருடனே வாழ்கச் சிறந்து.

---



பிஸ்மில்லாஹி.

# ஞானமணிமாலை தாற்பரியவுரை.

**விருத்தம்.**

திருமணியொளிவாலேகன் றிசைபுவியனைத் துஞ்சேரக்
குருமணியிறசூல் தம்மைக் குவலயத்தமைத்தானன்பா
லொருமணிக்கிணையில்லாதா னெழுகிய கிருபைபொங்கி
யருமணி நபிகட்கெல்லா மரசென வகுத்தான் றுய்யோன் (1)

## இதன்தாற்பரியம்

திருமணி: என்கின்ற அரிதான குன்து கன்ஸெனும் புதையற் பொருளாயிருந்த அல்லா என்னும் ஒரு தெளிவான நாட்டமானது தன் உள்ளத்தில் இருந்த அன்பாகிய முகப்பதினாலே தன் கோலத்துக்குள் மல்ஹூருகி இருந்ததோற்றப்பொருட்களை வெளியாக்கும்படியாக வேண்டி அதற்கு காரணகருவியாக முதலாவது நூறுல் முஹம்மதியா என்னும் பிரகாசவொளிவை தன்னில்இருந்தும் வெளியாக்கி அதைக் கொண்டுஸ்ஸமஸ்தஜீவகோடி அண்டகோடி, மண்டலகோடி, பாதாள சுவர்க்க, நரக்கொடிகளையும் உற்பத்திபண்ணி, அப்பால் மனுஷீகத் தன்மையில் சிருஷ்டித்தனுப்பிய அவனது நேர்வழித் தூதர்கள் என்கின்ற தீர்க்கதரிசிகளான றசூல்மார்கள், நபிமார்கள் யாவர்களுக்கும் இராஜராக நமது ஆண்டவர்கள் முஹம்மது சல்லல்லாகு அலைஹி வசல்லம் அவர்களை இந்த மானுட உலகத்தின்கண்ணே அவனது கிருபைப்பெருக்கத்தினால் வரச்செய்தான் என்பது

## (அவதாரிகை)

அப்படி சிருஷ்டித்த நாட்டமும், ஒளிவும், ஜீவன்களிடத்தில் எத் தன்மையாய் கலந்தது! என்று ஆட்சேபம் வருவதாலே கீழே காட்டுகிறார்.

துய்யவன் பழுதொன்றில்லாச் சுடர்விரிந் துயிர்களுள்ளத்
துய்யவினொளியரூப ரூபமொப் புவமையில்லான்
மெய்யவன் சொரூபமன்றி வேறொன்றிற் றெரிசியாதான்
செய்யநம் மிறசூலுல்லாத் திருமல ரமருந் தேனும். (2)

## தாற்பரியம்

துப்புரவான அந்த நாட்டமானது தன்னிடத்திலிருந்து வெளியான பிரம பிரகாசத்தோடும் ரகித்துக் கொண்டு, உயிர்களின் இருதயங்கள்தோறும் அருபமாகவும், ரூபமாகவும் தனக்கு வேறொரு வஸ்தும் சமானம் இல்லாமலும், தன்னையன்றி வேறொரு ஜடலத்தை தரிசியாமலும் ஒளித்திருந்து சரீர ராஜகருவிகளுக்கெல்லாம் நினைப் பூட்டிக்கொண்டிருக்கின்றது. (முஹம்மதியா) என்கிற வொளிவோ! மேற்கூறிய அந்த திவ்ய நாட்டத்தின் ஊசாட்டத்தை எதிர்பார்த்ததாக ஜீவகோடிகளின் ஐம்பூத சூட்சம சரீரமாக ஈரலின் பிரதானப் பொருளான நெஞ்சத்தாமரை மலரின் கண்ணே ஆத்மா என்னும் இனிய உயிராகப்பிரகாசித்துக்கொண்டிருக்கிறது என்பது

தேனகத் தினிமையேழுந் திருவெழுந் துருவாய்நின்ற
கோனகத் தினிமையேழுங் கோன்முறை நடத்துங் கோமான்
தானகத் தினிமையேழுந் தரணிமற் றுயிர்கள்யாவும்
வானகத் தினிமையேழு வகைபல தோற்றமாமே. (3)

## தாற்பரியம்

அப்படி இனிமையாகரகித்த பிரகாசமானது தன்னிலிருந்தே ஏழு தோற்றங்களை வெளியாக்கவேண்டிய காரணங்கொண்டு தானே ஏழு வகையாகத் தன்னைப்பிரித்து ஒரு வடிவாகிய ஒளிவைப் பல பல ரங்குகளாக நிர்மித்து ஒளிவு, முத்து, மயில் முதலான ஏழு வடிவையுங் காட்டி அதிலிருந்தே பூதவாசல்களில் பாய்ந்து கோபம் பொறுமை, சாந்தம், அறிவு, குளிர்மை முதலான ஏழு கருவிகளாகபிரித்து அவைகளிலிருந்து விதை, சினை, பிறப்பு, முட்டை, வியர்வை, நெருப்பு, வொளிவு, முதலான ஏழு கருவிகளைச்செய்து அவைகளைக்கொண்டே ஏழு உலக கோடிகளையும் உற்பத்தி பண்ணிற்று எப்படியென்றால்: விதையிலிருந்து மரம் செடி புல் பூண்டுகளையும், சினையிலிருந்து ஜலம் வாழ் ஜந்துக்களான மீன் கூட்டங்களையும், பிறப்பில் இருந்து மனிதர்களையும், ஜின்களையும், விலங்குகளையும் இவை போன்றவைகளையும் முட்டையிலிருந்து பறவை ஜாதிகளையும், ஊர்ந்துதிரிகின்ற ஜந்துக்களையும், வியர்வைகளிலிருந்து ஈறு, பேன், முதலிய ஜெந்துக்களையும்



நெருப்பிலிருந்து நரகம் வாழ் வானவர்களையும், ஒளிவிலிருந்து சுவர்க்கம் வாழ் வானவர்களையும் வில்தான்கள் ஹூறுல்ஈன்களையும் ஆக இந்தஏழுவகையான தோற்றப்பொருட்களையும் வெளியாக்கிற்று என்பது.

வேறு,

தோற்றுமாலநபி தோழர்நால்வரோடு சொல்லு மாலியசனு
சைனுமென், றேற்றநாவலர்கள் செந்தமிழ்க்கவியிசைத்தபாடலொ
டெதிர்த்தியான், சாற்றும்வாறது செந்தாமரைக்கிணைச் சருகைமா
மலர்சமைத்தல்போ-லாற்றுஞ் ஞானமணி மாலைகோத்திடவெ
னன்பனே யுனது தப்பமே. (4)

## தாற்பரியம்

அவ்விதம் உற்பத்தியான ஏழு தோற்றத்தின் வடிவானதில் அலியும், அவர்களின் குமாரர்கள் இருவரும், நால்யார்களும் ஆக ஏழ்வர்களும் அமைந்து நின்றார்கள். இது நிற்க! நாவில் வல்லமையுள்ள ஞானவான்கள் செய்திருக்கிறபிரபந்தங்களுக்கு எதிரே நானும் இந்த ஞானமணிமாலையை செய்கிறதாயிற்று. செந்தாமரை புஸ்பங்களுக்கு பகரமாக காய்ந்துஉதிர்கின்ற மரச்சருகுகளை ஒப்புவைத்தது போன்றிருக்கிறது. ஆனதால் என் அன்புடன் ரகித்து இருக்கின்ற தரிபாடான கடவுளே உன் காவல்பாடு வேண்டும் என்பது

வெண்பா.

மருவுபுலி யோநாயின் மதலையெழு வகையா
லுருவமூறு தோற்றமோ டுறைந்த-திருவிறசூல்
நல்லதெனவே தெளிந்து ஞானமணி மாலைதனைச்
சொல்லவிறையோனே-துணை (5)

## தாற்பரியம்

இந்த மணிமாலையானது புலி, ஒநாயின்குட்டி, முதலான ஏழு வகுப்பினங்களுடன் அகமியமாக கலந்திருக்கின்றகாரணக்கருவியான ஒளிவான நபியவர்களே உத்திரவுதந்து சரிகண்டதாக இருக்கும். இதற்கு இறைவனாகிய அல்லாவே துணை நின்றருள்வானாக என்பது.

## விருத்தம்

துணைமுகம்மது மண்ணினிற் றேற்றமேழ் வகையாற்
பணையமென்றிறையவ னமைசெயும் படைப்பெல்லாங்
கணையிஞேருயிர் காயமுங் கோலமும் பலவாய்
மணைமெய்ஞ்ஞானமா மணிமாலைக் கவ்வெழுத்தாமால் (6)

## தாற்பரியம்

உயிர்களுக்காதாரவஸ்துவாகிய நூறுல் முஹம்மது என்பதினல் ஏழுவகைத்தோற்றமுண்டாகி மண்டலமுதலானவை உண்டு, பட்டு உடல் உயிராதிகள் எழுந்து நின்றன. ஆனதினலே அந்த நூறுல் முஹம்மதுக்கு ஏற்பட்டிருக்கிற ஆறட்சரத்தின் தொகை போலவே என்னுடைய ஞானமணிமாலைக்கும் ஆறு அட்சரமாமிற்று என்பது.

## வெண்பா

அவ்வ லமைத்தபுவி யாகாச மேலறுஷு
செவ்வி லிருத்தியபின் சீராக-எவ்வுயிர்க்கும்
நல்லறிவை யீந்தவனே நானுனது ஞானமுறை
சொல்ல விறையோனே துணை. (7)

## தாற்பரியம்

பூதங்களில் முதலாவது உற்பத்தியான மண்ணை வைத்து மேலே ஆகாசத்தையும் அதன் மேல் அறுஷையும் இவைகளுக்கிடையில் அணுக்கோடிகளையும் அமைத்து வைத்துதன் சூட்சமப்பிரயோகங்களை ரகிக்கச்செய்து அறிவுகளையும் கொடுத்தவனே! உனது மர்மவழியான ஞானத்துறைகளை நான் சொல்லும்படி நீ துணைசெய்தருள் என்பது.

## விருத்தம்

சிறுமலுக்கரக மகிழ்ந்த செல்வனிரு கண்ணற்றவன்
பெறுவிநந்தியருள்பொதிந்த பீர்முகம்ம தெனும்பயல்
சறதுநான் குவழியீராறு சமயநீதிகண்டவன்
இறைவனன்புபெறுந்தீஞேரிடேறும் பரிசியம் புவான். (8)



## தாற்பரியம்.

சின்னமலுக்கர் என்றவருடைய மனங்குளிர்ந்த குமாரனனவன். இன்னும் முஹம்மதென்னும் அகமியஜோதியின் திருவருளைப்போர்த்திருக்கின்ற பீர்முஹம்மது என்கிற அடிமையானவன் ஷரகில் அமைந்த மதுஹபு நான்கையுங், சமயங்கள் பன்னிரண்டின் சாஸ்திர விதிகளையும், தெளிந்து ஒருமைத் துறையேயன்றி மற்றவைகளில் இருகண்களும் பார்வை யில்லாதவன். இன்னும் அல்லாவின் அன்புகொண்டு வருகின்ற அன்பர்களுக்கு ஈடேற்ற முறைகளைச் சொல்கிருன். என்பது.

## வேறு.

அடல்செறிஷரீ அத் அத்தென்னு மகுமதர் வழியேயாகு
முடல்செறி தரீக்கத்தென்னு முண்மைகள் பலவுங்காட்டுங்
கடல்பெறும்ஹக்கீக்கத்தாலேகத்தனைக்காணலாகு
மடல்செறி மகரிபத்தால் வழியொன்ருய் வளருந்தானே. (9)

## தாற்பரியம்.

ஷரீஅத்து என்கிற சரிபை வழியானது அகுமது நபியாகிய ஆண்டவர்களின் சொல்லாக இருக்கும். தரீக்கத்து என்கிற கிரிவய வழியானது பலபல உண்மைகளைக் காட்டும். ஹக்கீகத்து என்கிற யோகத்தினலே தன்னுடைய றப்பை அதாவது கடவுளைத் தெரிசிக்கலாம். மஅரிபத்து என்கிற ஞானத்தினலே வேறுவேருகி நின்ற அவத்தைப் பொருள்கள் மாறி தானும் தலைவனும் ஒன்ருய் ரகித்துப்போகக்கூடும் என்பது.

வளர்ந்திடுஞ்சரீ அத்தாலே வல்லமை யறியோனுது
தளும்பிலா தரீக்கத்தாலே தன்மையோர் வழியைக்காட்டும்
களிம்பிலா ஹக்கீகத்தாலே கனல்செறிவழியைக் காட்டு
மழும்பிலா மஅரிபத்தா லாதிதன் வழியொன்ருமே. (10)

## தாற்பரியம்.

ஷரீஅத்தென்ற சொல்வழியாலே தன்னுடைல் ரகசிய வல்லமைகளைக் காணமுடியாது. அதில் நின்றும் தரீக்கத்தென்னும் பிரயாசை செயற்கையைக்கொண்டு ஒருவிதமான நோக்கமுண்டா

கும். அதிலிருந்து பழகி மூன்றுப்படியாகிய ஹக்கீகத்தில் வந்து நின்றால் ஆசையென்னும் அக்கினிவழியைத் தெரிசித்து பாவ தோஷங்கள் வெந்து சாம்பலாகும். அப்பால் மஅரீபாவின் மாளிகை யேறிக்கொண்டு தான் இன்ன வஸ்துவென்று சந்தேகமறக்கண்டு பூதகோடிகளுடன் ரகித்துவிடும். என்பது.

ஆதியை யறியவேண்டி லழகிய நிலமைநாலா
மோதியசரீ அத்தென்னு முவந்திடுந் தரீகத்தென்னும்
நீதிசேர் ஹக்கீக்கத்தென்னும் நெறியுள்ள மகரிபத்தா
லாதியைக் காணலாமென் றகுமத ரருளிச்செய்தார் (11)

## தாற்பரியம்,

ஆனால் நபிநாயகமவர்கள் திருவுளம்பற்றினார்கள். எப்படியானால். தனைக்கண்டு ஆநந்திக்க வேண்டுமானவன் முதல் ஷரீ அத்திலிருந்து அப்பால் தரீக்கத்தில் பிறகு ஹகீகத்தில், அப்பாலே மஅரியத்தில் நின்று சாதிப்பான். அவனே தன்னைத் தெரிந்துக்கொள்வான் என்பது.

அகுமதர் மருகராலிக் கருள்செய்தா ரதனைக்கேண்மோ
சுகமதுபெறவேநாலு தோத்திரமறியவேண்டி
முகம்மது செவிகணெற்றி புருவமுக் கிடையேநோக்கில்
நவமணி யொளிபோற்றீப நடுவேநின் றுடுந்தானே. (12)

## தாற்பரியம்.

நபிபெருமானார் அவர்கள் மருமகருகிய ஹலறத்துஅலி அவர்களுக்கு உபதேசஞ் செய்தபோது காட்டிய சாதனையாவது. "எந்தக் காலமும் ரகித்திருக்க; பூதகோடிகள் நான்கையும் வென்று அடக்கவேண்டும். அவையவைகளின்தோற்றங்களையும்காணவேண்டும். அதற்கு உபாயமானது முகத்தை சுழிமுனைக்கு நேரே நிறுத்தி செவி, கண், நெற்றி, புருவம், மூக்கு இவைகளுக்கு நடுவே நினைப்பை நிறுத்திப்பார்த்தால் ஒன்பதுவகை ரங்குகளைப்போல் ஒரு வொளிப்பொருளான தீபமானது நடுத்தானத்தில் வந்து நின்று பளீரென்று நடனமாடும்" என்பது.



## வெண்பா.

ஆடாதுஆடிலது அம்பரத்திலேறுது
ஓடாதொருநாளுமோயாது-தேடரிது
சிற்றறிவார்க்காணாது சிந்தைநமகிழ்ந்தத்தனையு
முற்றுணர்வோர்க்கொன்றாய் விடும். (13)

## தாற்பரியம்.

அவ்விதம் ஆடக்கூடிய பிரகாசமானது இல்ஹாமுடைய மகாமில்ஆடாமலும், உயரப்போகாமலும், ஒடிமறையாமலும், எந்தநேரத்திலும் ஓயாத வெளிச்சத்துடனும், வந்துவந்துதோற்றாவாகும் அதைத்தேடிப்பிடிக்கவோ எந்த ஞானிகளாலுமுடியாத காரியம். உலகமயக்கத்திலே சிக்குண்டு அலைகின்ற சிறிய அறிவுகளைக் கொண்டு உணர்வார்களுக்குத்தோற்றப்படாது. வினை நீக்கி மனத்தின் கண் ஆசை பொங்கிச்சாதனையுடன் உற்று நோக்குவார்களுக்கு ஒரு வஸ்துவாகித்தானகவே ரகித்துவிடும் என்பது.

## (விருத்தம்)

உடுதுகிலழுக்கை நீக்குமுவமைபோலுணர்ந்த நீங்க
லடுதவவசனந்தவுபாவாடையையுடுக்குமாப்போ
லிடுதவங்கமலத்தில்லென் றேற்றிடப்பாவந்தீரும்
முடுகுவாரருசின்மேலோன் முகப்பத்திலாவாரன்றே. (14)

## தாற்பரியம்,

உடுத்தக்கூடிய ஆடைகளின் அழுக்குகளைத் தண்ணீரில் துவைத்து நீக்கிக்கொள்வதுபோல். தன்னை யறியவேண்டியவர்கள் சரீரமான அழுக்குப்பிடித்த ஆடையை தவ்பா என்ற பிழைபொறுக்கத்தேடுவதால் தப்பி சுத்தப்படுத்திக்கொண்டு அந்த நிலையிலேயே இருதய கமலத்துக்குள்ளே 'இல்' என்கிற திக்றைப் பிரயோகம் பண்ணுவதால் சகல பாவதோஷங்களும் தீர்ந்து அறுஷ் என்கிற ஆதியின்சமுகத்தில்முடுகி அவனின் அன்புடனே விரவிகொள்வார்கள் என்பது,

## பஃறொடை வெண்பா

ஆவாரவனியின்மே லானவறுசைக்கடந்து
போவார் பிதற்கணம் போகாமற்—றேபாதஞ்
சென்று தொழுவார் கமலத்தில்லென்றசத்தநலங்

கண்டுதெளிவாரேஹக்காக—வென்று முள்ள
நிச்சயத்தைக்காண் பார் நினைவுகலந்திருப்பார்
நற்செயலிலேமனத்தை நாட்டுவார்—உட்சிபத்தை
நாடியிருப்பார் நானுமல்லநீயுமென்று
தேடியிருப்பார்தினம்.

## தாற்பரியம்.

அவ்விதம் ஆகினவர்கள் பூமிக்கு மேலானுயர்ந்த பிர்மசமூகத்தையுங் கடந்துசென்று, விகார கோலத்துடன் வருகின்றகருங்கரணங்களையும் வென்று ஆதியின் சந்நிதானங் கண்டு ஆனந்தங்கொண்டு வணங்கி நிற்பார்கள். இன்னும் அங்கே இருதயக்கமலத்தின் நடுவே ' இல்'' என்று முழங்குகிற திருவோசையையும் கேட்டு உண்மையாகவே பரவசமாவார்கள். சதாவும் நிலவரமான அந்த பிர்ம நாட்டத்துடனே தமது நினைவையும் ரஹிக்கச்செய்து ஒன்றுபட்டு நிற்பார்கள். அவ்விதமானதின்பின் உலகத்தில் எந்த கருமத்திலும் கபடு. சூது, வஞ்சனை, தாட்சன்னியம் இல்லாமல் ஏகசமரப்மாக மனதை நிறுத்தி வைப்பார்கள். அவர்களின் எண்ணங்கள் ஒருவிபத்தான கதிர்நுனியில் கொழுகிவிடும்படி தனிப்பார்கள். தன்னை பனுவாக்கிவிட்டு காலிக்கான ஆதியே உண்டு மென்று எந்தக்காலமும் ஆசை பொங்கித்திரிவார்கள் என்பது.

### கலிவிருத்தம்

தினமா நமரொளிகண்டிறை திருவாசலைநோக்கி
யுனமானமென்றுடலானதி லுயிரானவைகூறு
மினமானசொல்லிருநாசியி லியங்கும்வழியூடே
சொனமாமணி நடுவே சுடரொளிவந்துமெய்சூழும். (16)

## தாற்பரியம்.

இவ்விதம் வைராக்கியங்கொண்டு விடாச்சாதனையோடும் பழகிவரும்போது, ஆண்டவன் திருவாசலின் கண்ணே நோக்கிப் பார்த்தால் உடலில் தங்கியிருக்கும் பரம ஆத்மாவானது நான் உன் அமானம் என்று தொனிக்கும். அந்தச் சொல்லானது இரண்டு நாசித்து வாரத்திற்கும் பொதுவான வழியூடே கேட்கும். அப்போது ஹலரத்தின் ஜலாலத்துப்பொங்கி சுழிமுனை மண்டபத்தின் நடுவே தெய்வப்பிரகாசமான ஒரு வொளிவு வந்து ஸ்தூலஉடம்பைச்சூழ்ந்து கொண்டு நிற்கும் என்பது



சூழும்மொளிகண்டும்மெய் துணுக்காமலிருந்தேன்
ஆளும்மிறையேயுன்னை யறிந்தேனுனதறிவால்
மீளும்முயர்மெஞ்ஞா ன விளக்கானதறிந்தேன்
நாளுந்திரு மணிமந்திரம் நாடார் நரகாள்வார். (17)

## தாற்பரியம்.

அவ்விதம் சூழ்ந்து கொண்ட பிர்மஜோதியை நான் கண்டேன். கண்டதும் சரீரத்தை மருளவிடாமல் அவ்வொளிவை நோக்கி எனதாண்டவனே நீதந்தருளியஅறிவினாலே இப்போது நான் உன்னை அறிந்து கொண்டேன். உன் திருஸபா ஆஸ்தானக்கொழுவின் கண் உள்ள பலபல காட்சியும், அத்துடன் தெய்வமயமான தீபஜோதிகளையும் தெரிசித்தேன். இவ்விதங்கனதியுள்ள கலிமாவின் பொருளான உன்னை அறியாத நிர்மூடரெல்லாரும் நரகத்தின் யாதனைக்குள்ளாவார்கள் என்று சொன்னேன் என்பது.

### வெண்பா

ஆண்டநரகத்தி லாகரம லந் தரத்தே
வேண்டுஞ் சுவர்க்கபதி, மேவாமற்-கூண்டிறைவன்
பேராசை யாலுழன்று பெருங்கமலத் தாள்திறந்தே
தீதாறுகாண்பார் தெளிந்து. (18)

## தாற்பரியம்

ஒரு வழியைப்பிடித்து நடப்பவர்கள் அக்கினிலோகமாகிய நரகத்தையும், ஏகப்பிரகாச லோகமாகிய சுவர்க்கத்தையும் விரும்பங் கொள்ளாமல் அவத்தையென்று தள்ளிவிட்டு, நாளடைவிற்கூடிய ஞானசையுடன் நிஷ்டை யென்கின்ற கல்வத்தில் இருந்து சாதித்து, இருதயத்தின் வட்டவடிவமான தாமரையின் அரும்புவிரிந்து இதழ்கள் படர்ந்து விரிந்தவுடனே அதன் மஹா ஜோதிமணி மண்டப கொலுவிற்குள் இருந்து பளிரென்று வெளியாகக்கூடிய ஒரு பரிபூரணக் கடவுளான அல்லாவின் தெரிசனத்தைக் கண்டுகொள்வார்கள். என்பது.

தெளிந்துவரம்பெற்றோரைத் தீண்புவியோர் காண்கி
லழிந்தவர மென்றவத்தை யாக்குவார்-ஒழிந்தது கண்
டுன்னையுணராதுலுழறுகிறே னென்கோவே
யென்னை யிகழாதிரு. (19)

## தாற்பரியம்.

ஞான அறிவைத் தெரிந்து பெரிய வரத்தைப் பெற்றிருக்கா நின்ற மஹான்களை உலகத்தில் அறிவில்லாத மூடஜனங்கள் பார்த்து இவர் கவைக்குதவாத பைத்தியக்காரர் என்று பழிது சொல்லுவார்கள். ஆனதினாலே அவ்வித ஜனங்களை விட்டும் உன் சமூக பாதையில் இஷ்டம் வைத்து வந்தும் உன்னையறிய இலகுவில் முடியாதவனாக பலதும் பிதற்றுகிறேன் ஆண்டவனே! நீயும் என்னை இகழ்ச்சி செய்யாமல் இருப்பாயாக. என்பது.

என்னை யறியாமலிப்புவியி லாசைபெருத்
துன்னை மறந்தேனுடை-யோனே முன்னமே
ஆதமக்க ளெல்லவர்க்கு மறிவளித்த துன்னையன்றித்
தூதெமக்கு வேறுமுண்டோ சொல். (20)

## தாற்பரியம்.

என்னை நான் அறியாமலிருந்த அசாத்திய காலத்தில் இந்தப் பூலோகத்தின் அனுவசியமான பொய்க் காரியங்களை யெல்லாம் எடுத்துச் சுமந்து வீணான கூத்தாடினேன், அப்போது உன்னைக் கனவிலும் அறியாமல் மறந்திருந்தேன். அந்த சமயத்தில் ஆதத்தின் சந்ததி களான மனுஷீக கோடிகள் எல்லாருக்கும் அறிவு கொடுத்தவனான நீயே என்னிடம் தூதனாகவந்து ஞானத்தின் தேன்கூண்டை என் காதிற் பிழிந்தாய். என்பது.

## விருத்தம்.

சொல்லதிகமான பல தோத்ரமறிந்தே
நல்லவரு முன்னெழுத்தில் நாலிலொன்றைநாடி
வெல்லரிய மேனியை விசுவதிப்பதன்றி
யெல்லவரு மெங்குமொ ரெழுத்தென விசைத்தார். (21)



## தாற்பரியம்,

பலமாதிரி சொல்லும் வேதசாரங்களுக்கும் இடங்கொடுத்துக் கொண்டு போகும் ஆதியைப் பலசமயத்தார்கள் பலவிதமாகத் தோத்ரவு செய்துகொள்வார்கள். ஞானிகளோ! தங்களுக்குள் நிரம்பிய பூதம் நாலிலும் அடங்காத இல்லல்லாஹு என்கிற நாலில் ஒன்றானஹு வைத்திடமாகப் பிடித்துக்கொண்டு கடைத்தேறுகிறதற் கரிதான இந்த சரீரத்தை நம்புகிறதைவிட்டும் ஞானிகளெல்லாம் அந்த ஒரு எழுத்தையே விசுவதிக்கும்படியாக முடிவு செய்துகொண்டார்கள். *

## விருத்தம்.

எழுத்தைவாசித்திசைத்திடுநாசியிற்
சுழற்றி வீசச்சுழன்றெழும் வாயுவைக்
கழுத்திலேற்றிக்கருத்திலடைத்த பின்
யெழுத்துநாலும்வெளிவந்து தோற்றுமே, (22)

## தாற்பரியம்.

கலிமாவில் வரக்கூடிய இந்த நாலு அட்சரங்களையும் உணர்ந்து நாசி முனையாகிய சுழிமுனைக்கண் பிர்ம தத்துவமாக சுழித்துக் கொண்டு வீசியவுடனே அங்கே மருவுதலாக வருகின்ற வாயுவை உடனே கண்டத்திற்கு மேலேற்றி நினைவுடன் கலக்கச் செய்தால் அந்த நாலு அச்சரத்தின் கோளங்களும் வெளியேவந்து தோன்றி நிற்கும். என்பது.

தோற்றுஞான ச்சுடரொளிகண்டபின்
மாற்றும்வேறு வகையித ற்கில்லையென்
றேற்றிமூலத் தெழுந்தகமலத் துட்
காற்றையேவிக் கலைத்துவெடித்ததே (23)

## தாற்பரியம்.

அவ்விதம் தோன்றிய அறிவான பிரகாசத்தின் வடிவைத் தெரிசித்த பிறகு நீ கடைத்தேறுகிறதற்கு வேறு வழிகள் தேவை

---

*இனிவரும் பாடல்களில் கூறும் அட்சர விபரம் பகுத்துச்சொல்லப் படாது. அதை முரீது விஷயமாக தம்தம் குருமார்களிடம் விளங்கிக் கொள்ள வேண்டியது.

யில்லை, என்று உறுதி பண்ணிக்கொண்டு ஏறிய ஏற்றத்துடன் மூலாதாரத்தில் வந்து ரகிக்குகின்ற கமலத்தின் உள்ளே சுவாசத்தை நடத்திப் பார்த்தாயாகில் உன் பாவதோஷங்கள் யாவும் கலைந்து வெடிபட்டுத் தெறித்தோடிப்போகும். என்பது.

### வேறு.

வெடித்தமூலக் கருத்திலெட்டெழுத்தினை விசைகொண்
டெடுத்தபோதிரண்டெழுத்தினைக் கமலத்துள்ளிருத்திப்
பிடித்த நாலிரண்டெழுத்திலோர் பிரிவுகொண்டெழுப்பித்
விடுத்தபோதுந்திச் சுழித்தலாகூவென விடலாம். (24)

### தாற்பரியம்.

மூலக்கமலத்தின் கண் எட்டு அச்சரத்தால் மிகஜாக்கிரதையாக இழுத்து வாங்கி, இரண்டெழுத்தால் கமலத்தில் இருத்திக்கொண்டு மீதமிருக்கின்ற ஆறு எழுத்தையும் உந்தியின் கமலத்தில் விடுத்தபோது அந்தக் கமல மலர்விரிந்து (லாஹூ) என்று வாசியை விடலாம் என்பது.

### வேறு.

விட்டபோதுலாயிலாஹ விதியில்லாமை நீக்கியே
யெட்டிநாலிரண்டிலோரெழுத்தினு விருத்தியே
முட்டவாங்கியோதி யூதமூன்று நாலுலோகமுந்
தொட்டிராமலெங்குமுள்ள சோதி நின்றிலங்குமே (25)

### தாற்பரியம்.

லாஹூ வென்று வாசியை விட்டபோதும் லாஇலாஹ என்ற மணிமந்திரத்தில் ஒரு கெட்டித்தனம் பண்ணவேண்டும் அதாவது தலையில் நிற்கும் (லா) என்னும் அட்சரத்தை நீக்கி விட்டு இலாஹ உடனே இரண்டு அட்சரத்தை அங்கே இருத்தி வாசியை நல்லபடி வாங்கி யோதி யூதின அப்பவே ஏழுலோகங்களிலும் ஒட்டியும் ஒட்டாமலும் விரவிநிற்கின்ற பிர்ம ஜோதியானது பளீரென்று வந்து பிரகாசிக்கும். என்பது.

### பஃறொடைவெண்பா

இலங்கும்பொருளதனை யெல்லவருங்காண்கிலோ
நலங்கு துனியாவதனைநாடார்கள்—விலங்கினங்கள்



பத்தாறேடிருபத்து நான்கு நூராயிரத்தில்
வற்றாமல் நிற்குமறைப்பொருளைச்—கற்றார்கள்

காட்டினார்பாரெனவே காதைவளைத் துபதேசம்
பூட்டினரொன்றெனவே போதமுற—வாட்டமது
சூழவனத்திலொரு சோம்பியிருந்தாற்போல
மாளவிருக்குமனிதர்காள்—ஏழைதனை

ஐவாய்வெருட்டி யவனோடிப்போயினைத்து
மெய்யான வோர்கிணற்றிலேவீழ்ந்து பொய்யான
வேர்பிடித்து தூங்க வேங்கைய தன்மேலிருக்க
ஏர்பிடித்தகொடியையிரண்டெலி நறுக்க—காலதன்கீழ்

அக்கினியுந்தேளுமறவுமறக்காய்ந்த
சக்கரங்கோடாரிதான் மழுவும்—நெக்குமிதில்
வந்திருப்பதெண்ணுமல்மானிட ரேயுங்கங்மளச்
சந்தோஷத்தாலேன் தளம்புகிரீர்—முந்தவரும்

வேங்கைமவுத்தாம் விழுங்கினறுமேதிமேதினியா
மேங்கிப்பிடித்த கொடியிந்நாளாந்—தூங்குமதில்
நறுக்குமெலிகதிர்மதியாய் நான்றதன்கிழ்வந்
துறுக்குமொளி தாங்கபுறுக்குட்படுத்தப்—பெறுக்கமிது

பார்த் துணரும்போதுனக்குப்பாழுண்டோவாழ் வுண்டோ
தோத்திரமுண்டோ துணையுண்டோ—வேற்றுமையொன்
றில்லாணைநெஞ்சே யிரவுபகலற்றிடத்தில்
நல்லரனைத் தேடாய் நயந்து

### தாற்பரியம்.

அவ்விதம் பிரகாசிக்கும் வடிவை யெல்லாரும் காண்கும் பட்சத்தில் ஒருவராவது துனியா வென்னும் உலகத்தை நாடமாட்டார்கள். அதோ! எரும்புகடை எண்பத்து நான்கு நூருயிரம் ஜீவஜெந்துக்களிடத்திலும் கலந்து சங்கிலித்துடராக நிற்கின்றது. அந்த மர்மத்தை காமிலான குருமார்கள் என் விட்டகுறை நீங்கினவுடனே இதோ பார்? என்று காட்டி என்காதின் இடத்திலும் மர்மத்தை விட்டு ஊதினார்கள். அது நீதான் என்றும் சந்தேகம் அற தைரியம் பூட்டினார்கள். அப்படியான பொருளையறியத் தெரியா

மல் வீண் பொம்மலாட்டங் கொண்டு புலிகள் படுத்து உறுமிக்கொண்டு இருக்கின்ற அடர்ந்த காட்டில் ஒரு சோப்பேறி அகப்பட்டுக் கொண்டதுபோல வீணுக்கு சாவுகிறதற்காக உடல் வளர்த்திருக்கும் மானிடஜென்மங்களே! கேளுங்கள். தரித்திரவாலனை ஒரு மனிதனை புலியானது துரத்த, அவன் வெருண்டோடிப்போய் இளைத்து ஒரு மெய்என்கிற பாழுங்கிணற்றில் வந்துவிழ, அங்கே பொய் என்கிற வேரொன்று அவன் கையில் அகப்பட, அதை பிடித்துத்தொங்க வெருட்டிக்கொண்டுவந்த புலியானது அவனை விடாமல் கிணற்றின் மேலிருந்து முறுமுறுக்க, அவன் பிடித்திருந்த மெதுவான அந்தக்கொடியை பொல்லாத இரண்டு எலிகள் வந்து நறுக்க, அந்த கிணற்றில் நெருப்பும் தேளும் பாம்பும், சக்கரகோடாரி மழுவைப்போலிருந்து இவனை பயமுறுத்த இந்தக் கெதியில் அவன் பாடு என்னாகும்! இதே கெதியில் நீங்கள் இருப்பது தெரியாமல் உலக விநோதத்தில் விளையாடிக்கொண்டு தளுப்புகின்றீர்கள். விபரம் சொல்கிறேன் கேளுங்கள். மனிதன் என்பது இன்சான் புலி யென்பது மவுத்து, கிணறு என்பது பூலோகம், கைபிடித்தவேர் என்பது ஆயுசு, வேரை நறுக்கின்ற இரண்டு எலிகள் என்பது பகலும், இரவும், பாம்பு, தேள், அக்கினி, சக்கரக்கோடாரி என்பது கபுறு, இதை நீ உணர்ந்து பார்த்தால் இந்த பொய்யான உலகத்தில் என்ன உனக்கு சுகம் இருக்கிறது. என்ன புகழிருக்கிறது? என்ன துணையிருக்கிறது? ஒன்றுமே கிடையாது. ஆதலினாலே இணையற்ற பரம்பொருளான றகுமானை இரவும்பகலும் இல்லாத ஒருமைபடுகின்ற லாமக்கான் என்கின்ற தானத்திலிருந்து தேடிக் கூடிக்கொள். என்பது.

### கட்டளைக்கலித்துறை.

நல்லானைத்தேடிநவிலவொட்டாமலித் நானிலத்தில்
மல்லானபோரும்விளையாட்டுமாய் மனையாள்மருட்டுஞ்
சொல்லான மக்களுஞ் சுற்றமும் வீடுஞ்சுகவுடம்பும்
எல்லாமினிவந்து கூடாதென்றே நெஞ்சிகந்ததுவே

### தாற்பரியம்.

எவர்க்கும் நன்மையைச் செய்கின்ற ஆதியைத் தேடிப்பிடித்து கண்டு அவனுடனே கலந்து உறவாட விடாமல் இந்த பூமியின் அவலமான வீண்போருப். விளையாட்டும். மனைவி மக்கள் என்ற



ஆசாபாசங்களென்னும் மருட்சிகள் வீடென்றும். வாசலென்றும். உறன்முறைகளென்றும். பலபல விநோதங் காட்டிற்று, இவையாவும் எப்பமும் நிலைத்து நிற்காதென்று மனசு வெறுத்து நின்றது என்பது.

### செந்தொடைக்கலித்துறை.

கூடினேன் கவலைக் குள்ளே நடந்தேனிக் குவலயத்திற்
றேடினேன் அவல மென்றே யிருந்தேனின் றிருவுளத்தை
நாடினேன் கமலத் துள்ளே கலிமாப்பொருள் நாடியபின்
பாடினேன் கமலத் துள்ளே பரமானந்தம் பார்த்திருந்தேன். 28

### தாற்பரியம்.

இப்படியாக ஆதியே! உன்ரகசியபாதையில் வந்து கூடிக் கொண்டதின் பின்னால், உன் தெரிசனை எந்தக்காலங் காண்பனோ!! என்ற ஞானக்கவலை பெருகினவனாக சிறிது காலங்கடத்தினேன், இந்தப் பூலோகமாயாதி காட்சிகள் எல்லாம் பொய்யென்று நீக்கி விட்டேன். உன் திருவுளப் பொருத்தத்தை சதாவும் நாடியிருந்தேன். இருதயக்குழாயின் உள்ளே கலிமாவின் பொருளான தீர்ச்சை யெத்திக்கொண்டதின் பிறகு இந்த ஞானமணிமாலையைப் பாடிமுடித்தேன். கமலஸ்தானங்கள் வழியாக வெளியாகும் பூர்வீக ஆனந்தத்தைக்கண்டு நூற்றூண்டுகளாக ஜீவித்திருந்தேன். என்பது.

### கட்டளைக்கலித்துறை.

பார்த்திருந் தேன்பரமானந்தச் சோதியைப் பண்டொருநாள்
காத்திருந் தேனென் றுங் காணுது கண்ணிற் கறுப்படைந்து
பூத்திருந் தேனங் குருவுப தேசம் பொருத்தியபி
னேத்திருந் தேன் மகிழ்ந்தேனுடலேறப் பிரசமுற்றே. (29)

### தாற்பரியம்.

பூர்வீக ஜோதியாகிய வஸ்துவைக் கண்டிருந்தேன் ஆனால் அதைக் கண்டது முன்னமே நான் காத்திருந்த பலனாகவே இருந்தது. அதைத் தேடிப்பிரையாசை யெடுத்த காலங்களில் அதின் சாராம்ஸத்தைக்காணாமல் ஆசைகொண்டு உருகி அழுது என் கண்களின் பக்கவாட்டுகளெல்லாம் கறுத்துவிட்டது இந்த கஷ்டத்தால் மனமென்ற மலரானது ஞானஇதழ் விரிந்துப் பூக்கும்படி இருந்தேன். அந்த ஸமயத்தில் எனக்கென்று விதித்திருந்த குருபர

ஞானவர் வந்து மர்மத்தை அவிழ்ந்து உபதேசஞ் செய்ததின் பின்ருல், நேத்ரங்கள் குளிர்ந்து உடல்தேறி ஆனந்தப் பரவசத்தில் கிடந்து மிதந்தேன். என்பது.

பிரிசமுற் றேயுயி ராவி யொடியங்கும் பெரும்பொருளை
யரிசமுற்றே நெஞ்சரியாத நானடியேன் றனக்கு
வரிசையுற்றே குரு மாருபதேசம் வருத்தியபின்
னரிசம்விட்டேன் கடந்தே னறிந்தேன் பரமானந்தமே. (30)

## தாற்பரியம்.

ஆசையில் மீறி, உயிரான ஆத்மாவுடன் கலந்திருக்கின்ற பெரிதான தத்துவத்தையுடைய ஆதியை, ஒருமைப்படுத்தி அறிந்துக்கொள்ளாத காலத்தில் இந்த அடிமையான நான் கடைத்தேறும் பொருட்டு காமீலான ஒருவானவர் வந்து மேன்மையான ஞானரசத்தை யென் காதில் ஊட்டிய பின்ருல் ஊண், உறக்கம், முதலான சமஸ்தகாம காரணங்களையும் கைவிட்டு பூர்வீக வஸ்துவை வெகு சுலபமாகத் தெரியலாகினேன். என்பது.

அறிந்தே னிறைய யறியாத நாளி லலமலப்பட்
டிருந்தேன் குருவந் துபதேசங் காதிலிருத்தியபின்
வருந்தேன் பலதொன்றும் வையேன் மனதினில் வையகத்தைப்
பொருந்தேன் புறமகற்றிட்டேன் நிறைபரி பூரணமே, (31)

## தாற்பரியம்.

ஆதிவஸ்துவை நல்ல தீர்ச்சையகத் தெரியாத காலத்தில் சத்தா சமுஸ்திரக் கொந்தளிப்பில் அகப்பட்டுத் தவிக்கும் பாய் மரக் கப்பல்போல் அல்லாடிக் கொண்டிருந்தேன். அது ஸமயத்தில் என் சற்குருநாதன் வந்து ரகசியத்தை என் காதில் போட்டதின் பிறகு இனி நமக்கு எது குறையும் இல்லை. என்று பொய்யான இந்தமாய உலகத்தை விருப்பாமல் மனசை விட்டும் அப்புறப்படுத்தி விட்டேன். என்பது.

## விருத்தம்.

பரிபூரணவகை தானுயிர் பலவும் மவனுளவோ
பரிபூரணகுருவேயினி யருள்வீருளமகிழத
திரிமீதிடை நெய்யுஞ்சுடரெரி நின்றெறிவதுபோ
லுரிதாயுயிரெங்கும்மவ ளெளியர் மெனவிண்டார். (32)



## தாற்பரியம்.

ஆதிவஸ்துவின் தத்துவமானது உலகமெல்லாம் நிறைந்த மாதிரி யெவ்விதம் சொல்வீர்? என்று என் குருவைக் கேட்டேன். அப்போது என்ன சொன்னார் என்ருல். அட மகனே நல்ல மகிழும்படியாகக் கேட்டுக்கொள். விளக்கின் கண்ணே எண்ணெய்யை ஊற்றித்திரியைப் பொருத்திக் கொழுத்திவிட்டால் அது அந்த விளக்குக்கு மாத்திரம் வெளிச்சங் கொடாமல் அது இருக்கின்ற வீடெல்லாம் வெளிச்சங் கொடுத்து எப்படி வியாபித்திருக்கின்றதோ! அவ்விதம் அந்த பிர்ம ஜோதியானது சர்வஜீவ கோடிகளிலும் ரகித்து நிற்கின்றது பார்! என்று முதல் முதல் சந்தேஹத்தை நீக்கிவிட்டார். என்பது.

விண்டீர் குருவேயொன்றினில் விளைவானதுகேளீ
ருண்டீர்சில வசனமமது தொதுங்கும் வகையேதோ
அன் றீரிருபிளட்பாயதை யஞ்சாகவேவகுத்து
நன் ருகவேயருள் தூயவ ளுதம்மதுபொசிக்கும். (33)

## தாற்பரியம்.

இவ்வாறு தெளித்துவிட்ட குருநாதனை நோக்கி ஒரு பூதத்தில் நின்றும் பலபல விதமாக வெளியாகக்கூடிய உணவுப் பொருள்களின் இரஞ்சிப்புகளெல்லாம் அநுபவிக்கும்படி யொதுங்கி நிற்பது எது? என்று விசாரித்தேன் அதற்கு எந்தப் பூதங்கள் கூடி எது உற்பத்தியாயிற்ரோ அதை அந்தப் பூதங்கள் கூடி அநுபவிக்கு மாறு ஆதமான சொரூபம் தான். புசிக்கும் என்று சொன்னார். என்பது.

## வேறு.

பொசித்திடுமெனவே நன்ருய்ந் புகன்றிட்டீருண்மையாக
வசத்துயிரேகஞான மருளுவதே தோவன்னி
லிசைத்து யிரேக ஞான மிருந்தமெய்ப் பரிசா மெட்டுந்
திசைக்குளோ ரறியச் சொன்னேமென்றவர் செப்புவாரே. 34

## தாற்பரியம்.

அவ்விதம் புசித்திடும் என்று சொன்னீரே அதற்கு மாருக உண்மையில் ஞான அறிவு ஒரு நிலைபடாது மாறிமாறி வருவது என்ன காரணம் என்றதற்கு குரு: அப்பா! அதப்படியல்ல உல

கத்தின் அஷ்டகரணங்களும் உன்னைவிட்டு விலகுவது. இலகுவானதல்ல எப்படியாவது உன் வைராக்கியங்கொண்டு அதை வெல்வதே பெரியகாரியம் என்று பாசாங்கு செய்வார் என்பது.

செப்புவீ ருண்மையாகத் திருப்பதஞ் சேர்வதெப்போ
தப்பினி லமைந்த தொன்றை யறிந்தமெய்க் குருவே சொல்லி
ரிப்புவி யனைத்து மேக னொளியென விறைஞ்சும்போது
செப்பு நீரிறையவன் பாதஞ் சேரலாஞ் சிறப்பொண் ணீயாண் (35)

## தாற்பரியம்.

தண்ணீரில் கலந்து சரீரத்தை நடத்துகின்ற சுவாச நினைவை அறிந்த சற்குருவே! உண்மையாகச் சொல்லும் அந்த றப்புடைய திருசமுகத்தை எப்போது நான் காண்கின்றது! என்றதற்கு ஏ! மகனே! இந்த உலக கோடிகளெல்லாம் நீயாக இருப்பதை எப்போது காண்பாயோ! அப்போது உன்னைக்காண்பாய் அதுதான் றப்பைக்கண்டாய்? என்றார், (என்பது)

ஈயில்லாத் தேனை யுண்டே யிரவினிற் றுயிலு மாந்தர்
காயில்லாக் கனிகள் கண்டே னென்றுரை கழற வேண்டாம்
பாயில்லாக் கப்ப லோடிப் பறக்குமுன் கலிமாத் தன்னில்
லாயிலா ஹாவை நீக்கி நாலிலொன் றறிந்து கொள்ளே. (36)

## தாற்பரியம்.

ஈக்கள் கூடிக்கட்டின தேனைப்போல் இல்லாதமேலான தேனாகிய ஞானத்தின் அறிவால் முதிர்ச்சிபெற்ற ஆசையென்கிற இஷ்க்கைக்குடித்து இராக்காலங்களில் நித்திரை செய்யும் மனிதர்கள், காயாகி அப்பால் பழமாகின்ற தன்மையில்லாத அவனே அவனாகிவிட்ட சந்தோஷத்தால் நான் ஹக்கு என்ற வார்த்தையைப் பிறர் அதாவது சொன்னால் புத்திக்கு விளங்கத் தெரியாத மூட ஜனங்களிடப்போய் பிதற்றவேண்டாம் பாய்மரமில்லாமல் வாசியென்ற காற்றைப் பிடித்து வோடுகின்ற நிலையற்ற கப்பலான இந்த உடம்பு விழுந்து நாறி அழிந்துவிடும் முன்னதாகவே அஷ்ஹதுக் கலிமாவில் நல்ல பகிரங்கமாக இருக்கின்ற லாஇலா ஹாவை நீக்கிவிட்டு இல்லல்லாஹு வென்பதைப்பற்றி பிடித்துக்கொள்வாயாக. என்பது.



நாலினை யிரண்டோன் றாக்கி நடுவினி லருளை நோக்கி
நூலினைப் படித்தோர் தங்கள் தொடியினைக் கேட்பாயகில்
மேல்வினை வாரா மீண்டு மெய்வினை தொலைந்தே போகுங்
காலனும் வாரான் வந்தாற் கடிந்துயிர் பிடிக்கமாட்டான். ()

## தாற்பரியம்

நான்காய் இருக்கும் ஹருபுகளான இல்லல்லாஹு வென்பதில் ஒன்றைத்தள்ளி மூன்றாவது அட்சரமாகிய அல்லாஹுவென்று இழுத்துப்பிடித்து இருதயத்தின் வில்லில்பூட்டி அங்கு வெளியாகும்படியான ஜோதியைஆசைகொண்டு நோக்கிக்கொண்டு அத்துடன் ஷரீஅத்தின் சாஸ்திரிகளான ஆலிம்கள் சொல்லும் வெளிநடைகளையும்தள்ளாமலும் கேட்டுக்கொள்ளவும் வேண்டும் இவ்விதம் பழகிவரும் பட்சத்தில் உன்மேல் காலகிரகங்களால் ஏவப்பட்ட எவ்வித ஆபத்துகளும் வராது விட்டு நீங்கும். அத்துடன் உன் சரீரத்தின் இயற்கை வினையாகிய மரண தண்டனைக்கருத்தனான எமனும்வரமாட்டான். ஒருக்கால் வியாபக மறதியாலே வந்திட்டானானாலும் உன் கட்டளைக்கிணங்கிதான் உயிர்வாங்குவான் என்பது.

பிடித்திட வகையே தாலே பெரியவன் றனக்கே யாகு
மடுத்தவ னிவனு மென்ன வறிந்திடா தேகி வந்தேன்
கடித்தவாய் துடைத்தாற் போல கடுகவிங் கேகா யென்று
வடித்தகை பிடிக்க வல்ல வநாதியங் கழைத்துக் கொள்வரன். ()

## தாற்பரியம்.

மரணத்திற்ககப்படாமல் தப்பிப்பது இலேசான காரியமல்ல. அது றப்புடைய மகாமில் கலந்து ரகித்தாலொழிய முடியாது. அப்படியல்லாமல் இடையில் நின்றுவிடக்கூடிய சாமான்ய ஞானிகளுக்கெல்லாம் கடித்வவாய் துடைத்தது போலவும், வெண்ணையில் மயிரிட்டது போலவும் அநாதியான றகுமான் அந்த உயிரை விலகச்செய்து தன்வசமே மர்மமாக வைத்துக்கொள்வான் என்பது.

(அவதாரிகை)

தன்னையறிந்த ஞானிகள் உயிர்களை எமன் வாங்குவானா?
ஆதி யழைத்துக்கொள்வானா? என்று மனிதர்களுக்குள் சந்
தேகம் வருவதாலே ஆசிரியர் கீழேயறிவிக்கிறார்.

அழைத்திடும் பரிசு கண்டு மனுதியே யென்னை யின்று
விளித்திடும் வகையே தென்ன மேலவ னிசுரு யீலே
யொளித்தியா விருக்கும்போதி லுணர்ந்திடுமடியான் றன்னை
யழைத்துவா வென்னச் சொல்லி யருளநா வில்லை யென்றுன்.

### தாற்பரியம்.

அவ்விதம் ஞானிகளின் உயிர்களை றப்பானவன் தன்சமுகத்தில் அழைத்துக்கொண்டபோது மலக்குல் மவ்த்து என்கின்ற எமன் ஆதியை நோக்கி ஹக்கே! அந்த யுத்தியோகத்தை யெனக்கு ஒப்பித்து விட்டு இப்போதுஎனக்கு மறைவாக நீசெய்த காரணம் என்னு? என்று கேட்பார். அதற்கு எல்லாவற்றையும்ஒன்ருேடொன்று விகாரகோலத் துடன் சிருஷ்டித்து அந்தந்தஜீவங்களிடத்து ஒளித்து பதுங்கிக்கொண் டிருக்கின்ற மர்மமாகியஎன்னை இரவுபகல்பெரிய காவல்காத்து அரிய பெரியகஷ்டங்களையெடுத்து காண்டற்கரிய திரைகளெல்லாம் அறுத்து ஒதுக்கித்தனித்து வந்து என்வாசல் அண்டைபணிந்து கிடக்கின்ற என் மணவரை மாப்பிள்ளையை ஆண்பிள்ளை சிங்கமான என் அன்பனை கேவலமான உன் கையால் உயிர்பிடிக்கச்செய்ய எப்படி என்மனம் பொருந்தும்? ஆனதினுல் நானேயழைத்துக்கொண்டேன் என்றி சர்வ ஜீவ தயாளபூபதியான அல்லாஹுத்தஆலா திருவுளம் பற்றுவான். என்பது

நாவினில் வசனம் பேசும் தலமறியாத மூடன்
பூவினில் மணமிருந்த பொருளையான் றேடிப் போந்தேன்
ஆவினில் திரம்பி நின்ற வருப்பொரு ளறியா நெஞ்சஞ்
சாவது கடனு மென்று சஞ்சலக் கடலுற்றாழ்ந்தேன். (40)

### தாற்பரியம்.

மகா மௌன மந்திரமாகிய இரகசிய ஞானத்தைத் தெருக்கள் தோறும், வீடுகள்தோறும், பணங்கள்கொடுக்கின்ற மனிதர்'இருக்கும் கடைவீதிகள் தோறும் வெட்ட வெளிச்சமாகச் சொல்லி விலை கூறித் திரிகின்ற கற்ற மூடர்கள் சாவகாசத்தை சிறிதுகாலம் வைத்து பூவுக் குள் பொருந்தியிருக்கும் அருவமான பரிமளத்தைப்போல் இன்சானுக் குள் ஒட்டியிருக்கின்ற றப்பைத் தேடி யநேக மறைவான மலைகெபி களுக்கெல்லாம் போனேன். ஹா என்னும் அக்ஷரத்துக்குள் நிரம்பி



யிருக்கின்ற அரிதான அந்தப் பொருளைக் காணுமல் நெஞ்சம் வருத்தமுற்று இனி மரணத்தையனுபவிப்பது திட்டம் என்று சஞ்சலம் என்றகடலில் ஆழ்ந்தவனுக சிலதுகாலம் கடத்தினேன். என்பது.

சஞ்சலக் கடலுட்டாழுஞ் சமையத்திலருளைப் பூட்டிக்
கஞ்சொலைக் கேளாப் பாவி கவிழ்த்தனன் கடலி லென்றே
யஞ்ச லென் றெடுத்தே யென்னை யணைத்துஒஸ் தாது தாமு
மெஞ்சொலைக் கேட்பாயென்றே யிறையருள் காட்டினரே. (41)

### தாற்பரியம்.

பகல்வேஷம்போட்டு, அறியாத மூடஜனங்களை யேமாற்றிப் பணங்களைப் பறித்துக்கொண்டு ஊருர் தோறும் அலைந்து திரியும் கள்ளஷெய்குமார்களின் சாவகாசம் வைத்தல்லோ இவன் இவ் விதம் சஞ்சலத்தில் ஆழ்ந்து தவிக்கின்ருன் என்று என்பேரில் ஏவப்பட்ட கருணுகர வள்ளலான காமிலான குருவானவர்கண்டு சீக்ரம் என்னிடப் அடுத்து வந்து என்னை அந்த சஞ்சலக் கடலில் நின்றும் பயப்படாதே! என்று கைதூக்கி யெடுத்து நெஞ்சோடும் வைத்தணைத்து ''இரகசியம் இதுதான் பார்!'' என்று சுட்டிக் காட்டினுர். என்பது

இறையருள் காட்டிப் பூட்டி யிருத்தினுர் புவியின் மீதே
மறையொளி யதனைக் கண்ட மானிடக் குருவே யென்றித்
தரையினி லொருவ ரன்றித் தானவ னமைத்த வெய்யோன்
பிறையினி லழகு மில்லை யென்றியான் பேசும்வாறே. (42)

### தாற்பரியம்.

அந்தப் பிரகாசம் தேடரிதா யிருந்த சாத்விகப் பிரகாசத் தை இதோபார் என்று என் சற்குரு தேசிகநாதன் சுட்டிக் காட் டினதும் றப்பு விநோத மயஜோதியாய் என்னில் இல்ஹாம், அதா வது வெளியாயிற்று அதனுடைய அழகுக்கு, உலகமெல்லாம் பகல் செய்கின்ற ஆயிரங்கிரணங்களையுடைய சூரியனும். குளிர்ந்த பதினுறு அமிர்தகலை களையுடைய சந்திரனும் பகரமாகமாட்டா என்று நான் ஆனந்தக் கூத்தாடிப் புகழும்படியாக என்பது.

பேசினேன் பெரியோர் பாதம் பெருகவே வணங்கி நின்று
கூசினே னிறையவன் பாதங் குறித்தவ ரிவரா மென்று
பூசினே னறிந்தோர் ஞானப் பொருளினை யெடுத்துக் கொண்டே
ஏசினேன் செறிந்தாப் போல்நம் மிருதயத் தடைந்த தன்றே. 44

தாற்பரியம்.

அதிலிருந்து நான் ஞானிகளுடைய பாதப் புகழ் கூறுகிறவனாக இருந்துவநதேன். அப்போது என் சற்குரு என்னை ஆளாக்கும்படியாக வரக்கண்டேன். அவருடைய வருகைக்கு நேரே என்பாவ ஜடலம் கைதூக்கிக்கொண்டு போவதற்கு மனம் வெட்கித்தவனாக நின்றேன். நிற்கும்போது மின்வெட்டி மறைந்ததுபோல் என் இருதயத்தில் அவருடைய ஞான அமிர்தம் பொங்கி வழியக் கண்டேன். என்பது.

எடுந்தவ ரறிந்த ஞான மிருதயக் கமலத் துள்ளே
யடுத்தவ ரிவரா மென்று மணுகினே னிவர்கள் பாதங்
கடுத்தவர் தெளிய வென்றன் காதிலே யுபதே சித்துத்
தொடுத்தவரிருக்கச் சொன்ன தொழிலின் மேலிருந்தனன்றே

தாற்பரியம்.

அம்பால் இதென்ன ஆச்சரியம்! இவர் என்குருவாக இருக்கலாமா? என்று என் மனதில் நினைத்தேன். அந்நேரமே அவர் பளிரென்று வந்து நின்று என் காதில் ஞானமர்மங்களை ஊதினார் அப்பால் அவர் கட்டளையிட்டவண்ணமே இருந்து காரியாதிகளை முடித்தேன். என்பது.

அன்றியா னிருக்கும் போதி லவனியே ழண்ட மேழுங்
கண்டியான் மகிழ்ந்த போது களித்தனன் கமலத்துள்ளே
யின்றியான் பேறு பெற்றே னினியொரு நாளும் பாவக்
குன்றுமிங் கணிகர் தென்றுங் குருவருள் தப்பி லேனே. (45)

தாற்பரியம்.

அப்படி நான் என்னுடைய குருநாதனின் சொல்வழி தவறாமல் இருந்த சாதனையில் ஏழு ஆகாய மண்டலங்களும், ஏழு பூலோக மண்டலங்களும் என் இருதயத்தில் வந்து கொழுகிக்கிடகக்கண்டேன் அந்த உலகங்கள் யாவற்றும் நானகவே யிருக்கவுங் கண்டேன். அந்த மகாமில் என் குருவுடைய அன்பின் காரணத்தால் நான் அநுபவித்த காட்சிமயங்களை என்னென்றுதான் சொல்வேன், என்பது.

ஆசிரியவிருத்தம்.

தப்பி லாம லேயி ருந்த தனிய னேவெடதிர்த்தபோ
தப்பி னேட மைத்த றாஹை யண்ட லான டங்கலு



மொப்பிலாம லேயி ருந்த யோக மேறு மெய்யுளே
செப்பொணாத வாசலைத் திறந்து கண்ட றிந்தனன் (46)

தாற்பரியம்.

அவ்விதம் என்குருநாதனுடைய உத்திரவுபோலநான் இருந்தபோது அந்நிஷ்டையில் தண்ணீருடன் ஒட்டிக்கொண்டிருக்கின்ற மஹாதுவிதபார தூரவஸ்துவாகியறப்பை, என்யோகவெறியாலும் அன்பினாலும். அவனது அறுஷேமுஅல்லாவென்னும் ஹலரத்தின் வாசலதிறந்ததால் கண்டுகொண்டேன் அதைநான் சொல்லவும், அநுபவிக்காத ஏழைஜனங்கள் கேட்கவும், தகாதகாரியமாக இருக்கின்றது. என்பது.

அறுசீர்க்கழி நெடிலடியா சிரிய விருத்தம்.

திறந்தனன் கமலத் துள்ளே திருவொளி வடிவைக்கொண்டு
மறந்தனன் பூமி வானமலைகட லனைத்துஞ் சேர
விறந்தன னிறைவ னன்றி யிருந்ததொன் றில்லாதாலே
அறந்தனை யுணரா மாந்த ரவர்களுங் காபி ராவார். (47)

தாற்பரியம்.

இருதயம் என்னும் கமல மலரைத் திறந்து அங்கிருந்துவெளியான பரம ஆத்மாவின் பிரகாசத்தைநான்கண்டவுடனே உலகத்திலுள்ளமலை, கடல், பாதாளம், ஆகாயம், எல்லாந்திரட்டியுருட்டிப் பார்த்தேன். அந்த காமில் சராசரகோடியடங்கலும் என்னில் நின்றும் பனுவாகி, நான் என்னும் அநாநியத்தும்பனுவாகி அல்லாவென்னும் சகல தத்துவ வஸ்துவையன்றி வேறொன்றும் தோற்றப்படவில்லை. காரியம் இப்படி யிருப்பதாலே இந்த உண்மையை அறியாமல் அலைகின்ற பாவி மனிதர் எல்லாரும் கடைசியாக காபிர்களாகவே ஆகிவிடுவார்கள். என்பது.

எழுசீர்க்கழி நெடிலடியா சிரிய விருத்தம்

காபி ரான பேரிலுங் கடிந்த காபிர் நாமெனு
மாவி ஹாவி லாகு முன்னறிந்து மெய்யு ளஞ்சையும்
தாவி யேறு மந்திரத்தைச்சாற் றெண்ணுது தாணியிற்
பாவி யாவ தாயி ரம் புலன்பெருப்மொ ருத்தரே. (48)

### தாற்பரியம்.

ஜனங்களே! நீங்கள் உங்களையறியக்கூடியவிதம் கலிமாவில் இருக்க அதையாறட்போட்டுக் காபிர்களாயிருந்து கொண்டு தெருவில் போகும் புத்தர்களைக் காபிர்கள் என்கின்றீர்கள. அது இப்பம் விளங்காது. உங்கள் சரீரத்துடன் கலந்திருந்து உங்களுக்கு சகல வேலைகளும் செய்து உழைத்து வருகின்றமகாபலவந்தமான ஆத்மாவானது நின்றது நிற்க சரீரத்தைக் கீழே கிடத்திவிட்டுப் பிரயாணமாகும் போது தெரியவரும், அந்த ஆத்மம் விலகுமுன்னதாக ஐந்து பூதங்களுடைய விபரங்களையும் ஆண்பிள்ளையானவர்களாயிருந்தால் தெரிந்து கொள்ளுங்கள், அப்படித்தெரியபோன இடத்திலும் பூலோக மயக்கத்தால் அடிபட்டுப்பாவிகளாய்ப்போகின்றவர்கள் ஆயிரம ஆயிரம் பேர் அதில் ஒருவனே வைராக்கிய புருஷனாக இருந்துகடைதேறுவான். என்பது.

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

ஒருத்தர்தம் பொருட்டினாலே யுலகுயிரனைத்தும் வாழும்
பருத்திசேர் பருப்பு நீங்கப் பரிசுவேருரு மாப்போல்
வருத்தமு மெலிவு நீக்கி மறையோளி யறிய வேண்டிக்
கருத்து வேருகா வண்ணங் கமலக்கண்டிறவாய் நெஞ்சே (49)

### தாற்பரியம்.

அந்தமஹானுடைய பொருட்டாலேயே பூலோகத்திலுள்ள ஜீவராசிகள் எல்லாம் வாழ்ந்துவரும். எதுபோலேயானால் ஒன்ருயிருந்த பருத்திகோட்டையொன்றினாலே உலகத்தில் எவ்வளவோவிதவிதமானவஸ்திரங்களை ஜனங்கள் அனுபவிக்கிருர்களல்லவா? அதுபோல் மனிதனுக்கிருக்கின்ற பலபல கஷ்டங்களும் அந்த ஒன்றையறிவதால் நீங்கிவிடுகின்றன அதற்கு ஒரு உபாயமிருக்கிறது எப்படியென்ருல் மனதில்வந்து நிற்கின்ற பலபலநினைவுகளையும் நீக்கிவிட்டு அந்த ஒரு வஸ்துவின்மேலேயே தன்னினை வைபுபூட்டி தானும் இல்லையென்று உள்ளாவுள்ளபடியே நிச்சியப்படுத்துவது. அப்போதுதான் உன் கமலக்கண்ணனது பளிரென்று திறக்கும் என்பது.

### கொச்சகக்கலிப்பா.

நெஞ்சே யுனக்கு நலம் நீயுநா னுமெதிர்த்தா
லஞ்சே னொருத்தருக்கு வரதிதனக் கேயொழியப்



பஞ்சது நெருப்பிலகப் பட்டதுபோற் பாவமெல்லாம்
பிஞ்சோடிப் போயிருக்கப்பேறுபெற்ருய் நெஞ்சகமே. (50)

### தாற்பரியம்.

ஞானவான்கள் "நெஞ்சமே!" என்று கூப்பிடுவது அனுநியத்தென்பதைத்தான் ஆசிரியர் சொல்லுகிருர் ஏ! அனுநியத்தே உனக்கு ஒரு செய்தி. அதாவது கேள். நீயும் நானும் எதிர்த்து போர்புரியும் பட்சத்தில் நீயும் பேதாபேதங்களான உன் சேனைகளும் முறியடிக்கப்பட்டுட்பின் சாய்ந்து போய்விடுவாய் ஆனல் கல்புறப்பியாவானது சரீரத்துக்குஇராஜகருவியாயிருப்பதாலே ஒருவேளையதற்குப்பயந்தால் பயப்படுவேன் நெருப்பில் சிக்கிக்கொண்ட பஞ்சைப்போல் பாவமெல்லாம் பறக்கும். அப்படியானல் உனக்கு சற்று நல்வகையுண்டாகும் என்பது.

பேறுதவிருமற் பெருங்கமலத்தாள் திறந்து
வேறு மொருத்தறுக்கு விள்ள நினைந்தாயிலையே
யூறு மருவியண் ணீருண்டு களித்தே மகிழ்ந்து
தேறுமொழிகண்டு திகைத்திருந்தாய் நெஞ்சமே. (51)

### தாற்பரியம்.

ஏ மனமே! நீ அந்தக்காலத்தில் பேறுகெட்டுப்போகாமல் பெரும் பிரயாசையெடுத்து இருதயக்கண்திறந்து எல்லாவித ரகசியங்களையும் பார்த்துக் கொண்டிருக்கின்ருய். அந்த மர்மத்தை மற்றவர்களுக்கு சொல்லவும் பால் மாறுகிருய். இருதயத்தடாகத்திலிருந்து ஊறுகின்ற தேன் சுவையான அமிர்த நதியை நீ தனியே குடித்து நீயே மகிழ்ந்து நீயே இறுமாந்து போய் ஒருவர்க்கும் சொல்லாமல் உள்ளடக்கம் பண்ணிவாயையும் மூடிக்கொண்டாய் என்பது

### சந்த விருத்தம்.

திகைத்தேயொளிநிறைத்தேவருஞ்சினத்தாலதை மறைத்துப்
புகைத்தேயிருள் பெருத்தேதரும் பொருட்டாலதை வெருட்டி
யகத்தேயொருவெளித்தாரையுண்டடைத் தேயது வெடித்தாற்
பகுத்தேயறிமிகுத்தேவரும் படைத்தோனொளி காண்பார் (52)

### தாற்பரியம்,

மௌனமாயிருந்து வரும்போது * ஹவா என்பது உன்னிடம் வந்து கொஞ்சம் அசைத்துப்பார்க்கும், அப்போது நீ கண்ட உஜு

---

* ஹவா. என்பதற்கு அர்த்தம் உலக மயக்கம் என்பது

தின் ஒளிவினுடைய அன்பைக்கொண்டு வெருட்டி சினங்கொண்டு அதை மடங்கடித்து விடவேண்டும். அப்பால் வரக்கூடிய இபுலீசின் மயக்கமான பெரிய இருள் திரையொன்று உன்னைப் பயங்காட்டும் அதையும் அதேவிதம் செய்து விலக்கவேண்டும். அப்பால் உன் இருதயத்தின் நேர்நேரான ரஸ்தாவில் ஒரு திரைவிழுந்து உன் வழியை மறிக்கும். அதையும்இதேமாதிரி செய்தால் அதுபடீரென்று வெடித்து அதனுள்ளிருந்து ஒரு பிரகாசம் வெளியாகும். அதை நீ சக்கில்லாமல் உன் றப்புடைய வொளிவென்று திட்டப்படுத்திக்கொள் ஏன்பது

காண்பாயிறை யொளியானது கல்பாகிய கடலில்
வேம்பானது கைப்பாமதில் மேவுங்கனி யமிர்த
மேம்பாடலனைத்தும் மிறையுயிரென்றிறைவசனந்
தேம்பாலுணவதிலும் முறத்தெவிட்டாலுண்டிருப்பார். (53)

### தாற்பரியம்.

அதன் பின்னல் உன்கல்பென்னும் கடலுள்ளே ஒரு வேப்பானது தோன்றும். அதோ கசந்ததாகவும், அதன் கனியோ தேவாமிர்தரசமாகவும் இருக்கும். அதன் விபரமாவது வேம்பு என்பது சரீரம்கனி என்பது ஜீவன். இத்துடன் அங்கே உஜூதின் புறத்தால் இருந்து வசனத்துடன் ஒரு குடிப்புவரும், அது தேனும்பாலுமாக இருக்கும் ஒலிமார்களெல்லாம் உண்டுபோட்டு நீண்ட வருஷம்வரை ஒருவஸ்துவின் பேரிலும் ஹாஜத்தில்லாதவர்களாக இருப்பார்கள் என்பது

### வெண்பா.

உண்டுகளித்திருப்பார் ஒரெழுத்தை யெங்குமவர்
கண்டு களித்திருப்பார் ஹக்காக—வென்றுமது
தாஞகி நின்று பயன்தைத்துடலில் வந்தனுகுந்
தேனுகு மென்றே தெளி (54)

### தாற்பரியம்.

மஹாத்மாக்கள் அந்த அமிர்தத் திரளையை உண்டவர்களாய் மகாமர்மமான (ஹூ) என்கின்ற ஒரு அட்சரத்தின் வடிவை சதா நேரமும் கண்டு தியானித்தவர்களாகவும், உண்மையாகவே மரணிக்காமல் இருப்பார்கள். அதுவோ! சதாதினமும் தான்தாஞகவும் உணர்வானில் சரீரத்துடன் ரஹித்து வியாபித்திருக்கின்ற வற்றுத சிந்தனையுள்ளதேன் என்று நீ தெளிந்துக்கொள் என்பது.



### (மகுட விருத்தம்.)

தெளிந்து மகிழ்தொரு மந்திரமாமொளி தேடிய செங்கமலங்
குளிர்ந்து விரிந்து நிமிர்ந்து வெழுந்தமின் கோணமதாறதிலும்
அழிந்திடு மிந்திர சந்திரனேடிறைய குமதரோடுமமர் [வரே
ஒழிந்ததுவன்றி நிறைந்திரயொசனெளி யொன்றென நன்னு

### தாற்பரியம்.

ஞானவான்களான நாதாக்கள் இவ்விதம்தெளிவடைந்து அதனல் கிடைத்தசதா சந்தோஷத்தால் மகிழ்ந்து, மேலேசொல்லிய மந்திரம் என்கிற ஹூவின் ஜோதிமேல் நீங்காத ஆசைகொண்டு இருதயக்கமல மலரை விரிய வைத்து மேலே உதித்துவராநின்ற பிர்மபிரகாசத்தைக் கண்டதின் பிறகு ஆறுகோணங்களிலும் அழிந்தழிந்து சுற்றிவருகின்றசந்திரசூரிய சக்கிரங்களுடன் சர்வசிருஷ்டிபூத ஒளிவுகளும் பலவாகி, நடுமத்தியில் கூடித்திரளுகின்ற ஒளிவானது ஒரேவஸ்தாகிவிடும் அதைத்தான் தரிசிப்பார்கள் என்பது.

### கட்டளைக் கலித்துறை

நன்ருனவாதி யநாதியைநித்தனை நாயகனை
ஒன்ருன ஞானவிளக்கான வுத்தமனேரொளியாய்
நின்ருனை யெங்கு நிரம்பிய ஹக்கனை நிச்சயமாய்க்
கண்டாலொழியத் தெளியாது சிந்தைக் கலக்கங்களே (56)

### தாற்பரியம்.

அந்த ஒருமையான ஒளிவானது என்ன தெரியுமா? அதுதான் ஆதி, அதுதான் அநாதி, நித்தியமானது? நிலைவரமானது! உலகமெல்லாம் ஆண்டவன் என்று சொல்லுகின்றது! உத்தமர்களின் தெளிதலில் ஒரு வஸ்துவான பேரொளி விளக்காய் நின்று பிரகாசிப்பது! எங்கு பார்த்தாலும் உண்மையான ஆத்மகோலத்துடன் தோற்றுவது! அப்பேர்ப்பட்ட தத்துவத்தை இதுதான் என்று சந்தேகமறக்கண்டு உறவாடினு லொழியமனங்களில் வந்து உழக்கிவிடுகிற கலகங்கள் தீரவேதீரா என்பது.

தெளியாது சிந்தை கறுப்பகலாது ஜெகத்திலுள்ளோர்
வழிபாடறிந்து வணங்காத நான் மறையோனுரைத்த

மொழியான தன்றியவனும மோதிமுயன்றிருந்தால்
ஒளிவான தெங்கணு மோரலி பாய்நிற்கு முற்றவர்க்கே. (57)

## தாற்பரியம்.

அதை யெவனொருவன் கண்டுகொள்ளவில்லையோ! அவனைத் தெளிந்த ஞானியென்று சொல்லப்படாது, அவன் சிந்தையிலுள்ள இருளான ஹவாவானதும் விலகாது. அதை உலகத்திலுள்ள சாமான்ய ஜனங்கள் தீர்க்கதரிசனத்தின் முன்னறிவிப்புகளான வேத சாஸ்திரப் பிரமாணங்களைக்கொண்டும் வெளிப்படையாய் வணங்குவார்கள். அது சொல்லுக்கு வழிப்பட்டதாயிருக்கும். செயலுக்கு வழிப்பட்ட வணக்கமானது காண்பன எல்லாம் அலிபுடைய நீட்டத்தின் சூரத்தில் நின்று எழுந்தன என்று நினைப்பில் ஒருமைப் படுத்துவதாக இருக்கும். இது யாருக்கென்ருல் விதியுள்ள வைராக்கிய ஆண்பிள்ளைச் சிங்கங்களுக்கன்றி மற்றவர்க்கல்ல. என்பது.

## கலித்துறை.

உற்றவர் பாதமுணர்ந்திடி நாளிலொரு பொருளைப்
பற்றிடுவேறு பழக்கறியார்களிப் பாருலகிற்
கற்றவரோடு கலந்திடு வேளையில் ஹக்கனொரு
சித்தனுமியானொரு பாம்புமதாகத் தெரிசிப்பனே. (58)

## தாற்பரியம்.

அவ்விதம் இருப்பவர்களின் பாதத்தைப் பற்றிப் பிடித்து அறிகிற காலத்தில் அந்த ஒருவரத்தின் ஆசையில்லாது மனதை வேறு பழக்கத்தில் விடவே மாட்டார்கள். அவ்விதம் வழியைக் கண்ட மகான்களின் பழக்கத்திற்சேர்த்து துறையை யெத்திக்கொண்டதின் பின் அதிலிருந்து அல்லாகுந் த ஆலாவானவன் ஒரு பாம்பாட்டியும் நீ ஒரு பாம்புமாகத் தெரிசித்துக் கொள்வாய். என்பது.

தெரிசனையாக விழிக்கின்றபோது திருமறையோன்
பரிசனையே தென்று பார்த்திருப்தேனையிப் பாருலகில்
அரசனை மெய்யுள்ளறியாத மாந்தரலைவதெல்லாம்
புருஷனில்லாத மடவாள் சுகித்த பொருளொக்குமே. (59)

## தாற்பரியம்.

அப்படித் தெரிசித்தவுடன் அல்லாகுத்த ஆலாவுடையு சம்பிர தாய வித்தைகளில் நின்றும் எத்தனையோ விதத்தைப்பார்த்துபார்



த்து ஆனந்தித்திருப்பாய்? அந்த நேரத்தில் பூலோகத்தில் பிறந்த தன்னையறியத் தெரியாத ஜனங்களையெல்லாம் உன்புத்திக்கு புருஷனைக்கைதவறவிட்ட கம்பிநாட்டிகளைப்போல் தோன்றும் என்பது

## சந்த விருத்தம்.

பொருளை யுணர்ந்துவர்போத மழுத்துவர்புவியிலகத்திறைவன்
அருளை யுணர்த்துவர் தயவுவருத் துவரறிவி லிருத்துவராம்
வெருளையகற்றுவர்வெளியிலிருத்துவர்வெகு பிழைசெய்தவர் தம்
மிருளை யகற்றுவ ரெவரு நினைப்பவரிறையருள்பெற்றவரே (60)

## தாற்பரியம்,

றப்புடைய திருவருள் தெரிசனங்காணப்பெற்ற மஹான்களானவர்கள், றப்புடைய ரகசியத்தைக்கொண்டு ஜனங்களுக்குப் போதிப்பார்கள். ஒழுகிவந்தவர்களை நிலையில் நிற்பாட்டி வைப்பார்கள் அவர்களின் மனதில் றப்புடைய விளையாட்டின் சம்பிரதாயத்தைப் பற்றி கூர்மையூட்டி சம்பாஷிப்பார்கள். ஆதியுடைய கிருபையை வாங்கிக்கொடுப்பார்கள், அறிவான கல்புறப்பியாவில் இருத்தாட்டி வைப்பார்கள். உலகமருட்டுகளாக எமதூதர்களை வெருட்டி சதா தைரியமாகிய ஆகாசத்துடன் கிரஹிக்கச் செய்வார்கள் "பிழை செய்தோம்" என்று தமது சமுகம் வருபவர்களை அதைவிட்டும் நீக்கி கரியமேகத்தில் நின்றும் வெளிபபடும் சந்திரனைப்போல் பிரகாசிக்கச் செய்வார்கள். ஈரேழுபதினலு உலகமும் வணங்கிப் புகழும்படியான பிரக்யாதியுடன் வீற்றிருப்பார்கள். என்பது.

## வெண்பா.

உத்தார மன்றி யுணரேனொருபொருளை
மற்ருருங் காணர் மயக்கத்தாற்—கற்ருேர்கள்
ஆரணத்தை யோதி யலைவார்க ளெங்கும்பரி
பூரணத்தின் சீரறியாப் போது. (61)

## தாற்பரியம்.

றப்புடைய கட்டளை அல்லாமல் ஒருவஸ்துவையும்தேடி சந்திக்கமாட்டேன். அந்த வஸ்துவை உலகத்திலுள்ள மோட்டு ஜனங்கள் யாவரும் அறிந்துவிட முடியாது. ஏனெருல் பூலோக வாஞ்சையாகிய சிற்றின்பமயக்கத்தால் அவர்கள்பேய் பிடித்தவர்களைப் போல் அலைவார்கள். அவர்களுக்கு மார்க்கபோதனைசொல்கின்ற

வர்களோ! அவர்களும் அப்படியேதான் ரகசியத்தை யறியாமல் வேதசாஸ்திர மும்கையுமாய் அலேந்துபிதற்றித்திரிவார்கள். என்பது.

விருத்தம்.

சீரொளிவு சித்திரங்கள் செய்தவடிவெல்றே
பேரொளியிலுள்ளபலன் பேசவரிதாகும்
ஒரொளிவிலுள்ளதெனி லொன்றிலுமடங்கா
வேரொளிவிலென்றவ னியம்பவிதியாதே. (62)

## தாற்பரியம்.

உலகத்தில் உள்ள பல பலவிதமான தோற்றங்களிலுள்ள பிரகாசத்தைப்பற்றி முடிவு ஏற்படுவதுபோல் அந்த சற்சொரூப பிரகாசத்திற்கு ஒரு முடிவு ஏற்படுத்தவும், உவமானப்படுத்தி பேசவும், யாருக்கும் இயலாது, அந்த துறையைக் கண்டு களித்தபெரியோர்களாயிருந்தாலும் அதற்குவமையாக இது. அது, என்று சொல்ல எந்த விதத்திலும் இடந்தராமல் மிகைபடவே நிற்கும். என்பது.

வேறு.

ஏபுவார் புவியிலுள்ளோ ரிறைவனைத் தொழுது நாளைக்
காண்ப நாமென் று நாடிக் கருதுவார் கமலத்துள்ளே
வேய்பனுமிபுலீ சென னும் வினையனை வெருட்டிப் பார்க்கச்
சோப்பினுர் காண்பதில்லை யென்றவர் தொகுத்துச் சொல்வார். (63)

## தாற்பரியம்.

மனங்களில் பலபல விகாரமானதுர்க்கிருத்திய எண்ணங்களையும் நிரம்ப வைத்துக்கொண்டு தொழுது நாளைகியாமத்தில் ஈடேற்றம் பெருவோமென்று உலகத்தார்கள் பலதும்பெருமை சொல்லிக் கொள்வார்கள். அந்த எண்ணம் ஒருபோதும் சாயாது இருதயமலரின் கண்ணே பல ஆட்டங்களும் ஆடிநின்று அநந்தம்கெடுப்புகளுக்கும் காரணாகருவியாக நிற்கின்றவேம்பு அதாவதுபித்தோடும் கலந்திருக்கின்ற இபுலீசானவனைவென்று மேல்வரசகூடியதகுதி யைப்பெற்றுக்கொள்ளஏலாதசோப்பேரிகள் ஒருபயனும் அடையாமற் போவார்கள் என்று நயியுல்லா சொல்லியிருக்கிருர்கள் என்பது.



சொல்லுவாரலியே மேனிச் சுகமுறும் பாசத்தாலே
வெல்லு வானிபுலீ சும்மைவெருட்டுவான் பயப்படாமல்
வில்லுநாறுடம்பு றுகாய் விழியம்பாற்றெடுத்தங் கெய்தால்
இல்லில்ரண்டெழுத்தொன்ருலே யிறைவனைக் காணலாமே.(64)

## தாற்பரியம்.

றசூலுல்லா அவர்கள்தங்கள் மருமகரான அலியார் அவர்களுக்கு உபதேசம் செய்தபோது யா அலீ! நீர் திரேகத்தை நல்ல சௌகரியப்படுத்தி வைத்துக்கொள்வீராஞல் அந்தப் பாசத்தைக் கொண்டு இபுலீசு உம்முடன் போராடி வெற்றிக்கொடியை நாட்டி விடுவான். நீர் ஞானத்தில் தரிபடும்போது உம்மைவிடாமல் தொடர்ந்து வருவான் அனேக பயமுருட்சிகளேயும் எடுத்துக்காட்டுவான் அதற்கெல்லாம் நீர் பயப்படாமல் உடம்பை வில்லாகவும், றுகை நாணாகவும், செய்து அதில் பார்வையை பாணங்களாகவும் தொடுத்து அவன்மேல் பிரயோகித்தீராஞல் அவன் பஞவாகிஇல் என்ற அட்சரத்துடன் ஹூ என்ற அட்சரமும் கூடி அந்த இடத்தில் றப்புடைய தோற்றரவுண்டாகிவிடும் என்று திருவாய்மலர்ந்து சொன்ஞர்கள் என்பது.

காஞெஞுவடிவதான கடாட்சய ரூபந்தன்னைக்
கானவேயாக்கிக் கொண்டார் காவுரச் சங்கொள்ளார்
பேணியே வேதநாலும் பிதற்றுவார் பிராணி யெல்லாஞ்
சாணையேவளர்க்கலுற்ற சழக்க தென்றறிந்து கொள்ளே. (65)

## தாற்பரியம்,

எவராலும் கண்டோம் என்று ரூபிக்க முடியாத அந்த சற்சொரூபவடிவத்தை திருவருள் கடாட்சத்தின் பொருட்டாலே கண்டு கொண்ட மவுனதேசிகர்கள் மலக்கல் மவுத்தைப்பற்றி ஒருபோதும் அச்சங்கொள்ளவேமாட்டார்கள். உண்மை இப்படி யிருக்க உலகத்திலுள்ள வேதசாஸ்திரிகள் கஷ்டமெடுத்து நேர்வழியடைந்து கொள்ள சோம்பேறித்தனம் படைத்து ஞானம் ஒன்றுமறியாத ஐயோ! ஏழை ஜனங்களிடத்தில் போய் பகல் வேஷம் போட்டு அவர்களை மருட்டி நல்ல ருஷிகரமான சோறு கறிகளையும் தின்று பணங்களையும் தட்டிக்கொண்டு அந்த திக்றைச் சொல்லு?

இந்த விருதையோது? என்று பொய் முரீதுகளுட கொடுத்து ஊரூர்தோறும் அலைந்து திரிவார்கள் அந்த குருடர்களிடத்தில் ஏதுப்பசையுண்டோ? என்று கவனிக்குப்போது வேறு ஒன்றும் கிடையாது ஒரு ஜான அளவு உள்ள பாழும் வயிற்றுக்கு இரைதேடுகிறதற்காக செய்து கொண்ட ஒரு பித்தலாட்டம் என்று திட்டமாக உணர்ந்துகொள் என்பது.

கொள்ளுவா ரீமானுள்ளோர் குறியெல்லாம் புகலக்கேண்மோ
நள்ளுவார் நயநம் வைத்த நடுவினிலருளை நோக்கி
விள்ளுவார் கலிமாத்தன்னை விரைந்திரண் டெழுத்தாலுன்னி
யெள்ளவவெளிறும் நீங்கா தியங்குவார் மூச்சினூடே. (66

## தாற்பரியம்,

ஞானிகள் என்று பொய்வேஷம் போட்டுக்கொண்டு திரிகின்ற குருடர்களின் பாடு இப்படியிருக்க, நல்ல தெளிவடைந் திருக்கின்ற மூமீன்களின் கருமம் எப்படியிருக்கும் என்று கேட்பாயாகில் கேள் றப்புடைய சுயம் பிரகாசமிருக்கின்ற (சுல்தானுன்ன சீரு) என்னும் புருவமத்தியில் இரண்டு விழிகளையும் ஒருவழியாக்கிக் கூர்ந்து பார்ப்பார்கள். ஜனங்கள் சாதாரணமாகவே சொல்லுகின்ற ஷஹாதத்து கலிமாவில் வந்திருக்கின்ற மணிமந்திரமான யிரண்டு அட்சரத்தை மாத்திரம் அலக்காய் எடுத்து தன் வாசியாகிய சுவாச கலைகளுடன் பொருந்திய நினைப்புடன் சரியாமல் இருப்பார்கள் என்பது.

மூச்சினூ டியங்கிநின்ற முடிவில்லாப் பொருளை நோக்கிப்
பேச்சினூடிறைவனுமங் கொண்டுடல் தன்னைப்பேணி
யேச்சுமேல் வாராவண்ண மிருதயத்திருந்துவாழுங்
காட்சியைக் கமலக்கண்ணுற் கண்டுள மகிழுவாரே. (67

## தாற்பரியம்

அவ்விதம் சுவாசத்துடன் ரஹித்து நிற்கின்ற ஒரு ஆதியந்தம் இல்லாத தத்துவத்தைப் பார்த்தவர்களாக வீண்பேச்சுகள் பேசி றப்புடைய பேரைத் தூற்றுமலும். தன்னையும் தன் சரீரத்தையும் மறந்திடாமலும், குற்றம்வரக்கூடிய சிக்கல்கள் வாசியில் வந்து தோன்றிடாமலும், மனக்கண்ணுடிக்குள்ளே சகலவித காட்களை



யும் கண்டு பூரித்தவர்களாயும், தன்னைக்கொண்டு ஒதுங்கி யிருப்பார்கள். என்பது.

வெண்பா.

ஆதி மறையாமலந்தரத்தி லேகிவந்த
சோதி நபிக்கிறையோன் சொல்லுவான்—வேதனைப்பட்
டவ்வற கலிமா வறுநான்கி லொரெழுத்தைச்
செவ்விலுரைப்போர்க்கே நிறம். (68)

## தாற்பரியம்.

றசூலுல்லா மிஃறாஜிக்குப்போனபோது றப்பிடத்தில் வசனித்த பராசியம் பண்ணீராயிரம், இரகசியம் பண்ணீராயிரம் ஆ இருத்து நான்காய்ரம வசனத்தினின்றும் இரசியத்திலுள்ளதாகிய ஒரு வசனம் சொன்னான். அதாவது என் ஹபிபான முகம்மதே நீர் உம்முடைய உம்முத்துகளில் நல்ல புத்தி சாதுரியவான்களைக் கண்டீராகில் அவர்களுக்கு ஞான உபதேசம் செய்யும். ஷஹாதத்து கலிமால் இருக்கின்ற இருபத்துநான்கு எழுத்திலும் ஒரு எழுத்தில்தான் நானும் என் அறுஷும் இருக்கிறேம், அந்த ஒரு எழுத்தை எந்த ஆண்பிள்ளை மகன் அறிந்துகொண்டானோ அவனே என்னைக் கண்டுகொள்வான் ஏன்பது.

வெண்பா.

திறம்வளரு நந்நபியைத் தேனென் றிருந்தோ
ரறம்வளரு நற்செயலோடன்புவைத்தா—லறுஷிடத்தி
லைஞ்சுடருங் கூடி யனல்சொரியுங் காலையிலே
யெஞ்சுடரா மென்றுனிறை. (69)

## தாற்பரியம்.

கலிமாவில் முகம்மத்துர் றசூலுல்லாகி என்றும் விசுவதிப்பது ஏன் என்றால், அனாசிறுகளான ஐந்து பூதங்களிலும் முகம்மதிய்யா என்னும் ஒளிவு பிரகாசித்து நிற்கிறது, ஆனதால் அறுஷிலே றசூலுல்லா முடிகினபோது ஐந்து அனாசிறுகளும் பற்றி எரியும் சமயத்தில் இது ஏன் ஹபீபுடைய ஒளிவு கருமத்தில் என்னுடைய ஒளிவு என்று அல்லாசொன்னான். அப்படி யிருப்பதாலே நபியவர்களைக்கொண்டு நிர்ணயம் கொள்வதாகிவிட்டது என்பது.

ஒன்றவனுரைத்படி யுண்மைமி றசூலும்
அன்றவரலிக்கருள்வ ராணவர்கள் மெய்யிற்
சென்ருெளி நிரம்பிஎழு செங்கமலத்தூடே
கண்டவர் தெளிந்ததனை ஹக்கென்றுரை செய்வார் (70)

## தாற்பரியம்.

அவ்விதம் அல்லாசொல்லியபடி நபியுல்லா அலியார் அவர்களுக்கு அலியே! என்னை நீர் கண்டீரா? என்ருர்கள். அப்பால் அவர்கள் பலதும் சொல்லியும் சரிவராமல் தன்னை உலகமெல்லாப நிரம பிய பிரகாசமாகக்காட்டினுர்கள். அதை அலியார் தங்களது இருதயத்தில் நெரிசித்தவர்களாகக் கண்டு ஹக்கு உண்மைதான் என்று ஒத்துக்கொண்டார்கள். இதனுலேதான் நாயகமும் நான் ஐனில்லாத அறபியென்றும் மீமில்லாத அகுமதென்றும் சயிக்கினை பண்ணியிருக்கிருர்கள். என்பது.

## வேறு.

ஹக்காம் நபிதம் மோடிறை கல்பானதுகடலிற்
செக்கானது போலஞ்சு திருக்காயெழு மூச்சில்
நக்சாதலி பொன்றுண்டதில் நடுரண்டுளலாமுஞ்
சிக்காம லெடுத்தோதிடு மென்றே யுரைசெய்தார். (71)

## தாற்பரியம்.

நாறுல் அகுபதிய்யாவும், றப்பும் அமர்ந்திருககின்ற கல்பிறப் பானி யென்கின்ற ஸ்தலத்தில் ஐங்கோணவடிவாக செக்காட்டுவதுபோல் எழுந்து ஒரு மூச்சானது சுழன்றுவருகிரது. அதில் ஒரு அலியும், நடுவில் இரண்டு லாமும் அமைந்திருக்கிறது அதை யாதொரு சிக்கல் இல்லாமல் சொல்லுங்கள் ஜனங்களே? என்று நபியுல்லா சொல்லி யிருக்கிருர்கள். என்பது.

இடப்புற மியங்குப் போதிலிறையவ ருெளியைக் காட்டுங்
கடற்பெரும்வலது பாகம் ஹக்கி றசூலைக் காட்டுந்
தடப்பெரும்புவியை நோக்கிற் சந்திர னொளியைக் காட்டு
மடற்பெருவானை நோக்கில் வல்லமை யறியலாமே (72)

## தாற்பரியம்.

அந்தவாசியினிடத்தில் இடதுபுறத்தில் பார்க்கும் போது அல்லாவுடையஒளியைத்தெரியச்செய்யும், வலது பாகத்தைப் பார்க்கும்



போது நபியுல்லாவின் ஜமாலியத்தைச் தெரியச்செய்யும், விசாலம் பொருந்திய உலகத்தைப் பார்க்கும்போது சந்திரனுடைய அம்மிர் கலைகளைத் தெரியச் செய்யும். ஆகாயமென்கின்ற சர்வதத்துவத்தைப் பார்க்கும்போது வல்லமை யென்கின்ற ஹக்கும், கல்கும் ஒன்ருய்க் கலந்து விரவுந் தன்மையைப் பார்க்கக்கூடும் என்பது.

## விருத்தம்.

அறிவாக வருப்நாளி லலிபானவகைநோக்கி லறுஷானத்திற்
குறியான முசிலீம்கள் குணமான கலிமாவிற் குணமானதிற்
செறிவாகவயினலு கறுபான தினமூன்று திருநாமங்கொண்
டெறிவார்களியல் பாகவிருவாசல்வழியூடியங்குமலிபே. (73)

## தாற்பரியம்.

ஞான அறிவில் உயர்ந்துவரும் காலங்களில் அலிபின்வகைவகையான தோற்றங்களைக்கொண்டு உலகவாசிகளான பிறவிகள்நல்லதுணத்துடன் கலந்திருக்கின்ற நான்கு அட்சரங்களில் நின்றும்மூன்று அருப்பதங்களை நினைத்து நடுநாவுஎன்கிற கமலவட்டத்திற்கு ஒற்றி நாசிகளின் இருவாசல்களின் வழியாகவும், உறுஜுநுஸுலாக்கும் அதாவது ஏறி இறங்கச்செய்யும் அந்த அலிபானது, என்பது.

அலிபானதொருநாளு மகலாதுன்னுயிர் நீங்குமதினெொழிந்
தொலியாகவரு நாலுமறையோது கலிமாவி லுறையானதின்
மலிவாக வருநாலு கறுபேதன் றுணரார்கள் மனங்காயிருய்
மெலியாதகறுபேதென்றுணர் ஒர்கள்வெகுஞான வெளிசேரு
[வார்.

## தாற்பரியம்.

அலிபென்கிறபரிசுத்த அட்சரசூட்சமமாவது ஜடலத்தைவிட்டும்விலகாமலே இருந்துவரும்சரீரம் உயிரைவிட்டும் நீங்கினபோனதக்கும் சிறிதுகாலம். அஞ்ஞானிகட்கும், எக்காலமும் ஞானிகளுக்கும் நெருங்கிய உறவினதாக இருக்கும். அப்பேர்ப்பட்டசௌபாக்கிய நிராமயவடிவாகிய அந்த அலிபை உலகத்தில் பிரயாசையுடன் தெரிசியாமல் இருப்பவன் கடைசியில் மனதில் பிரகாசமற்றவங்கா பிரசகவேமரணமடைவான். அறிந்தமஹரான்கள் இருலோகத்திலும் கெடுதலில்லாதசீமான்களாகவே வாழ்வார்கள். அறிவதிலும்கலிமா

விலுள்ள இருபத்து நான்கு அட்சரத்தில் அறிந்து அறியவேண்டும் என்பது

### விருத்தம்.

வெளிசேருப்படி ஞானச்சுடரஞ்சு வெளிகாண்பார்வெகுராசிய
மொளிசேறுமுயிராவ தொருநாளு மொழியாது உடலானதில்
வழிநாலுமறையோது கலிமாவினொளிசேரும்வகை யானதிற்
றெளிவாக விருநாலு நறுபானதிருநாமமெழுந்தில்லில்மேல் (75)

### தாற்பரியம்.

இவ்விதம் அறிந்துகொண்ட மகாத்மாக்கள் தன்னைத்தானறிந்து ஞானசொரூபமாகிய ஐம்புலாதிகளின் உண்மையான பிரகாசங்களையும் கண்டு உலகத்தில் சகல ரகசியங்களையும் நிரம்ப எளிதில் கண்டுகொள்வார்கள், அவர்களின் சரீரத்தைவிட்டும் உயிரும் ஒரு போதும் நீங்காது அவர்களுக்கு இருதயக்கமலத்தில் வட்டத்தில் நின்றுப் சதாதினமும் கலிமாவில் உள்ளநாலு அட்சரத்தின் ஓசையும் இன்னொரு ஓசையுங்கூடி எட்டு அட்சரமாகச்சேர்ந்துஹூ என்னும் வலப்புரியானது முழங்கிக் கொண்டிருக்கும். எவ்வித மென்றால் இல்லல்லாஹூ என்று என்பது.

### வேறு.

இல்லென நிரம்பிநின்ற வெழுத்தினைக்கமலத்துள்ளே
மெல்லவே யிருத்திவாங்கி வெறுப்பினை யகலநீக்கிச்
சொல்லினுஞ் சொல்லாவண்ணந் தோத்திரஞ் செய்வீராகில்
கல்லெனும் நயனத்தூடேகதிரவனொளியதாமே (76)

### தாற்பரியம்.

இல்; என்று எழுந்து ஜொலித்துக்கொண்டிருக்கின்ற பரிசுத்த அட்சரத்தை கமலமாகிய இருதயத்தின் உள்ளால் மெல்லினமாக அமரவைத்து அப்பால் எடுத்து இழுத்து பூலோகமயக்கம்ஒன்றும் அங்குவந்துதொடாமல் வாயால்சொல்பிறக்காத வண்ணமாக நடு நாவில் ஓசைபிறக்குப்படியாக திக்று செய்வீர்களாகில் இரண்டுமாணிக்கங்களுக்கு மொப்பாக இருக்கின்ற உங்கள் கண்களின் நடுவே சூரியன் ஒளியைப்போல் அந்த உஜூது வந்து தோற்றரவாகும் என்பது.



### விருத்தம்.

கதிரொளி பூமியேழுங் ககன மோடறுசின்மேலு
மதிரநின்றெழும்புஞ் சத்த மறிவினு லறிந்தபோது
முதிரொளி படைப்புக்கெல்லா முதலவ னீயேயென்று
மெதிரொளி ஞானத்தூடே யிறைஞ்சுவர் மூமினோரே. (77)

### தாற்பரியம்.

அவ்விதம் இலங்குகின்ற நேத்ர ஒளிவானது பூமியாகிய தீவுகள் எழிலும், வானத்திலும், அறுஷூ முதலான திவ்வியஸ்தலங்களிலும் கேட்கும்படியான அதிர்ச்சியான சப்தத்தை தன்னறிவைக்கொண்டும் அறிந்தபோது அதன் வடிவத்தை நோக்கி யாறப்பல் ஆலமீனே! எல்லாவஸ்துவையும் படைத்த நாயன் நீயல்லவா? என்று சொல்லி அந்த பேரொளிவின் கதிர்களுக்கிடையில் நுழைந்து பணிந்தவர்கள்தான் மூஉமீன்கள் என்று சொல்லப்படும். என்பது.

### வேறு.

மூமினை மூமினும் முசிலிமான பேர்களும்
ஆமினை நின்றுவாழு மஞ்சிலொன்றை நெஞ்சுறச்
சேமமானதிக்றினோடு நிற்குஞ் சீவன்மெய்யுள்ளே
சாமநாலினும் நிறைந்த தக்குவாவைச் செய்வரே (78)

### தாற்பரியம்.

உள்ளபடியே முஸ்லிம் என்பவர்களும், மூஉமீன் என்பவர்களும் தான் உற்பத்தியா யிருக்கின்ற ஐந்து அனாசிறுகளான பூதங்களில் ஆகாயமென்கிற எட்டப்படாத நிர்மலத்தை நெஞ்சார அறிந்துகொண்டு அத்துடன் ஈடேற்றத்திற்குரிய திக்ருகிய அல்லாஹூ என்பதையும், கைவல்லியப்படுத்தி ஆத்மாவின் ஸ்தலமான இருதயத்தில் வைத்து நாலு ஜாமம்வரையிலும் *தக்குவாச் செய்ய வேண்டும். எப்படியானால் இந்த சரீரம் இருப்பதுடனேதான் என்பது.

### வேறு.

தக்குவாவுக்குத் தவஞ்செயு மூமினோர்தமக்கு
மெக்கிமாயுள்ள தலங்களுங் கண்டதினிடையில்

---

* தக்வா என்பது மனதைச்சரியவிடாமல் செய்கின்ற தியானம்.

மெய்க்குளாந்தல மஞ்சையும் விரும்பிடவல்லோர்
தக்கமகவெனு முத்திரை பெறுமாந்தர்தானே. (79)

## தாற்பரியம்.

பரிசுத்தமான வணக்கத்தை செய்வோர்களான முஉமீஞன ஐனங்களுக்கு எப்போதும் நிலைவரமாக ஐந்து புலன்களின் வாசலெனும் துன்யாவைவிட்டும் அடைபட்டுவிடவேண்டும். அவர்களோ! அந்த ஐந்து ஸ்தலங்களைத் தான்விரும்பியும் இருப்பார்கள் அப்போது அவர்கள் உலகத்தில் வசிக்கும ஜனங்களின் நடுவே ஆண்பிள்ளைச் சிங்கமென்கின்ற முத்திரையான நற்பெயரைப் பெறுவார்கள். என்பது.

## விருத்தம்.

தானமாந் தலமஞ்சையுந் தவத்துடன் றேடா
ரீன் மாய்விடுவார் தமக்குவாவினுக்கேருர்
வானமாந்தலமஞ்சையும் வகைப்படியுணர்ந்தோர்
ஞானமாந் தக்குவாவெனுநல்வினை காண்பார். (80)

## தாற்பரியம்,

அந்த ஐந்து தலங்களையும் வென்று தவஞ்செய்யாத ஞானிகள் ஈனமான அஞ்ஞானிகள் என்கிற கெட்டபேரை விடமாட்டார்கள். சிரசின்மேல் இருக்கிற ஐந்து மகா பூதங்களான ஸ்ருபத்தைத்தெளிந்திருக்கின்ற மகான்கள், ஞானமாகிய மெய்பாதை கணடு நடககினற மேலான ஜயசீலர்களாய் அச்சமற்று இருப்பார்கள் என்பது.

## விருத்தம்.

நல்லலாபமென் றறிந்தவர் நாடியகலிமாச்
சொல்லலாம்பலசுரு திகண்டுணர் ந்தவர்தொடர்ந்தால்
வெல்லொணுத் தலமஞ்சையும் விசு வதித்திடுவார்
எல்லையாந் தக்குவாவெனு மியல்பினைக் காண்பார். (81)

## தாற்பரியம்.

ஒரு மனிதன் தனக்கு நல்லபடியானலாபம் வேண்டுமென்ன ஆசைவைப்பானேயாகில்; அவன் உபாயம் செய்யவேனும்: என்று விதமென்ருல் — கலிமாவின் தத்துவத்தைக்கண்டு அத்துடன் விர



விக்கொள்ளவேணும் பலபல ஞானவான்களையும் கண்டு அவர்களின் திருவாய் மொழிகளைக் கேட்டிருந்து நாளாசரியாய்ப் பழகிவந்து மெதுவாய் ஐந்து புலன்களின் குணங்குறிகளைக் கண்டு அவைகளிடம் பழகி அப்பால் அவைகளை வென்று நிர்ணயம் என்கிற கைப்பிடி கொப்பை நழுகவிடாமல் வைராக்யம் என்னும் பலத்தால் இருகப் பிடித்து அப்பால் வரக்கூடிய தன் எல்லையாகிய தக்குவாவை உறுதிப்படுத்துவது என்பதாகப் பகுத்தறிந்துகொள் என்பது.

## செந்தொடைபஃறொடைவெண்பா.

காணுவுடம்பதற்குக் கருதுஞ் சுவாத்தியங்கள்
வேணுமென மிடைகள் வேண்டுவது—மூணுற்
றடிந்திருக்க வேணுமென்று சாற்று வதைப்பார்க்க
மெலிந்திருக்க வேண்டி விரும்புவதும்— மலிந்துடலிற்
கூவத்து வேணுமென்று கூறுவதைப் பார்க்க
ஆபத்தில்லாமலமைகிறது—மேலவர்கள்
நல்லாதானென்று பெயர் நாட்டுவதைப் பார்க்கப்
பொல்லாதானென்றுபெய ரேற்பதுவும்—எல்லாநாள்
சீமான் றனந்தேடித் துவாவிறப்பதைப் பார்க்கில்
ஈமானே டேமவுத்தாக் கென்பதுவும்—மூமினுக்
கஞ்சு தவமும்மறிந் தாலொழிந் துதவும்
பொஞ்சுமதைக் காணுற் புரிந்து. (82)

## தாற்பரியம்.

முஉமீன்கள் என்பவர்கள் இன்னும் ஐந்து விதமான தவமுஞ்செய்துபிரார்த்திப்பார்கள். அவைகளாவன:-மறைந்து போகக்கூடிய சரீரத்திற்கு சுகசௌக்கியம் ஒன்றும் வேண்டாமென்று விலக்கிக் கொள்வார்கள். (இன்னும்) ருஷிகரமான உண்டிதிண்டிகளால்சரீரம் பருத்துப்போய் இருக்கிறைதவிரும்பாமல் அழுக்கும் சிக்குமாய்வாடி வரண்டுபோய் இருப்பார்கள் (இன்னும்) பாழான சரீரத்துக்கு நல்ல திடாரிக்கமான பலம் வேண்டாமென்று வெறுத்து எந்த நாளும் ஆபத்தில்லாமல் வாழ்கின்றதேபோதும் என்று தேடிக்கொள்வார்கள் (இன்னும்) உலகத்திலுள்ள அப்பாவிகளான அற்பஜனங்கள் கூடிநல்

லவர் இவர்! பெரிய வல்லமையுடையவர் இவர்! என்று நுனி நாவில் சொல்லுகிறதைவிட இவன் பொல்லாதவனடன்! என்று தூஷிணிக்க வேண்டுமென்று தேடக் கொள்வார்கள் (இன்னும்) எக்காலமும் சீமான் தனத்தைக்கொடு! என்று துஆக்கேட்க விருப்பமில்லாதவர்களாய் கலிமாவுடன் மரணத்தைக்கொடு! என்று கேட்பார்கள். இந்த ஐந்து விதமான தவங்களும் முமீன்கள்செய்து கொண்டிருப்பார்கள் என்பது.

### விருத்தம்.

உருவற்ற எழுத்தை யுன்னிக் கமலத்தி னழுக்கை நீக்கி
யுருவற்ற வொளியைநோக்கியொன்றுபட்டிருப்போர்க்கெல்லாம்
குருபத்தர நன்வார் மூலக்குகையினிற் கலிமாத் தன்னைப்
பருவத்தே பயிர்செய்வோர்க்குப் பலனுண்டாம் பெருகத்தானே.

### தாற்பரியம்.

சரீரத்தை உற்பத்தி செய்த அட்சரமான அலிபை நினைப்பில் வைத்து இருதயத்தில் உண்டான விகார எண்ணங்களை நீக்கிவிட்டு உருவமில்லாமல் அருவமாய் நின்று இலங்குகின்ற பரிசுத்த வடிவத்தைக்கண்டு, அதனுடன் ஒன்றுபட்டு விரவியிருக்கின்ற நமஹாத்மாக்களெல்லாம். குரு என்ற வழிகாட்டி உழவனாக வந்து சொல்லனசாக்ஷி என்னவென்றால். மூலாதாரக்குகைக்குள்ளே கலிமா என்கின்ற வித்தையூன்றி பருவத்திலேயே பயிர்களாக்கிக்கொண்டால் எக்காலமும் கைசேதமில்லாமல ஜீவித்திருக்கலாம் என்பது.

நாசிக்கு மேலே நெற்று நடுவினின் ருடுஞ்சோதி
ஊசிக்குள் நூலுபோல வுள்ளம் விட்டகன்றிராது
வாசிக்குங் கமலவட்டவடிவினை நோக்கிப்பார்த்து
பூசிக்கவல்லோர் பூமி பொருளை விட்டகல் வாரன்றே. (84)

### தாற்பரியம்.

நாசியென்னும் பாதைக்குநேரே மேலிருக்கும் வில்வளைவான புருவ மத்தியினைக்கண்ணை நின்று ஆடிவிளையாடி பிரகாசிக்கும்படியான ஜோதியென்னும் ஒளியானது. ஊசியில் கோர்த்துத் தொடுத்திருக்கும் நூலைப்போல இருதய கமலத்தைவிட்டும் விலகாமல் ஒட்டி நிற்கின்றது. அப்படியால வாசனை பொருந்திய அந்த நெஞ்சத்தாம



ரைவட்டத்தை எட்டிப்பார்த்து வணங்க வல்லமையுடையவர்கள் இந்தமாயமான அற்பதுனியாவின் எந்தவஸ்துவின்பேரிலும் இச்சிக்கமாட்டார்கள். என்பது.

பொருளொரு பொருட்டு மல்லப்பூமிவிட்டகல்வாராரு
லருளொரு பொருட்டினாலே யவனியை நோக்கிற் பொன்னு
மிருளைவிட் டகல்வா ரில்லென்றிலங்கிய கலிமாக்கொண்டு
வெருளதை நீக்கிமேலா சனத்தில்வீற் றிருப்பா ரன்றே. (85)

### தாற்புரியம்.

இந்தப்பூலோகத்தின் கொஞ்ச இச்சையைவிட்டும் விலகின நாதாக்களுக்குப் பணங் காசு பொன்பொருள் என்பவைகள் ஒருபெரிய காரியமல்ல. அவர்கள் மனதில் நினைத்தார்களானால் அல்லது பூமியை நோக்கி உமிழ்ந்தார்களானால் உடனே மண்ணும் பொன் கட்டியாய் சமைந்து விடும். இன்னும் அவர்கள் நான்வேறு நீ வேறு என்கிற இருளான இணையை நீக்கி நான், நீ; என்னும் ஒருமைப்பாட்டில் விரவிக்கொண்டு இல் என்னும் கலிமாவில் கலந்தவர்களாய் மேலான ஆசனத்தில் வீற்றிருப்பார்கள் என்பது.

### கலிவிருத்தம்.

முகத்துக்கண்ணை முறுக்கித் திருக்கியே
யகத்துக் கண்ணை யறுத்துப் பிளந்தபின்
வகுத்தசோதி மணிவிளக்குன் னுள்ளே
தொகுத்துப் பார்க்கச் சுகம்பெற்றாய் நெஞ்சமே, (86)

### தாற்பரியம்.

ஏ! மனமே நீ முகக்கண்களின் பார்வையை உலகத்தின் மயக்கத்தில் விடாமல் ஒழித்து; இருதயமாகிய அக்கண்ணை இல்லாமுடைய வழியைக்கொண்டு திறந்து உள்ளே சென்று அங்கே உன்னைப்படைத்த சுத்த பிரகாசமான றப்புடைய தீபவெளிச்சத்தை உன்றன் இருதயத் தாமரையின் கண்ணே நீங்காத நிலையாக நினைவை நிறுத்திப் பார்வையிடுவாயாகில் அப்போதுதான் சுகம் பெறுவாய் என்பது.

பகுந்து மெய்மைப் பலபலகூறதாய்
வகுந்ததொன்றை மணிவிளக்காக்கியே
கவிழ்ந்து பார்க்குக் கமல வகாரத்தை
நிமிர்ந்து பார்க்க நிலைபெற்றாய் நெஞ்சமே (87)

### தாற்பரியம்.

இந்த சரீரத்தை, சதை, மண்ணென்றும், இரத்தர் தண்ணீ ரென்றும். சுவாசம், காற்றென்றும். இப்படியாக நான்குபலங்கள் படுசதி, அதிலொரு பங்கான ஆகாயததை நினைவாக்கி அதையே ஸமஸ்த லோகங்களுக்கும் அடித்தளமான இராஜ கருவியாக்கி அதையே இருதயத்தின் மணிவிளக்கின் பிரகாச வெளிச்சமாக்கி அந்த வெளிசத்தை ரூஹு இருக்கின்ற ஸ்தலமாகிய இடது பக்கத் தின் ஈரல தாமரையின் பக்கமாகக்கவிழ்ந்து பாரகம் நிலவிப நின்று சற்றே நிமிர்ந்து புருவ மத்தியில் பார்வையைக் கதிர்முனை போல் நோக்குவாயாகில் அப்போதுதான் நிலையாடான உஜூதை சந்திப்பாய். என்மனமே. என்பது.

கணங்கொள் பூதங்கலந்த வனத்திடை
சுணங்குபோலச் சுருண்டு கிடந்ததை
யிணங்கிமெல்ல வெழுப்பி யிருத்தியே
வணங்கிப் பார்த்து மகிழ்ந்திடும் நெஞ்சமே. (88)

### தாற்பரியம்.

கருவிகரணங்கள் என்னும் பூதக்கூட்டங்கள் நெருங்கியிருக் கின்ற வனமாகிய சரீரத்தில் வண்டைப்போல் சுருண்டு கிடக்கின்ற ஆத்மா என்னும் தத்துவ ஒளிவைத்தெரிசித்து மெதுவாக அதற்கு உஷார்கொடுத்து எழுப்பி அதுடன் உறவாடிக் கலந்து வணங்கிக் கொண்டு எந்நாளும் ஆநந்தத்துடன் வாழ்ந்திருப்பாய் மனமே என் பது.

அல்லி ராப்பகலான சுவாசத்தை
மெல்ல மெய்யில் விளக்கொளியாக்கியே
நல்லதென் றுயர் ஞானக்குருபரன்
சொல்லிற் பார்க்கச் சுகம்பெற்ருய் நெஞ்சமே. (89)

### தாற்பரியம்,

இரவும் பகலுமாகசரீரம் என்னும்பட்டணத்தில் உலாவிக்கொண் டிருக்கும் பரமபொருளாகிய மூச்சை மெதுவாகப் பழக்கியிழுத்துப் பிடித்து ஜடத்தின்கண்ணே விளக்காகக் கொளுத்திவிட்டு நல்ல காலத்தின் அதிஷ்ட திரவியம்போல் வந்தகாமிலான குருவின்



சொல்படி கலிமாவினுல் அதை நோக்கினுயாகில் அப்போதுதான் சுகம், பெற்றுக் கொள்வாய் என்மனமே! என்பது.

வேங்கை மெய்யை வெருட்டிப் பிடிக்கண்
டோங்கி மெல்ல வுயர்த்தி யிருத்தியே
பாங்கினுடு பரம சுவாசத்தைத்
தூங்கிப்பார்க்கச் சுகம்பெற்ருய் நெஞ்சமே. (90)

### தாற்பரியம்.

மனமே வேங்கைப்புலியாகிய மவ்த்தானது உன்னை வந்து துரத்தி ஒரு பிடியாய் பிடித்துக் கொள்வதற்கு முன்னமே உன்னை நடத்காட்டி வருகின்ற பரம்பொருளாகிய சுவாசத்தை மெதுவாக ஏற்றியிறக்கிப் பழகிவந்து உன்னை பனுவாக்கி விட்டு அதை நீபார்த் திடுவாயாகில் அப்போது எல்லாசுகங்களையும் தடைமறவில்லா மல் பெற்றுக்கொள்வாய் என்பது.

ஒய்வி லாப்புன லூறிய வாவியிற்
பூவி லாமணம் பூத்த கமலத்துள்
வாயி லாவண்டு வந்து மனங்கொள்ள
ஈயி லாத்தே னினிப் புற்ருய் நெஞ்சமே. (91)

### தாற்பரியம்.

எந்நேரமும் இடைவிடாமல் புனலாகிய இரத்தமானது ஊறிக் கொண்டிருக்கின்ற இருதயத்தின் தடாகத்தின் கண்ணே? புஷ்ப மில்லாமல் மணக்கின்ற வாசனையானது விரிந்திருக்கின்ற. ஈரல் தாமரையின் நடுவே வாய் இல்லாத வண்டாகிய சுவாசமானது வோடிவந்து அத்தாமரையின் பரிமளத்தை முகந்துகொள்ளவே ஈயில்லாத தேனுகிய கலிமா யென்கின்ற ஹா ஹீ ஹூ என்னும் அட்சரங்களானவைகள் இனித்துத் தன்னை மறந்துவிட்டது மனமே என்பது.

மக்கம் வாழு முஹம்மதர் சொற்படி
சொர்க்க வாழ்வுஞ் சுகமு மிழந்துபோய்
நெர்க்கமான நெருப்பில் விழாமலே
ஹக்கனேடு கலந்திடு நெஞ்சமே. (92

## தாற்பரியம்.

திருஸ்தலமாகிய மக்கமா நகரத்தில் மனுஷாவதாரங்கொண்டு உதையஞ் செய்துவந்த நபிகள்நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் கட்டளைப்பிரகாரம் நடந்து சுவர்க்க வாழ்வையும், விகாவையும் பெற்றுக்கொள்ள மதியில்லாமல் பேதா பேதகப்பட்டு இருவினையாகிய பெரும்பாவப் பொதிகளைத் தேடிச் சுமந்த கழுதைபோல் அநேக அகோரவிகார ரூபாதிகளைக்கொண் டும் சதா யாதனை செய்யப்படுகின்ற நரகக் குழியில் விழுந்திடாமல் உன்னுக்குள் மறைந்தவனாக இருக்கின்ற தலைவன் உன்னை இல்லா மாக்கி அப்பால் இருப்பவன் யாரென்று கூர்மையுள்ள புத்தி யைக்கொண்டு விசாரித்து பார்த்து அதுடன் விரவிக்கொள் மனமே! என்பது.

ஜாயிலென்றதகைமையை நீக்கியே
வாயிலன்றி மனத்திலொன்ருக்கியே
ஆசஊவென்றி வாலறிந்தபின்
காயிலாக்கனி கண்டிடுநெஞ்சமே (93)

## தாற்பரியம்.

தன்னையறியாத ஜாஹில் என்கின்ற தன்மையை நீக்கிவிட்டு வாயால் சொல்லிக்கொண்டலையாமல் அந்தப் பொருளை மனதின் கண்ணே ஒன்றுபடுத்திக்கொண்டு ஹா ஹி ஹூ வென்கிற கலிமா வால் அறிவையறிந்தபின் காயில்லாமல் பழமான தன்மையுள்ள அப்தாய் இருந்த நீ அகதாகின்ற தத்துவத்தைக்கண்டு கொள்வாய் என் மனமே என்பது.

முனபிக்கென்றமிடிமையை நீக்கியே
விஞபிக்கும் மகுபூபெனுஞ் சோதியைப்
பனயகல்பு பணிவிடையானபின்
கனயத்தோடு கலந்திடு நெஞ்சமே. (94

## தாற்பரியம்.

மனமே! நீ முனபிக்கு என்கின்ற தரித்திரியத்தைவிட்டும்உன் னில் பூரணமயமாய் நிறைந்திருக்கின்ற மகுபூபு என்னும் பிரகாசத் தை ஆசைகொண்டு மருண்டு திரியும் மனக்குரங்கானது உன்வசப் பட்டு பணிந்தபிறகு உன்றப்புடன் கலந்து ரஹித்துக்கொள் என்பது.



நீயு நானு நினைத்திடுங் காலையி
லேதுநான கவைடிறைஞ்சுவ னீதியாய்
நீயுமென்னுள் நினைப்பது தானின்ன
நேரமென்றே யிருப்பது கண்டிலேன். (95)

## தாற்பரியம்.

மனமே ஒரு நிச்சயம் சொல்லுகிறேன் கேட்பாயாக. நீ வேறு நான் வேறு என்றிருந்த விகாரததை ஒழித்து நீயும் நானும் ஒன்று என்கின்ற ஞானத்தில் விரவிய பிறகு வேறு நான் எந்த வஸ்துவை வணங்கப் போகிறேன். ஆனதினால் நீதியாக நீ என்னோடும் நினை வுடன் கலந்து ரஹித்து நேசித்திருப்பது எந்நேரமோ அறியவில்லை என்பது.

### கட்டளைக் கலிப்பா.

சீயும் நீருந்திருத்திய மெய்யுளே தேனும வந்து சிறந்தது கண்டியான்
ஆயும் நீரையகற்றி யமிர்தமதாக வுண்டவர் பாதம் பணிந்தபின்
காயுமன்றிக் கனிந்த கனிபழங் காண்பர் கண்டுகளித்த குருபரன்
நீயவென் றியமிர்ந்துண்ணுங் காலையி லேது நன்கண்டிறைஞ்
சுவனெஞ்சமே .

## தாற்பரியம்.

நாற்றமுடைய சீழும் ஊனநீரும் கட்டுப்பட்டு நிற்கிற இந்த சரீரத்தில் இனிமையான தேவாமிர்தத்துக கொப்பான தேன் என்கிற கலிமாவின் ரஞ்சிதமானது சிறந்து வந்திருக்கிறதை நுட்ப புத்தியைக் கொண்டு தெளிந்தறிந்துகொண்ட பின்னால் நான் புலமாதிரிப்பட்ட ஆராய்ச்சியை விட்டும் விலகி அந்த மேலான தேன் சுவையைக் கொண்டு குடித்த நாதாக்களின் பாதாரவிந்தங்களைப் பணிந்து அதன் பின்னால் காயில்லாமல் ஒரு பழமானது பழுத்த தன்மையான இந்த சரீரத்தின் அடிமைத் தனத்தை ஒழித்து எல்லாம் நாம்தான் என்ற சக்கற்ற தீர்ப்பைப் பிடித்துக்கொடுத்த காமிலான குருவின் தந்திர உபாயத்தின் பொருட்டால் என்னில் உள்ள இடகலையின் தோற்ற மாகிய சந்திரனில் இருந்து பொழிந்த அமிர்தம் உண்ணும்போது உன் கண்ணுக்கு உன்னையன்றி வேறெந்த சொரூபம் தோற்றப் போகின்றது. மனமே என்பது

### கட்டளைக் கலிப்பா.

நீதியாயுள்ள ஜாதியனைத்தினும் நீக்கமன்றி நினைப்பவர் கல்பிலு மாதியான பொது வஸ்துவிதெனு மஞ்சி லொன்றை யறிந்தவர்

கூறவே, யோதி நூலை யுணர்ந்திடு நாளெல்லா முள்ள மோடித்
தளர்ந்திது காணெனுஞ் சோதியாய்வரு மவ்வெழுத் தொன்றினைத்
தொடர்ந்து காணச் சுகம் பெற்றாய் நெஞ்சமே. (97)

## தாற்பரியம்.

நீதமாகிய ஒழுக்க நடையில் சரிபட்டு நடக்கின்ற ஸமஸ்தான ஜீவராசிகள் அடங்கலிலும், இனைம் இரண்டுபடுத்தாமல் ஒருமைப் பாட்டில் திட்டப்படுத்திக்கொண்ட பெரியோர்களின் திருமனதிலும், வைக்கும் ஆதிவஸ்து இதுதான் என்று ஐந்து பூதங்களில் ஒன்றாகிய ஆகாசத்தைத் தெரிந்துகொண்ட வல்லமை சாலிகள் சுட்டிக்காட்டின வுடனே, வேத சாஸ்திர தந்திரங்களின் மூடிதிறக்கப்பட்டு அதன் பேரில் வைத்திருந்த நம்பிக்கையை கைவிட்டுவிட்டு உலகம யாவற்றிலும் பரிபூரணமாய் நிறைந்த ஜோதியானது அந்த ஒரு எழுத்தில்தான் ஒளித்திருக்கின்றது என்று அதன்பேரில் ஆசை மீறி அதைத் தெரிசனம் பண்ணினவுடனே சதாசுகங்களைப் பெறுவாய் மனமே என்பது.

### விருத்தம்.

சூலமா யொளியாய் ஞானச் சுடரது தன்னை நோக்கிச்
சீலமாயெழுந்த சீவ மறிமது தெரிசிப்போர்கள்
சாலமா மறைகளோதுஞ் சாத்திரச் சுழக்கமெல்லாஞ்
சூலைபோல் வயிறு தோன்றத் தொடங்கின தொழிலா மென்றார். (98)

### தாற்பரியம்.

ஞானமான பெரிய கூரிய அறிவில் பழகிவந்து சர்வ உலகக் காரண கருவியான அந்த ஒளியைக் கண்ணுங் கருத்துமாய்த் தெரிசித்து ஜயம் பெற்றுக்கொண்ட மஹான்கள் எல்லாரும் இந்த உலகத்தில் வேதம் என்றும் சாஸ்திர சோடிகள் என்றும் பெருகி ஜாதி மத பேதகப்பட்டு ஜனங்களை மருட்டி நடத்துகின்ற விதமெல்லாம், உலகவாசிகளான வேத சாஸ்திரிகளானவர்கள் தங்கள் நிறையாத வயிறுகளை வளர்க்கவேண்டியதற்காகப் பின்னின்ன வலைகளாக இருக்கும் என்று சாக்ஷி சொன்னார்கள் என்பது.

### விருத்தம்.

அண்டமு மவனிதானும் மதிர்ந்திட மறைகளோதிக்
கண்டமுங்கடுத்து நோவக் கதறிய மைந்தர் சேண்மோ
என்று முள் ளவனை மெய்யுளெழுந்தின லிருத்திப் பார்க்குந்
தொண்டருக் கடிமை செய்தாற் சேரலாஞ் சுவர்க்கம் தானே. (99)



## தாற்பரியம்

ஆகாசமும் நீங்கள் வாசம் பண்ணும் பூமியும் அதிர்ந்து போகும் படியாக வேத சாஸ்திரங்களை ஓதுவோதென்று வோதி தொண்டைக் குழியில் நீரும் வரண்டுபோகும்படியாய்க் கத்திக் காலந்தள்ளுகின்ற மந்தப் புத்தியுள்ள மூட ஜனங்களே! கேளுங்கள் நீங்கள் இவைகள் போன்ற வேஷங்களை விட்டுவிட்டு சதாகாலமும் நிலையாக இருக்கும் படியான ஆதிவஸ்துவை இருதயத் தாமரையில் வைத்து ஒரேயொரு அட்சரத்தால் தெரிசித்த அன்பர்களான ஆஷிக்கீன்களுடைய பாதத்தில் விழுந்து கட்டிப் பிடிப்பீர்களானால் சுவர்க்கம் உங்கள் பேரில் விற்கிரயமாய்விடும் என்பது.

### வெண்பா.

பேய்த்தேரை மெய்யென்று பேதலிந்த மான்போலச்
சாத்திரங்களோதித் தளராதே சாத்திரத்தைக்
கற்றறிந்து விட்டாற் கதியாகாதப் பொருளைச்
சற்றறிந்து பாராய் தரித்து. (100)

### தாற்பரியம்.

கானகத்தில் கொள்ளிவாய் பிசாசுகள் கூடி தழையும் குழையுமாய் ஜோடித்து நடத்திவந்த ஒரு தேரைக் கண்டு ஓகோ இந்தத் தேரில் நாம் அருந்திப் பசியடக்கக்கூடிய தழைகள் தொங்குகின்றன. ஆனதால் கூடவேபோனால் நல்ல சௌகரியமாய் தின்னலாம் என்று ஒரு மான், தன்பாலை நினைத்து மறக்காத குட்டிகளையும் விட்டுவிட்டு சென்று சிறிது தூரம் போனதும் அந்தப் பிசாசு கூட்டங்கள் இந்த மானைக் கண்டு கும்மாளி போட்டு கூத்தாடிக் குரவையுடன் வந்து அதன் குரவளையைப் பிடித்துக் கடித்து இரத்தத்தை யுறுஞ்சும்போது அந்தமான் எவ்விதம் மருண்டு தவித்ததோ அதே கெதியாக இந்த மாயஉலகத்தில் மனுஷ ஜன்மமெடுத்துப் பிறந்து வீணாக வேத சாஸ்திரிகள் சொன்ன பொய்யை நம்பி ஸ்திரீகளின் காமசோகத்தில் மிதந்து புத்தியைக் கரையானுக்குக் கடன் கொடுத்துவிட்டு கடைசியில் வரும் எமன்கையில் சிக்கிக்கொள்ளாதே. நீ கற்ற வேதங்களில் அந்தரங்கமாய் நுழைந்து கிடக்கின்ற வஸ்துவை ஒன்றுபடுத்தி மனசு அளவில் கொஞ்ச நேரம் உன் எண்ணத்தை கதிர்முனைபோல் நிற்கவைத்துப்பார் அப்போது உண்மை யென்பதின் ருஷியானது தானே தெரியவரும். என்பது.

எறும்கடை யெண்பத்து நான்குநூறுயிரத்து
ளுறும் பொருளையாரு முணரார்கள்—வெறும்பானை
பார்த்திருந்துத் தூங்குவார் பசிகளிருற் பாவியர்கள்
சாத்திரத்தின் கேடாவர்தான். (101)

### தாற்பரியம்.

யானைமுதலான எறும்பு கடைசியாக உள்ள என்பத்துநான்கு நூறுயிரப்கோடி ஜீவஜந்துகளின் சரீரங்களிலும் தன் வல்லமை விளையாட்டின் ஹிக்கமத்தால் சங்கிலித்தொடர்போல் கலந்து மறைந்தகொண்டிருக்கும் அந்த எட்டாத பொருளைப்பற்றி மனதில் விசாரணை பண்ணுமல் சோற்றுப் பானையில் சோறு ஒன்றுங் கிடையாதென்று நல்ல தெரிந்திருந்தும் அதற்குரிய முயற்சி செய்யாமல் கடிசான பசியோடும் கிடந்து தூங்குகின்ற பரம சோம்பேறிகள்போல உலகவாசிகளான பாதக ஜனங்கள் வீண் விளையாட்டிலும் சிரிப்பிலும் மனதைப் பராக்காக்கி விட்டு வேத சாஸ்திரிகளின் சொல்லைப் பிடித்துக்கெட்டு அழிந்து விடுகிருர்கள். என்பது.

அழுக்கறுத்து மெய்யை யறிந்தோர்கள் முன்சென்று
சுழுக்கழுத்து நீகேளு சொல்லுவா—ருட்கருத்தை
வஞ்சகத்தை நீக்கிவான் பொருளை யென்றுமவர்
தஞ்சமெனக் காட்டுவார் தான். (102)

### தாற்பரியம்.

யாரப்பா! இதை நோட்டமிடுகிற அறிவுள்ளமகனே? உலக மயக்கத்தில் உன்னை விற்றுவிடாமல் தன்னை இன்னதென்று அறிந்திருக்கின்ற மேலோர்களான நாதாக்களை நீகண்டு பிடித்து அவர்கள் பாதத்தைமுடுகி வெட்கத்தை உதறிவிட்டு ரகசியத்தைக்கேள். அப்போது அவர்கள் உன் இருதய வடிவைப்பற்றிச் சொல்லுவார்கள். அத்துடன் உன்மனதின் வைராக்கியத்தைக்கண்டு அவர்கள் யாதொரு வஞ்சகமில்லாமல் உன் அசலான பொருளை இதுதான் என்று சுட்டியுங் காட்டுவார்கள் என்பது.

வோதியர்கள் சொல்லதனை மெய்யென்றிருப்பவர்க
ளாதி நிலையீதென் றறியார்கள் – ஓதிமிக
உள்ளத்தரும் பொருளை யுணரா தவர்நாளைக்
கள்ளர்படும் பாடெனவே காண். (103)



### தாற்பரியம்.

வஸ்துதைக் கண்டுகொள்கின்ற உபாயம் இப்படியேயன்றி உலகத்தில் வயிறுவளர்க்கப் பொய்வேஷம் போட்டுக்கொண்டு கலைக்யானங்களை வாயால் புலம்பித்திரிகின்ற சாஸ்திரிகளின் சொல்லைத்தொடர்ந்தால் ஜனங்கள் யாதொருபயனும் பெறமாட்டார்கள். அந்த சாஸ்திரிகள் அவ்வளவுகல்விகளைக்கற்றும் தம இருதயசொருபத்தின் வடிவைச் சந்திக்காமல் போனுர்களானுல், அவர்கள் மரணவேளையில் திருடர்களைப்போல் பறக்கப் பறக்க முழிப்பார்கள். அது மேலைக்குத் தெரிய வரும் என்பது.

மெய்யிலே யுள்ளதொன்றும் விள்ளார்கள் வேதியர்கள்
பொய்யிலே யுன்மனதைப் பூட்டுவார்— கையிலே
கண்ணுடி வைத்தாலுங் காணுதகப்பொருளை
விண்ணுர்ந்திருப்பரே மேல். (104)

### தாற்பரியம்.

உண்மையாகிய மஅரிபத்துல்லாவின் விஷயத்தைப்பற்றி வேத சாஸ்திரிகள் யாதொன்றும் பேசமாட்டார்கள். அது வஞ்சகத்தால் அல்ல தங்களுக்கு அதன் விஷயத்தில் தெரியாததினுல் வீண்பொய்யாகிய உலகமயக்கத்திலேயே உன்மனதைக்கட்டி விடுவார்கள். அதிலும் சில வேஷதாரிகளான குருமார்கள் கையில் கண்ணுடிகளை வைத்துக்கொண்டு அதோ! தெரிகிறதுபார் என்று கண்பார்வையின் ஒளிவைக்காட்டுவார்கள் அந்த பொருளானது இப்படிப்பட்ட ஜாலவலையில் அகப்படாது. அது அகப்பட்டுக்கொண்டவர்களின் பார்வையானது இருதய சாயலசய் மேல்நோக்கியிருக்கும் என்பது

### கட்டளைக் கலித்துறை

ஈமான் றனக்கு மிசுலாம்நெறிக்கு மிடைநடுவே
தேமாங் கனியுண்டு செப்பரிதால் செப்பிலஞ்சி லொன்றை
ஆமா மெனக்கலி மாவாலெழுப்பி யறிந்துணர்ந்தால்
சீமான் றனம்பெற்றுவாழ்வீரென நபிசெப்பினரே. (105)

## தாற்பரியம்

ஈமான் என்கின்ற உறுதியான எண்ணத்திற்கும், இஸ்லாமென்கின்ற கலிமாவுக்கும் இடையில் தேமாங்கனியாகிய தன்னை றப்புடன் விரவச்செய்கிற முறையொன்றிருக்கிறது. அதை யாராலுஞ்சொல்ல முடியாது. ஒருவாறு நமது பிறவிகளான உலகவாசிகள்பேரில் கருணை வைத்துச்சொல்கிறேன். கலிமாவில்உள்ள இருபத்துநான்கு அட்சரங்களிலும் முக்கிய பாதையையுடையது ஐந்து அட்சரங்கள். இந்த ஐந்திலும் ஒரேயொரு அட்சரந்தான் எல்லாவற்றையும் பொதிந்து நிற்கின்றது அதைஉறவாடி கலிமாஎன்கின்ற திறவுகோல்கொண்டு திறந்து உள்ளமான இருதயத்தின் வட்ட வடிவில் தூக்கியெழுப்பி இருத்திப்பார்த்து அதுயார்? நாம்யார்? என்று விசாரித்தால் நீங்கள் நிகரில்லாத சீமான் தனமாகிய சதாகால வாழ்வைப் பெற்றுக் கொள்வீர்கள்! என்று நமது சர்வ லோக யோக தற்பர ஜகத் குருவாகிய நபிகள் நாயகம் அவர்கள் திருவாய்மலர்ந்து சொன்னார்கள் என்பது.

## கட்டளைக் கலித்துறை

அறுநான் கோ டட்சரக் கோடாரியை கொண்டறிந்துளத்தில்
மறிவான வஞ்ச மனத்தைத் தறித்து தயற்புனமாய்ச்
செறிவான தீனிலமுதான வித்தினைச் சேரநாட்டுப்
பொறிவிண்களை பறித்தாற் பெறலாஞ் சொற்கப் பொற்பதியே.

## தாற்பரியம்

இருபத்து நான்கு எழுத்தாகிய கலிமாஷஹாதத்தென்னும் ஞானக் கோடாரியைக்கொண்டு அறிந்து இருதயத்தில் அப்போது ஹவாவென்கிற மனதின்கண் வந்துகூடுகின்ற உலகமயக்க அவத்தைகளையெல்லாம் தறித்துவிட்டு, வெட்டி இருதயத்தை ஒரு வயல் நிலமாகத் திருத்தி தீனுல் இஸ்லாமுக்கு உயிராகஇருக்கிற கலிமாவில் அமிர்தமான இல்லல்லாஹுவென்கிற விதையை நினைவுடன் கலந்து விதைத்து முளைகண்டவுடன் நடுவைசெய்து ஐம்புலன்களின் விகாரக் கிருத்தியங்களான களைகளை அப்போதைக் கப்போது பிடுங்கிக் கொண்டுவந்தால் சுவர்க்கபதியாகிய ஈடேற்றம் பெற்றுக்கொள்ளலாம் என்பது.



முன்னுள் கெழுத்தில் முதருன் கைவிட்டு முதிர்ந்தெழுந்த
பின்னுள் கெழுத்துப்பிறவா துதித்தெழும் பேரெழுத்தில்
அன்னுன்கி லொன்றதனுலே கமலத் தழுக்கறுத்து
மன்னுன்குபோத முற்றுற்பெறலாஞ் சொர்க்க வாழ்பதியே (107)

## தாற்பரியம்.

அஷ்ஹதுக் கலிமாவில் பேர்பாதியாகியதும், பன்னிரண்டு அட்சரங்களையுடையதுமான லா-இ-லா-ஹ இல்லல்லாஹு என்பதில் முதல்வரும் நாலு அட்சரத்தைக் கழித்து அங்கிருக்கும் இணையான குபிரைவிலக்கி பின்வருகின்ற நாலு அட்சரத்தில் பிரிவினை இல்லாமல் உதித்திருக்கின்ற பூங்காவனத்தின் ஒரு மலராகிய ஹு என்னும் அட்சரத்தை நினைவுடன் கூட்டி இருதயத்தில் வந்து கூடிக் கிடக்கும் பல உபாதிகளான அழுக்குகளையும் சிறுகச் சிறுக கழுகினொண்டால் தடையில்லாமல் மரகத விமானமான பட்டணங்களையுடைய சுவர்க்க மண்டலம் சேர ஹேதுவாயிருக்கும். என்பது.

வலியான் திருவொளிக்குள்ளே யுயிர்கள் வளர்ந்துருவாய்
மெலியா வணக்க மறியாதநாளினில் மெலவன்றன்
கலிமாவை நெஞ்சிற்றவரும லொன்றெனக் காணவைத்தான்
சலியாதிருமணமேயி றசூலுண்டுந் காபரமே. (108)

## தாற்பரியம்.

வல்லமைப்பொருளாதிய அல்லாகுத் தஆலாவின் சிர்ருன ஒளிவுக்குள்ளே எல்லா ஜீவராசிகளும் புதைந்து கிடந்து ஜென்ம கிரஹங்களால் அவைகள், சரீரசக்தியடைந்து வளர்ந்தும் தன்னையறிகின்ற உபாயங்களை கண்டு வணங்கத்தெரியாமல் தவிக்கும்போது அந்த வொளிவுக்குரியவன் தன்கலிமாவின் சூட்சத்தை யறியும்படியாக தன் றசூலை யனுப்பி அறியவைத்தான் ஆனபடியாலே ஏ! மனமே நீ ஒன்றும் விசனப்படாதே. நமது றசூல் நாயகம் இருக்கிறார்கள். தாபர வஸ்துவாக என்பது,

வலியான் பொருளை யுணராதமாந்தர் வணக்கமொன்று,
பலியாது நாளைப்பகையாகு மென்றிறை பாழுடம்பின்
கலிமாவிளக்கின் சுடர்நான்கிலொன்றைக் காட்டிவைத்தான்
சலியாதிருமனமேயி றசூலுண்டுந் தாபரமே. (109)

### தாற்பரியம்.

வல்லமைபெற்ற அந்தப்பொருளைத் தெரிந்துக் கொள்ளாத ஜனங்கள் வணங்கின்ற வணக்க மொன்றும் பலியாது அதுவே மேலைக்குக்கடினமான சாட்சியாய் வந்துநின்று எதிர்க்கும் என்று கிருபையுள்ள றகுமானுகிய ஆண்டவன் நமது சரீரத்தின் கண்ணே மூலமந்திரமான கலிமாவின் நான்குமணி விளக்குகளையும் கொளுத்திப் பிரகாசிக்கும்படியாகச் செய்திருக்கிருன். அதிலொன்றைக் கெட்டி யாகப் பிடித்துக்கொள்ளும்படியாகவும் வேதங்களில் தெளிவாக அறிவித்தான் ஆனதினுல் மனமே நீ விசனிக்காதே றசூலுல்லாஹி அவர்களின் தாபரமான துணையிருக்கிறது. என்பது.

வலியான் றிருவுளத்தாலே யெழுந்தவகி யெழுத்தைக்
கலிமாவினுலு ஹறுபி லொன்ருனதைக் கண்டறிய
மெலியாதிறை வனருளால் மனத்தை விளக்கி வைத்தான்
சலியாதிருமனமேயி றசூலுண்டுந் தாபரமே. (110)

### தாற்பரியம்.

அல்லாகுத் தஆலா தன் திருவுளப் பொருத்தத்தைக்கொண்டு தன் திவ்யதீர்க்கதரிசியான நமது நபிகள் பெருமானூர் அவர்களுக்கு இறக்கிவைத்த வஹிகளில் தன் மர்மத்தையும் கலிமாவில் நுழைத் தான். அதை மிஃருஜியில் தன்மடஷூிக்கைவரவழைத்துப் பேசின ரகசியம் பன்னிரண்டாயிரம் சங்கதிகளில் ஒன்ருக சம்பாஷித்தான் அப்போது நால் அட்சரத்தில் ஒன்று என்ருன். ஆனதால் அந்த ஒன்றைப் பகிரங்கமாய்ச் சொல்பவர்கள் பாவியாவார்கள். ரகசியத் திலோ அதைத் தெரிந்துகொள்வதற்கு அனேகம் துறைகளை ஏற்படுத் தியிருக்கிருன் ஆனபடியால் ஏ மனமே! நீயொன்றுக்கும் அஞ்சாதே நமது ரசூல்நாயகம் நல்ல துணையாக இருக்கிருர்கள். என்பது.

அலிபா யெழுந்துயி ரெல்லாம் நிரைந்தண்டரண்டமெல்லாம்
மலியா வெழுபத்தோடெழாக வைத்தனன் வஞ்சகமறக்
கலிமாப் பொருளதை நாலாங்கறுபினிற் காட்டிவைத்தான்
சலியா திருமனமேயி றசூலுண்டுந் தாபரமே. (111)



### தாற்பரியம்.

அலிபாய் எழுந்துநின்ற பரமபொருளானது அண்டரண்டங்க ளான உபாதிகளிலுள்ள ஜீவ கோடிகளுள்ளும் பூரணமயமாக நிறைந்து அப்பால் அதை எழுபத்தேழு தத்துவ அட்சரங்களாகப் பிரித்து எழுபத்தேழு கூட்டங்களைப் பிரித்து விட்டு, தான் அவை களில் நாலே நாலு அட்சரங்களில் வந்து ஒளித்திருந்து ஞானவான் களான மௌனமுடையவர்களுக்குத் தெரியும்படியாயும் தன்னைக் காட்டிவிட்டான். ஆனபடியால் மனமே! நீ ஒன்றுக்கும் விசனிக்க வேண்டாம். நபியவர்களின் துணை நமக்கிருக்கின்றது. என்பது.

அலிபோடுலாமுந் திறல் ஹேயு மீமு மனுதி முன்னுள்
மெலிவான தாலில்விடுத் துரைத்தானதை விண்டறியக்
கலிமாவோடே கன்றிருநாமத்தேன்விட்டருந்தச்சொன்னுன்
சலியாதிருமனமேயி றசூலுண்டுந் தாபரமே (112)

### தாற்பரியம்.

அனுதி வஸ்துவாகிய அல்லா தன் ஹிக்மத்தைக் காட்டியிருக் கும் பரிசுத்த அச்சரங்களான. அலிபு. லாம். ஹே. மீம் என்னும் இந்நான்கு அட்சரங்களையும் முன்னமே தால் என்னும் அட்சரத் தில் வைத்துப் புதைத்திருந்தான். அதை அநேக யூகதந்திர உபா யத்தால் பகுத்தரியும் படியாக ஒரு அரும்பொருளான உபாய மும் சொன்னுன். எப்படியானுல் கலிமா என்கிற மாங்கனியில அவன் திருநாமமாகிய ஹூ. என்கிற தேவாமிர்தத் தேனைவிட்டு விரவிக்குடித்தால் அதுவே நீ நாணுகிறதற்குக் காரணமென்று காட்டியும் போட்டான். ஆனபடியால் ஏமனமே. உனக்குக்கவலை வேண்டாம் நமது நாயகம் றசூலுல்லாவுடைய துணையாயிருக்கிறது. என்பது.

வலி தானவைந்தெழுத்தட் சரமாதி வடிவென்றுன்னி
மெலியா மலாறுநூ ருயிரங்கோடி விண்ணோருரைத்த
கலிமாவினுல் மனக் கண்ணுடியைச் சிக்கலாடச்சொன்னுன்
சலியாதிரு மனமேயி றசூலுண்டுந் தாபரமே. (113)

### தாற்பரியம்.

வல்லமைக்குரிய மேலே சொன்ன ஐந்து அட்சரங்களும் ஆதி யின் சொரூபம் என்று தீர்மானித்து அல்லாவுடைய ஆறு நூருயி

ரங்கோடி மலக்குகளும் சொன்னதாகிய பரிசுத்தமந்திரமான அஷ்ஹது கலிமாவைக்கொண்டு இருதய இருளை ஒதுக்கிக் கண்ணுடியில் முகம் பார்ப்பதுபோல் தன்னைப்பார்த்து சந்தேகந்தெளிந்துக் கொள்ளுங்கள். என்று மிஃருஜியில் றப்புசொல்லி யிருப்பதாலே ஏ மனமே, இனி நீவிசனப்படவேண்டாம். நமது றசூல் நாயகபதுணை யாக இருக்கிருர்கள். என்பது.

அலிபாயெழுந்திடு முன்னே யுதித்திடு மட்சரத்தில்
வலிதாயிருந்த ஹறுபேதென்றுன்மனக் கண்டிறந்து
கலிமாப்பொருளைக் கமலத்துள்ளே பயிராக்கச்சொன்னுன்
சலியாதிருமனமேயி றசூலுண்டுந் தாபரமே. (114)

## தாற்பரியம்.

ஏமனமே! ஏன் விசனப்படுகிருய்? பதினெண்ணுயிரம் ஆலங்களும் அலிபுக் குள்ளிருந்து உற்பத்தியாகும் முன்னமே. தனியே எழுந்து நின்ற அட்சரம் ஒன்றிருக்கிறது. அதன்பேர் (நுக்கத்து) எனறறிந்துக் கொள் அதன் சிபத்து எது? என்று மனக்கண் திறந்து அறிந்து அத்துடன் கலிமாவின் உள்ளதாற் பரியவஸ்துவை இருதய நிலத்தில் இட்டுப் பயிர்செய்து ஆதாய ஊதியம் பெற்றுக்கொள்ளுபபடியாக ஆண்டவன் சொல்லியிருப்பதனுலே நபது றசூல் நாயகம துணையிருப்பார்கள், என்றறிந்துகொள். என்பது.

அலிபானதுக்குளடங்கலு மாயிற்றென் றன்புகொண்டே
மெலிவாயிறை வனருள் ஞானம் பெற்று வினைகளறக்
கலிமாவை மூலக்கருத்தா லெழுப்பிப்பின் கண்டறியக
சலியாதிரு மனமேயி றசூலுண்டுந் தாபரமே (115)

## தாற்பரியம்.

ஏஞான பாதையில் உழைத்துவருகின்ற எனது நன்மையான நெஞ்சமே! அலிபு என்ற ஏகாட்சரத்தில் தான் ஸமஸ்த உலககோடிகளும் உற்பத்தயாயிற்று, என்று ஆசைவைத்து உருகி அல்லாகுத்தஆலாவின் தஜல்லியாத்து என்னும் திரு அருளைப் பெற்று நான், அவன். என்கிற இருவினைகள் இல்லாமல் மூலக்கருத்தென்கிற நாட்டத்தில் இல்லல்லாஹு என்னும் கலிமாவை வைத்து எழுப்பி அப்பால் உன்னை நீ இன்னவஸ்துதான என்று திட்டமாய்க கண்டு



கொள்ளும்படி முயற்சிசெய்ய சடைந்து விடாதே. உனக்கு றசூல் நாயகத்தின் தாபரமான துணையுண்டாகும் இது நிச்சயம் என்பது.

உப்பிட்டுப் பூட்டி யுணர் விட்டுத் தாளிட்டு உள்ளுயிரி
னப்பிட்டு வைத்த தறிந்திலனேயஞ் சிலொன்றதனைத்
தபபிட்டெடுத்துயர் ஞானச்சுட ரெழுந்தாமரையிற்
செப்பிட்டிருக்கின்ற கண்ணுடி வட்டந் தெரிசித்ததே. (116)

## தாற்பரியம்.

இந்த மாநுட சரீரத்தில் பூதக் கிருத்தியங்களை அதிகாரம் பண்ணச்செய்து, உப்பு, சைப்பு, கசப்பு என்கிற முப்பூவையும்வைத்துப்பூட்டி அதுடன் அறிவென்கின்ற இராஜ கருவியை அடைத்து தாட்பாள் போட்டு அதற்குள்ளே ஜீவன் என்கிற ஆத்மாவை நடக்கச்செய்து அதின் மர்மத்தில் தானும் இன்பமுடன் விழுகிருன் என்கிற மகா ரகசியத்தை அறியாதவனுக சிலவயதை வீணுகக் கழித்தேன். அப்பால் என் நல்விதி வசத்தால் கலிமாவில் இருக்கின்றன ஐந்துஎழுத் தில் ஒரு எழுத்தைத் தீர்ச்சையாய்த் தெரிந்தவனுன பின்னர் உயர்த் தியாகிய ஞான ஷுஹூதின் பிரகாசமானது உதயஞ் செய்கின்ற இருதயத் தாமரைமலரானது பளீரென்று இதழ் விரிந்து அங்கு மரகதரத்னங் செப்பின் கண்ணே இருந்து பதினைலு லோகமும் பராபரித்துக் காப்பாற்றுகின்ற றப்பாகிய தத்துவ அநாதியைக் கண்ணுடிக்குள் முகம் பார்ப்பதுபோல் தெரிசனை செய்தேன். என்பது.

## விருத்தம்.

போதமிலாவகை யாக நடந்து புலம்பிய மூடர்களே
வேதமெலாநீ ரறிந்து தெளிந்து விளம்பிய தெப்படியாம்
ஆகமிலாத தனத்றை யறிந்தவ னுதளியிட்டளவே
யேது மிலானையறி தொடர்ந்திடிலெப்பொருளுந்தவமே (117)

## தாற்பரியம்.

ஈடேற்றம் பெறக்கூடியநுட்ப அறிவில்லாமல் பிதற்றிக்கொண்டு திரிகின்ற மூடப் புத்தியுடைய ஜங்களே! நீங்கள் வேதசாஸ்திரங்களை அறிந்து அதன்படி வெள்ளிடை யாயிருக்கின்ற மாதிரியானது எப்படியாலுல் ஒரு வியாபாரி யானவன் தன் கைமுதல்

கொண்டுசரக்கைத் தெறியாதவனாக ஏறினவிலையில் கொள்முதல் செய்து அந்தசரக்கை முதலுக்குப் பேர்பாதியாக விற்று நஷ்டப்பட்டுக் கைமுதலையும் தின்று ஒன்றுமில்லாதவனாக கைசேதப்படுவதுபோலாக இருக்கின்றது. ஆனதினால் அந்த வீணான பாதையை விட்டு றப்புடைய மஅரிபாவை ஆசித்து ஞானத்துறையைப் பிடித்து நடப்பீர்களாகில் உங்களுக்கு எவ்விதமான அபுருபமான அறிதான பொருளும் நினைக்குமுன் வந்து கைகூடும். என்பது.

### வெண்பா.

ஆரணத்தீ னூடே யடங்கா தகப் பொருளின்
காரணத்தா லஞ்செழுத்தைக் கண்டிருப்பார்—பூரணமா
யோரெழுத்தி லுற்றவறி வாநந்த வெள்ளத்தின்
நேரெழுத்தாயெங்கும் நிறைந்து (118)

### தாற்பரியம்.

அ, என்று தொனிக்கின்ற அலிபானது, அறபிபாஷையிலுண்டான அட்சரங்களிலெல்லாம் உயிராக நின்று மற்ற எல்லாப் பாஷைகளிலும் பரந்து வேரோடி, உலகமெல்லாம் பேசக்கூடிய எத்தனையோ மொழிகளுக்கும் தாய்க் கருவியாய்க் கலந்து கிடப்பது போல. வேதங்களடங்கலும் நின்று கலிமாவிலுள்ள அகமியமான பஞ்சாட்சரங்களாகிய ஐந்து எழுத்துகளையும் அறிந்துகண்டவர்களான நாதாக்கள். மேற்கூறிய அந்த அலிபைப்போல் உலக கோடிகளி லுண்டான ஜீவராசிகள் தோறும் பூரணமாகங் கலந்தவர்களாக ஆநந்த வெள்ளப் பெருக்கில் மிதந்து இருப்பார்கள். என்பது.

ஒளியிலொளியாகு மோரெழுத்தும் பேரெழுத்தாம்
வெளியில் வெளியாகு மெய்ஞ்ஞானம்—தெளிவதனா
லங்கமது பார்த்தறி வுற்றசிவானந்த
மெங் நம் வடிவாயிலங்கு மே. (119)

### தாற்பரியம்.

நூறுல் முகம்மதியா என்கிற உலககாரண ஜோதிக்கும் காரண காரியமாக இருந்த சிற்றுல்லா என்னும மர்ம ஒளிவாக இருக்கின்றஹூ, என்னும் அந்த ஒரு எழுத்தானது. பெரிய எழுத்தான



உஜூது முத்தலக்கான நாட்டத்துக் குள்ளிருந்து வெளியாகுவதானது. அறிவாகிய ஞானம். என்று இவ்விதம் ஒழுங்குபோல் சந்தேக மற்றுத் தெளிந்துகொண்டால் சரீரத்தில் அநேகப் பட்டணங்களை அடக்கியேக ஆட்சிபுரிகின்ற ஆத்மா என்னும் ஆநந்த பிரகாச சொரூபமானது, உன்னிடத்தில் வந்துரஹித்து உன் பார்வைக்கெல்லாம் வெளிச்சங் கொடுக்கும். என்பது.

சத்தி வருத்தாதே தானவனே வீடாத்திருக்கச்
சுத்திவருத்து சுகம் பாராதே—பத்தியொழிந்
தின்பத்தை நாடாதே யேகன் பிரகாசிப்பன்
ஐம்பத்தோ ரட்சரத் தடங்கு. (120)

### தாற்பரியம்.

தானவனாகிய தன்னோடும் தான் விரவிக் கொள்ளுகிறதற்கு நேரிடுகின்ற அநேக கஷ்டங்களைக் கவனித்து சோம்பேறித் தனமாகப் பின்கால் வெட்டாதே! உன்னைக் கடைசியில் கைசேத வாளனாக விட்டு வேடிக்கைப் பார்க்கும் மோசக்காரனான சரீரத்திற்கு சுகம் வேண்டும் என்று பிரயத்தனங்கள் செய்யாதே! கதிர் முனையில் வைத்த நினைவை விட்டு விட்டு உலக பராக்கில் வராதே - ஐம்பத்தொரு அட்சர வீடாகிய உன் பரிசுத்தமான நினைவுக்குள்ளே நினைவாய் அடைபட்டு உன்னையில்லை ஒன்கிற வரையில் பனாவாக்கிவிடு. அப்பால் ஏகாம்பர சுயஜோதியின் நடன உல்லாசங்கள் பார்த்து மகிழ்ந்திருப்பாய்? என்பது.

உத்தமனைத் தேடி யுழன்று தவஞ் செய்தாலும்
எத்தவத்தி லென்று மனமேருதே—சித்திபல
தேசிகனை நாடாதே செல்வத்தைப் பாராதே
யாசையுதவா தழுந்து. (121)

### தாற்பரியம்.

உண்மையான அந்தப் பொருளை சரீரத்திலன்றி பொய்களை விரித்திருக்கும் இந்த மருட்சியான உலகத்தில் அலைந்து, தேடாதே இன்னும் என்னவிதம் தவம் செய்கிறது! என்று சந்தேகப் பட்டுப் போகாதே அது உன்னைக் கொன்று விடும். மை, மாயம், மந்திரங்கள் செய்து வாயாடிக்கொண்டிருக்கும் குருமார்களான பணப்பேய்களைத்

தொடராதே 2÷3 குருமார்களிடத்தில் கண்ட உபதேசமெல்லாங் கேட்டு மருண்டு முரீது பெருதே. அது உன்னை சந்தேகம் என்கிற கிடங்கில் தள்ளிவிடும். இன்னும் உலகத்தில் இத்தனை யாயிரம், இத்தனை லட்சம் பணங்கள் நமக்கிருக்கின்றதே! என்று பேரெண்ணங் கொண்டு மருளாதே. நீ சாகும்போது அந்தப்பணங்களில ஒருகாசம் உன்கைக்கு வந்து எட்டாமல் பறந்துவிடும்! அந்த நேரத்தில் நீ ஏமாளியாய்ப் போவாய். இன்னும் ஆஹா இப்பேர்ப்பட்ட அழகிய வாலிப ஸ்திரீயின் அருமையான சம்போக சுகத்தை விட்டும் விலக வேண்டி வருகிறதே என்று மனக்கோழைபட்டு மருளாதே. அந்த அற்பசுகம் உனக்கு இடையிலேயே மாறிவிடும் மேலும் சரீர சுகமில்லாதவனுக நீ இருக்கும்போது உனக்கு உதவாமல் விலகி விடும். மீறி நடந்தால் அதுவே உனக்குப் பகையான நஞ்சாகி உன்னைக் கொன்று விடும். இதைப் புத்தியில் யூன்றிப் பார்த்து றப்புடைய சதா வாழ்வான ஞானவான்களின் சேனையில் வந்து, சேர்ந்து தப்பித்துக்கொள் என்பது.

கோன்கண்ட ஞானக் குருவருள் வரப்பொருளை
நான்கண்டே னென்று நவிலாதே — ஏனென்ருல்
வெண்கலத்தி னுைசைவெகுவாய் முழங்கும்பைம்
பொன்கலத்தி னுைசைப் பொருள். (122)

## தாற்பரியம்.

நீ எத்தனை எத்தனையோ கோடிகாலம் செய்து வரம் வாங்கி வந்த அதிஷ்ட வசத்தால் உனக்குக் கிடைத்த ஞானப் பொருளை நான் அறிந்தேன் நான் கண்டுகொண்டேன் என்று அறியாத பாமர ஜனங்களிடத்தில் சொலலிக்கொண்டு திரியாதே! அதனுலே உன் கண்யமானது றப்பின் சமூகத்தில் மிக்க குறைந்ததாகக் காணப்படும். ஏனென்று கேட்டால் விலை மிகவும் குறைந்த பித்தளை வெண்கல பாத்திரத்தைத் தட்டினுல் அதிகமாய் சப்திக்கும். உயர்த்தியான விலையையுடைய அபரஞ்சியான தங்கத்தைப் பாத்திர மாகச் செய்து தட்டினுல் அதனிடத்தில் சப்தமில்லா மலிருக்கும். ஆனபடியால் மௌனமாக இருக்கும் ஞானிகளிடத்தில்தான் பொருள் இருக்கும் என்று அறிந்துகொள். என்பது.



அரிய பெருமபொருளை யாரறிவா ரம்புவியிற்
பெரியோ ரறிவரெனப் பேசிவிடு—சிறியவனுன்
செப்புவார் முன்சென்று சிந்தை தனிலத்தனையு
மொப்புறவோடுற்றேனென்ருேது. (123)

## தாற்பரியம்.

உன்னிடம் வந்து யாராவது மஅரிபாவைப்பற்றி கேட்பார் களானுல். அப்பப்பா!! அரிதான யாருக்கும் எட்டாத பெரிய பொருளான அந்த வஸ்துவை இந்த மாய உலகத்தில் யார்காணும் அறிவார்கள்? மண்,பெண்,பொன், என்னும் மூவாசையும் இல்லாமல் தனித்திருக்கும் ஔிமார்களான மஹாத்மாக்கள் உணர்ந்திருப் பார்கள். அவர்களிடம் கேட்டால் சொல்லுவார்களே அன்றி சிறிய அடிமையான நான் அப்பேர்ப்பட்ட நாதாக்கள் ஏதாகிலும் சென்ருல் மனதின் கண் பதியவைத்துக் கொள்ளலாமென்ற ஆசை யுள்ளவனுக அலைகிறேன். என்னிடம் என்ன பசையிருக்கிறதென்று ஒரேவார்த்தையாகச் சொல்லிவிடு என்பது,

## விருத்தம்.

வாசிவாஹு‴வாவென்ருேதிமலரும் வாயு வானதை
நாசிகாது வாயடைத்து நானறிந்த மந்திரம்
ஊசிவாயுள்ளாக வோடி மூல நாடி யூடுபோய்
ஆசிவாய சோதிவட்டமாக நின்றுலாவுமே. (124)

## தாற்பரியம்.

வாசிவா ஹு‴வா என்னும் பஞ்சாட்சரத்தின் மந்திரத்தைச் சொல்லி இருதயமலத்தில்வந்து விரிந்தோடுகின்ற உதானவாயுவை ஐம்புலன் களையும் அடைத்து அந்த மந்திரத்தை நான் அறிந் தேன். அது எவ்விதமென்ருல், மிர்துவான ஊசியின் துவாரத் தில் நூலையடைப்பதுபோல் மூல நாடியின் நடுவே அந்தவயுவைச் செல்ல விட்டவுடன் அது அநேக பாக்கியமான பிரகாசத்துடன் என் சரீரமெல்லாங்குலாவி நின்று பூரணமாக இலங்கிற்று. என்பது.

(வேறு)

இருளிலோர் பொருளிருந்தால் யாவரும் காணுர்கண்ணி
லுருகு மெய்விளக்கதாக்கி றூகினை நெய்யதாக்கிப்
பொருளினைக் கனலாய்ப்பற்றிப் புத்தியைத் திரியதாக்கி
ருளின் மேற கொளுத்திப் பார்த்தாலனைத்தையுங் காணலாமே.

## தாற்பரியம்.

ஞானத்தைப்பற்றி விசாரணை பண்ணவந்த ஆண்பிள்ளை மகனே! நீ உன்னைக்கண்டு கொள்ள இன்னொரு உபாயம் சொல்லுகிறேன் கேள். ஒருவஸ்தை இருட்டுக்குள்ளே வைத்து விட்டுத் தேடினால் அது அகப்படாது. ஒரு விளக்கைக்கொளுத்திப்பார்த்தால் அது இருக்கிற இடம் தெரிந்து, இலகுவாக அதை எடுத்துக் கொள்ளலாம். அதுபோல உன் இருதயதாமரையில் அமர்ந்திருக்கிற றப்பை; உலக விகாரமான கெட்ட எண்ணங்களால் செய்திருக்கும் பெரும்பாவ சிறுபாவ இருட்டை உன் இருதயத்தைச் சூழ வைத்துக்கொண்டு நீ காணப்போனால் அது வீண் காரியம். பின்னர் அறியும் விதம் எப்படியானால் நீ அந்த றப்பிடத்தில் வைக்கும் அன்பால் உன் சரீரத்தை உருக்கி அதைக் குத்துவிளக்காக்கி அதன் பேரில் பிரயாசை யெடுத்துயெடுத்து வருகின்ற ஆத்மாவை எண்ணெய்யாக்கி, வைராக்கியம் என்கிற கூர்மையான அறிவை திரியாக்கி, ஒன்றிலும் போய்ச் செல்லாத நினைவை நெருப்பாக்கி, கலிமாவிலுள்ள நாலெழுத்தில் ஒன்ருகிய அருளின்மேலே கொளுத்திக் கொண்டு பார்ப்பாயாகில் அப்போது உன்னைக் கண்டு கொண்டதும் அல்லாமல் உன்னிலேயே உலகமெல்லாவற்றையும் காண்பாய், என்பது.

தனியனை நிகரில்லானைச் சரியிணை யற்றதீனை
மணிதிரண் டொளியாய் நல்லோர் மனதினிலுறைகின்ருனைக்
கனியினு மினிய சொல்லாற் கசடறத்துறை வோர்க்கென்றுந்
தொனியெழுந்தருள் சிங்காரச்சுட ரொளிகாணுந்தானே.

## தாற்பரியம்.

தனித்திருக்கும் றப்பை. தனக்கு எந்தவஸ்துவும் சரிசமானமென்று ஒரு விதத்திலு மில்லாத அபுரூப வஸ்துவை. தெளிந்து வடித்த திருமணிபோல் பிரகாசம் பண்ணுகின்ற தெய்வீகமான அந்த வொளிவாக நல்லவர்களான ஞானவான்களின் இருதயப் பட்டணத்தில் வீற்றிருந்து ஆட்சி புரிகின்ற தத்துவகாரண காரியத்தை, தேவாமிர்தத்திலும் அதிக இனிப்பான கனியாகிய கலிமா என்ற மணிமந்திரத்தால் பாவ இருளையொதுக்கி அறிந்த நாதாக்க



ப்பட்டத்தில் ஹூ என்றவலம் புரிசச்சங்கின் ஓசையாகத் தொனித்து அருளான அலங்கார ஒளிவானதுவந்து குலாவி பளிரென்று வீசும் என்பது,

வெண்பா

ஞானத்தெளிவுளத்தி னந்தியைக்கண் டாலொழியத்
தேனற் றுறைதெளி யாதெனவே—யானத்தோர்
ஆதமுஞ் சொன்னாகுமது றசூலுகுரு
நாதருஞ் சொன்னார் நமக்கு, (127)

ஞானமாகிய கலிமாவை அறிந்து இருதயத்தின் வட்டமான கமலத்தின் கண்ணேறப்புடைய ஒளிவைத்தரிசனையாகக்கண்டாலே அல்லாமல் இந்த சரீரத்தைக் காப்பாற்றி ஈடேற்றம்பெற எவருக்கும் முடியாத காரியம்? என்று நமக்கு ஆதி பிதாவாகிய பாவா ஆதம் நபியவர்களும் நமது ஸர்வலோக ஜகத்குருவாகிய முகம்மது நபியவர்களும் உறுதியாகச் சொல்லி விட்டார்கள், என்பது.

மணத்துக்கும் நாவிலுற்ற வாக்கிரண்டுக் கிடையோ
ரினத்துக்கு மொட்டா திருப்பவனை—நினைத்துப்போய்க்
காட்டிலே தேடினுற் காணுதுகாணுமுடல்
வீட்டிலே தேடாய் விரைந்து (128)

## தாற்பரியம்.

இருதயத்திற்கும், வாயில் அடங்கியிருக்கும் நடுநாவுக்கும்' சுழிமுனை சுவாசக் குழாய்கள் இரண்டுக்கும் அப்பாலுள்ள மூளை, உச்சி புலன்கள் முதலான ஸமஸ்தத்திற்கும், எட்டாமல் தூரந் தூரமாக இருக்கும் றப்பென்னும் அற்புத வடிவத்தை யாது பண்ணி நினைத்துக்கொண்டு காடுகள் மலை செபிகளிற் போயிருந்து தேடினால் அப்படாது. அப்படி காடுமலைகளிலிருந்து தேடின போதைக்கும் சரீரத்தை ஆராய்ச்சி செய்து மனமென்ற மாளிகைக் குள்ளே நினைவை விட்டுத் தேடினால்தான் அகப்படும். ஆனதினால் அதளவில் போபோ விரைந்து போ, என்பது.

உள்ளெழுத்தை யோதறியா மூடரே யூமைகண்ட
வெள்ளெழுத்தைப் போல விளம்புகிறீர்—வெள்ளெழுத்தை

மாற்றிப் பீடிக்க வகையறியா மாந்தர் செய
லாற்றிற் கரைத்த புளியரம். (129)

## தாற்பரியம்.

ஸமஸ்த உலகங்களுக்கும் உண்மையான நேசனுகிய கலிமாவின் உயிர் அட்சரமாகிய ஹூ என்கிறதத்துவ வஸ்துவை உணரமாச்சல்பட்டு பேயன் பைத்தியகாரன்கள்போல் திரிகின்ற ஏமாளி ஜனங்களே! ஐயோ! உங்கள் மூடத்தனத்தை நான் என்ன சொல்வேன்—ஊமையரனவன் கனவுகண்ட விதமாக நீங்கள் மரண நேரத்தில் வாயடைபட்டு பறக்க பறக்க முழிப்பீர்கள். ஜாக்கிரதை? வெள்ளெழுத்தாகிய விந்து நாதத்தினுல் வெளிவந்திருக்கிற இந்த சரீரத்தை நீங்கள் வந்தவழியாகத் திருப்பிவிட வேண்டும். அதற்கு ஞானவான்களான நாதாக்களிடத்தில் உபாயங்க ளிருக்கின்றன. அப்படிச் செய்யாமல் விளையாட்டிலும், வீணிலும் உங்கள் காலங்களைக் கழிப்பீர்களாளுல் உங்கள் தொழுகை வணக்க முதலான யாவும் கடைசி நேரத்தில் பெரிய பிரமாதமான நதியில் ஒரு காசு புளியைக் கொண்டுபோய் கரைத்த மாதிரியாகப் பிரயோசன மில்லாமல் ஆய்விடும். என்பது.

விருத்தம்

பேறு பெற்றுள பேர்களுக்குரை பேசிவைத்த ரகத்துளே
யாறு நிற்றலு நீறுபட்டெழு மங்கி யென்றுரை செய்ய நாம்
வேறுபட்டுழல் மானிடர்க்கிதை விள்ளொணு தெனவுன்னி [னியே
யூறுமூச்செறி யுபாய முச்சுடர்கண்டு வுள்ளமகிழ்ந்ததே (130)

## தாற்பரியம்.

ஆனல் இந்த ஞானமானதை ஈடேற்றம் பெறக்கூடிய நல்லறிவுள்ள புத்திமான்களுக்கன்றி மற்றவர்களுக்குச் சொல்ல வரவில்லை. உஷ்ட்ண நாடியும், குளிர்மை நாடியும் ஒன்றுகூடும் தலத்தையறியாமல் வேறு வேறான சந்தேக மனதையுடைய ஈனஜனங்களுக்குச் சொல்லவே படாது. மூச்சுடரை அறிந்து. நினைப்பு நெருப்பு, அப்பு என்கிற முப்புவையும் அறிந்தவர்களுக்குச் சொல்லினுல் தான் அவர்கள் மகிழ்ச்சி யடைவார்கள், என்பது.



திரண்ட சிந்தை தெளிந்தொருண்மை தெளிந்தபின்னுரை [செய்யதா
னிருண்டநெஞ்சிலிருந்த தொன்றையிசைந்த தீனுக்கிரங்கியே
யருண்டபாவ மடைந்த நீங்களலைந்து வெந்நரகாளுமுன்
முரண்டசங்கி லெழுந்த தொன்றை யிசைந்த முயன்று தேடிக்
கொள்வீர்களே. (131)

## தாற்பரியம்.

இருளடைந்து மருண்டுபோய்க் கிடக்கும் மனதையுடைய உங்களுக்கு தீனை மனிதர் இப்படி கெட்டுப் போகிறீர்கள் என்று இரக்கம் வைத்துச் சொல்கிறேன், ஆனதால் மருட்சியான இந்த உலகத்திலுள்ள பாவப் பொதிகளைச் சுமக்கு அக்கினி சுவாலித்து எரிகின்ற நரகக் குழியில் போய்விழுந்து விடுகிறதற்கு முன்னமே பிரகாசம் பொருந்திய இருதயத்தில் வாழ்கின்ற அந்த பெரிய செல்வாக்கையுடைய உங்கள் தலைவனை யறிந்து மோட்சமடைந்து கொள்ளுங்கள். என்பது

வேறு

எம்பிரானுக வுள்ளத் தெழுந்துல குயிர் தட்கெல்லாந்
தம்பிரானுக நின்றதனியனைத் தப்பில்லாமல்
முன்பிரா னவனென்றோது மூலமந் திரத்தையுள்ளத்
தன்பினுலுணரவல்லோ ரனைத்தையுங் கரணலாமே. (132)

## தாற்பரியம்.

சகல ஜீவராசிகளையும் உற்பத்தி செய்து ரக்ஷிப்பவனுகிய காரிய காரண கர்த்தரவாக, ஒவ்வொரு இருதயங்களிலும் நின்று பிரகாசுக்கின்ற றப்பை, முதலரவதாக வந்து கையைப்பிடித்து கலிமாவின் அமிர்தமான மந்திரத்தைக் கொண்டு சுட்டிய காமிலான பீர் என்கிற கடவுளின் கிருபையைக் கொண்டு கண்டவர்கள் உலககோடிகளிலுள்ள மர்மங்கள் யாவையும் கண்டுகொள்ள வல்லவர்களாக இருப்பார்கள். என்பது.

உருவந்த மிலிவந்து றைந்திடு முளத்திற்
கருவித்து ஞுதனொளி கண்டவர்செய் பாவங்
குருதிந்தை பொய்காகங் கொலைகளவேர டைந்தா
மிவையின்றி மற்றுளவெ லாமிறைபொறுப்பான். (133)

## தாற்பரியம்.

இந்த பேயான சரீரத்தின் மரண உருவத்தைத் கட்டிக்கழிக்க உபாயந் தேடித்திரிகின்ற கெட்டிக்காரர்களான ஞானவான்களிடத்திலும் ஒரு கெட்டகருமம் இருக்கும். அதாவது, தத்துவ வழியைக் காட்டிக்கொடுத்த சற்குருவை நிந்தனை செய்கிறது, பொய் சொல்கிறது ஸ்திரீ ஜனுதிகள் பேரில் இச்சிக்கிறது * கொலை செய்கிறது, களவு செய்கிறது. இந்த ஐந்துந்தான் பஞ்ச பாதகம் என்கிறது. இவைகளைத்தான் றப்பு மன்னிக்கவே மாட்டான் என்று மேலோர்களான நாதாக்கள் சொன்ஞர்கள். என்பது.

பனிப்பகை பரப்புமொளி பற்றியசி ரத்தோ
டினிப்பது கசப்பது விருக்குமித யத்துள்
தனித்தவ லிறத்ததுச ரத்தை யுணர்வீரால்
மனித்தரறி யாதகதி வாழ்வுபெறு வீரே. (134)

## தாற்பரியம்.

மரண ஜன்னியாகிய பகைவனுனவன் உன் சிரமாகிய நினைவை வந்து பற்றுவதற்குள்ளே, இனிப்பு, கைப்பு, நெருப்பு, என்னும் மூன்று சுடரையுங் கொழுத்திவிட்டு சாமாகிய வாசிமேலே சவாரி செய்து உன்னை உணர்ச்சிசெய்து, கொண்டாயாகில் அப்போது மனிதர்கள் யாவராலும் பெறக்கூடாத உயர்ந்த பதவியைப் பெற்றுக் கொள்வாய். என்பது.

வானவர் வானு மலைகடல் லோகமற் றெவ்வுயுரு
மீனெடு பார்மின் ஞெளிபனி யாவுமூண் டாகுமுதற்
கோனெடு கோனவ னுண்டில்லை யென் னு . . ரிருளிற்
ருனவன் தானிருந்தானே ஒரு நுக்தா யுறைந்தே. (135)

## தாற்பரியம்.

வானலோகங்களும், அவற்றுள் நிரம்பி இருக்கின்ற வானவர்களும், இன்னும் பூமி, மலை, கடல், பாதாளம், நட்சத்திரம், மின், பனி முதலான சராசரங்களும், உண்டாவதற்கு முன தனக்குத் துணையாக யாதொரு வஸ்துமிலாதிருந்த அந்தக்கூரிய இருளிலே தான் உண்டுமென்ற அந்த நினைவானது, தானுகவே தன்னை

* கொலை செய்கிற தென்பது. எறும்புமுதலிய ஜெந்துக்களைக் கொல்லாமல் காருண்யமாக இருப்பது.



நாடிக் கொண்டிருந்தது. (நுக்தா) என்னும் ஓர் துப்புறவான நிலையில் அமர்ந்ததாக. என்பது.

துக்கத்துமங் கோரலி பாக நின்ற பின்னும் மிறையோன்
பக்கத்திலோரலிபா யெழுந்தே யுட்பாய்ந் தோரலிபால்
ஹக்கிந்த மூன்றுக்குமல்லா தெழுந்த தடங்கலுக்கு
நுக்கத்தாமாமலிபானது மூன்றுக்கும் வித்துமொன்றே (136)

## தாற்பரியம்.

யாதொரு பேச்சுமற்று மூச்சுமற்று இருந்த நுக்கத்திலிருந்த வடிவானது, மெதுவாக ஒரு அலிபாக நீண்டு, அ என்னும் தொனியைக் கொண்டு நின்று அதன்பின் அவ்வஸ்துவின் பக்கத்தில் முத்துலக் என்கின்ற அலிபு எழுந்தது. அவைரண்டும் ஒன்ருேடொன்று பின்னி யிரண்டுக்கும் நடுவே ஓர் அலிபு தோன்றிற்று. இந்த மூன்றுக்கும் தெறியாத வண்ணமாக ஹக்கன் தன் ஹிக்குமத்தை வெளியாக்க வேண்டி வெளியானுன். அகதியத் தென்ற பதவியில் ஹூ, என்று பூதங்களை நிர்மித்து நின்ருன், அந்த மூன்றில் ஒரு அலிபு அல்லா. மற்ருென்று அகுமது. மற்ருென்று ஆதம். இந்த மூன்று கருவிகளுக்கும் அசலான வித்தாக அந்த ஹூவானது நின்றது. என்பது.

வித்தொன் றுதித்து முளை மூன்று கொப்பு விரித்தெழுந்த
முத்தொன்று பச்சை பவள மொன்ருய் வரும் முச்சுடரைப்
பத்தென்று புத்தியிலாக்கி வைத்தோரக்குப் பரா நந்தியை
யெத்தெறடுந்து தொழுவார் றகுமத்து மெங்குமுண்டே.

## தாற்பரியம்.

இவ்விதம் அசலியத்தான றப்பென்கிற வித்தானது. முளைத்து ஒரு விருட்சமாகப் படர்ந்து அதில் மூன்று கொப்புகள் கிளையாக விரிந்தது அதிலொன்று முத்தாகவும், மற்ருென்று பச்சை மரகதமாகவும், மற்ருென்று பவளமாகவும், எழுந்தது. இந்த மூன்றுந்தான் முச்சுடரென்றது. இந்த மூன்று சிபத்தையும் பத்து அட்சரக் கணக்கிலடக்கிய தாத்தாக்கி ஒன்றுபடுத்தின நாதாக்களுக்கு என்றைக்கும் றகுமத்தானது சொரிந்துக் கொண்டிருக்கும் என்பது.

உண்டா முதலெழுத்துக்கு முன்னுக்கத் தொன்றுள்ளறிந்தா
ரென்ருலு மொன்றுக்கு மெட்டாதுயர் நுக்கத் தின்னதென்று
விண்டாம் லுள்ளத் தொலையாது காணந்த மெய்ப்பொருளைக்
கண்டாலுங் கண்ணுக்கு காணது மெய்க்கடன் காணுதற்கே. (138)

## தாற்பரியம்.

ஆனதினுல் அந்த சச்சிதானந்த சொருப அதீதமான நுக்கத்தைப் பற்றி பலபல ஷெய்குமார்கள் பலபல விதமாகச் சொன்னபோதிலும் அது வெகு தூரம் பேசும்படியானது, அதையறியவும், காணவும், யாருக்கு முடியாத காரியமானது, சரீரத்தின் அழுக்கைத் துடைத்த மெய்வாளர்கள் காண்பார்கள். என்பது.

காணுமெழுத்துக் கெல்லா முதலானது ஹக்கலிபென்
ருஞென்றறி வொன்றரு மணியொன்றறி வாலறிந்து
பேணு மெழுத்திதைத் தள்ளார்கள் பேரறிவாள ரென்றே
சேணிலடி யெனுரைத்தேன் றுவர்கந் தெறிந்தவர்க்கே. (139)

## தாற்பரியம்.

நாம் பேசக்கூடிய பாசைகளின் அட்சரங்களுக்கெல்லாம் முதன்மையானது, அலிபானதாக இருக்கிறது. அது மூன்று ஹறுபாகி ஒன்று ஆணும், ஒன்று பெண்ணும் அறிவுமாய் பிரிந்தது, இந்த துல்லிபமான இரகசியத்தை கூர்மையுள்ள புத்தியைக் கொண்டு அறிந்து இந்த மூன்று தத்துவ அட்சரங்களையும் உணர்ந்தவர்கள் பெரிய அறிவுடையவர்கள் என்று உலகத்தில் துவர்க்கத்தைத் தெரிந்தவர்களுக்கு நான் வெகு உறுதியாக சாட்சி சொல்கிறேன். என்பது.

துவற்க முதலெழுத் தாமுன் னிறைவெகு துல்லிபத்தோர்
தவக்க முறுந்துய ராசதமானதைத் தானறியா
ரியக்கமிலைத்தி தருதூக் கத்தி லொன்று வந்தெய்துமலி
பதற்கு முன்னுக்கத்தல்லா திலே வேறு மோரட்சரமே. (140)

## தாற்பரியம்.

இன்ஸானின் துவர்க்கத்திலிருந்து முடிவுவரையிலும் அலிபே நடத்தி வருகின்றது. துயரமும், இன்பமும் அலிபே அனுபவிக்கிறது. ஆனல் இன்ஸானில் ஒரு சிறிய உஜூது ஒன்றிருக்கிறது. அதாவது நித்திரையாக இருக்கும். தன்னை யறியப் போகும் ஞானி



யென்பவனுக்கு அவன் அந்த நித்திரையைப்பற்றி விசாரனை செய்வானுனல் அதுவே போதுமானதாக இருக்கிறது. அந்த நித்திரையில் உண்டான இரகசியத்திலும் அந்த அலிபே நின்று சர்வ தோற்றரவுகளையும் காட்டுகிறது ஆனபடியால் அந்த அலிபிற்கு முந்தின அட்சரம் ஒன்றுமே கிடையாது'. என்பது'

அட்சரமே நுமிலாதிறை யோனுறைந் தவ்விருளி
லுட்சிவஞானக்கண் ணுற்றுக்கமானபி னுள்ளத்திலோர்
பச்சை முத்தொடு பவள முங்கூட்டியே பாவித்திறை
தற்சுருவாகக்கண் ணுடிக்குளொன்று தலைப்படுமே' (141)

## தாற்பரியம்.

அட்சரங்களின் தொனிகள் ஒன்று மில்லாமல் ஏகப்பரவெளியாய் இருந்த கூறிய இருட்டில் றப்பு தனித்திருந்தவனை, இத்தனை தூரம் இழுத்து அவனிடம் இருந்த சுஜாகுக்களான இவ்வளவு வஸ்துக்களையும உலகத்தில் வெளியாக்கினதற்குக் காரணக்கருவியானதும் அந்த அலிபே அந்த அலிபின் நிறங்களான பச்சை, வெள்ளை, சிவப்பு, இவைகளை மூச்சுடராக்கி, பூதங்களை வெளியாக்கி அந்தப் பூதக்கிருத்தியங்களின் சிபத்தில் அந்த அலிபானது புகுந்து கொண்டது. அதன் மர்மச்செயலை இருதயம் என்கிற அற்புதக் கண்ணுடியைப் பார்க்கச் சக்தியாளர்கள் கண்டு மகிழ்வார்கள் என்பது.

தலைப்படு நற்கமலத் துள்ளிறைவனைத் தான்றெரிசித்
தலைப்படு நாமென் றறிவேறினு ரென்று ளச்சமெய்து
வுலைப்படுநாஞ் செய்த சூதொடு சூதுகண்டுள்ள மகிழ்ந்து
துலைப்படு மத்தைத் தெரிசிப் பனுகுந் துயரமற்றே. (142)

## தாற்பரியம்,

இவ்விதம் தனக்குத் தானே, வல்லபமாக இருக்கின்ற தலைமையான மூல வஸ்துவை இதருயத் தாமரையின் கண்ணேகண்டுதரிசனை பண்ணி விகாரப்பட்டுக் கிடந்த பாழான சரீரத்தை நாம் இல்லையென்று அறவே மறந்து, மகா சூதானத்திற்கும் சூதானமான தூரந் துலையாக நிற்தும் தன் அஸ்லான வஸ்துடன் கலந்து கொள்வதே துயரமில்லாத சதா ஆனந்தமானது. என்பது.

விருத்தம்

துயரங்கொண்டங்கிறைவன் சுய சொருபந் தெரிசனையுற்
றயரும் படியவனென் செய்வன துவும்மது செய்வன்
உயரும் மிறையுள்ளுரை யுள்ளுவந்தோத லொடுந்
தியரும் மிறையமு தும்மதுவதுவும் புகலரிதே. (143)

## தாற்பரியம்.

றப்புடைய தரிசனையைக் கண்டு கொள்ளாமல் துயரப்படுகின்ற உலகவாசிகளுக்கும் றப்பு அவரவர்கள் மன ஆழம்போல் கிருபை செய்வான். அது கொண்டு அவர்கள் உயர்ந்த பதவியடைவாரும் உண்டு. அல்லது இரெம்பவும் உலகத்தை விரும்பிக்கொண்ட பாதகச் செயலால் தாழ்ந்த பதவியடைந்து கெட்டுப் போவார்களும் அநேகம் கோடி ஜனங்கள் உண்டு. சொல்ல முடியாது. என்பது.

அதிருந்தொனி யெனவங்கிறையவனன் பிணை நோக்க
எதிருஞ் சுருபமதனுக் கிறையிடு மதுவென்
றதிரும்பணியிமையோர் நபியனைவோ ரொடுமொழிகள்
முதிரும் முலகுயிருக்கும் முறை முறை செய்திறையாமல். (144)

## தாற்பரியம்.

கதிர்முனைபோல் நினைவை நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கும் ஞானவான்களின் இருதயத்திலே. எப்பொழுதும் நீங்காத ஒரு வோசையானது முழங்கிக்கொண்டே இருக்கும். அந்த வோசையின் விளப்பமாவது அகுமதென்கிறதாக இருக்கும். அந்த வோசையைத் தருகிற பொருளாவது ஹூ என்ற வலம்புரிச் சங்காக இருக்கும். அந்தவலம் புரியானது ஆதியில் அந்த ஒளிவுக்கு அகுமது, என்று சொன்ன பிறகுதான் மற்றஎல்லாவஸ்துக்களும் சொல்லஆரம்பித்தன என்பது.

மால்கொண்டதிலே கென்றதை முகம்மதெனவோத
ஆவென்றதிலே நின்ற வனரிராசக விற்பனமுதற்
றேவென்றதிை லொன் றெடொன்றிசையுஞ் சிவமரகத்
தாலென்றதிலே நின்ற வன்ருஞக வெழுந்தான். (145)



## தாற்பரியம்.

இத்தனை செல்வ சுகஜீவியாக இருந்து முழங்குகிற வலம்புரி யானது. தன்னிடத்திருந்து, மர்மமாக அகுமதை வெளியாக்கி அந்த அகுமதில் நின்றும் முகம்மதாகிய வடிவை உற்பத்தி செய்து, இவ்விரண்டையும் ஆஷிசிக்கும் மஉஷூக்கும் மாகக் கலக்கச் செய்து அதன் தத்துவ கிருத்தியங்களைக் கொண்டு உலககோடிகளை சிருஷ்டித்து வெளிப்படுத்திற்று. என்பது.

விழுந்தாசை யாலிறையோ னென்னகும் தென்றபனி
விழுந்தாவி யெல்லாம் விளைந்தே—எழுந்தோசை
வேத மாவென்றே விளையுஞ் சடத்தின் குரு
ஆதமா மென்றேயறி. (146)

## தாற்பரியம்.

அப்படி வெளியாக்கின ரூறத்தான ஆதமிடவத்தில் தானும் ஒரு கோணத்தில் ஒளிமறைவாய் நின்றான். அப்படி நின்ற ஸ்தானத்தை இதோ! உடைத்துப் பேசுகிறேன். நினைவுடன் கலந்திருக்கின்ற மோகமாக இருக்கும். அந்த வெண்ணத்தால் தன் ஆஷிக்குக் காகவேண்டி இத்தனை பெரிய உலகங்களையும் படைத்தான். படைத்த உலகங்கள் மறுபடியும் தன்னையும், ஆஷிக்கையும் தெரிந்துகொள்ளட்டும் என்று தன் ஆஷிக்கை பலமுறையும் தன் தூதாகவும் அதற் கடையாளமாக தன் வேதத்தையும் கொடுத்தனுப்பினான். ஆனதால் சரீரத்தின் குருவானவர் ஆதம் என்றும், ஞானத்தின் குருவானவர் முகம்மதென்றும், அறிய வேண்டியது. என்பது.

கட்டளைக் கலித்துறை.

அந்தப்பெருந் தலத்துக்குள் நம் மாதி நின்ருஷிக்கிறைற்
சந்தப் பொருமொலி போலெங்குமா யொரு சத்தமெழ
வந்துற் றெழுமணிக்குள் ளேயுயிர்கள் வளர்ந்தவனைச்
சந்தித்துக்கண்டே யிறைஞ்சிடும் பேர்க்கொரு தாழ்வில்லையே.

## தாற்பரியம்.

அப்படிப்பட்ட பெருமையான இருதயத்துக்குள்ளே, நம்முடைய றப்பானவன் ஆஷிக்காகி நின்றுகொண்டு இனிமையான ராகங்கள் பாடிக் கொண்டிருக்கின்ற வல்லமையானவ னென்றும் ஒரு துளியான விந்து ஆனதில் இத்தனை உலகங்களையும், பூதங்களையும்,

அடைத்து தானும் அடைந்திருக்கிறான் என்று கண்டு பிடித்து சந்தித்துக் கொண்ட பெரிய மனுஷர்களுக்கு ஒரு குறைச்சலுங் கிடையாது. என்பது.

பொங்குங்கிருளைக் கடலுக்குளோ ரொளி பூரித்தெழுந்
தெங்கும் பெருஞ்சுடராய் நிறைந்தே நின்றிலங்குமதைப்
பங்கிட்டொரு மணிக்குள்ளே பலவும் படைத்திறையோன்
றங்கு மிடங்கண்டிறைஞ்சிடும் பேர்க்கொரு தாழ்வில்லையே.

## தாற்பரியம்.

அவ்விதம் பொங்கிய ஆஷிக்கான அலைமோதி யடிக்கின்ற சமுத்திரத்திற்குள்ளே ஒருவொளிவு பிரகாசித்து எழுந்து, உலகமெல்லாவற்றிலும் பெரிய ஞான வெளிச்சமாக நிரம்பி இரகசிய வழியாக நிற்கிற அந்தறப்பை ஷை நினைவானது, பலபல பங்குகளாகப் பிரித்து பல ஜீவராசிகளையும் படைத்திருக்கின்ற ஹிக்மத்தை பிடித்து அது இருக்கின்ற மூலஸ்தானத்தைக்கண்டு வணங்குகிறபெரிய மனுஷர்களுக்கு எப்பவும் குறைச்சல் கிடையாது. என்பது

சந்த விருத்தம்.

இல்லெனு மெழுத்து வந்திருக்கு மத்தலத்தையும்
அல்லிராப்பகலுமற்ற ரூபருமானஞ்
சொல்லுகின்ற நான்மறையுந் தோற்றமு மொடுக்கமும்
நல்ல வேத நூலினோர் நமக்குரைக்க வேண்டுமே. (149)

## தாற்பரியம்.

ஞானத்தின் வேர்தூறு எங்களிடம் இருக்கிறதென்று பிதற்றுகின்ற, வேதசாஸ்திரிகள், சரீரத்தில் இல் என்னும் அட்சரமானது, தொனித்தெழும்புகிற தானத்தையும், இரவென்பதும், பகலென்பதும், இல்லாமல் ஏக அகண்டமாய் இருக்கிற அருவருபமான ஸ்தலத்தையும், உலகத்தில் றசூல் மார்களுக்கென்று இறங்கின நாலுவேதங்களிலும் உள்ள ஆதியும், அந்தமும், இன்னதென்று அவர்கள் நமது முன்பாகச் சொல்ல வேண்டும். என்பது.

ஆதியோ வனாதியோ வனைத்துமாக நின்றது
சோதியோ நல்வேதமோ றசூலோ முன்னுதித்தது
பாதியிரவோ பகலோயோ நம்மிறைவன் யாவும் படைத்தது
[illegible] தெமக்கு விண்டுரைக்க வேண்டுமே. (150)



## தாற்பரியம்.

ஸமஸ்தவஸ்துக்களிலும் பூரணமாகக் கலந்து நிற்கிற றப்பானது ஆதியா? அல்லது அநாதியா? அந்தறப்பின் முன்பாக உதயஞ்செய்து பிரகாசித்த தானது. ஒளிவா? அல்லது 'வேதத்துடைய றசூலா? இந்தப்பூலோக முதலிய ஸமஸ்த கோடிகளும் படையுண்டது பாதியிரவையா? அல்லது, பகலையிலா? இதந் சந்தேகத்தை வேதசாஸ்திரிகளாக இருப்பவர்கள் கொஞ்சம் பெரிய மனசுபண்ணி சொல்லவேண்டும். என்பது,

வெண்பா.

மிக்கச்சிறியோர்க்கு மெல்லியர்க்கும் வீணருக்குஞ்
சற்குருவி னுபதேசம் சாற்றறிது—மக்கநபி
வாகா யெடுத்துறைத்தார் வான்பொருளைக் கண்டிறைஞ்சிச்
சாகாமற் செத்தவர்க்கே தான். (151)

## தாற்பரியம்.

அறிவுவராத மைனர்களான சிறிய குழந்தைகளுக்கும், காமத்தையுடைய ஸ்திரீகளுக்கும், பெரியவயதுள்ளவர்களாக இருந்தும் இகழ்ச்சியான பசாதுகளைச் செய்கின்ற வீணர்களான மூடஜனங்களுக்கும், காமிலான தன் குருமார்களின் அரிதான சமுகத்தில் சொல்லிதந்த உபதேசங்களின் இரகசியச்சொல்லைச்சொல்லிவிடாதே. அதையொருபோதும் அவர்கள் பத்திரப்படுத்த சக்தி யில்லாமல் உன்னை தூற்றுவார்கள். என்று தன்னைத்தான் கண்டு தன்நினைவை மறக்காதவர்களாகி உலக மயக்கத்திலும் அகப்படாமல் தப்பித்துக் கொண்ட மஹான்களான நாதாக்களுக்கு நமது நாயகம் ஸல்லல்லாகு அலைஹிவசல்லம் சயிக்கினை பண்ணிச் சொல்லியிருக்கிறார்கள் என்பது.

கட்டளைக் கலித்துறை

தானந்தவமுச் தனக்குபதேசித்த சற்குருவுந்
தேனின மிர்தமொழுகிய வாசமுந் தித்தியென்றே
கோனின்றருந் திருநடமான செங் கோலு மென்னுள்
யான்கண் டவனை டிசைந்தே னெந்தலங் காண்கிலனே. (152)

### தாற்பரியம்.

தருமச்செயல்களும், வணக்கங்களும், அற்புதமாகவந்து ஞான முரீது கொடுத்த காமிலான ஷெய்குமார்களும், தேனைப்போல் அமிர்தனமானதாகவும், பரிமளவாசனையாகவும், இருக்கவும், அவனோடுநான் கலந்து இருந்து செங்கோல் கட்டியாளவும், ஒரு ஸ்தலத்தை என்ஷுஹுதுடைய மகாமில் கண்டேன். அதை இப்போது காண்கமுடியவில்லை. என்பது.

### விருத்தம்.

காற்றுதமுநரகஞ்செறி கனலாதமும் வேங்கை
நீத்தாதமு மயிலாம் நிறமண்ணுதமும்வெள்ளை
ஆத்தான வெளிக்குள் விளைந்தவனுதமு மிருளாம்
பார்த்தா லிவையஞ்சும் மிறைபாதந் தருமுத்தாம் (153)

### தாற்பரியம்.

காற்றுஎன்கிற அலிபான ஆதமும், நரகமான நெருப்பான ஆதம் புலி, மனுஷ வடிவமான ஆதம், மயில் படர்ந்த பூலோகமாக மண்ணுடைய பங்கில்வந்த ஆதமானது, விந்து, கல்ஷுல் மக்பியா என்கிற புதையலில் இருந்த நினைவு என்கிற ஆதமானது, இருள். இந்த ஐந்தும் றப்புடைய உருவத்தைக் காட்டுகின்ற முத்தான வித்தாக இருக்கும். என்பது.

முத்தானதுக் கஞ்சாயுள்ள முகத்துக் கிருவிழியாம்
பத்தான் விழிக்கே யெழுபார்வைக் கொருருப
மெத்தா லிறைசெய்தா னிறையென்றே யெவருக்குஞ்
சற்றுகிலும் போசத்தகுமற்றுனவ னென்றார் (154)

### தாற்பரியம்.

முத்து உடைய தத்துவத்தில் நின்று ஐந்து தந்துவாதிகளைக் கொண்டு முகத்தில் ஐந்து பட்டணங்களைப்படைத்து அவைகளில் இருகண் என்கிற பட்டணத்தில் எல்லா அதிகாரங்களையும் வைத்து ஆட்சிபுரிந்தான். இந்த மர்மமான வேலை எப்படி உற்பத்திசெய்யப்பட்டது என்று ஞானிகளுக்கன்றி சாதாரண ஜனங்களுக்கெல்லாம் சத்தியமாகப் பேசவேபடாது என்பது.



### கட்டளைக் கலித்துறை

ஆதியலி பங்கனுதி நுக்சத் தென்றரு ளிறையோன்
சோதியொளி வந்து நாதனென்றே யின்னஞ் சொல்லுவன்
ஆதியொளிநற் பவளமனுதி யமுத பச்சை [கேள்
சோதியொளி வெண்ட ரளமதாய் வந்து தோற்றிடுமே (155)

### தாற்பரியம்.

உலகத்தை சிருஷ்டித்த மூலஸ்தானமான அலிபானது, நுக்கத்திலிருந்தது. அலிபில் நாதனுனவஸ்து கோலங்கொண்டது. அந்தநாதத்துக்குள். பவளமும், பச்சையும், இருந்தது. இவையிரண்டுக்குள்ளே வெண்மையான முத்து வெளியாச்சுது, முத்து முகம்மது பவளம், ஆதம், பச்சை, முஹய்யத்தீன் என்று முச்சுடரின் கோலம் அறியவேண்டியது. என்பது.

தொற்றுநம் மாதியைத் தாயெனலாந் துய்ய சுடப்விரிந்து
காற்றெழுஞ் சீவனுதியென் றெங்குங் கலந்துருவாய்
ஆற்றெழுஞ் சோதி நம்மையரென்றே யறிவாலறிந்து
பார்த்திதைப் பேசலுற்றேன் பரஞானம் பரவுதற்கே. (156)

### தாற்பரியம்.

ஆனதினுல் ஷெ அலிபான நம்முடைய ஆதியை இவ்வுலககோடிகளுக்கெல்லாம் தாய் வஸ்துவாய் நினைத்து, காற்றுன சுவாச நிலையில் ஆடுகிற ஆத்மாவை முகம்மதென்று அந்த நினைப்பில் வைத்துப் பழகிவந்து, இந்த சரீரத்தை ஆதம் என்று இதை நினைப்பில் மறந்துவிட்டு இவைகளில் நாம் என்கிற திருடன் எங்கே இருக்கிறுன் என்று தேடிப்பிடித்துக் கலந்து கொள்ளவேண்டியது. என்று, நான் தன்னையுணர்ந்தவர்களுக்கு வழி சொல்லுகிறேன். இந்த உலகமெங்கும் றப்புடைய திருஞானம் பரவுதற்கே என்பது.

ஆதிநபியென் றழிந்திடு மாஷிக்க ஞதிமறை
சோதி முழக்கமிரு மூன்றுங்கூடிச் சொருபமுன்னின்
றோதியனைத்து மமைசெய்த தற்கொன்றுவ் வரமலிறை
நீதிபெற வெங்குநின் றுனிறைந்தொன்றுநீங் கலற்றே (157)

### தாற்பரியம்.

பூர்வமான சோதியாகிய முகம்மது நபியவர்கள் யாரென்று சற்று ஊன்றிய புத்தியுடன் அறிய, அவர்கள் றப்புடைய ஆஷிக்கினுல் ஆதியாக இருக்கும். அது ஆறு ஆதாரமான பூதச்செயல்களிடத்திலும் சரீரமில்லாமல் இருந்து எல்லாம் வெளியாக்கின பிறகு அது தன் ஹிக்மத்தால் சரீரமெடுத்துக்கொண்டது, அதில் றப்புவந்து நுழைந்தான் றசூலல்லா மிஃறுஜியில் வசனித்தது இவ்விதம் தான் என்று புத்திமான்கள் அறிந்துகொள்ளவேண்டியது என்பது.

நீங்கா வுயிருக்குள்ளாதி வித்தில் நிறைந்தமுளை
யாங்கார மூலமனுதியென்றே யருளோங்கிப் பல
பாங்கான சோதிபண ரெங்குநின்ற பாசநந்தியென்
ரேங்கார மெய்யிலுரைத்தேன் றெரிசித்துணர்பவர்க்கே (158)

### தாற்பரியம்.

ஜீவராசிகளில் இவ்விதம் ரகசியவழியாக விடாமல் நிற்கின்ற அந்த வடிவமானது வித்தாக நிற்கிறது. அந்த வித்தில் முளைத்த தானது மூலமென்பது. அதன் சிபத்து அனுதி மயமாயிருக்கிறது. இந்த மூலத்தின் வேரானது சரீறத்தில் எங்குபார்த்தாலும் படர்ந்து வியாபித்திருக்கிறது. என்று இந்த சரீரத்துள்ளே நுழைந்துபார்த்துக் கண்டறிவார்களுக்கு நானிதை உணர்த்துகிறேன். என்பது.

உணரும் நம்மாதிறைப் பூவெனலா மருளுட்கலந்து
புணருமனுதியைத் தேவென்று பேசிடும் புங்கமுறப்
புணரெழுஞ் சோதிநல் வாசமென்றே பகுத்தோலுற்றேன்
குணரெழுங் கானினுக்குள்ளே தெளிந்துண்மை கொள்பவர்க்கே.

### தாற்பரியம்.

ஆதியென்கிற வடிவாகிய அந்தமுகம்மதென்கிற வெளிவை இருதயமலரென்றும், அந்த இருதயத்தில் கலந்துகோண்டிருக்கின்றதேனென்றும், இவை இரண்டிலும், இருந்து வெளியான பலவடிவமான ஒளிவை அந்தமலரில் விரிந்து கமழ்கின்ற வாசனையாகவும் உறுதி செய்து, வணக்கஞ்செய்து, அறியவேண்டும்மென்று, நான் ஞானந் தெளிந்த புத்திமான்களுக்கு முடிவாகச் சொல்லுகிறேன் என்பது.



தெளியு மிஷாக்குநம்மாதி முன்னுட்டெரிசித்துவரு
மளியுமுள்ளாஷிக் கனுதியென்றே யறிவாலறிந்து
வெளியும் நற்சோதியை மகுருக்கென்றேவகுத் தோதலுற்றேன்
ஒளிதருமக்கத் திரசூல் நபிதலீ லுற்றவர்க்கே (160)

### தாற்பரியம்.

பூர்வ வசத்தின் அதிஷ்டந்தாலே தானேவந்து வெளியாகும் ஞான அறிவின் ஆசையானது இஷ்க்கு. முன்னமே அது தெரிசித்த நின்ற ஒளிவானது. ஆஷிக்கு அதை அநாதியென்றும், முதல் சொன்ன ஆசையை ஆதிஎன்றும், பிரித்து அறிந்து அதன் பின்னுல் நாம் பேசய்த்தெரிசிக்தப்படியான வடிவத்தை மஉஷூக்கென்றும், நான் நிர்ணயப்படுத்துகிறேன். யார்க்கென்ருல்:-மக்கமாநகரத்தில் வந்து மனுஷ அவதாரங்கொண்டு பிறந்த முகம்மது நபியவர்களின் மார்க்கததைத் துடர்ந்த முஸ்லீம்களுக்கு என்பது.

உக்றுநம் ஆதம் ஹவ்வாவுடன் கூடியன்றுட்கலந்து
பந்திருபாசம் பசுபதியான பராபரமென்
றெத்து மூள்ளாவியன் போடிவர்க்காமென் றிமையவராம்
முற்று தன்மாமணஞ் செய்தேமுடித்திடு முச்சுடரே. (161)

### தாற்பரியம்.

...ர்முடைய ஆதிபிதாவாகிய ஆதம் நபியவர்கள் இஷ்காக ...ம். அவர்கள் கூடிக்கலந்த ஹவ்வா ஆஷிக்காக இருக்கும். ...ளை அந்த புணர்ச்சியளவில் திருப்பின நினைவானது, மஉ...காக இருக்கும. இப்படியாக ஷை முச்சுடர்களான இந்த மூன்று ...க்களுமே உலகம் யாவையும் பராபரித்துக்கொண்டு வருகி... இது தான் மலக்குகளுடைய தரிபாடான வணக்கமா யிருக்...து. இந்த பிர்மசத்து வந்தால்தான் மலக்குகள், மலஜலம், ... உறக்கம், காமம், மோகம், யாவுமில்லாதவர்களாய் நிர்க்காமி...ாய் இருக்கிருர்கள். என்பது.

### வெண்பா.

முச்சுடரிலொன்று முதலோன் றிருநபியொன்று
றச்சுடரிலொன்றுகவு துல்லகுல—மச்சுடரொன்
ருதஞ்சபியுல்லாவொன் றருளிறைவனென்
றேதென்ற ஹாஸிலான தே (162)

இனி முச்சுடர் என்பதின் முடிவை இன்னதுதான் என்று சொல்லிவிடுகிறேன். முச்சுடர் என்பது உஜூது, கிதப், பாக், என்னும் மூன்று பண்பு கொண்டது. ஒன்ருவது நூறுல் முகம்மதிய்யா, ஒன்கி முகியித்தீன் அப்துல் காதிறுல் ஜீலானி, ஒன்று ஆதம். நபி முகம்மது முஇஜிஷாத்து, விலாயத்து, றிஸாலத்து, நுபுவத்து இவைகளைப் பங்கிட்டுக் கொண்டது. அப்துல் காதிறு ஹீலானி கருமாத்து, விலாயத்து, குதுபியத்து, கௌதியத்து, குதுரத்து என்னும் இவைகளைப் பங்கிட்டுக் கொண்டது. ஆதம் றகுபத்து, பறக்கத்து, ஹிக்மத்து, முதலியவைகளைப் பங்கிட்டுக்கொண்டது. இவைகள் ஆலம் அறுவாஹில் நடந்தன, என்பது.

இமையோ ரனைவர்க்கு மெம்மிற்கு லின்ப
மமையாத மக்களனை வருக்குஞ்—செமியாத
ஜின்னரக்கர் பூதமுளி தேவுபசாசுக்கு மின்ன
மன்னவனென்றே வகுக்கலாம். (163)

## தாற்பரியம்.

நூறுல் முகம்மதிய்யா வென்னும் எளிவானது பூர்விகப்பட்ட முச்சுடர்களில் ஒன்ருக இருப்பதால் நபிநாயகம் அவர்களை ஜின் கணம் பூதகணம், இராட்சதர்கள், அரக்கர்கள், மனுஷிகர்கள், [illegible] கள், எல்லாவற்றிற்கும் தலைமையான சற்குருவென்றும், அ[illegible] பண்ணுகின்ற இராஜரென்றும், நாம் சந்தேகமில்லாமல் [illegible] லாம். ஏனென்ருல் அந்த ஒளிவானது, தன் தத்துவ ஹிகம[illegible] அப்படியெல்லாம் ஒவ்வொரு யுகாதிகளிலும் அந்தரங்கம[illegible] அவதரித்திருந்து சர்வ அதிகாரங்களும் நடத்தி வந்திருக்கி[illegible] என்பது.

### விருத்தம்

வகுத்த நாயனுக்கு அஞ்சுவசன மஞ்செழுத்துமாம்
தகுத்தமாரி ம்வுத்துமூதை தரித்ததூது ஞானமும்
பகுத்ததவுருத்ச் பூரேடிஞ்சீல் பகரும்புறுக்கான் நான்கதராம்
ஒருத்துநாலும் முல்குரு னுரைத்ததஞ் ரெழுத்தும்மே. (164)



## தாற்பரியம்.

எல்லா உலகங்களையும் படைத்த நாயகனை அந்தன உஜூதுக்கு ஐந்து அறிவுகள் வழியாக இருக்கின்றது. அது ஐந்து எழுத்துகளாகவும் இருக்கும். அதன் விபரமாவது. தவ்ருத்து, சபூர், இன்ஜீல், குர் ஆன், என்கிற வேதங்களும். மஅரிபாவென்ற தத்துவ சாஸ்திரங்களுமாக இருக்கும். ஆனல் அந்த ஐந்து எழுத்தாகிய மர்மத்தையும் குர்ஆன் வேதத்தில் தான் ஆதியிறக்கினுன். என்பது.

அஞ்செழுத்து அலிபுலாம் மீம்ஹேயுந் தாலுமாகவந்
தஞ்செழுத்து காபுஹாயா ஐனுசாது மாயெழுந்
தஞ்செழுத்து ஹாவுமீமும் ஐன்சீன் காபுமாகவந்
தஞ்செழுத் துள்ளனைத் தையுப்மைத் தனன்மாதியே (165)

## தாற்பரியம்.

அவ்விதம் சொன்ன ஐந்து எழுத்துக்களை மூன்று விதமாகத் திருப்பி இருக்கிருன். அதன் விபரம் முதலாவது அலிபு லாம் மீம் ஹே, தால், என்கிற ஐந்து. இரண்டாவது காபு, ஹா, யா, ஐன், சாது, என்கிற ஐந்த மூன்ருவது, ஹே, மீம், ஐன், ஸீன், காபு, என்கிற ஐந்து. இவ்விதம் வந்த மூன்று விதமும் முச்சுடர் வகுப்பையுடையது. இவைகளைக் கொண்டுதான் இவ்வுலக முதலானவைகளைப் படைப் பிக்கப்பட்டது. என்பது.

ஆதியாதியென்கிறீ ரனுதியென்றும் பேசுறீர்
சோதிசோதியென்கிறீர் சொரூபமென்றுஞ் சொல்லுறீர்
ஓதியோதிமாய்கிறீர் நம்முடலம் வந்த தறிகிலீர்
நீதியாவதேதிலென்று நீங்கள் விண்டுபாருமே (166)

## தாற்பரியம்.

ஓ! அறிவில்லாத ஜனங்களே! ஒரு வகையாலுங் கட்டுப்படாத அந்தவஷ்தை ஆதிஆதியென்று சொல்லுகிறீர்களே.அன்றிஅதென்ன கருமம் என்று புத்தியை ஊன்றிப் பார்க்கமாட்டோமென்கிறீர்கள். இன்னும் அதை ஜோதியென்றும் சொரூபம் என்றும் உலகத்திலுண்டான பித்தலாட்டமான சாஸ்திரங்களை ஏகமாகப் படித்து நாம் பெரியவன் என்று திரிகிறீர்கள். கடைசியாக செத்து மண்குழியிலும் அக்கினி வாயிலும் அகப்பட்டு அழிந்து விடுகிறீர்கள். இந்த சரீரம் என்ன சூட்சத்தால் வந்தது. என்ன சூட்சத்தால் இது போகிறது! என்று கொஞ்சம் ஆலோசனை செய்வீர்களானல் அவ்விதம் தவறமாட்டீர்கள். என்பது.

பாரும்பாரமா யெழுந்த பட்டணத் துளெட்டுநா
ளாருமோ தவற்றமந்திரத்தி னோசைக்குள்ளுநீ
ளாரும்வாசலேழையும் வழக்கறுத் தடைத்திடி
லூருப்பேரு மற்றரூபரூபமான துண்மையே. (167)

## தாற்பரியம்.

சகோதரனே? கவனித்துப்பார். இருதயம் என்கிற இரெப்பப் பாரதூரமான பட்டணத்தில் நாலும் நாலும் எட்டுக்கலைகளான உதானவாயுவை ஒவ்வொரு நினைவையும் அதனோடு பொருத்தி எவராலும் சொல்ல முடியாத மந்திரமாகிய நானில்லைநீ என்கிறயாஹூ என்கிற மந்திரத்தையோதி அதற்குள்ளே ரஹித்தவனாக இனி நீ திருப்பிவரும் ஏழு பிரமாண்ட வாசல்களான 2-கண் 2-காது 2-மூக்கு 1-வாய் என்னும் ஏழு வாசல்களையும் கடந்து இப்புறம் வந்து உள்நா உடைய வாசலை முன் நாவுகொண்டு அடைத்து முற்றுகையிட்டுக் கொள்வாயானால், நீ அந்த இருதயப் பட்டணத்திலுள்ள சகலசுதந்தரத்துக்கும் பாத்திரமுள்ளவனாக சதா காலமும் இருப்பாய் இது உண்மை என்பது.

உண்மையான வாதியா முறுதியா நம்மாதியாந்
தொன்மையா சொதியாம் சொரூப நான்கு மறைகளாம்
நன்மையான றகுமத்தால் நமக்குதீன் துணையுமா
மிம்மையாளு மருளு மெக்கிமர ளிணக்கமாகியே (168)

## தாற்பரியம்.

அந்த ஆதிவஸ்துவானது உண்மையிலும், வாக்குறுதியிலும், இருககின்றது. இன்னும் அதானது பழமையான ஆதிவஸ்துவாக இருக்கின்றது. ஜோதியான ஒளியுடைய ரூபத்தில் ரஹித்திருக்கின்றது, தவ்ருத்து. ஸபூர், இன்ஜீல், குர்ஆன் என்கின்ற நான்கு வேதங்களிலும் ஞான சூட்சமாக அமைந்து கிடக்கின்றது. அறிகின்ற ஆண்பிள்ளைகளைத்தான் காணவில்லை. அந்த ஆதியானது உலகங்களுக்கு நன்மையாகவும், றகுமத்தாகவும், இருக்கின்றது. தீனுல் இஸ்லாமுடைய ஷற்கில் நமக்கெல்லாம் துணையாக நிற்கின்றது. இந்த உலகத்தின் ஆசைகளை விட்டு நீங்கி அதனளவில் பிரயாசை



யெடுக்கும் நாதாக்களுக்கு ஈமான் என்கிற பூரகத்துடன் கலந்து நினைவென்னும் இரேசகத்தில் நின்று தான் என்னும் கும்பமாக நிரம்பி நிற்கின்றது, இதைசற்றுஉணர்ந்தவர்கள்தான் அறியவேண்டும். என்பது.

வேதமொன்று சமைபநூல் விரிந்ததொன்று மெய்யுளோன்
ருதமொன்ற ஜாசி லொன்ருன வீசுரனுமொன்
ரேநுமிந்த மூன்று முன்னுரைத்த நம்மிறையநாம்
பாதமென்றதாகும் நீங்கள் பார்த்தறிந்துகொள்ளுமே (169)

## தாற்பரியம்

அந்த ஆதியின் தத்துவத்தில் வேதமென்பதும் ஒன்றுதான் சமயங்களான மதங்களும் ஒன்றுதான் அவைகளுக்கென்று பெரும்பாலும் கணக்கில்லாமல் விரிந்து கிடக்கின்ற சாஸ்திரங்களும் ஒன்றுதான். இன்னும் சொல்ல வேண்டுமானல், இந்த சரீரத்தில் இருந்து நாடிகளை நடத்தும் பூதங்களும் ஒன்றுதான் ஆதமும் இபுலீசும் ஒன்றுதான் ஈஷ்பரன் என்கின்ற ஆத்மாவும் ஒன்றுதான். ஆதம், அஜாஸீல், ஈஸ்பரன், என்னும் இந்த மூன்றும் கூடி முன்சொல்லிய முச்சுடர் விஷயத்தில் எல்லாம் நம் ஆதியின் கோலமே அன்றி வேறல்ல, ஆனதினல் மனுஷனைப் பிறந்தவன் ஒவ்வொருவனும் தன்னை உற்றுப் பார்க்கும்போது ஆதியாகத்தான் இருக்கிறான். என்பது

ஆதியானு ஜூதுமா மனாதி நல்ல கல்புமாம்
சோதியான ஐனுமாந் துலங்குஞான போதமாம்
பாதிபாச பசுமனுட் பதிந்திரண்டு முல்குருன்
நீதியான ஹக்குபதேசப் பொருள் நிறைந்த செல்வமே (170)

## தாற்பரியம்.

ஆதியென்பது சரீரத்தில் உஜூதாக நின்று பிரகாசிக்கின்றது. அனாதியென்பது பூதங்களுக்கெல்லாம் இராஜ கருவியான கல்பாக நிற்கின்றது. ஒளிவு நேரத்தில் பீடமிட்டிருக்கின்றது. ஞானமென்பது அறிவுடன் ரகித்திருக்கின்றது இந்த விபரத்தை உனக்குள் இருக்கின்ற எல்லா ரகசியங்களும் தெரிவிக்கிற உம்முல் குர்ஆன் என்னும் பொக்கிஷத்தைக் கண்டாயானல் அந்த செல்வத்தைத் தெறிவாய் அது உனக்கு உபதேசிக்கும். என்பது.

பார்த்திருந்த போதனைத்தை யும்படைத்த நாயகன்
ஊற்கறழுந்து பாயுமுற் றுயர்ந்த சென்னியுச்சியுட்
காற்றெழுந்து வீசுமக் கருத்தையுன்ன வல்லிரேல்
பூத்தலர்ந்த முண்டகப் புதுமலர்க்குள் நிற்பனே (171)

## தாற்பரியம்.

நீ அந்த உம்முல் கிதாபு சொல்கிற உபதேசப்பிரகாரம் உன்னைக் கண்டால் அப்போது அனைத்தையும் சிருஷ்டித்த எகதுவிதக் கருத்தாவாகிய றப்பானவன் உன்மூலமண்டலத்தில் இருந்து ஊறிவழிகின்ற அமிர்த வெள்ளத்தின்மேல் உச்சியின் உள்ளே நின்று வெளியாகின்ற மகா இன்ப சீதளத்தென்ற காற்ருனது வீச வல்லமையுள்ளவனுக நீயாகி விட்டாயானுல் உன் இருதயத் தாமரையானது பூத்து துளிக்கின்ற தேனில் ரஹித்த இனிசுவையாக நிற்பான் என்பது.

அட்டதிக்கு முட்டநின் றநேககேக ரூபமாய்
மட்டிடாத மானிடர் மனத்திலுற்ற வல்லபம்
எட்டுநாலெழுத்தில் வந்திருக்குமென் றுமெண்ணியே
தட்டி முட்டி பார்த்துளந் தயங்கிமாள்வார் கோடியே (172)

## தாற்பரியம்.

ஏட்டுதிக்குப்பதினுறு கோணங்களிலும் போய் நிறம்பி நின்று பராபரித்து அநந்தநந்தவிதமான ரூபங்களுடன் விகாரப்பட்டு துடர் பிடியாக நின்று அறிந்திருக்கின்ற பெரிய மனுஷாட்களின் இருதயத்தில் குடிகொண்டிருக்கின்ற வல்லப பொருளான அந்த வடிவை சில மூடஜனங்கள் தங்களின் கள்ளத்தனமுடைய வேஷக்கார குருமார்களின் பொய் உபதேச மருட்டைக் கொண்டு கலிமாவிலுள் பனிரண்டு எழுத்திலிருக்கின்ற ஒரே எழுத்தில் பாராமல் அத்தப் பனிரண்டு எழுத்தையும் தட்டிமுட்டிப் பார்த்து வாயால் பெனத்திக் கொண்டு கடைசியில் செத்துப் பிணமாக அழிந்து போனவர்கள் கோடானுகோடி ஜனங்களாக இருக்கலாம். என்பது.

கோடிகோடி மானிடர் குறைவில்லாத சேர்தியைத்
தேடிவாடி மாண்டனர் தெளிவுகண்ட தில்லையே
பாடியெங்கு மோசையாற் பரந்தெழுந்து நின்றதை
நாடியோ ரெழுத்திலே நவின்றுபாரு நம்முளே (173)



## தாற்பரியம்.

யாரடா மகனே! இன்னும் அந்த அபுரூபமான வடிவைத் தேடி கோடான கோடி மதியில்லாத அற்ப ஜனங்கள் காடுகளிலும், மலைகளிலும், போயிருந்து கந்த மூலங்களையும், சருகுகளையுந் தின்று வயிறு வற்றிச் செத்து அழிந்து போனுர்கள். அந்தப்பாவி ஜனங்கள் ஏதேனும் கொஞ்சம் பலன் கண்டதும் உண்டா இல்லை! இல்லை! இந்த சரீரமான பெரிய உலகத்தில் எங்கு பார்த்தாலும் அதன் சுயம் பிரகாச ரூபமாயிருக்கின்ற சிரோமணியை கலிமாவில் உள்ள ஒரே யொரு எழுத்தால் நினைவை நிறுத்தி உற்றுப்பார்! அப்போது அது தெரியும். என்பது.

நம்மிலும் நமக்குண்டான நற்குணங்க ளஞ்சிலும்
தம்மிலும் தராதலத்திலுள்ள வெட்டு திக்கிலு
எம்மிலு மெய்மோடிசைந்த விருதயத்து நினைவிலுஞ்
செம்மலா யிருந்ததைத் தெளிந்துணர்ந்து பாருமே. (174)

## தாற்பரியம்.

நம்முடைய சரீரத்திலும், இன்னும் நம்மில் உண்டான நன்மை பொருந்திய ஐந்து விதக் குணகுணங்களிலும், இன்னும் இந்த பூலோகத்தில் உண்டான அஷ்டகோணங்களான எட்டு திக்குகளிலும் இன்னும் இந்த சரீரத்தை ஆக்கிவைத்திருக்கின்ற பூதங்களான நெருப்பு, காற்று, மண், தண்ணீர், ஆகாயம், என்கிறவைகளிலும் இவைகளின் உட்கருவிகளான புலன்களிலும், இன்னும் இருதயத்தின் வட்டவடிவோடு கலந்து வியாபித்திருக்கின்ற நினைவாகிய பிரதான கருவியிலும், இராஜக ருவியாக நிற்கின்றதைத் தெளிந்து உணர்ந்து பார்ப்பவன்தான் எப்போதும் ஜயசீலனுக இருப்பான். என்பது.

பஞ்சவன்ன வாயுவோடு பழகிநின்ற மந்திர
மின்சொலான மறைகளின்ன தென் றறிந்திசைத்தில
செஞ்சொலால் நபிக்கு நாயன் செப்பிடக்கண்டன் புளோர்
அஞ்சிலொன்றை யப்பனென் றறிந்துணர்ந்து பாருமே (175)

## தாற்பரியம்.

கறுப்பு, சிவப்பு, பச்சை, வெள்ளை, நீலப், என்னும் ஐந்து வர்ணங்களையும் ஒரே வர்ணத்திற் கொண்டிருக்கின்ற பிராண வாயு

வான றூஹூல் குதுஸியோடுங் கலந்து உறவாடியிருக்கிற அந்த மணிமந்திரத்தை வெளிப்படையாக நாலு வேதங்களும் சொல்லவில்லை. அதாவது மிஃருஜியுடைய இரவில் நமது றசூல் நாயகம் அவர்கள் றப்புடன் கலந்துபேசிய ரகசியம் பன்னீராயிரம் வசனங்களில் உள்ளதாக இருக்கும். இது உம்முல் கிதாபில் இருந்து நாதாக்களான ஒலிமார்களெல்லாம் அறிந்து கொள்வார்கள். ஆனபடியால் கலிமாவில் உள்ள பன்னிரண்டு அட்சரங்களிலும் தத்துவத்தையுடைய ஐந்து அட்சரங்களையும் கலந்து அதிலொன்ருன ஹூ வென்னும் தத்துவ எழுத்தை உங்களின் தகப்பனென்றேயெண்ணி அதை உணர்ந்து தெளிவடைந்து கொள்ளுங்கள் என்பது.

அஞ்செழுத்து மூன்றெழுத்து மல்லகாணு மப்பொருள்
பிஞ்செழுத்து முன்பிறந்து பேசும் நாலுவேதமாய்
நஞ்செழுத்த தாகும் நீங்கள் நம்பொறுது நாயகன்
அஞ்சுமாறு மற்றுநம் மகத்துள் வந்திருப்பனே. (176)

## தாற்பரியம்.

பகல்வேஷம் பூண்டு ஜனங்களை மிரட்டித் திரிகின்ற வயிற்று வாளுலறுவான்கள் சொல்லித்தருகின்ற ஐந்து எழுத்துக்களிலும், மூன்றெழுத்துக்களிலும், அந்த வடிவமான தத்துவப் பொருளானது அகப்படாது, அந்தமயமானது ஒரு எழுத்தாகி, வாயால் மொழிச்சலாகி, நாலுவேதங்களாகி, தொண்ணூற்ருது தத்துவ கலைக்யானங்களாகி, அவைகள் தோறும் மறைந்து நிற்கின்ற கள்ளனுகி, அதையறியாத பேதை ஜனங்களைக் கொல்லுகின்ற பாஷாணமாகி நிற்கின்றது. இதுவே அதன் விபரமல்லாமல் மற்றவர்கள் வேறு மாதிரி எவ்விதம் சொல்லிப் பிதற்றினலும் நீங்கள் ஒருபோதும் அதை நம்பவே கூடாது. அந்த றப்பான வஸ்துவானது அஞ்செழுத்திலும் ஆறு எழுத்திலும், இல்லாமல் நம் இருதயத்தில் ஒரே எழுத்தில்தான் கலந்திருக்கிறது. இதுவே காட்டானை ஷெய்குஒலியுல்லா கோட்டாறு பெரிய ஞானியார் சாகிபவர்கள், குணங்குடி மஸ்தான் சாகிபவர்கள், தாயுமானப் பிரபு முதலான பெரிய மனுஷர்களின் தீர்ப்புமாயிருக்கின்றது. என்பது.



## விருத்தம்

அறியுமாதி யோடனுதி சோதியிவையான மூன்று நமதுட்சுடர்
செறியும் ஆதமொடஜாசிலும் மருள்செப்பு மீசுரனும்பிற்சுட
ருறியுமா யறிவுஞான போதமருளூற் றதஞ்சுநமதுட்சுட, [தே
ரெறியுஞ் சோமனுடு வருணமின்னெடு மலென்றதஞ் சுப்பிற்சுடர

## தாற்பரியம்

இன்னும், ஆதி அநாதி, ஜோதி. யென்கின்ற இந்த மூன்றும் நமது சரீரத்தில் உட்சுடராக இருக்கின்றன, இன்னும் ஆதம், அஜாஸீல், ஈஸ்பரன், என்கிற இந்த மூன்றும் நம்சரீரத்தில் வெளிச்சுடராக இருக்கின்றன. இன்னும் ஆராய்ச்சி, அறிவு, ஞானம், போதம், அருள், இந்த ஐந்தும் நமது சரீரத்தில் உட்சுடராக இருக்கின்றன. இன்னும், சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், மின், மழை இந்த ஐந்தும நமது சரீரத்தில் வெளிச்சுடராக இருக்கின்றன என்பது

மாவுந்தேனமிர்த பாலுநீருமது வானதஞ்சுமுத லாதியாம்
மேவுகாலுயிர் மானிணக்கமருள் விண்டதஞ்சு நமனாதியாங்
காபுநூனுஞ்சிவ காயஞான வெளி கண்டதஞ்சு மெழுசோதியாம்
ஆவுநாலுதய மானயாவுமறி வானகாலையில் விளங்குமே. (188)

## தாற்பரியம்

ஒளி, நாவின் இனியசுவை, தேன், பால், கள் அஞ்சுமுதலான இவைகள் ஆதியாக இருக்கின்றன. இன்னும் காற்று, உயிர், நிர்ணம், நினைவு, இருள் இந்த ஐந்தும் அநாதியாக இருக்கின்றன. காபு, நூன், ஹே, ஐன், சாது இந்த ஐந்தும் ஜோதியாக இருக்கின்றன. கமிலான சற்குருவென்கிற வழிகாட்டியினலே, அறிவைக்கொண்டு நினைவில் வைத்துப் பார்க்கும்போது சபுஸ்தமும் தானே கண்டு கொள்வாய். என்பது.

## வெண்பா.

வேதநூல் சாஸ்திரங்கள் மெய்யிதனையன்றிவெகு
பாரநூல் கற்றுலும் பயனில்லை—யேதொன்று
மில்லானைத் தேடி இரவுபக லாயொன்றுஞ்
சொல்லாமற் சும்மாற் சும்மா இரு. (179)

### தாற்பரியம்

குர்ஆன் முதலான நாலுவேதங்களில்தான் அந்த மெய்யான வஸ்து மறைந்திருக்கின்றது. அவைகளில் ஆராய்ச்சி செய்து பார்க்கவேண்டுமே அன்றி, மற்றப்படி உலகத்திலுண்டான கண்ட கண்ட கலைக்யானங்களெல்லாம் கற்றதனால் ஒன்றும் பிரயோசனங்கொடாது. அவ்விதம் எந்த இருஇணை துணையும் இல்லாத அந்தறப்பை ஆசையென்கிற கூட்டிலடைத்து ஆட்டித் தாலாட்டிப் போற்றிப் புகழ்ந்து மனங்கசிந்து உருகி அழுது எவ்விதத்திலும் காரியம் ஜெயங்கொள்கிறதைப்பார்க்க வேண்டுமே தவிர, பேயனைப்போல் தெருத்தெருவாய் திண்ணை திண்ணையாய் வாய் பெனத்திக்கொண்டு அலையாதே! சும்மா இருந்து சுகம் பெறுவாயாக. என்பது.

முகந்தெரியும் நம்மிறசூல் மெய் முழுதுமே தெரியு
மகந்தெரியும் ஞானத்தடி தெரியும்—ஜகந்தெரியும்
விண்ணடிக் குள்ளிறைவன் வீற்றிருக்கு முட்கமலக்
கண்ணடியைக் கண்டக்கால். (180)

### தாற்பரியம்.

அவ்விதம் சும்மா இருந்து வஸ்தை நினைவில் நிறுத்தி றகிப்பையானால் இருதயமென்கிற சர்வஜீவ சஞ்சீவிக் கண்ணடியைக் கண்டுக்கொள்வாய் அப்போது அந்தக் கண்ணடிக்குள் உன்முகம் என்கிற றப்புடைய தோற்றந்தெரியும். மூலைமண்டலத்தின் மாளிகையான சுல்தான் நஸீருவில் அல்லாகுத்த ஆலாவின் அநந்த ஜோதிமயமான உஜூதும் தெரியும், நமது நாயகம் முகம்மது நபியவர்களின் நூறும், அதன்சிர்றும், அதன் ஹிக்மத்தின் கோலவடிவும் தெரியும், இன்னும் பஞ்சத்தன் என்கிற முகம்மது, பாத்திமா, அலி, ஹஸன், ஹுஸைன், இந்த ஆதியான ஐந்தும் கிரஹவடிவமாகத் தெரியும், இன்னும் உன் இருதயமென்கிற பிரமாண்டமான பட்டணமும் தெரியும் அதில் இந்த துன்யாவென்னும் உலகத்தைப்போல் எத்தனையோ பதினாயிரம் கணக்கான உலகங்களும், ஆகாய மண்டலங்களும் ஒருமூலையில் ஒதுங்கிக்கொண்டிருக்கிற மர்மமும் தெரியும். ஞானமான அறிவுக்கு



அடிமூலமாகிய சற்குருவின் பாதாரவிந்தத்தின் திருவருள் கடாட்சமும் தெரியவரும். என்பது.

பஃறொடை வெண்பா.

ஆதி முதலோன நாதியவனொருவன்
சோதிபெரியோனழியாத் துய்யோனென்—றோதியதில்
நெய்யுந்திரியும் நிறைந்த பரஞ்சுடராய்ச்
செய்யெனமுன் செய்தவையுந் திரளுமா—லுய்யமதில்
ஒன்றிறைவனே டொன்றுடையோன் திருநபியாம்
ஒன்றுநமதுள்ளுரையுங்குருவா—மென்றுமிது
வித்துஞ் சிவமரமும் வேருமிவை மூன்றும் வெகு
புத்தியறிவிக்கப் பூண்டிறைவ—னுற்றுரைப்பான்
ஆதிவன் றதின்பொருளை யார்க்கும் நவிலாதே
ஊவதனுக் கப்பாலென் றோதிவிடு—நீயெவர்க்கும்
பாலுமாம் பாலெரியும் பருவ மறிந்தா லுனுக்குத்
தேனுமா மென்றேதெளி, (181)

### தாற்பரியம்.

ஆதியென்பது எல்லா வஸ்துகளுக்கு முன்னாலே இருந்தது. அனாதியென்பது, அட்சரங்களின் மூலமாக ஒருவன் அதாவது அஹது என்கிற ஒருவன் என்ற நாமத்தை தரித்தது. ஜோதியென்பது பெரிதான உலகங்களாகவும் அதன் ஜீவ ஜென்மங்களாகவும் சரீரங்கள் அநந்தாநந்தங்கோடி விதற்பமான ரூபாதிகளுடன் வந்தும் தான் அழியாமல் நிற்கின்றது ஆகவே இந்த மூன்றும் எப்படியானால் எண்ணெயும் திரியும், விளக்கின் சுடரும்போலாக இருந்து உலகத்தை நடத்துகின்றது இந்த மூன்றும் அல்லாமல் உலகத்தில் எது ஒரு கருமமும் நடைபெறாது. (ஒரு ஸ்திரியும், புருஷனும், ஆசையும்,) போலும் ஒரு வியாபாரமும், கைமுதலும், நடத்துகிறவனும். கடலும் கப்பலும் காற்றும், போலவும் இருந்து வருகிறது இன்னும் இதன் உவமானத்தைச் சொல்ல வேண்டுமானால் இந்த புத்தகத்தை ஐஞ்நூறு பாரங்களாக விரித்தெழுதினாலும் இந்தஆதி-அனாதி-ஜோதி என்கிற இந்த மூன்றின் விவகாரம் தீராது தீராது. புத்திமான்கள் சற்று நுணுக்கத்தால் கண்டு கொள்ள வேண்டியது, ஆகவே, இந்த மூன்றில் ஒன்று, றப்பு, ஒன்று முஹம்மது நபி, ஒன்று நமக்கு வந்து

முரீது கொடுத்த வழிகாட்டியான சற்குருநாதன். இன்னும் இந்த மூன்று விதையும், அதினுல் முளைத்த மரமும், அந்த மரத்துக்கு பலம் பிடியான வேரும் போலாக இருக்கிறது. இதைப்பற்றி அறிவடக்க மில்லாத சில மோட்டாத்துமாக்கள் உன்னை பாசதில் இழுத்து வைப்பதற்காக உன்னிடம் வந்து உன்னைக் கொஞ்சம் தட்டிக் கொடுத்து அந்த மூன்றும் நம்மில் எங்கே இருக்கின்றது என்று மெதுவாய்க் கேட்பார்கள். நீ சொல்ல வேண்டாம். அது ஊமை எழுத்தாகிய நுக்தாவுக்கு அப்பால் என்று ஒரே பேச்சாகச் சொல்லி விடு. அவ்விதம் சொல்லிவிட்டு வாய் மூடிக்கொண்டு மௌனஞ் சாதித்து வந்தாயாகில் றப்புடைய இஸ்மென்கிற தேனீக்களானவை கள் வந்து நிறைந்து கூடி உன்னிடம் தேன் கூண்டு கட்டும் அதுவும் அல்லாமல் பாலாகிய இந்த சரீரத்தைப் பற்றி தயிர் மோர் கடைந்து வெண்ணையெடுத்து உன்னைக் காண்குதல் என்கிற நெய்யுறுக்கின்ற பருவமாகிய பக்குவத்தையும் தெரிந்தாயாஞல் அந்த நெய்யே உன்னைக் காட்டும் அப்போது நீயே தேனமிர்தக் களஞ்சியமாகக் காண்பாய். என்பது,

நேரிசை வெண்பா.

வன்னியுதித்தா லறிவுதிக்கும் வயிர்பொருமும்
அன்னமருந்த அறிவழிக்கு—முன்னியுள்ளத்
தக்கினியை மூட்டியழ லெரியும்போதெழுத்த
சற்குருவைக் காண்பாய் சமைந்து. (182)

## தாற்பரியம்.

இடகலையான சத்திரனில் நினைவைத் தூக்கிவைத்தால் புத்தி கூர்மை அதிகமாகும். அதோடுகூட வயிறும் மாந்தமாக இருக்கும். சோற்றை சாப்பிட்டு வயிறு தொந்தி படச்செய்தால் அந்த அறிவை யும் கெடுத்துப்போடும் அதிக காமத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும். ஆனதினுல இவைகள் ஞானவான்களுக்கேற்ற பாதையல்ல, பின்னர் எப்படியாஞல் நினைவும் சூரியனும் பந்தம் போல் எரியும்போது அந்த இரண்டுக்கும் நடுவே தோன்றுகின்ற சற்குருநாதனை றப்பாகத் தெரிசித்துக் கொள்வாயாக. என்பது.

விருத்தம்.

தடுக்குமைம் புலன்களுஞ் சமைந்த பஞ்சபூதமுந்
தொடுக்கும் பார்வை கேள்விவாசந் தொட்டறிவொடுரிசையு



மொடுக்குமிந்த வகையை விட்டொடுங்கியுண்ண வல்லிரே
லடுக்குநந்திடாத நம்மனுதியானை யுண்மையே. (183)

## தாற்பரியம்

அறிவு, பார்வை, கேள்வி, உருஷி' வாசனை யென்கின்ற ஐந்து, புலன்களையும், பஞ்சபூதங்களையும், இவைகளின் வாசல்கள் ஏழையும் நாட்டத்தைக் கொண்டு அடைத்து, றப்பை நேசத்தின் மூலஸ் தானத்தில் ஏற்றி வணங்க வல்லமையுடையவர்க ளானிர்களாகில் அல்லாவின் பேரில் சத்தியமாக உங்களை நீங்கள் உணர்ந்து றப்பைக் காண்பிர்கள். என்பது.

உண்மையான நந்தியே ஒளிதிரண்ட முகம்மதா
மம்மையாரு மாதியென் றறைந்த சொல்லகத்துளே
செம்மையாக நின்றுரை செவிக்குள்வந் தடைந்தபி
னெம்மையாளு மாதியானையா னுரைத்த துண்மையே (184)

## தாற்பரியம்

ஹக்கு வெளியானபின் நந்தியான முகம்மதிய்யாவான ஒளி வானது வெளியாயிற்று. அதுதான் சராசரங்களுக்கு மூலப்பொரு ளான தாயாக இருக்கின்றது. என்று நிர்ணயங்கொண்டு செவியா கிய சூரியனில் ஸ்தம்பமாகும்படியாக சூடிகொண்டுவிட்டால் அல் லாவின் பேரில் சத்தியமாக நான்மேலே சொன்ன ஷமஸ்தமும் உண்மையாகத் தோன்றிவிடும். அப்படி இல்லாதவர்களுக்குப் பொய்யாகவே தோன்றும். அதுகொண்டு என்னை இகழ்பவர்கள் கூர்மையான புத்திமான்கள் அல்ல. என்பது.

வெண்பா.

ஆதியோவனுதியோ வருபமோ சொருபமோ
சோதியோவேக சொருபமோ—நீதியிவை
யெப்பரிசி லிங்குதித்தா லெம்மிறசூ லென்றெனக்குத்
தப்பறவேசொன்னுர் சமைந்து. (185)

## தாற்பரியம்

அந்த மகத்துவமானது ஆதியோ! அனுதியோ! அல்லது சொருபமுள்ளதோ! ஒளிவாக வந்ததோ! உலகம் யாவற்றிலும் நிறைந்திருக்கின்ற வடிவோ! என்று சந்தேகப்பட்ட காலத்தில் எனக்கு எந்தவிதத்திலும் கைவிடாத வண்ணமாக நமது நபிபெரு மாஞர் அவர்களே அதன் முடிவை வந்து சொன்ஞர்கள். என்பது

நபியோநபிகள் திருநாயகமோ நம்மிறசூல்
சபியாதமுல்லாத் தலைமகனே—புவியோர்கள்
பெற்றெடுத்த பாலகனே பெரியவனின் ரனே மறை
கற்றுணர்ந்தோர் சொல்வீர்களித்து. (186)

## தாற்பரியம்

முச்சுடரில் நடு நாயகமாய் உதித்துவந்த முகம்மதென்னும் நபிகள் பெருமானார் அவர்கள், வேதமிறங்கப் பெற்ற நுபுவத்தின் தீர்க்க தரிசியாகவும் இருக்கிறார்கள். இன்னும் நபிமார்கள் றசூல்மார்கள் யாவருக்கும் குருவாகவும் இருக்கிறார்கள். இன்னும், ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு முன்னிலைமையான மகனாகவும் இருக்கிறார்கள். இன்னும் மனுஷாவதாரங்கொண்டு பிறந்ததில் பூலோகத்திலுள்ள மானுட ஜென்மங்களிலுண்டான அப்துல்லா அவர்களுக்கும், உலக மாதாவாகிய ஆமினா அம்மா அவர்களுக்கும் ஒரு ஏகபுத்ர சிகாமணியாகவும் இருக்கின்றார்கள். உஜூதுடைய புறத்தால் அல்லாவுடைய சிர்றில் இருந்தும் வெளியாகி இருக்கிறார்கள். இதில் எவ்விதம் அந்த ஒளிவைத் திட்டப் படுத்துவீர்கள்? வேதங்களை ஆராய்ந்த சாஸ்திரிகளே! சொல்லுங்கள்? என்பது.

### விருத்தம்

ஆதி முன்னுருபமா யனாதியங்கருபமாய்ச்
சோதி நல்லசொருபமாய்த் துலங்குசிந்தை காண்பவர்க்
காதியான அகுமதாமனாதியான முஹம்மதாஞ்
சோதியானருபம் நின்றுசொல்லும்யா றசூலென்றே (187)

## தாற்பரியம்.

ஆதியானது ரூபமாகவும், அநாதியானது அருபமாகவும். ஜோதியென்றது சொருபமாகவும் இருதயத்தை யறிந்து தெளிந்த நாதாக்களானவர்கள் திட்டப்படுத்துவார்கள். எப்படியென்றால் ஆதியென்பதை, அகுமதாகவும், அனாதியென்பதை முகம்மதாகவும், ஜோதியென்பதை, றசூலென்றும் நிர்ணயப்படுத்திச் சொல்ல வேண்டியது. இதன் விபரம் ஞானபாதையைத் தனித்த அறிவுடன் ஊன்றியறிய அறியதானே விளங்கும். என்பது.

### விருத்தம்.

இன்னமொன்றியம் பவேனிசைந்த தீனவர்க்கெல்லாம்
வண்ணமா மறைக்குள் நின்றறைந தசத்தமானதைக்
சொன்ன தாகிலென்னவேறு தோன்றுமென்ன நம்முளே
யுன்னுமந்திரம் மொன்றுண்டு வந்தறிந்து பாருமே. (128)



## தாற்பரியம்.

இன்னவொரு ரகசியம் தீனை சகோதரர்களுக்கெல்லாம், சொல்லி விடுகிறேன். அதாவது:—நம்முடைய வேதத்தில் ஒரு சத்தம் அசரீரியாக பிறந்திருக்கிறது. அதை அநேக கோடி ஜனங்கள் அறியாமல் வெள்ளடியாக நுனிப்புல்லில் மேய்ந்து போய்விட்டார்கள் அதைக்காமிலான பீர்மார்கள் உனக்குள்ளே சொல்வார்கள். அதுதான் காரியமான மந்திரம், அதைக்கொண்டு காரியஞ் சித்தியாகிக் காயமும் சித்தியடைய வேண்டும். ஆனபடியால் என் எளிய பிள்ளைகளான நல்ல ஜனங்களே! அதைக்கண்டு அறிந்து பாருங்கள் அப்பால் அறியுந் தன்மையை நான் என்னதான் சொல்லப் போகின்றேன். என்பது.

வல்னமான மந்திரத்தின் வாறு சொல்வல்லவன்
சொன்னமான சொர்க்கமுந் துலங்கும் வானும் பூமியும்
மின்னுமறு ஷுகுறுசையும் விரித்தமைக்கு முன்னபி
சொன்னதிக் கிருகுமென்று தொன்மறைகள் சொன்னவே (189)

## தாற்பரியம்.

அந்த மணியான மந்திரத்தைப்பற்றி வெளியே சொல்வது தீராத பெரிய தோஷமாக இருக்கின்றது. ஆனால் ஒரு கொஞ்சம் அதைப்பற்றி சயிக்கினை பண்ணுகிறேன். அறிவுள்ள பிள்ளைகளெல்லாம் கண்டு பிழைத்துக் கொள்ளுங்கள். எப்படியானால் அல்லாகுத் தஆலாவானவன் தங்கமயமான சுவர்க்கத்தையும் பூமியையும், அறுஷு குர்ஸு, மலை, கடல், பாதாளம் முதலிய யாவற்றையும் படைப்பிக்கிறதற்கு முன்னமே, அவனுடைய தஜல்லியத்தில் ஒளிமயமாய் நமது நபியவர்கள் இருந்து தஸ்பீஹ் செய்தபோது, அந்த ஒளிவானது எத்தனையோ கோடிகாலம் தன் மனதில் வைத்து திக்று செய்துகொண்டதாகும் அந்த மந்திரம். இதைப்பற்றி வேதங்களும் அதிகமாக சாட்சிகள் சொல்லுகின்றன. என்பது.

மண்ணு நீரும் கூடிவல்லபத்தி னோடு ரூபமாய்த்
திண்ணமான தாலும் வன்னியுஞ்செறிந்து றூஹதாய்
விண்ணு நூறதிற்கலந்து மேவியஞ்சுமொன்றதா
யெண்ணு நம்முடற் றிரண்டெழுந்து பேசிநின்றதே. (190)

### தாற்பரியம்.

மண் என்கிற இந்திரியமும், தண்ணீர் என்கிற இரத்தமும், வல்லமை கொண்டு கூடி இந்த சரீரமானது உற்பத்தியாயிற்று. தெளிவாகிய சுவாசமென்கிற காற்றும், நெருப்பும் கூடினதால் றூஹு என்னும் ஆத்மா உண்டாயிற்று. இதனிடையில் ஒளிவு ஆகாயத்துடன் கலந்து இருதயத்தின் தத்துவாதிகளும் நினைவும் உண்டாய் இவைகளால் ஐந்து பூதங்களின் வல்லமையினல் இந்த உடம்பானது எழுந்து ஒடு பேசி விளையாடிக்கொண்டு திரிகின்றது. என்பது.

அல்லிராப்பகலு மற்றிருக்கு மத்தலத்துளே,
சொல்லொணுத ரூபமாய்த் துலங்தும் நீங்கள் பாருமென்
றில்லல்லா விசைத்தனென் றிருதயக் கண்ணுடியில்
நல்லபேர்கள் சொல்வரிங்கு நாமுறைத்த தல்லவே (191)

### தாற்பரியம்.

இரவு என்றும் பகல் என்றும் இல்லாத அந்த ஸ்தானத்திலே யாராலும் சொல்லமுடியாத தேவரூபமான ஒரு வடிவு தோன்றும் அதை நீங்கள் கண்டு கொண்டால் இல்லல்லாஹு வென்று சொல்லிய நாட்டத்துடன் தோன்றிய ரகசியம் இதுஎன்று உறுதிகொள்ளுங்கள் என்று நல்லவர்களான சாதுக்கள் சொல்வார்கள் இதைப்பற்றி இங்கு நாம் ஒன்றும் சொல்லமாட்டோம். என்பது.

தந்தைகூறுந் தாயார்கூறுந்தரிபட
வந்தபாணி கூறும்வன் னிகூறுமுதை கூறுடன்
விந்துநாதரூகுங் கூடிமேவியொன்ற தாகியே
யந்தமாக ரம்முடலணிந்த ரூபமானதே. (192)

### தாற்பரியம்.

தகப்பனுடைய பங்காகிய சுக்கிலமும், தாயுடைய பங்காகிய சுரோணிதமும், மண்ணுடைய பங்கும் ஜலமுடைய பங்கும், நெருப்புடைய பங்கும், காற்றுடைய பங்கும் ஆக இவைகளுடனே இந்திரியமும் ஆத்மாவும் ஒன்று சேர்ந்து கடைசி பலனுக நமது, சரீரமானது ஒரு ரூபமாக நிற்கின்றது, என்பது.

தாலும்மாவு மேலுமச் சலத்திலுற்ற ரூபமாய்
ஹேபும்லாமுஞ் சேர்ந்துமே கிளர்ந்தனு சிருனபின்
நாபீமூலமாய் நிறைந்தடர்ந் திரண்டு நாசியி
லோய்விலாமல் நிற்கும் நீங்களுட்கலந் துபாருமே. (193)



### தாற்பரியம்.

மண்ணும் தண்ணீருங்கூடி சரீரமெடுத்த இந்த எண்சாண் உடலுக்கு அடித்தளமாக ஹே என்கிற எழுத்தும், லாம் என்கிறஎழுத்தும் ஒன்றுசேர்ந்து ஐந்து பூதங்களாகி அப்பால் நாபியிலிருந்து மூலாதாரம் வரையிலும் றூகானது ஒடி எப்போதும் ஓய்வில்லாமல் வியாபித்துக்கொண்டிருக்கிறது. வேண்டுமானுல் ஓ! ஜனங்களே! உங்களை அறிந்தீர்களானுல் அது தெறியவரும், என்பது.

லாகிரெண்டெழுத்திலும் இலாகி மூன்றெழுத்திலும்
ஓய்விலாமலும்முளே யொளித்ததேது சொல்லுமே
மேவியொன் றிருக்கநாலும் விண்ணெடுங்குநாளை நீர்
ஆவிகாவலாகு முன்னறிந் துணர்ந்து கொள்ளுமே, (194)

### தாற்பரியம்.

லா-ஹி என்கிற இரண்டுஆட்சரங்களிலும், இ-லா-ஹி யென்கிற மூன்று அட்சரங்களிலும், தடை மறைவில்லாமல் உங்களில் ஒரு வஸ்து ஒளிந்திருக்கின்றது. அதை இன்னதென்று நீங்கள் சொல்ல வேண்டியது. அப்படித் தெரியாது போனுல் அவசியம் உங்களுடைய ஆகாயமென்கிற நினைவானது வொடுங்கி ஒன்றே ஒன்று மாத்திரம் இருக்க மற்ற பூதங்கள் ஒன்றுக் கொன்று விகாரப்பட்டு உங்கள் ஆத்மாவானது உங்களை விட்டும் பிரிகிறதற்குள்ளாக அந்த வஸ்துவை அறிந்து ஆளாக்கிக்கொள்ளுங்கள், என்பது.

ஏழுபங்கையுங் கடந்திருக்குமப் பதிக்குள்ளே
யேழுவாரியேழு மலையுமேழு கோட்டையானதில்
லேழுவாசலேழு காவலேழு பேருக்கப்புறம்
ஏழுதிரை யுண்டதக்கப்பால் நம்மிலல்லா வந்திருப்பனே. (195)

### தாற்பரியம்.

அந்த வஸ்துவானது இந்த சரீரத்தின் ஏழுபங்கையுங் கடந்து அப்பால் ஒரு பட்டணத்தில் இருந்து அரசாட்சி செய்கின்றது. அந்தப் பட்டணமானது ஏழு கடல்களும், ஏழு மலைகளும் ஏழு கோட்டைகளும் அக்கோட்டைகளில் ஏழுவாசல்களும், உண்டாய் இருக்கின்றன. அந்த வாசல்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு காவலாளிகளும் இருக்கிருர்கள் அவைகளுக்கு அப்பாலே ஏழு பர்தாக்கள் இருக்

கின்றன அந்தப் பர்தாக்களை நீக்கிப் பார்ப்பீர்களானால் அல்லா என்கிற வல்லமைக் கடவுளானவன் தோன்றுவான் காண்பீர்கள், என்பது.

{ இதன் விபரங்களை தயவு செய்து உங்களது பீர்
மார்கள் இடத்தில் கேட்டறிந்து கொள்ளுங்கள்

ஆதியான கூறும் நல்ல குமதென்ற கூறுடன்
சோதிநா தனவனொளி துலங்குமச் சடத்துளே
பாதிராப்பகலு மற்றபட்டணமொன் றுண்டதில்
நீதியாக நிற்குமொன்றை நீர் நினைந்து பாருமே, (196)

## தாற்பரியம்.

ஆதியென்கிற அகத்தியத்தின் பங்கும், ஆநாதியாகிய நூறுல் அகுமதியா வென்னும் ஒளிவுடைய பங்குகளுடனே ஜோதியாகிய ஆதமியின் பங்காகிய விந்துநாத ஒளிவுங்கூடித்திரண்டு இருக்கின்ற இந்த சரீரத்தில் இரவும் பகலுமில்லாத ஒரு பட்டணம் இருக்கின்றது அதனடுவே இருந்து அதிகாரம் பண்ணுகிற பொருளான றப்பைப் பற்றிப் பிரயாசை யெடுத்துப்பாருங்கள்? என்பது.

ஆணிக்கோவையாம் நம்மாதியருளும் நூலைவேதியர்
காணிக்காசுக்காக வேண்டிக் கண்விடாத நாய்கள்போல்
வீணுக்காக வலறுமந்த மெலிவுகண்டு மானிடர்
பேணிக்கால் பிடித்து நல்லபெரிய பீரென்றேதுவார், (197

## தாற்பரியம்.

ஆணிமுத்துக்களைத் தெரிந்தெடுத்து வரிசை வரிசையாகக் கோத்திருக்கின்றது போல் ஞானங்களை அங்கங்கே காட்டி நமது ஆண்டவனை றகுமான் இறக்கிவைத்த குர்ஆன் என்கிற பரிசுத்த ஞான வேதத்தை; சாஸ்திரிகள் நல்ல உணர்ச்சி செய்யாமல் மெதுவாக வாசித்து விட்டு ஊர் ஊராய்ச் சுற்றி நிலங்களுக்கும், பணங்களுக்கும் விற்று ஏமாளி ஜனங்களை மருட்டி, கண்விழிக்காத நாய்க்குட்டிகள் குறைப்பது போல் வீண்காலா கோலம் பண்ணித் திரிவார்கள். அவர்களது வேஷத்தைப் பார்த்து பாபம்; ஒன்றுமறியாத உலகவாசிகள் அவர்களை மகாபெரிய குருமார்கள் என்று சொல்லி கால்களையும் பிடித்து வணங்குவார்கள். இதனால் அப்பேதை ஜனங்கள் அடையும் பலாபலன்கள் என்னகுப்! என்பது.



பேறுபெற்ற பேர்களொன்றும் பேசிடார்பு விக்குள்ளே
யாறு பத்துக் கந்தையு முடுத்துமேலழுக்குமாய்
நீறுமெத்த பூசியே நினைவிலாத பேயர் போ
லூறு புத்திகண்டெல்லோரு முற்றிடாதகற்றுவார், (198)

## தாற்பரியம்.

அல்லாவின் ரஹஸியத்தை யறிந்து, தன்னைக்கண்டுக் கொண்ட நாதாக்கள். இந்தப் பூவலோகவாசிகள் தங்களை மதிக்கவேண்டுமென்று எண்ணம் ஒரு சிறிதும் இல்லாதவர்களாக யாதொன்றும் வாய் திறந்து பேசமாட்டார்கள். தங்களை மறைக்கும் பொருட்டு மேனியெல்லாம் அழுக்குப், சிக்கும் உள்ளவர்களாகவும், கிழித்து ஒரு வஸ்திரத்தை ஏழுஎட்டு பத்துக் கந்தைகளாக மேலேபோட்டு பைத்தியகாரரைப்போல் அறிவில்லாத பாமர ஜனங்களுக்கு ஒரு வித விளையாட்டுகள் காட்டிக்கொண்டு மூலைமூலையாகத்திரிவார்கள். அவர்களை உலகவாசிகள் பலமாதிரியும், தூஷணை செய்து கல்லெறிந்து விரட்டுவார்கள். அங்கே காரியமிருப்பதை ஒருவனாவது அறியவே மாட்டான், என்பது.

அஞ்சுமாறு மோதடா ஐயாறுநோன்பு வையடா
வஞ்சகம் மில்லாதபறுலைஞ்சைவும் வணங்கடா
நெஞ்சில்வாழு மஞ்சிலொன்றை நீ நினைந்து பாரடா
பஞ்சபாதகங் களான பாவமும் நில்லாதடா. (199)

## தாற்பரியம்.

யாரப்பா மகனே! இதைநீ ஒருவித கஸ்டமென்று நினைத்துப் பயப்படுகின்றாயா? அப்படி வேண்டாம், இஸ்லாமில் உள்ளபர்லு ஐந்தையும். ஈமானிலுள்ள பறுலு ஆறையும் கூட்டி ஆகப்பதினொரு காரியமாகிய கலிமா மந்திரத்தைக் கூடியவரையிலும் இணையில்லாமல் சொல்லிக்கொள். ஒருமாத உபவாச விரதமாகிய ஞான நோன்பை முப்பது நாளும் றமலான் மாதத்தில் வைத்துக்கொள். குர்ஆனில் வெளிப்படையாக ஏவப்பட்டதுபோல் ஐந்து நேரத்தின் தொழுகையான பறுலுகளையும் மனதில் வேறு ஊசாட்டமான துர்வினியோகங்கள் இல்லாமல் தொழுதுக்கொள். இவைகளுக்கிடையிலே உன் இருதய அழுக்கை நீக்கி அதில் வாழும்படியாக ஐந்து அஞசிறில் ஒன்றாகிய ஆகாயத்தை நீ இன்னதென்று தெளிந்து கொண்டுவா. அப்போது உண்மையாக நீ பரிசுத்தவானாயாகுவாய், என்பது,

வெண்பா.

நீபெருகத் தின்றக்கால் நித்திரையுங் கோபமுமாம்
நீ சுவர்க்கத் தேகாமலேநிறுத்தும்—நீ பெருக
வுண்ணுமலுண்டே யுறங்கா திறையைமனக்
கண்ணுரக்காண்பாய் களித்து. (200)

## தாற்பரியம்.

ஞானத்திரவுகோலை நீ கைப்பற்ற வேண்டுமானல் ஒருகாரியஞ்செய்துக்கொள்? அதாவது வயிற்றுக்கு நிறப்பும் படியான ஆகாரத்தைக் கொடாதே அது உன்னை நித்திரை அளவிலும், கோபத்தளவிலும் கொண்டுபோய் விட்டுவிடும். இன்னும் இவைகளால் நீ சுவர்க்கலோகத்துக்குப் போகும்பாதையை அறவே மறந்து விடுவாய் ஆனபடியால் அந்த மனப்பேய்க்கு சற்று சிறுகச் சிறுகக் கொடுத்துக்கொண்டு வந்து நாளடைவில் நித்திரையும் போக்கடித்து உன் இருதயத்தின் வடிவாகிய பரிபூரணத்தை மனக்கண்ணால் கண்டு அங்கே நடக்கும் காட்சிகளை ஆனந்தமுடன் பார்த்துக் கொள்வாயாக. என்பது.

விருத்தம்.

முத்திநிலம்பச்சை முதல் நற்பவளமொன்றே
யத்திலொரு பச்சை நல்மனுதிய வன்றுனென்
றுற்றகலத்துளுரு வாயுறைந் துதித்த
குத்துபு முகியித்தீனை க்குறித்துருப்படையப்பாம் (201)

## தாற்பரியம்.

ஆதியிலின்று வெளியானது, முத்து அதில்நின்றும் வெளியானது பச்சை, அதில் நின்றும் வெளியானது பவளம் இந்த முச்சுடர்களில் நடுநிலைமையானது பச்சையானதினலே அந்தப்பச்சை சருவஜீவ கோடிகளுக்கும் கர்த்தாவாகிய அனாதியினுடைய வடிவம் ஆயிற்று அந்த வடிவத்தினின்றும் உதித்த பசிய ஒளிவாகிய நமது நாயகம் ஜகத் சற்குரு முகியித்தின் ஆண்டவர்களைத் தியானித்துக் கொள்ள வேண்டியது. என்பது.

பொய்யுமப்பனித் துளிபெருத் திறைவனுர்க்கு
உய்யும் நபியவ்விருளினுள் றசூலுவந்தே
வெய்யவனெனத் தகுமுகியித்தீன் பாதஞ்
செய்யெனுமுன் செய்யுமத் திறத்தினை நினைப்பாம் (202)



## தாற்பரியம்.

மிகுராஜ் உடைய இரவில் நபி அவர்கள் ஜிப்ரீல் உடையதானத்தைக் கடந்தவுடன் அங்கு வந்து தோற்றரவாகிய பெரும் வழியான இருள் திரையிலே பெருமானவர்களின் பாரதா விந்தத்தைச் சுமந்த நமது சற்குரு முகியித்தீன் ஆண்டவர்களின் பாதத்தை தியானம் பண்ணினுல் நாம் நினைக்கும் முன் எந்தகாரியமும் சித்தியடையும். என்பது.

திறத்தொடு தமக்குந்தெளி வாலகுமதுக்கு
முறைத்திரு மனத்திலிறை யுற்றிடுமக்காவி
லுறைப்பொடு வருத்துமச் சுடரினிலுதித்த
நிறைத் துறுமுகியித்தீனை நினைத் துருப்படைப்பாம். (203)

## தாற்பரியம்.

றப்புடைய ரகசியத்தில் மறைந்திருந்த ஜோதியானது ஆதமுடைய உல்கத்தின் கண்ணேபல ஜீவராசிகளாகப் பிரிந்து, அந்த ஜீவராசிகளை பராபரிக்கும் பொருட்டு அநேக தீர்க்க தரிசனங்களுடைய வல்ல பத்தில் திருப்பி வேதங்களைத் தனக்கு அத்தாட்சியாகக் காட்டிக் கடைசியாக மக்கமா நகரத்தில் அவதரித்துப் பிரகாசித்துக் கொண்டிருந்து, அப்பால் தனக்குள்ளிருந்து ஒரு ஒளியை வெளியாக்கி அதற்குத் தன் சுதந்தரங்களைக் கொடுத்து மறைந்த வஸ்துவாகிய உலகஞான குருவாகிய நமது முகியித்தீன் ஆண்டவர்களை நினைந்து எப்போதும் தியானம் பண்ணிக் கொள்ள வேண்டியது. என்பது.

வேறு.

இல்லல்லாவைத் தெரிசித் தாருமேற்றிறைஞ்ச வல்லிரேல்
நல்லலாபம் பெறுவீர் நாளை நகரவன்னியும் ஹறுஞ்
சொல்லொணுத வுண்மையைத் தொடர்ந்து கண்டிறைஞ்சிடார்
வல்லநாயனுனை நாளை வன்னிபுகுவதுண்மையே. (204)

## தாற்பரியம்.

இல்லல்லாஹறு என்று தியானத்தில் வைத்து வணங்க சத்துவம் படைத்தீர்களே யானல், மேலே வருகின்ற நகரத்தின நெருப்பானது, உங்களுக்கு ஹறுமாக இருக்கும், அல்லாமல் அதன்

வல்லமை யுள்ள றப்பை நேராகக் கண்டு வணக்கஞ் செய்யத் திறமை யில்லாத பாதக ஜனங்களுக்கு அல்லாவின் பேரில் சத்தியமாக அக்கினி கொழுந்து விட்டெரிகின்ற அந்த நரமானது காத்துக் கொண்டிருக்கிறது , என்பது.

பருதிதிங் களுருகி நின்றபழைய சோதிநாதனைக்
கருதியாரு மருவி நெஞ்சிற்க சடறுத்து நோக்கிடார்
குருதியாறு பெருகியோடுங் கொடியதோஷக் கானதிற்
சுருதிவந்து புகுவரென்று துய்யநாயனேதினன். (205)

தாற்பரியம்.

''சூரியகலையும், சந்திரகலையும் உருகி நிற்கும்படியான அந்த பழயகாலத்து வடிவாகிய றப்பை யாராவது உள்ளத்தில் வியாபகம் வைத்து, தேடிக்காணுமல் இருதயத்தில் கசடுவைத்து அலைவார்களாகில், அந்த முண்டங்கள் மேலைக்கு அவர்களை சூரியவெப்பத்தால் வேகடித்து அவர்களின் உரோமக்கால்களுக் கிடையிலே பிரிட்டோடும் இரத்த ஆற்றில் கிடந்து மிதக்கப்படுவார்கள் என்று அந்த பொய் ஜனங்கள் திட்டமாய் அரிந்து இருக்கட்டும் என்று அல்லா சொல்லி இருக்கின்ருன். என்பது.

அண்டர் முனிவரரக்கர்பேய் களவனிமாந்தர் யாவரும்
விண்டமறையுந்தேடுதிண்ணம் வேந்தனுரென்றறிந்திலேன் [கிடா
தொண்டர் தெரிசித்துணரும் பொருளைத் தொடர்ந்து கண்டிறைஞ்
வண்டர் நரகில்வந்து புகுவரென்று வள்ளலோதினர். (206)

தாற்பரியம்.

வானவர்களும், முனிவர்களுப், ஜின்களும், பூதங்களும், இன்னும், தேவதைகளும் இந்த மர்மத்தைக் கண்டு கொள்ள வேண்டுமென்று எவ்வளவோ பிரயாசைகள் எடுத்தும் இயலாமல் இருக்கின்றன. அப்பேர்ப்பட்ட ஆநந்த இரகசியத்தை நான் என் றப்பிடத்திலிருந்து மன்ருடி வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். இவ்வளவு அரியபிரயாசையின் பொருளை மேனி மினுக்காக விட்டு விட்டு வேடிக்கையிலும், விளையாட்டிலுப், காமக கூத்தாட்டத்திலும் காலங்கழிக்கும் மூடர்கள் கடைசியாக மீட்சியில்லாத கொடிய நரகத்தில் தடையில்லாமல் வந்து விழுவார்கள். என்பது.

உவ்வெழுத்து வித்ததாயு காரமூன்றும் வேருமா
யவ்வெழுத்திலே முளைத்தனேகனேக ரூபமாய்ச்
செவ்வெழுத் தனைத்தினுஞ் சிறந்த மந்திரத்தை நீர்
வவ்விலுற்றிருத்தியே மகிழ்ந்து பாருநும்முளே. (207)



தாற்பரியம்.

உகாரமென்னும் ஒளிவானது சமஸ்த உலகங்களுக்கும் வித்தாகவும், உஹதத்தானது அவர்களுக்கு வேராகவும், அலிபில் நின்றும் எழுத்து உலககோடிகளாகமீண்டு அதில் அநந்தாநந்தம் ஜலடங்களுடன் ஒன்றுக்கொன்று பேதாபேதப்பட்டு நிற்கின்ற சிவந்த எழுத்தாகிய சரீரத்தை உடைய ஜீவன்கள் யாவற்றிலும் சங்கிலித் தொடர்போல மருவிநின்ற ஒரு றப்பை, நீ நினைவில் வைத்து தாராட்டிப் பார். அப்போது உனக்குள்ளே ஸமஸ்த உலக ரகசிய வசியங்களுந் தெரியவரும், என்பது.

குருக்களற்ற ஞானமுங் குணங்களற்ற சீஷனுங்
கருக்களற்ற வித்தையுங்களங்கமுற்ற புத்தியு
முருக்கமற்ற நெஞ்சமு முணர்ச்சியற்ற திவையெல்லாம்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ச்சியற்ற தொக்குமே (208)

தாற்பரியம்

காமிலான சற்குரு வானவன் காண்பித்துக் கொடாதஞானங்களும், அவ்வித குருவானவன் காண்பித்தாலும் அதைநல்ல குணத்துடன் பெற்று அதன்படி நடவாத சீஷனுடைய பாடும், ஏதும் ஒரு கருவும் இல்லாமல் பண்ணுகிற மந்திரவேலைகளும், அழுக்கு நீங்காத புத்தியும், ஏதுவும் ஒருவஸ்துவை நினைத்து உருகாத மனங்களும், உணர்ச்சியில்லாத மூளையும், ஆக இவைகளெல்லாம் கூடி தன்னுடைய மர்மமான கலிமாவின் பொருளறியாதவனுடைய கெதியாகும். என்பது

வெண்ணீறற்றகோயிலும் விளக்கமற்ற செல்வமுங்
கண்ணீரற்ற கிருபையுங் கணவனற்றமங்கையுந்
தண்ணீரற்ற வாவியுந் தயங்குமிந் தவகையெல்லாம்
நண்ணியுற்றபொருளையாரும் நாட்டமற்ற தொக்குமே. (209)

தாற்பரியம்

திருநீறில்லாத கோயில் ஸ்தலங்களும், கண்களில் இருந்து நீர் வராத கிருபையும், விளக்கலங்காரமில்லாத வீடுகளும், தண்ணீரில்லாத தடாகங்களுப், புருஷனில்லாத பெண்டுகளும் ஆக இவை

கள் எல்லாம் நம்மிடத்தில் சதாவும் கலந்து உறவாடிக்கொண்டிருக்கும் ஆதிவஸ்துவான றப்பை அறிந்து கண்டு கொள்ளாத மடையர்களின் கெதிபோலாகும். என்பது.

கோயிலாவதே தடாகுளங் களாவதே தடா
பாவியான மூடனே நீ பாழிலேசெபிக்கிருய்
லாயிலாக இல்லல்லாஹு முகம்மதுற்றசூலுல்லாவென்
றெய்விலாமலோ தடாவுயர்ந்த சொற்கமதுவடா, (210)

தாற்பரியம்.

அடேமகனே, கோவிலென்பதும், குருக்கள், குளங்கள், தீர்த்தம், பூசைகள் என்பதும், பார்க்கும்போது அவைகளெல்லாம் வயிற்றுச் சாமிமார்கள் அந்தக்காலத்தில் எற்படுத்தியதல்லாமல் உண்மையில் எது? பாவத்தில் முழுகிப் போகின்றவனே! வீணுக்கு நீ ஜபிக்கிறதும், பூசிக்கிறதும் கடைசியில் பாழாகிவிடும். அவைகளை விட்டு விட்டு ஞான மந்திரமாகிய லாயிலாஹ இல்லல்லாஹு முகம்மதுற் றசூலுல்லாஹி யென்கிற கலிமாவை யோதி அதிலிருக்கின்ற உன்னை நீ உணர்ந்து தெளிந்துபார், உடனே சுவர்க்கத்தின் இன்பங்களை அநுபவிப்பாய்? என்பது.

கையில் நின்றபொருள் தன்னை காடதெங்குந் தேடுறீர்
மெய்யுள்ளந் செழுத்தமைஞ்சு பங்குநல் விண்ணோர்*ளும்
பொய்யுளந் தடைந்தவைம் புலன்களைந்து பூதமும்
பையுள் வந்திருக்கு துண்மைபார்த்தறிந்து கொள்ளுமே (211)

தாற்பரியம்.

கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கலைந்த ஒரு பெரும் பேயனைப்போல் உங்களுடைய இருதயத்தின் கண்ணே, றப்பை வைத்துக் கொண்டு காடு மலைகளெல்லாம் போய் அலைந்து தேடுகின்ற பைத்தியகார ஜனங்களே? கேளுங்கள் இந்த சரீரத்தின் கண்ணே ஐந்து தத்துவ எழுத்துக்கள் இருக்கின்றன. அவைகள் ஐந்து பூதங்களாக இருந்து சரீரத்தை நடத்துகின்றன. மலக்குகளும அந்தப்பூதங்களைக் கலந்துதான் இருக்கிறார்கள். இன்னும் அவைகளின் உ தா ர ண ம ா க ஐந்து புலன்களும் இருக்கின்றன. இந்தப்புலன்களும் பூதங்களும் உங்கள் இருதயத்தில் இருந்து வாழ்கின்ற றப்புடைய மனையில் காரியகாரர்களாக இருக்கின்றன. ஆனபடியால் அந்த உண்மையைப் பார்த்துக்கொண்டு வாழுங்கள். என்பது.

---

* இந்தப் பாடல் சாஹிபவர்கள் ஜீவிய சரித்திரத்தில் வருகின்றது.



பையுள்வந் துறைந்து நின்ற பரமரகசியங்களை
மெய்யுளாருங் காண்பதன்றி வேறுதேடிக் காணொணு
தையுமுக்கு ணத்தையொன்ற தாக்கிநம்ம கத்துளே
யுய்யுமஞ்செ ழுத்திலொன்றை யுற்றுயுணர்ந்து பாருமே (212)

தாற்பரியம்.

இருதயத்தில் வந்து கூடிக்கொண்டிருக்கிற ஆதிகாலத்து இரகசியங்களான அந்த உணர்ச்சிகளை இந்த சரீரம் இருக்கும் போது காண்க வேண்டுமே அன்றி மற்றப்படி எவ்விதத்திலும் இயலாது. அடிக்கடி மாறிமாறி வருகின்ற மூன்று குணங்களான ஆசை ஆணவம் மாய்கை யென்பவனை மாற்றி ஒன்றுபடுத்திக்கொண்டு, உங்களுடைய கல்புக்குள்ளே ஊசாடுகின்ற ஐந்து அஞசிறுகளில் ஒன்ருகிய ஆகாயம் என்னும் நினைவை செல்லவைத்து நீங்கள் பாருங்கள்! அப்போது நான் சொன்னது முழுவதும் உண்மையாகும். என்பது.

ஆறிரண்டா மங்குலம் மடர்ந்திரண்டு நாசியில்
ஈறதன்றி ராப்பகலு மியங்கியுச்சி யூடெழுந்
தூறியொப் புவமைகளன்றி யுட்கலந்த நாதனைத்
தேறுமோ ரெழுத்தினற் றெளிந்துபாரு மும்முளே (213)

தாற்பரியம்.

பனிரண்டு அங்குலம் அளவு கொண்டு இரண்டு நாசித் துவாரங்களுக்கும் உள்ளேயோடி, ஒருமுடி வன்னியில் இரவு பகலாக, நின்று உச்சிக்கு நடுவாகிய மகாமன்மகு மூதென்னும் புருவமத்தியில் வந்து பிரகாசிக்கும் வண்ணமாக உலாவிக் கொண்டிருக்கின்ற கருணையான றப்பை இன்னும், யாதொரு ஒப்பு உவமையில்லாமல் இருதயத்தில் வாசஞ் செய்கின்ற றகுமானை, உங்களைக் கடைத்தேற்றக்கூடியவோர் எழுத்தைக் கொண்டு உணர்ந்து பாருங்கள், என்பது.

குருவெழுந்த நிலைகள்மூலக் குகையில் நின்று சென்னிமட்
டுருவதன்றி ராப் கலினு ளோடிமீளும் நமதுமூக்
சிருபதங்கு லத்திலெட் டிசைந்தகத்துள் வாங்கியே
பொருவதன்றிப் பன்னிரண்டங் குலப்புறத்திலோடுமே. (214)

தாற்பரியம்.

நமது வாசியென்ற குருநாதனனது மூலக்குகையில் இருந்து எழுப்பி, சிரசு மட்டிலும், இரவும் பகலும் மூடிக்கொண்டிருக்கின்றது. அதானது கண்டத்திற்கு மேல் எட்டு அங்குலப் ஒடி, இருதயக் கமலத்தில் எட்டங்குலம் இறங்கி வாங்கி நிற்கின்றது. இதன்றி வெளியில் பன்னிரண்டு அங்குலம் ஒடி மீள்கின்றது. இதன் தெளிவான விபரம் நாம் இங்கே சொல்ல மாட்டோம் காமிலான பீர்களைப் பிடித்துக் கேட்கவும், என்பது.

இந்தவாற தாகச்சற்று மிடைவிடாதி ராப்பகல்
நித்தமாக வோடிமீளும் நிகரிலாதோ னருளினல்
சிந்திடமலேகநாயன் திக்கிரேட லற்றபின்
முந்தமான்வ ரென்றறிந்து மூயலுநமதுள் ளருளையே. (215)

தாற்பரியம்.

மேலே காட்டிய விதமாக, கொஞ்சமாகிலும் ஒய்வில்லாமல் இரவு பகலாக நம் வாசியானது றப்புடைய கட்டளைப் பிரகாரம் ஒடிமீள்கின்றது. இத்தனை யருமையான உறவாளியை அவன் சொன்ன பரம ரகசியமான. மந்திரத்தால் நேசித்து வசியப்படுத்தாதவர்களெல்லாம் கடைசியாக தன்சரீரத்தைவிட நேரிடும். என்பது.

நலத்தோடன்னையும் பிதாவும் நாடியிச்சைகூடுமச்
சலத்திருலெனைப் படைத்த தப்பிரானை நப்பியைம்
புலத்தை வென்றடக்கியைந்து பூதமூக்குணத்தையும்
மலத்தையும் மடக்க வல்லமாந்தர் காண்பதுண்மையே (216)

தாற்பரியம்.

நம்முடைய தாயும், தகப்பனும் காமங்கொண்டு நினைத்த நினைப்பின் இஷ்கினல் வீடு கூடின ஆசையில் இருந்து வழிந்து வெளியாகிய ஒரு சிறிதான இந்திரிய ஜலத்தால் நப்மை இத்தனை பெரிய சரீரங்களாகஎளரகப் படைப்பித்த இணையில்லாத கருணைகர வஸ்தாகிய அந்த றப்பை சந்தேஹ மில்லாமல் நப்பி, ஐந்து புலன்களையும் வென்று, காமியம், ஆங்காரம், மாய்கை என்னும் முக்குணத்தையும் அடக்கி, பூதகிருத்தியங்களையும் வென்று கெட்ட என்



ணங்களைக் கடந்து ஏகோபித்திருக்கின்ற வல்லமையானவர்களான தாதாக்கள் தன்னைக்கண்டு தரித்திரியந் தீர்வார்கள் என்பதுநிச்சயமான உண்மை யென்று நான் உறுதியாகச்சொல்வேன். என்பது.

வேறு.

இருபதொடிரண்டர் யிரத்தினுலுறைந்தே
கருதரு நல்மூலக் கருத்துளுருவாகித்
திருவருள வில்வந்தொளி சிரத்தளவுசென்று
மருவுதுமிளோடவணில வந்தனனிறைந்தே. (217)

தாறபரியம்.

அத்த பரிபூரண தத்துவமாகிய றப்பின் வெளிச்சமானது, யிருபத்தி ரண்டாயிரம் நாடிகள் நரம்புகளுக்கும் தனுவைக்கொத்து. கருவான மூலத்தில் நிற்றும் உருவாகி, அங்கிருநது சிரசாகியதும், உச்சியின் நடுத்தலமாகியதும் ஆனபுருவ மத்தியில்வந்து பிரகாசித்து அதிகாரம்பண்ணி இருதயத்தில் உறைந்திருக்கின்றது என்பது.

நிறைந்தவனிரந்தரம் நினைந்தெமை வனைந்தே
மறைந்தவன் மொழிந்த மவுனத் தொடுருவாகி
யறைந்தவனிறங்களு பத்தாறேடுமுள்ளத்
துறைந்தவனுவந்ததை யுரைத்திட வொணுதே. (218)

தாற்பரியம்.

இவ்விதம் நிறைந்த பூரணமானது பதினறு கலைகளான சந்திரனேடும், சூரியனேடும், ரகித்து, பதினறு கலையும் பதினறு சுவாச சரங்களாகப்பிரித்து, சரீரத்தில் வுலாவிக்கொண்டு ஒரு உலகத்தையாவது தன்னைவிட்டும் விலாகாது. பரிபாலித்து வருகின்றது. இதையாருக்கும் மர்மத்தை உடைத்துச் சொல்லப்படாது ஆனதால் அடங்குகிறேன். என்பது.

உறைத்திட வொணுத வொளிமுகூடருமொன்ருய்ச்
சிரத்திடை விழித் தெரிசனைக்கு ளுருவாகிப்
பரத்தவுயிருக்குளுடல் பணித்திடவுள்ளத்தில்
இறைத்த வசனத்தியில் இசைத்திட வொண்ணுதே. (219)

## தாற்பரியம்.

என்றாலும், சற்று சயிக்கினை செய்கிறேன். அந்த றப்பானது முச்சுடர்களும் கூடி ஒன்றாக ஹிக்மத்தால் திரண்டு, சரீரத்தின் பிரதானயுலகமாகிய இரண்டு நேத்திரங்களுக்குள்ளும், வந்து பிரகாசித்து நிற்கின்றது. அங்கிருந்து சரீரத்தின் பாதாள உலகமாகிய, கீழ் மண்டலங்களுக்காக இருதயத்தில் வந்து பாதுகாக்கின்றது. அதன் விபரத்தையும் சொல்லப்படாது. என்பது.

இச்சைத்திரு விழிக்கிடை யெதிர்த்திடு மதற்குள்
வசித்தெழு மணங்கள் மது ரங்கள் கருவுள்ளத்
திசைத்திடுதல் கருண்டருசில் நின்றருள் சொரிந்தே
யுசத்திறைவனென்றவ முனுலாவிய நிற்பானே. (220)

## தாற்பரியம்.

இரண்டு நேத்திரங்களுக் குள்ளும், ஒளிமயமாக நின்றிலங்கி அதனுள்ளே தேவாமிர் தங்களும், பரிமள வாசனைகளும், கமழும் படியாக ஒரு கோலமாளிகை வரும். அதுதான் அறுஷு, அப்போது உன்னைக்கலந்து கொள்ளும்படியாக றப்பானவன், ஆசையுடன் உலாவிக்குலாவி வருவான், என்பது.

நின்றிறைவனெந்தநினைவுக்குள் நினைவாய்வந்
தண்டமறியாதருளணிந் துவறதாகித்
தொண்டரிருகண்ணிடை துவங்கிடவணங்கிக்
கண்டனொரு வட்டமுயர் கல்புறமகிழ்ந்தே. (221)

## தாற்பரியற்ம்

நானும் அவ்விதம் வந்த றப்பை எவ்விதந் தெரிசித்தேனென்றால்:- என் நினைவானது நினைத்துக்கொண்டிருக்கும்போது, அந்த நினைவில் நினைவாக வந்தான். அப்படி வந்தவன் தன் மலக்குகளுக்கும் தெரியாதவனாக வந்தான். வந்தவன் என்னை ரொம்பவும் காமமுகத்துடன் அழைத்து ஒன்றுபடுத்தி யணைந்தான். அணைந்தவன் உலகமெல்லாவற்றிலும் தெரிந்தான். என் கல்பிலும் கண்ணிலும் இருந்தான். அவனது இந்திரஜாலத்தை யெவனால் காணக் கூடும் என்று, ஆனந்தப்பட்டுவணங்கிக்கொண்டேன். இந்தப்பேச்சானது, அந்தத் துறையில் உள்ளவர்களுக் கன்றி மற்றவர்களுக்கு விளங்காது. என்பது.



## வேறு.

தேனுமாவுஞ் சீனிபாலுஞ் செங்கனி வாழைக்கனியு மொன்
றானமந்திர முட்கமலத் தருளுஞ் சேர்த்துக் குழைத்யான்
றானுமவனு மருந்தஞானத் தலமதையெம் மிறைவன்
றீனமாயை முன்றும் போயெமது வந்து வந்ததே. (222)

## தாற்பரியம்.

அவ்விதம் வந்த றப்பானவன் என்னுடன் கலந்த விதமாவது: எப்படியென்றால் வாழை, தேமா, பலாவென்னும் முக்கனியும், தேனும் குழைத்துத் திரட்டி, தேனை ஊற்றிப் பிசைந்து நானும் அவனும் சம்பிரம உல்லாச சல்லாபமாக இருந்து விசனமற்று தின்றோம். இத்துடன் இருதய கமலத்தின் அமிர்தமாகிய ஸஞ்ஜபிலும் தீம்பானங்களும் சேர்த்து அருந்தி ஆநந்த வெள்ளத்தில் ஒய்யாரமாக மிதந்தோம். அப்பால் நானும் அவனும் இஷ்கில் இருந்து வெந்து உருகி, ஒன்றாய் ரஹித்தோம். அப்பால் என்ன பேச்சிருக்கின்றது, என்ன ஞானமிருக்கின்றது? என்ன முடிவிருக்கின்றது என்பது.

எழுநம்மாதிமவுன மில்லென் றிருதயக் கண்ணாடியின்
ஒழுகு நீதிதரு மெய்ஞ்ஞானத் தொளி திரண்டரூபமாங்
கழுகண்ணாறு தாமன்னிரி லாறு பலவு மருள் செய்தே
தொழுமன்னலிலஃ தென்னேந் சுஜூதுகண்டுவந்ததே (223)

## தாற்பரியம்.

ஆதியுடைய ரகசியத்தை ஒருவன் காணவேண்டுமானால், அவன் வாயைப் பிதற்றாமல் மௌனஞ் சாதித்து தனது இருதயத்தின் கண்ணாடியின் பேரிலேயே நோக்கமுடையவனாக இருக்க வேண்டும். அத்துடன் உலகவாசிகள் பேரிலும், ஜீவராசிகள் பேரிலும் கருணையுள்ளவனாக இருக்கவேண்டும். நீதியை அனுத்தனையும் தள்ளாதவனாகவும் இருக்கவேண்டும். அப்படியிருப்பானானால் அவனிடம் ஆதியில் பலபல சொரூபங்களுடன் தெரிசனையாகத் தோன்றும் அவ்விதம் கண்டவுடன் ஸுஜூது செய்யவேண்டும். என்பது.

உகந்தெனக்குளொன் றதான வுட்கலந்த சோதியைப்
பகர்ந்திடிற் பராபரத்தி லுத்த மான மந்திரம்
மகிழ்ந்துரைக் கொணாதுளத்துள் வன்னிகாலுங் கூடியே
கனிந்ததைத் தெளிந்துகாண்பர் காட்டொணாதுகாணுமே (224)

### தாற்பரியம்.

உன்னை உகந்து றாஹெறன்னும் ஜோதியை உல்லுள் அமைத்து நடத்துகின்ற வடிவாகிய றப்பனை யாராலுசொல்ல முடியாத மணி மந்திரமாகிய அந்த எழுத்தால் அறியவே நெருப்பும், காற்றும் ஒன்று கூடி இருதயத்தில் எப்படியும் சொல்லமுடியாத மாதிரியாக தோன்றும். அப்படிதோன்றினவுடன் அவ்விரண்டும் போக மீதம் இருப்பது சொல்லக் கூடாது. என்னதென்றும் உன்புத்தியே சொல்லும் என்பது.

காட்டொணாது காணுகின்ற காரண நம்றுச்சியி
லூட்டொணா தென்றுணர்வுதந்த வூறுணிக்குள் யாவருஞ்
சூட்டொணாது மாமலர் சுரந்தெழுந்தமதுவையுண்
டாட்டொணாது தென்ருடும் வண்டலைந்திடாது காணுமே. (224)

### தாற்பரியம்.

யாருங்காட்டாமல் நம்முடைய விடாமுயர்ச்சியால் வந்து பிரகாசிக்கின்ற மஉஷூக்கை. சரீரத்தின் பிரதான கருவியாகிய உச்சியின் நிலையென்கின்ற ஊறுணிக்குள்ளேஒருவருப் கொய்து அணியமுடியாத மகாமகத்வம் பொருந்திய மலர் ஒன்றிருக்கின்றது. அந்த மலரில் துளிக்கின்ற தேனாகிய அரிவை கிரஹிக்கும் வண்டுபோல் நம் சுவாசமானது உலாவிவரும். அதைப்பாருங்கள்? ஆநந்தியுங்கள்? என்பது.

அலைந்திடாதசைந்திடா தனைவருக்குமாகிநின்
றலைந்திடாது வந்திடாது வந்த மேலவர்க்குளங்
கலைந்திடாத மூலநற் கருத்திலுற்ற மந்திரந்
தொலைந்திடாது வந்தெழுந்த சோதி நின்றிலங்குமே. (225)

### தாற்பரியம்.

நீ அந்த மூலமந்திரமாகிய வாசியை நினைவுடன் பழகிக்கொண்டால் அது எந்தநாளும் உன்னைவிட்டும் பெயராது. அசையாது. உன் சரீரத்தை உலையவிடாது. உன்னையன்றி மற்றொன்றை உகக்காது உன்னை யெப்போதுந் தன் மனதில் வைத்து தராட்டிப் பாராட்டும். ஒரு நாளும் உன்னை விட்டு, இன்னொரு சரீரத்தையெ



டாது. சதா காலமும் நிலையாகிவிடும். நீயெங்கே போனாலும் அங்கெல்லாம் அது உன் கூடவே வொளிவு பந்தத்துடன் வரும். என்பது.

இலங்குமா மணிக்குள்வந் தெழுந்த காலத்துயிர்கள்வந்
திலங்குமானிடக்குளான மூலமந்திரம்
பலன்களான பேறுநற் பதவியுற்ற தெம்மூளந்
துலங்கு ஞானந்திருவரங்கச் சோதிவட்டமானதே. (227)

### தாற்பரியம்.

இந்த மாயமான உலகத்தில் சரீரமெடுத்து வந்திருக்கின்ற ஜீவ ஜந்துக்களிளெல்லாம் ஒட்டிக்கொண்டிருக்கின்ற அநேக ஆசையுள்ள அந்த ஜீவமந்திரமானது. நான் அதைப் பலாபலன்களுடன் கலந்து கொண்டபிறகு அது என்னிடத்தில் பெரியகிருபையுடைய தேவஒளிவாக என்னை வளைந்து கொண்டது. என்பது.

வட்டமான தெட்டுமின்ப வடிவுசத்தி சிவனுமாம்
பட்டமான தெட்டுருப் பரந்தெழும் பரஞ்சுடர்
நட்டமான தெட்டுநன்மை தீமையற்றஞானமா
யிட்டுமாறுமெட்டுநம் மிருதயத்திற்காண்பதே. (228)

### தாற்பரியம்.

அதுவளைந்து கொண்ட வட்டத்தில் எட்டு அதிகாரங்கள் இருக்கின்றன. இன்பம், அழகு, சத்தி. சிவன் முதலானவைகளாகும். அதற்கு உருக்கள் எட்டு. உள்ளது அதானது, இவ்வுலகத்தில் பரந்து விசாலித்துக் கிடக்கின்ற ஒளிவுகளாகும். அதில் நஷ்டமுள்ளது எட்டாம். அவைகள், நன்மையு, தீமையுமில்லாத ஞானங்களான பொய்களாகும். இந்த வகைகளெல்லாம் நம்முடைய இருதயத்திற் கண்டுகொள்ளலாம். என்பது.

இருதயத்தையெவ்வுயிர்க்கு விலங்குகின்ற சோதியை
யுறுதிசற்றொழிந்திடாமாலுயிரை வைத்துணர்த்தியே
யறுதிசித்தமருளுநந்தி யதிகரூபத்தொளிதரும்
பெறுதி முற்றுமருள் மெய்ஞ்ஞானப் பேறுபெற்றுவாழ்வரே

### தாற்பரியம்.

இருதயத்தில் எந்த உயிர்களையும் வைத்துப் பாதகாக்கும் வடிவத்தை எந்தவிதத்திலும் மறத்திடாமல் உற்றிகொண்டு நினைத்து சிந்திக்கும் மஹாத்மாக்கள். இருலோகத்திலும் ஞானவொளிவு பிரகாசிக்கும் படியாக இருப்பார்கள், என்பது.

வாழ்வுமு ன்றுமாயையான் வருத்தறு சியாவர்குந்
தாழ்வுமுன்றலாதிலைத் தலைமையைக்காய்ப்பகரவுஞ்
சாலுமுன்றெழுத்திலொன்ற தாலெழுந்தங்கடிதலை
வேழ்விமூன்றிலொன்றதால் விளங்கும் ஞானபோதரே. (230)

தாற்பரியம்.

இந்தப் பொய்யான உலகத்திலுள்ள வாழ்வானது. மாயை முதலிய மூன்று மலங்களால் ஒடியடைகின்றது. மேன்மையான றப்பை ஆசித்து வணங்கி யெக்காலமும் ஜீவித்திருக்கின்ற. வாழ்வும் அதே முன்றெழுத்தில் நிற்கின்றது தன்னையறிந்துகொள்வதும மூன்றெழுத்தி லொன்ருகிய ஹூவில்தான் இருக்கின்றது, என்று அந்த ஞானவான்கள் அறிவார்கள், என்பது

ஞானமணிமாலைதனை நாவிலுறப்பேசிக்
கோனுணர்விலுறுதி யாக்கொளுமவர்க்கோ
ரீனமனுகாதிடரிலைப் பிணியு நீங்கு
மானமுடையிரிதனின் வகையறியுமெனவே. (231)

தாற்பரியம்.

நம்முடைய ஞானமணிமாலையை நல்லபடியாகப் புகழ்ந்து அதன்படி சிறிதாகிலும் நடந்த சீதேவிமக்கள் யாவர்க்கும். ஈனம், கண்டம், வியாதி முதலான எதுவும் வந்தணுகாது, என்று நாம் உறுதியாக ஆசீர் வதிக்கின்றோம். அதுபோல்தான் இதன் தார் பரிய உரையையும் உகக்கவேண்டும். என்பது.

தானவனுரைத்தனனென் றகும்துரைகேட்டு
மேனவமுகியித்தீன் விளம்பினாதுபோல்
யானுமெனுளத்திலறி வாலறிந்துநல்ல
தீனவர்க்கிசைந்தனன் றிருக்காட்சி தரவே (232)

தாற்பரியம்.

நான் செய்த இந்த ஞானமணிமாலையிலுள்ள அர்த்தங்களான வைகள் அடங்கலும் என்னுடை இக்தியாருக்கொன்றும் செய்யவே இல்லை, மிஃருஜியில் நபியவர்கள் றப்புடன்கலந்து பேசியபோது



ரகசியம்பேசினர்களே! அவைகளை அவர்கள் தங்கள் பேரனார்நமது உலக சற்குரு தயாள் ரஞ்சித கௌதுல் அஉலம் செய்யிது முகியித்தீன் அப்துல் காதிறுல்ஜீலானி ஆண்டவர்களுக்குச் சொல்ல அவர்கள் எனக்கருளினர்கள். அதனால் நான் பலன் அடைந்த நிமித்தத்தாலே பாபம் ஏழைகளான உலகத்தார்களுக்குச் சொன்னேன் நம்பினவர்கள் திருக்காட்சி யடைவார்கள். நம்பாத ஏமாளிகள் நரகயாதனை யடைவார்கள். என்பது.

வேறு.

தந்தமதுளத்தி லிறைவிண்ட வசனங்கள் தவிரா
தெழுதிவைத் தவர்களும்
வந்திதை படித்து மஅனுவுடனுளத்தில் மகிழ்வான
தலீல்செய்யு மவரும்
முந்தவிதனைச் செவிபடுத்துமவரும் முறையின்
முற்றுமுரைகேட்குமவரும்
அந்தநயினரின் சபாஅத்தோடு ஜென்னத்து
நகரேசடணிதீதாறு பெறுவார். (233)

தாற்பரியம்.

இந்த ஞானமணிமாலையை ஒவ்வொரு உலகவாசிகளும் மனக் கசடில்லாமல் இருதயத்தில் வைத்தவர்களும், இன்னமும், இதின் சுவடிகளைப் பிழையில்லாமல் எழுதிவைத்தவர்களும், இம்மாலையை ஜனங்களுக்குப் போதனை பண்ணும் பொருட்டு தப்பில்லாமல் அர்த்தம் செய்கின்ற குருமார்களும், அதனைக்கேட்கும் சீஷர்களும், மற்ற இதர ஜனங்களும், நமது வள்ளான ஒளிவான தெளிவான உலக மகாசர்குருவான நாயகம் றசூலுல்லாகி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஷபா அத்துக்குப் பாத்திரவாளிகளா கின்றதுடனே லிகாவையும் தெரிசிப்பார்கள். என்பது.

வெண்பா.

பெருமைக் குரியோனைப் பிறப்பிறப்பொன் றில்லானை
யருமைப் பெரியோனென் றுர்சொன்னர்—பெருமையுறுங்
காணிநவகோடிதநம் ஹக்கா மெய்ஞ்ஞானமரைப்
பேணியுளத்தே பிடி. (234)

## தாற்பரியம்.

பெருமை யென்பதற்கு உரிமையான றகுமானே. இன்னும் அவனே ஒருவர் பெறவும் அவன் ஒருவிதத்தால் இறக்கவும் இயலாத அதீதமயமான றப்பனே. அருமையுள்ளவன் பெரியவன் அல்லாகு அக்பர். என்று சொன்னதனுல் ஒருகாரியமும் பலியாது. இந்த உலகம் யாவையும் உனக்குச் சுயாட்சியாக்கித் தருகின்ற அந்த கலிமா மந்திரத்தால் இருதயத்தை அறிந்து பிடித்துக் கொள், என்பது.

கட்டளைக் கலித்துறை.

பெறும்பதினு லெழுத் தாலுருவாகிப் பிறக்குமல
குறுங்கரும்பாறையின் மேற்றினமான மொரோய்வின் றியூர்ந்
தெறும்பதினுலுகறுப்பொளிகாணு மிதயத்தழுக்
கறும்பதினலொடு நான்கு மொன்ருகப் பிடித்தவர்க்கே. (235)

## தாற்பரியம்.

இந்த ஈரேழுலோகங்களும் சொந்தமாக இருக்கும். அது எவருக்கென்ருல் – உண்மையான கருவியாகிய கலிமாவில்* சிறுக்கையும், குபிரையும் விட்டு நடுவே இருக்கும் தத்துவத்தை மனக்கசடு வஞ்சகமில்லாமல் அறிந்து ஒருமையானவர்களான ஒலிமார்களுக்கு என்பது.

அருளொரு நாளென்றுக் காறெட்டு மூன்றெழுத்தாகுமதுன்
ளிருளரும் பகலுச்சி நேரமுமகரி பொடிஷாவருமளவும்
பொருவறுமசஞெடு லுகர் பஜிரளவும் பரிபூரணமாய்
வெருளறுமாறெட்டு நாள்குறையாது விரும்புவர்க்கே. (236)

## தாற்பரியம்.

பரிபூரணமான றகுமானே யறிகின்ற நாதாக்களுக்கு அருளாளது அன்ருடம் பதினுலு எழுத்தாகப் பிரிந்து வரும். அந்த எழுத்துள்ளே, பகல், உச்சி, அசறு, மகரிபு, இஷா, லுகறு, பஜிறு அளவும் குறையாமல் இறங்கும், என்பது.

விரும்பு வருள்ளத் திலங்கு மெய்ஞ்ஞான விளக்கொளியைச்
சுரும்பதினுலுட் டலங்களென்றேகிச் சூழன்றது போ

* சிறுக்கு. என்பது மனவேற்றுமை. ‡ குபிர். என்பது இருவினை



லரும்பலத்துள்ளந் தருளாலிறையவனைத் தொழுவோர்க்
கிரு'ம்பிளம்பொன் வெகுமாற்றுறையாணிக் கிசைதிடுமே (237)

## தாற்பரியம்.

நாம் விரும்பி இருக்கின்ற மெஞ்ஞானத்தின் விளக்கின் சுடரான வெளிச்சத்தை, உள்ளத்தில் வைத்துக்கண்டு தொழுபவர்களின் ஜடலங்களானது, புடத்தில் வைத்துப் பழுத்த பசும் பொன்போல் பிரகாசிக்கும், என்பது.

விருத்தம்.

இசைந்திறைவனும்பதி னெட்டுமொருமூச்சில்
வசைந்தெழு மெஞ்ஞானமணி மாலைக்கொடுத்தே
முசிந்ததனி முற்றுமுசி யாதிதை மொழிந்தோர்க்
குசந்ததலமீந்தரு ளுவந்துறகுமானே. (238)

## தாற்பரியம்.

அல்லா உடைய திருநாமத்தைக்கொண்டு, ஒரே நிஷ்டையில் இந்த ஞானமணிமாலையைச் செய்தேன். ஆனதால் இதை முடிய அறிந்து தொழுபவர்களுக்கு றகுமானே உன்னுடைய உயர் தலிமாகிய லிகாவைக் காட்டியருள்வாயாக. என்பது.

மாஞெருகலைக்குருகி வரும்வழியின்மீதே
தீனவரெதிர்த்தடிமை செய்தகமலத்துன்
ஈனமதகற்றியிரு பார்வையும் நிறைந்த
ஞானமணிமாலை நழுவாதவனிசைத்தான். (239)

## தாற்பரியம்.

ஒருமானுடைய துன்பத்தையகற்றிவிட்டவர்களான நபியவர்களின் கட்டளைப்பிரகாரம் தீனவர்களான நமது சகோதரர்கள் இருதயத்தையறியும் பொருட்டு இரண்டு நேத்திரங்களின் வடிவையும் கண்டவனுகிய நான் இந்த ஞானமணிமாலையைச் செய்தேன் என்பது

தானவனல்லாமலொரு தானவனமைத்த
வனவநில்லாமலொரு வானவரெழுந்தே
தீனவர்களோடு பகை செய்வதையறுககும்
ஞான வடிவாளென் நமக்கிறையுரைத்தான். (240)

## தாற்பரியம்.

தனக்கிணையில்லாதவனுகித தனித்த அல்லாகுத் தஆலா உற்பத்தி செய்த வானவர்களல்லாத வானவனுகிய அஜாஸில் உடைய

பகையை அறுத்து வென்று கொள்ளும்படியாக அந்த மந்திரத்தை நமக்கு அல்லா ஒரு ஞானவாளயுதம் போல் சொல்லினன் என்பது.

நமக்குள்ளவாகுமூவர் ஞானமதுபோலாம்
நிமக்களவு நீரிளவு நீரிலிட மேலான்
றமக்குள்ளவாகி யொளிர்சர மொழிபரந்தே
யெமகுள்ளவாகியொளி யெங்குமுறைந்தானே. (241)

## தாற்பரியம்

நம்முடைய ஞானம் எவ்வளவோ அவ்வளவு ஆகவும், நம்முடைய நீதியான குணங்கள் எவ்வளவோ அவ்வளவு குணமாகவும், நம்முடைய உண்மைகள் எவ்வளவோ அவ்வளவு உண்மைகளாகவும் நமக்குள்ளே ஒளிவாக சரீரமாதிக்கமும் பரவியிருக்கிறது. அந்த சிர்ருகியறப்பு என்பது.

## வேறு.

எங்குமென்றுமுள்ளவ னெவர்க்குஞ் சிவனுகிநின்
றங்கமான துட்கலந் தனேகருபரூபமாய்த்
தங்கு நம்மனத்துளே தரித்தஞானமாமணி
முங்குமாயாறப்பில் ஆலமீன் முடிந்த ஞற்றுமே. (242)

## தாற்பரியம்.

எந்தக்காலமும் அழியாது ஜீவித்திருக்கின்ற அந்த றப்பானது இந்த சரீரத்தில் ஜீவ ஆத்மாவாக நின்று கொண்டு அநேக அநேகமான ரூபஹிக்மத்தோடும் இருக்கின்றது போல மனதில் ஊசாடும் கருமங்களான ஞானவிஷயங்களை அடக்கி இந்த ஞானமணிமாலை முடிந்தது. உலகத்தார் யாவருக்கும் கிருபை செய்தருள்வான் றப்புல் ஆலமீனன றகுமான், என்பது.

## ஞானமணிமாலை தாற்பரிய உரை

ஸம்பூரணமாயிற்று.

இங்ஙனம் :
செவ்வல்மாநகரம்
எம். ஏ. நெயினு முகம்மதுப் பாவலர்.

---

பிஸ்மில்லாஹி,

இது

# மஅரிபத்துமாலை

## பொழிப்புரை.

★ —— (★) —— ★

இதில்

தற்கலை மெய்ஞ்ஞான சொருபரான குதுபுல் ஆலம்
ஹலரத்து பீர்முகம்மது சாகிபு ஒலியுல்லா
அவர்கள் பாடிய
மஅரிபத்துமாலையும்,

அதற்கு
பாண்டிமண்டலம் செவ்வல் மாநகரம் மஹா வித்துவான்
ஸ்ரீல்ஸ்ரீ
எம். ஏ. நெய்னு முகம்மதுப் பாவலர்
எழுதிய பொழிப்புரையும் அடங்கியிருக்கின்றன.

இதனை மதுருஸ் திருவல்லிக்கேணி,
யூனுனி மதாரிய்யா மெடிக்கல் ஸ்டோரின்
சொந்தக்காரராகிய மகாகனம் ஸ்ரீமான்
எம். ஏ. ஷேக்மதார் சாஹிபு அண்டு சன்ஸ்,
அவர்களால்

தமது
மதாரிய்யா பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

Copy Right | 2-ம் பதிப்பு | Registered.
இதன் விலை] | 1925. | [ரு. 2-0-0

பிஸ்மில்லாஹி.

## பீர்முகம்மது ஸாகிபு ஒலியுல்லா அவர்களின்

# ஜீவியசரித்திரம்

மகா மகத்துவமும், வரிசையும் பொருந்திய மெய்ஞ்ஞானசொரு பரான ஹலரத்து ஆரிபுபில்லாஹி பீர்முகம்மது சாகிபு ஒலியுல்லா அவர்கள் பிறந்து வளர்ந்த ஊரானது:—தென்னிந்தியாவின் முக்கிய பாகங்களில் இருக்கும் அநேக ஜில்லாக்களில் நீர்வளம் நிலவளங்களிற் சிறந்துவிளங்கிய திருநெல்வேலி ஜில்லாவின் தென்மேற்காகவும், ஆகாய கெங்கையாகிய தாம்பிரபருணி யென்னும் மஹா நதியானதுபிரவாகித்து ஜனனே கூடுந்தலமான பாபநாசத்தின் கீழ்புறமாகவும், பொதிகைமாமலையின் அடிவாரமாகவும், வடமலையற்ளத்தின் கணவாய் எல்லையாகிய ஆயிரங் காவுக்கு வழிமுனையாகவும் இருக்கின்ற தென்காசி யென்று சொல்லப்படும். இந்தத் தென்காசி நகரத்தில் வீரசைவ வெள்ளாளர்களும், சைவ முதலிமார்களும், பராக்ரமசாலிகளான பாளையப்பட்டு மறவர்களும், நெசவுத் தொழில் செய்கின்ற கைக்களர்களும், பட்டு நூல் ஜாதியர்களும், வர்த்தகங்கள் பயிர் ஜீவனுதிகள் செய்கின்ற முஹம்மதியர்களுமாக அநேக ஆயிரஞ் ஜனங்கள் வாசஞ்செய்கின்றார்கள். இந்த நகரத்தில் பிரமாண்டமான ஒரு சிவமதக்கோவிலும், சதுராகாரத்திற்கு இரண்டு மைல் தூரமுள்ள ஒரு தெர்ப்பைக்குளமும் உண்டு. 400 வருடங்களுக்குமுன் பரதகண்ட முழுமைக்கும் இராஜநகரமான டில்லி யென்னும் ★ அஸ்தினபுரியை அரசாக்ஷி செய்தவராகிய அவ்ரங்கசிப் என்கிற முஹம்மதிய சக்ரவர்த்தி காசி நகரத்தை முற்றிகை யிட்டு பிடித்தபோது, அவரது சைனியங்களின் கொடுமைக்குத் தாங்காமல் வலைசைவாங்கித் தெரிபட்டோடிவந்த ரஜபுத்ர பார்ப்பார்கள் முக்கிய பாகம் இந்தத் தெர்ப்பைக் குளத்தைச் சுற்றி வாசஞ் செய்கிறார்கள். அவர்கள் வசிக்கும் ஸ்தலங்களுக்கு "காசி அக்கிரா

---

★ சந்திரகுப்தன் அரசாண்ட காலத்தில் இந்தப்பெயர் உண்டாயிற்று

ஹரம்'' என்று சொல்லப்படுகிறது. இந்துக்களுக்கு மகா முக்கிய முக்கிய திருஸ்தலமான காசி நகரத்தில் நின்றும் வெளிப்பட்ட இராஜவம்மிஷப் பாப்பார்கள் ஆதியில்வந்து குடியேறின காரணத்தாலே இந்த நகரத்திற்கு (தென்காசி) என்று பெயர் வழங்கிற்று.

இதுநிற்க இங்கே நான் இந்த ஞானமணிமாலையைச் செய்த மகா மெய்ஞ்ஞான சொரூபரான தக்கலைப் பீர் முகம்மது சாகிபு ஒலியுல்லா அவர்களின் ஜீவிய சரித்திரத்தில் நின்றும் சிலதைமாத்திரம் சொல்ல வந்திருக்கிறேன்.

சாகிபவர்களின் இயற்கை ஊராகிய தென்காசியிலிருந்து வந்த பிரயாணிகளும், நூற்றுக்கு மேலிட்ட வயதுள்ளவர்களுமான அநேக வயோதிபர்களின் வாய்மொழியாக நான் கேட்டிருக்கிறேன். சாகிபவர்களின் தகப்பனார் தென்காசியிலுள்ள பூர்வீக முகம்மதியக் கோத்திரத்தார்களில் உள்ளவர்கள் அவர்கள் பெயர் சின்ன மலுக்கர் என்று சொல்லப்படும் சாகிபவர்கள் பிறந்த காலங்களில் நடந்த அற்புதாதி சரிதங்கள் எதுவும் எழுதவேணுமானால் அவர்கள் பூர்வீக சரித்திரம் எனக்கு நல்லதெளிவாய் தெரியாது சாகிபவர்கள் ஹலரத்து சுல்தானுல் ஆரிபீன் செய்யிது அகுமதுல் கபீறு றபியல்லாஹு அன்ஹு அவர்களின் கலிபாக்களிலுள்ளவர்கள் என்று சிலர்சொல்லுகிறார்கள். அது அப்படியிராது. ஏனென்றால் சுல்தானுல் ஆரிபீன் அவர்கள் காலம் இற்றைக்கு 800-வருடங்களுக்கு முன்னுள்ளது. சுல்தான் ஜமாலுத்தீன் அவர்கள் ஈஜிப்ற்றிலுள்ள காஹீருவிலிருந்து தென்பாண்டி மண்டலத்தின் மீது படையெடுத்து வந்ததில் இருந்துதான் தென்னிந்திய முஸ்லீம்களின் கோத்திரங்கள் முளைகண்டன இந்த கணக்கைப்பார்த்தால் சற்றேறக்குறைய 500 வருஷங்களாகின்றன. ஆனதால் சாகிபவர்கள் சுல்தானுல் ஆரிபீன் அவர்களின் கலிபாக்களின் கலிபாக்களைத் துடர்ந்தவர்களாக இருக்கலாம் என்று நினைக்கின்றேன்.

சாகிபவர்கள் ரிபாஇயாத் தரீக்கத்தில் உள்ளவர்களாயிருந்தாலும் பெரும்பாலும் காதிரீயாத்தரீக்கை ஒட்டிய நடையே அவர்கள் பாடல் போகின்ற ஜாடையில் விளங்குகிறது. சாகிபவர் தாய் தந்தை சுற்றத்தாரைவிட்டு வாலிபப்பருவத்திலேயே நீங்கி வன சஞ்சரரியாய் அநேக காலந்திரிந்து வரும்போது (பிசுபில்குறம்) ஞானமலை வன



முதலிய நாற்கலைப்பாடி அவைகளை சுவடி சுவடிகளாகத் தமது வசம் வைத்திருந்தார்கள். அந்தக்காலத்தில் அவர்களின் தகுதிக்கேற்ற சீஷர்களாக காலன் குடியிருப்பு பெரிய மீருல்கனியண்ணாவியார் அவர்களும், கன்னியாகுமரி சமுங்கடற்கரையிலுள்ள பெரிய துறைமுகமாகிய குலசேகரன் பட்டணம் காரியாப்புலவரவர்களும் நியமனம் பெற்று சிறிது காலம் சாகிபவர்கள் அண்டையிலிருந்து பழகி அப்பால் அவர்களின் உத்திரவின்படியே அவ்விருவரும் விலகித்தங்கள் ஊர்களுக்கு வந்துவிட்டார்கள். இருந்தாலும் ''பொன்மலையைச்சார்ந்த காகமும் பொன்னிறமாம்'' என்பதைப்போல் சாகிபவர்களின் ஞான சீஷர்களான அவ்விரு மஹான்களும் அநேக அற்புதாதிகளைச்செய்து நீண்டகால மிருந்ததாக பல உதாரணங்கள் காட்டுகின்றன. இவ்விருவரைப்பற்றிச் சுருங்கச் சொல்லுமிடத்து பெரிய மீருல்கனி யண்ணாவியார் அவர்கள் வனசஞ்சாரம் செய்துவரும்போது ஒருநாள் தண்ணீரற்று இடிந்து போய்க்கிடந்த ஓர் பாழுங்கிணற்றருகில் நின்று கொண்டு ஒரு வோலையை வாரி எழுத்தாணியால் செய்தியொன்றுயெழுதி அக்கிணற்றுக்குள் போட்டதும் குபீரென்று ஜலப்பிரவாகஞ் செய்து கிணறுவாயளவு பொங்கி நீர்வழிந்தோடிற்று. காரியாப்புலவர் அவர்களோ! குலசேகரன் பட்டிணத்தில் இருந்து நெய்து கொண்டு இருக்குப்போது மலையாளம் தக்கலையில் இருந்து நெய்யும் கனந்தங்கிய தங்கள் சற்குருவாகிய சாகிபவர்கள் தங்களிடம் இருந்த நூற்கழி முடிந்தவுடனே அங்கிருந்து கையை நீட்டி ''காரியா கழிதாரும்'' என்று கேட்டதும் கைபதறக் கால்பதற எழுந்து நூற்கழிகளை எடுத்து தமது கையில் நிரம்ப வைத்து ஆசிரியர் சமூகம் வரையிலும் கையை நீட்டிக்கொடுத்து விட்டு இழுத்துக்கொண்டார்கள்.

ஞானவான்களுக்கு சீஷர் வந்து வாய்த்தால் இப்படியல்லவா வாய்க்க வேண்டும்! சும்மாவிழுந்து கிடக்கின்ற கழுதைகளும் குரங்குகளும் சீஷராக இருந்தால் அந்த குருவானவனுக்கு ஊர்களில் இகழ்ச்சி கிடைப்பதற்கென்ன தடை? இதுகிடக்க : சாகிபவர்களுக்கு '' தக்கலையார் '' என்று பெயர் வந்ததற்கு காரணமாவது மலையாளத்திலுள்ள தக்கலையூரிற்போய் அங்கொரு கலியாணமுஞ் செய்து சமுசாரவாளராக இருந்தார்கள். அதனால் தக்கலையார் என்று ஜனங்கள் கூப்பிடும்படியாயிற்று, சாகிபவர்கள் வடமலையாளத்தைச் சேர்ந்த அநேக பிரமாண்டமான கணவாய்களின் கெபிகளிற் போய்

இருந்த யோகாப்பியாசஞ் செய்து அநேக காலங் கழித்து அலைகளை விட்டு விலகி மலையாள மண்டலத்திற் சென்று அங்குள்ள பல தேச சஞ்சாரங்களும் செய்து அப்பால் அங்குள்ள யானைமலையிலும் சிறிது காலம் அன்னபானமற்று பதினைந்து வருஷம் வரையிலும் ஒரே சாதனையாக நிஷ்டையிலிருந்து விட்டார்கள், அங்கிருந்து தான், மஅரிபத்துமாலை, ஞானரத்தின குரவஞ்சி, ஞான விளக்க சரநூல *ஞான உலகவுருளை, ஞான மணி மாலை, ஞானப் பூட்டுத் திறப்பு முதலான அரும்பெரும் நூல்களையெல்லாம் அருளிச் செய்தார்கள். ஆகவே சாகிபவர்கள் யானைமலையில் வந்திருக்கின்ற சமாசாரம் திசையெல்லாம் பரந்து கொச்சி நகரத்து அரசனுக்குத் தெரிய வந்தது. அவன் எப்படியோ ஒருவித தந்திரத்தால் தனிவேடம் பூண்டு புறப்பட்டு சாகிபவர்கள் சமுகம் வந்து பாதார்ச்சனை செய்து மன்றாடி நின்றதால் சாகிபவர்கள் அவன்மீது கருணாகரம் வைத்து அந்த அரசனுக்கு உபதேசஞ்செய்து அவனையாளாக்கி அனுப்பிவிட்கிதும் அவன் அப்படியே பேரானந்த வெள்ளத்தில் மிதந்தவனாகத் தேசாந்திரியாய் போய்விட்டான். அப்பால் இதுவிஷயமாகக்கொச்சி ஸமஸ்தானத்தில் அநேகமாக புரட்சிகள் நடந்தேறின. அதனால் சாகிபவர்கள் யானைமலையில் வாசஞ்செய்கின்றதும், அவர்களால் ஒரு அரசன் ராஜீய பரிபாலனத்தைவிட்டுப் துறவுபூண்டு போய்விட்டதுமான சகலசெய்தியும் திருவனந்தபுரத்தின் மூலக்கர்த்தாவான சேரன் மகாராஜாவின் ஐந்தாவது பௌத்திரனாகிற முத்துச்சாமித் தம்பிரானுக்குத் தெரிய வந்தது. அவர் சற்று ஞானவிசாரணை மனத்தராயிருந்தவரானதால் நாளடைவில் சாகிபவர்களை யானைமலையை விட்டும் எழுந்தருளச் செய்து தமது மூன்றாவது பட்டணமாகிய திருவிதாங்கூரில் கொண்டு வந்து வைத்து சிறிதுகாலம் சாகிபவர்களின் சகவாசத்தில் இருந்து மகத்துவம் பொருந்திய ஞானியாகி விட்டார். ஒரு சமயங்களில் சாகிபவர்களை கூட்டிக்கொண்டு போய் தமது அரண்மனையிலும் வைத்துக் கொள்வதுண்டு. அந்த சமயங்களில் அங்கே இராஜ பெருமாட்டி முதற்கொண்டு அரச புத்திர சந்ததிகளெல்லாம் சாகிபவர்களை 'ஞானி ஞானி'' யென்றழைத்து சில சமயங்களில்

---

* இந்தப்பெயருள்ள நூலை எதோ ஒரு காரணத்தை வேண்டி அந்த காலத்திலுள்ள ஆலிம்கள் மறைத்து விட்டார்கள்.



பாட்டாத்தம்பிரான் என்று ஒரு இடுகுறி காரணப்பெயரைச் சொல்லிக் கூப்பிட்டுப் பரியாசசவலைகளும் செய்வார்கள். இவ்விதம் இராஜ சகவாசத்தின் செல்வாக்கினாலேயே சாகிபவர்கள் திருவிதாங்கூருக் கருகிலுள்ள தற்கலை யென்கிற ஊரில் நெசவுவேலை செய்வதும், மிக்க ஏழையுமான குடித்தனத்திலுள்ள ஒருபெண்ணை சாகிபவர்கள் விவாகம்பண்ணிக்கொண்டு அவ்விடத்திலேயே குடும்ப சமேதரா யிருந்துவிட்டார்கள்.

இதற்கிடையில் சாகிபவர்கள் திருவனந்தபுர ஸமஸ்தானத்துள்ளே போவார்கள். அரசனாகிய முத்துச்சாமித் தம்பிரான் சாகிபவர்களைக் கண்டவுடனே திடுக்கென்று ஆசனத்தைவிட்டெழுந்து வந்து அழைத்து ஆசனத்தில் உல்லாச ஸம்பிரமாக உட்கார வைத்து ஸ்தாம்பூலப்பெட்டியைத்திறந்து பரிமளப்பாக்கு நறுக்கி கொடுத்து வெற்றிலை மடித்து மடித்து மரியாதையுடன் கையிலேந்தி நீட்டுவதுமா யிருந்து உத்திரவை யெதிர்பார்ப்பார். அவரது அநேக உபசாரணையுள்ள குமாரர் குமாரத்திகளோ! சாகிபவர்களை வழக்கம் போல் ஞானி ஞானி! யென்று அழைத்து "கொய்" யென்று மொய்த்துக்கொண்டு நிற்பார்கள். இப்படி நடந்துவரும் போது சமஸ்தானத்தில் திடீரென்று ஒரு சம்பவம்வந்து நேரிட்டு விட்டது! ஒரு வாரங்கழித்து இளவரசுபட்டங் கட்டவேண்டுமென்று நியமனஞ் செய்துவைத்திருந்த அரசகுமாரன் உதிரிகண்டு ஜன்னிதோஷித்து எவ்வளவோ இராஜவைத்தியமெல்லாம் செய்தும் ஒன்றும் பலிக்காமல் இறந்துபோய்விட்டான். ஆகவே இளவரசனைத் தகனம் செய்வதற்கும் தம்பிரான் குலசோழியப் பார்ப்பார்களெல்லாம் வந்து கூடி அழுகையும், கண்ணீருமாய் நின்றார்கள். சுருங்கச்சொல்லுங் காலத்தில் திருவனந்தபுரமே குல்லென்று விசாரத்தில் அழுந்தி முழுகிப்போயிற்று.

இந்தச் சமயத்தில் சாகிபவர்களும் தற்கலையிலிருந்து வந்து சமஸ்தானத்துக் கொலுவுக்குள் போனார்கள். போனதும் கொலுவாசனம் லட்சுமிகரமற்று உறங்கி நிற்பதும், அரசனோடு மந்திரி பிரதானிகளும் வதனஞ் சாம்பிப்போய் ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்ப்பதுமாய் வியாகுலத்துடன் இருப்பதும். கன்னிகாமடத்தின் ஒருபுறத்திலிருந்து மிருதுவான குரலோசையுடன் கேட்கும் இராஜபத்தினியின் அழுகை சப்தமானது மிகுந்த பரிதாபமா

யிருப்பதும், சாகிபவர்கள் தெரிந்து சற்றுநேரம் அங்கே நின்று அப்பால் அரசனைப் புன்சிரிப்புடன் சயிக்கினைபண்ணி யழைத்தார்கள். ''கடந்த ஞானியும் விடுவரோ மக்கள்மேல் காதல்'' என்ற முதுமொழிபோல அரசன் வாடிய முகத்துடன் சாகிபவர்கள் அண்டையில்வந்து ஒதுங்கி நின்றான். அங்கு நடந்திருக்கின்ற சம்பவத்தை ஞானதிருஷ்டியால் தெரிந்துவந்திருக்கின்ற சாகிபவர்கள் வாய் திறந்து ''ஏ முத்துசாமி தம்பிரான்? என்று கருணையுடன் விழித்து ஞானிகளுக்கு விசனம் வேண்டாம்'' என்று சொன்னவர்களாகத் தம்பிரானை யழைத்துக்கொண்டு கன்னிகா மாடத்திற்குள்ளே நுழைந்து அங்கிருந்து அழுகின்ற ராஜபத்தினி முதலானவர்களை அதைவிட்டு விலகும்படி செய்து வாசலுக்கு வெளியே நிற்பாட்டிவிட்டு, இளவரசன் இறந்துகிடக்கும் மாளிகைக்குள்ளே சென்று கதவுகளையிறுக அடைந்தார்கள்.

சாகிபவர்கள்போய் சற்று நேரத்திற்கெல்லாம் சரீரம் முழுவதும் வியர்த்து வடிந்தவர்களாகவும், வலதுகையில் இளவரசனைப் பிடித்தவர்களாகவும் உயிருடன் எழுப்பிக் கூட்டிவந்து வெளியே மனதில் உருக்கமுள்ள பக்தியுடன் அலைமோதிக்கொண்டு நிற்கின்ற அரசன் கையில் ஒப்புக்கொடுத்து ''இனி நீ நம்மைப் பார்ப்பது அரிது'' என்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டார்கள். பிறகு முத்துச்சாமித் தம்பிரான் சாகிபவர்களைக் காணவேண்டி எவ்வளவோ அரிய பெரிய பிரயாசைகளெல்லாம் எடுத்தும் ஒன்றும் கைகூடவில்லை.

அந்தத் தடவை மறைந்துபோன சாகிபவர்கள் சற்றேறக்குறைய 100-வருஷங்களுக்குப் பின் வந்து சேர்ந்தார்கள். சாகிபவர்களின் ஜீவியகாலக் குறிப்புகளால் அவர்கள் உலகத்தில் 300-வருஷம் சுகஜீவியா யிருந்ததாகப் புலப்படுகின்றது. எப்படியானால் கொல்லத் தாண்டின் கணக்கின்படி முத்துசாமித் தம்பிரானைப் பக்தியரசனில்லையென்று சொன்ன ஒரு க்ஷாத்திரியத்திற்காகப் பத்மநாதபுரத்தின் தேவலாயத்திலுள்ள ஸஹஸ்த்ராயன் கெங்கையில் குளியோடிப்போய் பாதாள வலம்புரியைக் கைப்பிடியாகப் பிடித்து 60-நாழிகைக்குப் பின்னால் வெளிதோற்றி வந்தார். இது இப்படியிருக்க சாகிபவர்கள் நிர்யாண திசை யடைந்தகாலம் ஒரு குறிப்பின்படி கொல்லம் 620-ம் வருஷம். 620-ல் 415-க் கழித்தால்



205-வருஷம் இதோடுகூட சாகிபவர்கள் பிறந்துவளர்ந்து ஞானியாய் திரிந்த காலத்திலும் தடையின்றி 95-வருஷம் செல்பிடியாயிருக்கிறது இந்த 95-வருஷத்தையும் கூட்டிப்பார்க்கும் போது சரியாகவே 300 வயது ஜீவித்திருந்தார்கள்.

மேலே சாகிபவர்கள் நிர்யாண திசையடைந்த காலம் ஒரு குறிப்பின்படி கொல்லம் 620-ம் வருஷம் என்று நான் வற்புறுத்தினதாவது காயற்பட்டணத்திலிருந்து உலகமெல்லாம் பெரும் புகழ் வாய்ந்தவரும் முகம்மதிய மார்க்காசார ஜெகத்குருவாய் இருந்தவருமான மார்க்கதீபம் ''ஷெய்குல் இஸ்லாம்' சதக்கத்துல்லா லெப்பை ஆலிம் ஒலி அப்பா என்கின்ற மஹாத்துமாவின் * ஜின் அஞ்சல் தற்கலைக்கு வந்தகாலம் கொல்லம் 620- ம் வருஷம் என்று சொல்லப்படுகிறது.

அது என்னசங்கதியென்று கேட்கவும் ஜனங்களுக்கு ஆசையுண்டு சொல்லுகிறேன். முத்து பிறந்த இடத்தில் விலைபடாது என்பதுபோல சாகிபவர்களின் தகுதி தெரியாத கெர்வஜனங்களான அந்த தற்கலையூரார்கள் சாகிபவர்களை தொழாதவரென்றும், மார்க்கம் அறியாதவரென்றும், பொய்வேஷக்காரரென்றும் மார்க்கப்படி நடப்பவர்களைப் பரியாசஞ்செய்கிறாரென்றும் வீண் படாடோபஞ் சொல்லித் தூற்றத் தலைப்பட்டார்கள். இதோடும் விட்டார்களா? இவர்க்கு மார்க்கப்படி தெண்டனை விதிக்கச்செய்யவேண்டுமென்றும் ஒவ்வொருவீட்டுக்காரர்களும் யோசித்துக்கொண்டு அந்தக்காலத்தில் சென்னப்பட்டணத்திலிருந்து மலையாளம் பொன்னானிதேசம்வரையிலும் மார்க்கஹுக்கும் செய்யக்கூடிய காலவத்துக்காரத்தாவாகிய ஹலரத்து சதக்கத்துல்லா அப்பா அவர்கள் சமுகத்திற்குத் திருமுகப் பாசுரமெழுதி ''நாங்கள் இன்னவூர் ஜமாஅத்துகள் எங்களூரில் பீர்முகம்மது சாகிபு என்று ஒரு ஞானியிருக்கிறார். அவர் இன்னின்ன விதமாக மார்க்கப் பரியாசஞ் செய்கிறார். ஆனதால் தாங்கள் சற்று பிரயாசையை பாராமல் எங்கள் பேரில் கிருபை வைத்து ஒருவழி வந்து போவீர்களானால் எங்களூரும் சுகப்படும். அந்த மனிதனும் நேர்வழி பெறுவார், என்றிவ்வித சமாச்சாரத்தை தெரியப்படுத்தினார்கள்.

---

* ஜின் அஞ்சல் என்பது முன்புறம் பின்புறம் ஆளில்லாமல் பூதங்களால் அநாந்திரமாய்த் தூக்கிச்செல்லும் ஒருவித பல்லக்கின் பெயர்.

இவ்விதம் தற்கலை யூரார் வரைந்தெழுதிய கடிதத்தை ஹலரத்து அப்பா அவர்கள் பார்த்ததும் கண்சிவந்து இப்படியும் ஒரு மனிதன் இருக்கின்றனா? போய் பார்ப்போம் என்று தங்கள் ஜின் அஞ்சலை தற்கலையை நோக்கி நடத்தினார்கள்.

ஹலுறத்து அப்பா அவர்கள் புறப்பட்டு வருவதை அங்குத் தற்கலையிலிருக்கும் மெய்ஞ்ஞான சொரூபரான சாகிபவர்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்து கொண்டார்கள். தெரிந்ததும் உடனே மனைவியைக் கூப்பிட்டு ''காயற்பட்டணத்தி லிருந்து ஒரு வாலிபர் என்னை நோக்கி வருகின்றார். அவரோ நல்ல ருசிகர போஜனங்கள் தின்னப்பட்டவர் ஆனதால் எதுவும் நம்மால் இயன்றதைச் செய்யத்தான் வேண்டும், எதுவும் நம் வீட்டில் இருந்தால் சீக்கிரம் சமைத்துவிடு என்ன சொல்கிறாய்?' என்றார்கள். அந்தப் பெண்பிள்ளையும் தற்கலைப் பிறப்பதாலே தாமரைமலரின் தேனைத் தூரத்திலிருக்கின்ற வண்டுகளுக்கன்றி அத்தாடகத்திலேயே நிந்திருக்கின்ற வாத்துகளுக்குத் தெரியா தென்பதைப் போல் அந்தம்மாளும் புருஷனாரவர்களை நோக்கி உனது சம்பாதியத்துக்கு விருந்துங் கூடவா? சும்மாவிருந்துகொண்டிருக்கிறீரே யல்லாமல் காக்குழியிலிறங்கி ஒரு முழத்துண்டும் நெய்யக்காணோமே? இப்படியிருந்து கொண்டு என்ன தைரியத்தால் இந்த வார்த்தை சொல்ல உமக்கு மனம் வந்தது! என்னால் ஒன்றும் சாயாது. என்னிடம் ஒருபடியரிசியுங் கிடையாது. என்று சாதித்துவிட்டார்கள். பிறகு சாகிபு அவர்கள் பெண்சாதியைப் பார்த்து ''உன் வசம் அரிசியில்லாவிட்டால் தெருவில் மண்ணுமா இல்லை? சீக்கிரந் தெருவிற்போய் நாலுபிடி மண்ணையள்ளி ஒரு பானையிலிட்டு தண்ணீர்வார்த்து அடுப்பெரிய விட்டு ஒரு சட்டியில் சப்பாத்திக் கள்ளியைப் பத்தைகளாக அறுத்துப்போட்டுத் தண்ணீர்வார்த்து வேகவை? இதற்கு இவ்வளவு சாதனையேன்?'' என்றார்கள். அந்த மனுஷி கிழவன் என்னமோ வயது முதிர்ந்து போய் வாய்யினற்றுகிறார் இப்படியும் ஆகுமோ என்று இலேசாக மதித்துக்கொண்டு அவ்விதஞ் செய்து அடுப்பெரித்துக் கொண்டிருந்தார்கள். சாகிபவர்களும் தறிக்குழியிலிறங்கித் துணி நெய்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படி யிருக்கும்போது ஒரு பெரிய தனக்கார மனுஷன் வந்து ''பீர் முகம்மது சாகிபே உம்மை காயற்பட்டணம் கலாவத்து



சதக்கத்துல்லாவெப்பை ஆலிம்சாகிபவர்கள் அழைத்துக்கொண்டு வரச்சொன்னார்கள். சீக்கிரம் வாரும்'' என்று கூப்பிட்டான் அதற்குச் சாகிபவர்கள் ஒன்றும் ஜவாபு கொடுக்காமல் தங்கள் அலுவலைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்த மனிதன் சற்று நேரம் நின்று விட்டுத் திரும்பிப்போய் ஹலரத்து அப்பா அவர்களிடம் இது சங்கதியைச் சொன்னான். ஹலுறத்தவர்கள் தலையைக் குனிந்து கொஞ்சம் நேரம் வரையிலும் பூமியைப் பார்த்துவிட்டு நல்லது நானே அவரிடம் போய்வருகிறேன் என்று தனியே நடந்து சாகிபவர்களின் திருமனைக்கு வந்து ஸலாம் சொன்னார்கள் அதற்கு சாகிபவர்கள் பிரதி சொல்லிவிட்டு மறுஹபா சதக்கே வாருங்கள், இருங்கள் என்று அங்குக்கிடந்த ஒருகிழிந்த வோலைத் தடுக்கை யெடுத்துப் போட்டார்கள். ஹலுறத்து அப்பா அதிலிருக்க அவர்கள் அசிங்கப்பட்டு நின்றபடியே நின்றுகொண்டு ''நீர் இந்த ஊரில் ஒரு முஸ்லிமானவரா இருந்தும் அல்லாவைத் தொழாமலும், பள்ளிக்குப் போகாமலும், இருக்கின்றீரானே அதென்ன கருமம்! சொல்லும்?'' என்று கேட்டதும், சாகிபவர்கள், ''தம்பி நீங்கள் காயற்பட்டணத்தாரா யிருப்பதனாலே உங்களிடம் நான் பொய் சொல்லமாட்டேன். நான் என நாயனை ஒரு வேளையாகிலும் தொழாமல் இருந்ததே கிடையாது. அதையறிய இந்த வூர் குருட்டு ஜனங்களுக்குத் திராணி போதாமையால் வீணுக்கு என்னிடம் கலகஞ் செய்கிறார்கள்'' என்றார்கள். அதற்கு அப்பா அவர்கள் ''நீர் சொல்லுகிறபடி அப்படி யொன்றும் காணவில்லை. நான் இந்த ஊருக்கு லுஹறு நேரத்தில் வந்து தொழுதிருக்கின்றேன். பள்ளிவாசலுக்கு நீர் வர நான் பார்க்கவேயில்லை'' யென்றார்கள்.

சாகிபவர்கள் ஹலுறத்தவர்களை நோக்கி ''தம்பி! நல்லதுஇன்னொரு செய்தி; ஐந்துவேளைத் தொழுகையும் இந்தப்பள்ளியில் தொழுகிறது ஏற்றமா? அல்லது மக்காவிலுள்ள பைத்துல்லாவுடைய ஹறத்தில் தொழுகிறது ஏற்றமா?. சொல்லுங்கள்?'' என்றார்கள். ஹலரத்தவர்கள் மக்காவில் தொழுகிறதுதான் ஏற்றம் அதற்கும் சந்தேகமா? என்றார்கள். சாகிபவர்கள் ''நான் தொழுகிறதை நீங்கள் பார்க்கவேண்டுமானால் இதோ நான் நிற்கின்ற பாய்க்குழியைப் பாருங்கள்'' என்றார்கள். ஹலுறத்தவர்கள் கிட்ட நெருங்கி

வந்து பாய்க்குழியை உற்றுப்பார்த்ததும் அங்கே அவர்கள் கண்ட காட்சிகளை நான் என்ன சொல்வேன். சுமார் ஒரு மனிதன் இறங்கியேறும் சிறிய பாய்க்குழிக்குள்ளே அறபாத்து மலை தெரியவும், அதைச் சூழ வொட்டகைகள் அநந்தம் நின்று மேயவும், மக்காமா நகரத்தின் விஸ்தாரமுள்ள வீதிகள் தோன்றவும், கஃபத்துல்லா என்கின்ற ஹறம் தெரியவும், அதில் அனேக ஆயிரக்கணக்கான சாதாத்துமார்களும், ஷெய்குமார்களும் வரிசைவரிசையாக நின்று தொழுகவும், அவர்கள் எல்லோர்க்கு முன்னே இமாமாக மேலே பாய்க்குழியில் நிற்கின்ற நாயகம் பீர்முகம்மது சாகிபவர்கள் நின்றுதொழுவிக்கவும், அதில் ஒரு பெரியோர்கள் இஸ்மாயீல் நபியவர்களின் மக்களைப்போல் உடையணித்து முகவஜீகத்துடன் நின்றுகொண்டு "சதக்கே சீக்ரம் ஜமாஅத்தில் வந்து சேர்ந்து கொள்ளும்! அல்லாவுடைய குதுபை இமாமாக்கப்பட்டிருக்கின்றது!" என்று அழைக்கவும், நல்ல வெட்ட வெளிச்சமாகக் கண்டு உடம்பெல்லாம் விலவிலத்துமனப்பிரமை கொண்டவர்களாய் ஒடுங்கி நின்றார்கள் நின்ற ஹலறத்தவர்களை சாகிபவர்கள் நோக்கி "நல்லது வந்து வெகு நேரமாகின்றது சாப்பிட வாருங்கள்!" என்றழைத்துப்போய் அடுப்பிலிருக்கிற பானையும் சட்டியும் இறக்கி மூடியைத்திறந்து அகப்பையால் கிளறினார்கள். உடனே தெருவெல்லாம் வாசனை செய்யும்படியான நெய்மணம் பொங்கிற்று உடனே பானையுள்ளிருந்த அகமிய நெய்ச்சோற்றைத் தாலத்திவிட்டு சட்டியிலிருந்த குர்மாவாகிய சப்பாத்துக்கள்ளியின் துண்டங்களை வள்ளி தாலத்தில் இட்டு குழம்புடன் திரட்டிக்கொண்டு "பசியாறுங்கள் தம்பி!" யென்று சொல்லி சாகிபவர்கள் அள்ளியள்ளித் தின்றார்கள். ஹலறத்து அப்பா அவர்கள் கையிடும் பக்கம் வெறும் மணலாகவும் கள்ளிகளாகவும் இருந்தன. அந்த ரகசியத்தை அப்பா அவர்கள் கண்டு மூக்கின்மேற் கையைவைத்து சாகிபவர்கள் நெய்ச்சோறும், குர்மாவுமாக அள்ளி நெய்வடியத் தின்பதைப் பார்த்தவர்களாக சும்மா இருந்தார்கள். ஹலறத்தவர்கள் பார்த்துக் கொண்டிருப்பதை சாகிபவர்கள் நோக்கி "என்ன தம்பி சோறுண்ணச் சொன்னால் சும்மா இருக்கிறீர்கள்? மண்ணும் கள்ளியுமா யிருக்கிறதோ! அல்லாகுத்த ஆலாவை உணர்ந்து



அவன் பாதையைப்பற்றி பிடித்தவர்களுக்கு அவன் கொடுத்திருக்கின்ற தத்துவங்களைப் பார்த்தீர்களா?" என்று சொல்லிவிட்டு அவர்கள் கையிடும் பக்கத்தைத் தங்கள் பக்கமாய்த்திருப்பித் தாங்கள் கையிடும் பக்கத்தைத் திருப்பி நெய்ச்சோறும் கறியுமாக அள்ளியள்ளி ஹலரத்தவர்களின் வாயில் ஊட்டினார்கள். இப்படியாக இருவரும் பசியாறி முடிந்ததும் மஃரிபாவின் துறையிலுள்ள சில மர்மங்களை சம்பாஷனை பண்ணிக்கொண்டு சில நேரங்கழித்து அசறுந்தொழுது முடித்தார்கள் முடிந்ததும் சாகிபவர்கள் ஹலுறத்தவர்களை நோக்கி "தம்பி! இதவ்ல றகுமானுடைய தன்மைக்கேற்ற வணக்கம்! அதுவேறே யிருக்கிறது. அதைக் காட்டுகிறேன் வாருங்கள்." என்று கூட்டிக்கொண்டு தற்கலையைவிட்டு 30 மயில் தூரமுள்ள ஆனைமலைச் சாரலுக்குப் போனார்கள். இந்த முப்பது மைல் தூரம் நடக்குமளவும் சூரியன் இறங்காமலும், பொழுது அஸ்தமிக்காமலும், ஒரே நிதானமாகவே யிருந்தது இந்த அற்புதகரத்தையும் ஹலுறத்து அப்பா அவர்கள் கண்டுகொண்டு நடக்கும்போதே நமக்கு நல்லகாலம் வந்தெட்டியதால் தான் இப்பேர்ப்பட்ட மஹானை வந்து சந்தித்தோம். இனியிவர்களைக் கைவிடலாகாது; என்று மனதில் எண்ணிக்கொண்டே போனார்கள். சாகிபவர்களும் யானைமலைச் சாரலையடுத்தார்கள். அங்கே பொரு பிரமாண்டமான கெபி தெரிந்தது: அதன் அகலமத்தியிலே செந்தாமரை, வெண்டாமரை முதலான நீர் மலர்கள் கணக்கறப் பூத்துக் குளிர்ந்த நீராளங்கள் ததும்பி சங்குகளின் முழக்கங்களாலும், பொன்வண்டுக்கூட்டங்கள் பாடும் இன்னிசைகளாலும், சிறந்து வாளை, வரால், கெண்டை, முதலான மீன்கள் குதிபாயவும், செங்கால் நாரைகள் உலாவவும், அன்னப்பார்ப்புகள் தங்கள் தாய்களுடன் நீந்தி விளையாடவுமான இலட்சுமிவிலாசம் பொருந்தியிருக்கா நின்ற ஒரு தடாக மிருந்தது. அதன் ஒரு கரையில் சதுரமான கருங்கற்பாளமொன்று போட்டிருந்தது. அந்தக் கல்லருகே சாகிபவர்கள் போயிருந்து கொண்டு வாயைத் திறந்தார்கள். திறந்ததும் பெருங்குடல், சிறுங்குடல், மணிக்குடலும், சரசரவென்று வெளியே வந்து விழுந்தன சாகிபவர்கள் அவைகளை யெடுத்து அதன்தன் உள்ளிருக்கும் மலஜலாதிகளை உருவிக் கழுவிப் பரிசுத்தஞ் செய்து

அந்தக் கருங்கல்லில் வைத்துவஸ்திரந் துவைப்பதுபோல் துவைத்துப் பிழிந்து பழையபடி அவைகளையெடுத்தெடுத்து வாய்வழியாக உள்ளே செலுத்தினார்கள். செலுத்தியதும் உடனே அத்தடாகத்தின் மத்தியில் நீந்தி முழுகி ஈரவஸ்திரத்தோடும் கரை வந்து அங்கு நிற்கின்ற பிரமாண்ட ஆல விருக்ஷமொன்றைக்கையால் ''வருக'' என்று சயிக்கினை பண்ணினார்கள். பண்ணிய உடன் அவ்விருக்ஷம் தன் வேராதிகளைப்பெயர்த்து நகர்ந்துவந்து தனது நீண்டதும் வடதிசை மூலையாகிய குதுபு புறமாகப் போகின்றதுமான கிளையொன்றைப் பூமி முகத்தை பார்க்கத் தாழ்த்தி நின்றது. இது கண்டு சாகிபவர்கள் தங்கள் இருபாதங்களின் பெரும்விரல் இடுக்காக அக்கிளையைத் தொட்டுப் பின்னினவர்களாகத் தலையைக் கீழேதொங்க விட்டவர்களாகக் கைமடித்து மார்பில்தக்பீர் கட்டிக்கொண்டு இகபரங்களை வெறுத்து அல்லாகுத்தஆலாவின் ஜலாலியத்தில் முழுகி ஆசையால் மனம் உருகி யிருகண்களின் வழியாக நீர் தாரைதாரையாக வோடினவர்களாகப் பெருமூச்செறிந்தார்கள். அப்போது சாகிபவர்களின் காதுவழியாகவும், கண்வழியாகவும், நாசிவழியாகவும், வாய்வழியாகவு மிருந்து தாங்கமுடியாத அக்கினி சுவாலைகள் எழுந்து கொழுந்து விட்டு எறிந்துகொண்டேயிருந்தது இத்துடன் சரீரத்திலுள்ள மயிர்த்துவாரங்களெல்லாந்திறந்து கருநிறமான புகைகளும் வெளியாயிற்று

இந்த மனத்திடுக்கமுள்ள அளவிடக்கூடாத அற்புதங்களை ஹலரத்து அப்பா அவர்கள் ஒருபக்கமாக நின்று இன்னுலில்லாஹி இவர்கள் ஸமானுடைய குதுபல்லவோ! இவர்களின் தகுதியையறியாமலல்லோ நாம் இவர்களுக்கு மார்க்கவிதி போதிக்கவந்தோம் என்று தங்கள் மனதுக்குள்ளேவெட்கித்தவர்களாய்ப் பார்த்து பிரமைகொண்டு நின்றார்கள். சாகிபவர்களும் தங்கள் மஉஷூக்குடன் கலந்த ஆசையானது தெளிக்கின்றவரையிலும் தலை கீழே கிடந்து வணங்கினார்கள். இதற்கிடையில் இரவுகாலமும்சென்று சூரியோதயமாகும் நேரமாயிற்று. அந்தசமயம் சாகிபவர்கள் வருகிறதைப்பார்த்து ஹலரத்தவர்கள் நிரம்பவும் காலொதுக்கிக்கையொதுக்கி முகத்தை மலரவிட்டு மனம் அஞ்சியொஞ்சி பணிந்தவர்க



ளாய் மரியாதையுடன் நின்றார்கள், வந்த சாகிபவர்கள் அப்பா அவர்களை நோக்கி, ''தம்பியவர்களே! நீங்கள் நாலும் அறிந்த ஆலிமாக இருப்பதாலே கேளுங்கள். தலீலில் சொல்லியிருக்கிற பிரகாரம் இந்த பூலோகத்தில் முகக்கண்ணால் அல்லாவைக்கண்டு ஈடேற்றம் பெறாதவன் ஆகிரத்தில் ஒரு காட்சியும் காண ஏலாத விழி கண் குருடனாக இருப்பான். அவனுக்கு அப்போது எந்த ஒரு கருமமும் பயன் கொடாது ''காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்'' என்பது போல இந்தசரீரத்துடன் உலகவாசியாக இருக்கும்போதே ஒவ்வொருவனும் தன் அசலியத்தான மகத்துவ வஸ்துவைப் பகுத்துணர்ந்து தெரிசித்து அதனிடத்தில் வேண்டிய பிர்மமர்மமகத்துவங்களையும் பெற்றுக்கொள்ளவேண்டும் அதல்லாமல், மரணகாலத்தையெதிர்பார்த்தவனாக இருந்து நாளைக்கடத்துவானானால் அவன் எடுத்தகஷ்டங்களும், வணக்கங்களும்வெள்ளம் புரண்டோடுகின்ற ஆற்றில் கரைத்துவிட்ட ஒரு காசு புளிக்குச் சமானமாகவே ஆகிவிடும்'' என்று இன்னம் அநேகத்துவசாரங்களையும் எடுத்துப்போதித்து உபதேசமும் செய்து அந்த இடத்தில் வைத்தே ஹலரத்து அப்பா அவர்களைக் காயற்பட்டணம் போகும்படியாய் வழிகூட்டியனுப்பிவிட்டு வீடு வந்துசேர்ந்தார்கள்.

ஹலறத்து அப்பா அவர்கள் தங்கள் ஞானாசிரியரிடம் கிடைத்த அரியபெரிய பொருட்களையெல்லாம்மனதுள்ளே பதிய வைத்தவர்களாக வந்து அந்தக்காலத்தில் முகம்மதியர்களுக்குள்ளே நிகரற்ற சீமானும், சமஸ்த ஜாதியர்களுக்கும் வரையாதுகொடுத்த ஈகையுடைய வள்ளலுமாகிய சீதக்காதி மரைக்காயர் அவர்களுக்கு ஞானஉபதேசங்கொடுத்துவிட்டு அந்தவள்ளல் இருந்து விளங்கிய கீழக்கரையிலேயே குடிபதியாய் இருந்தார்கள். இது நிற்க இன்னம் ஒரு சங்கதி பிரமிக்கத்தக்கது. அது என்னவெனில்:—சாகிபவர்கள் வழக்கமாய் யானைமலைச்சாரலுக்குப் போய்க்கொண்டிருக்கும் சமயங்களில் ஒருநாளைய தினம் ஹக்க ஆலாவின் இஷ்கில் முங்கினவர்களாக அச்சாரலண்டை உலாவிக்கொண்டு நின்றார்கள். அப்போது அங்கே ஆலம் விழுது போல் ஜடாபாரம் தொங்கவிட்டவனாக ஒரு கவுனசித்தாதி. நாலாபக்கங்களிலும் குனிந்து உற்றுப்பார்த்தவனாக நின்றான். அதனை சாகிபவர்கள் கண்டு அவன் அருகாகச் சென்று, 'ஓ;சித்தரே!இந்தப்பொழுது அஸ்தமிக்குத்தருணமானபிற்ப

கல் நேரத்தில் நீர் நின்று நாலாபக்கமும் பார்வையை விடுகின்றீரே! அது என்ன கருமம்? என்னிடம் சொல்லும், நானும் அறிந்துகொள்ளட்டும்'' என்று சொன்னார்கள். சொன்னதும் அந்த கவுனச்சித்தாதி சாகிபவர்களை நல்ல திறுதிறுவென்று சற்று நிதானித்து நோக்கிவிட்டு, தன் மனதுள்ளே ஓ! இவர் துலுக்கர்களில் ஒரு பெரிய மனிதராக இருக்கலாம். அப்படியில்லாதபட்சத்தில் துஷ்ட மிருகங்கள் சஞ்சராஞ்செய்கிற இந்த மலையண்டை வந்து நின்று உலாவ அவ்வளவு சக்தி இராது நம்முடைய உண்மையை நாம் இவரிடம் சொல்லத்தான் வேண்டும்! என்று இவ்விதம் உத்தேசித்துக்கொண்டு சாகிபவர்களின் எதிரே நின்று கீழ்வருஞ் சங்கதிகளைச் சொல்லுகின்றான்.

''ஐயா அவர்களே, நான் பொதிகைமலையிலுள்ளவன். என்னுடன் 1000 கவுண சித்தாதிகள் இருக்கிறார்கள். அங்கே எங்களுக்கெல்லாம் சற்குருவாக ஒரு ரிஷியும் இருக்கின்றார். அவரோ அதிக கோபசக்தி உள்ளவர். அவர் எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஸஹஸ்ர ஸத்துக்குளிசம் கொடுத்திருக்கிறார். நாங்கள் அதை வாயில் ஒதுக்கினால் நினைத்த இடங்களுக்கு ஒரு நிமிஷநேரத்தில் பறவைகள் போல் பறந்து போவோம். முடிவாகச்சொல்லவேண்டுமானால் நாங்கள் எந்த தீபகற்பங்களுக்காகிலும் சென்று ஆகவேண்டிய காரியாதிகளை முடித்துக்கொண்டு சூரியன் அஸ்தமிக்கிறதற்குள்ளாக அவர் சமூகம் போய்விடவேண்டும். அப்படிக்கல்லாமல் எந்தவிதத்திலும் சுணங்க வேண்டியது வந்துநேரிட்டால் சுணங்கியவனை உடனே கல்லாய்ச் சாதிக்கும்படியாகச் சாபங்கொடுத்து விடுவார். அப்படி எத்தனையோ சித்தாதிகள் கல்லாய்விட்டார்கள். இது நிற்க. இந்த இடத்தில் அடியேன் நாலாபக்கமும் பார்த்துக்கொண்டிருப்பது வேறொன்றுமல்ல மேற்கூறிய அந்த ஸஹஸ்திரக்குளிசமானது நான் இங்கே இறங்கும் போது எப்படியோ அடியனையும் அறியாமல் நழுவி விழுந்துவிட்டது. அது நழுவினதாவது அடியனுடைய ஆத்மா நழுவிவிழுந்தமாதிரியாக நான் இப்படி பறந்து பறந்து தேடுகிறேன். தேடியும் இந்த பாவி கண்ணில் அகப்படவில்லை. ஐயோ நான் என்ன செய்யட்டும். சாபம் வந்துவிடுமே! என்று மெய்சோர்ந்து மனமுருகி அழுதவனாகச்



சொன்னான். கவுனசித்தாதியானவன் சொன்னது அத்தனையும் சாகிபவர்கள்கேட்டு ''நல்லது இருக்கட்டும், நீர் இன்றிரவு என்னுடன் இங்கேதான் இரும். உம்முடைய ஆசான் உமக்கு இடுகின்ற சாபத்தை நான் கண்டறியவேணும்! அப்பால் பொழுதுவிடிகிறதற்கு முன்னமே உமக்கு நான் அதைவிட அதிகவிசையுள்ள நல்ல ஒரு குளிசம் தந்து அனுப்புகிறேன்'' என்று திருவாய் மலர்ந்து சொன்னார்கள்.

இவ்விதம் சாகிபவர்கள் சொல்லியுமென்ன? சித்தனுக்கு ஒரு சிறிதும் நம்பிக்கை என்பதே கிடையாது. அவனுடைய ஆசானுடைய சாபநேரம் வருகிறவரையிலும் பறக்க பறக்க முழித்தவனாக இருந்து சாகிபவர்களின் கூட ஞானமார்க்கத்தைப்பற்றி சில விஷயங்களை ஸம்பாஷித்து கொண்டிருந்தான். ஆசானுடையசாபநேரம்கழிந்ததும் இனியில்லாத மகானந்த முள்ளவனாக சாகிபவர்களை ஸ்தோத்தரித்து ஆனந்தகூத்தாடினான். பாடினான்பிரார்த்தனைதேடினான். இவ்விதமாக அன்றிரவெல்லாம் கழிந்து சூரியோதயமாயிற்று. கவுனசித்தாதி ஓ! இந்தசாகிபு மெத்தப்பெரிய அஸ்டாங்கயோகீஸ்வரராக இருக்கின்றார். இவரை நாம் கைவிடப்படாது. எதுக்கும் இவர் கொடுக்கின்ற குளிசத்தை வாங்கிக்கொண்டு இன்று நமது ஆசான் சமுகம்போய் அவர் சாபத்தால் தப்பித்துக்கொண்ட நம்முடைய தத்துவத்தை அவர் அறியும்படியாக இருந்துகாட்டிவிட்டு நம்முடையவிநாயகக் கடவுளின் சந்நிதிக்குச்சென்று அங்கு திருக்குளத்தீர்த்தமோட்சமும் பெருமான் பாதார்ச்சனையும் செய்து வரம்பெற்றுக் கொண்டு திரும்பி இவரிடம் வந்துவிடலாம் என்றுமனதில் மெதுவாகஎண்ணினான். எண்ணினதும் சாகிபவர்கள் அந்த சித்தாதியை நோக்கி கீழ்வருமாறு இந்தக்கவியைச் சொன்னார்கள்.

## விருத்தம்.

* ''கோவிலாவ தேதடா குளங்களாவ தேதடா
பாவியான மூடனே நீ பாழிலேஜெபிக்கிறாய்
லாயிலாஹ இல்லல்லாஹ் முகம்மதுர் றசூலுல்லாவென்
றோய்வில்லாம லோதடா உயர்ந்தசொர்க்கமதுவடா''

---

* இந்தப்பாடலை ஞானமணிமாலையில் வருவித்திருக்கின்றது.

என்று இவ்விதம் கனந்தங்கிய சாகிபவர்கள் சொன்ன அருமையான பாட்டைக்கேட்டு அந்தச்சித்தாதி மனமுருகி உடம்பெல்லாம் ஜில்லென்று புல்லறித்தவனாக மனம் வாக்கு காயம் மூன்று மொத்துப் பரிசுத்த தீனுல்இஸ்லாம் மார்க்கத்தை உள்ளத்தில் உகந்து ஒப்புக்கொண்டவனாக சாகிபவர்களின் இருகைகளையும் பிடித்து லாஇலாஹ இல்லல்லாஹு முகம்மதுர் றசூலுல்லாஹி என்னும் திருக்கலிமா மந்திரத்தை சொல்லி இஸ்லாமிலாகினார். அப்பால்சாகிபவர்கள் அவர் மீது தயைகூர்ந்து அவருக்கு புகிதான ஒரு திருநாமஞ்சூட்டி முரீது என்னும் ஞானஉபதேசமும் செய்து அவரை சிறிதுகாலம் தங்களது சகவாசத்தின்கீழ் நடைபழக்கி அவரை நேர்வழியைப் பெற்றுக்கொண்ட ஒளலியாக்களில் நின்றும் ஒருவராக ஆக்கினார்கள். இப்பால்,

சித்தாதியானவர் தமதுவாசஸ்தானமாகிய பொதிகைமாமலைக்கு போகப்பிரயாணப்பட்டார். அதை சாகிபவர்கள் தெரிந்து அவரைக் கூப்பிட்டு தெருவில் கிடக்கும் கற்களில் ஒன்றை எடுத்துவரச்செய்து அந்தக்கல்லை தங்களது சிறப்பான கமுக்கட்டில் சற்றுநேரம் வரை வைத்திருந்துஎடுத்து சித்தாதியிற்கொடுத்து, "இதை நீர் வாயில் போட்டு ஒதுக்கிக்கொண்டு எந்த திசைக்கும் போகநாடும். அங்கே உம்மை தூக்கிக்கொண்டு பறந்துபோய் இறக்கிவிடும் இதை நீர் பெரிதும் ஜாக்கிரதையாக வைத்துக் கொள்வீராக" என்று கட்டளை பண்ணினார்கள். அவ்விதமே கவுனச் சித்தாதியானவர் சாகிபவர்களிடத்தில் பிரயாணவிடைபெற்றுக்கொண்டு சாகிபவர்கள்கொடுத்த வெறுங்கல்லாகிய அந்த அற்புதகுளிசத்தை வாயில் போட்டதும் அவரை அநாந்திரமாய் தூக்கி ஆகாயமார்க்கமாய் பறந்துபோயிற்று. அப்பால் நிகழ்ந்தனவெல்லாம் நிகழ்ந்தன.

அப்பால் சாகிபவர்களும் சிலமாதகாலம் ஜீவித்திருந்து நாம் உலகத்தில் நீண்டகாலம்வரை சரீரத்துடன் இருந்துவிட்டோம் இனி நாம் ஜீவித்திருப்பது நம் நபிபெருமானுடைய சட்டசபைக்கு விரோதமாய் விடும். ஆனதால் இந்தவாரம் வெள்ளிக்கிழமையிரவில் நாம் சரீரத்தை விட்டுவிடவேண்டும் என்று முடிவு கட்டிக்கொண்டு அதன்



பிரகாரமே கொல்லம் 620-ம் வருஷம் குறித்தமாதம் திகதி இரவையில் நிர்யாணதிசையடைந்தார்கள். தற்கலையூரார்கள் பழைய குருட்டெண்ணமாறி சாகிபவர்களின் தருநிலை தெரிந்து கொண்டதாலே எல்லோரும் ஒருப்பட வந்துகூடி செய்யும்கடமைகளை செய்து நகர பிரவேசத்துடன் சாகிபவர்களை நல்லடக்கஞ் செய்தார்கள். அப்பால் நிகழ்ந்தவைகள் நிகழ்ந்தன. சாகிபவர்கள் மிசுவாக்குச் செய்திருந்த இலந்தைமரச்சக்கை ஒன்றைத்தமது கபுறின்மேல்நடும்படி ஜனங்களை ஏவினதால் அதன்படிசெய்து பெரிய விருட்சமாக எழுந்து நிற்கின்றது அந்த மரத்தின் நிழலால் ஜுரம் முதலான பிணிகளும், அதன் இலைகளால் வாந்திபேதி யென்னும் காலரா நோய்களும், அதன் காய் பழங்களால் வெண்குஷ்டம், கருங்குஷ்டரோகங்களும் தீர்ந்து சொஸ்தமாகி ஜனங்கள் ஆரோக்கியதேஹிகளாகின்றார்கள். சாகிபவர்களின் தர்காவென்னும் சமாதியில் வருஷத்துக்கு ஒருதடவை திருவனந்தபுர ஸமஸ்தான அதிகாரிகளால் நல்ல விமரிசையான ஊன் தீன்பானாதி முதலிய ராஜபோசன விருந்துடன் அலங்கிருதமான ஒரு கந்தூரியும் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த அரும் புகழ் வாய்ந்த மஹாத்மாவின் திவ்யசரித்திரத்தை வரையறுத்து எழுதவேண்டுமானால் புதிது புதிதான அற்புதாதிகளுடன் கணக்கற்று விரிந்துவிடுமாதலால் அவைகளை வட்டுறுக்கமாக நம் சகோதர ஜனங்கள் தெரிந்துகொள்ளும்படியாக ஒருவித சம்பிரதாய தோரணையாய் சுருக்கி முடிக்கின்றேன்.

நிற்க. இந்தஞானமணிமாலை பாடிஇவ்வளவு வருஷங்களாகியும் அதன் உள்ளுறை தாற்பரியங்கள் நம் முஸ்லிமான ஜனங்களுக்குப் பயன்படும்படியாய் ஒருவர் ஏற்பட்டு உரையாக எழுதி முடிக்க இயலாமற்கிடந்ததானது நம்தமிழகத்திற்கு ஒருபெரிய குறையாகவே இருந்தது. நானும் சில பல சமயங்களில் இதைப்பற்றி சிரத்தையெடுக்க முயன்றும் எனக்கிருந்த பலபல தொல்லைகளும் அதற்கிடைகூறுய்த் தடுத்து நின்றன. அதனால் நான் இரவு பகலாய் கவலையுள்ளவனாகவேயிருந்துவந்தேன். அதுசமயத்தில் ஒருபோது நான் சென்னை திருவல்லிக்கேணிக்குப் போயிருந்தேன். அங்கு ஞாப்ப முதலி வீதி 34-ம்நெம்பர் கிருஹஸ்தாபனவாசரும் யூநானிமதாரிய்யா மெடிக்கல் ஸ்டோரின் ஆதினஸ்தரும், பிரபல வர்த்தகரும் எனது உயிர்போன்ற

உத்தம நேசருமாகிய கனதன ஸ்ரீமான் எம். ஏ ஷேக்மதாறு சாகிபு அவர்கள் என்னை கண்டு "நான் ஞானமணிமாலை உங்களைகொண்டே தாற்பரிய உரை எழுதுவித்து உலகப்பிரசித்தப் படுத்தலாமென்ற கருத்துள்ளவனாக இருக்கின்றேன். இதற்கு நீங்கள் பொருந்தத்தான் வேண்டும்" என்று வற்புறுத்திச் சொன்னவர்களாக அன்றைக்கே அதற்காகுமான பொருள் விஷயமாயுள்ள சகல உபகாரங்களும் செய்து என் மனதை திருப்திகரித் தனுப்பினார்கள்.

நானிரவு பகலாக கவலைகொண்டிருந்த பெரிய காரியமான இவ் வேலையானது இந்த உபகார புருஷ உத்தமரின் பொருட் செலவால் சீக்கிரமுடிவாகி வெளிவரத் தடைமறைவின்றிய தோதுவாயிற்று. இவர்களுக்கு இவர்கள் எடுத்த காரியங்கள் நிறைவேறவும் இவர்கள் நடத்திவருகின்ற கம்பெனியானது எந்தக்காலமும் மாறாமல் ஓங்கி வரவும், இவர்கள் உபகாரத்தனம் பொருந்திய ஆயுள் நீடிக்கவும் இந்த ஞானமணிமாலையைச் செய்த நாயகமவர்கள் உதவி செய்தருள்வார்களாக. ஆகவே இந்த ஞானமணிமாலையில் நான் செய்திருக்கின்ற தாற்பரியத்தை எண்ணுங்கள் ஒருமைப்பட்டவர்களாக உற்றாரும் புண்ணிய நேசர்களுக்கும் மற்றுண்டான நமது முஸ்லிம் சகோதரர்களுக்கும் சர்வதயாபரக்கருணாகரனான அல்லாஹுத்த ஆலா இருலோகத்திலும் துணை நின்றருள்வானாகவும். என்கின்ற ஆசிர்வதிப்புடன் சரித்திரத்தை முடிப்பதுடனே இதன் பின்னாலும் ஒன்றொன்றாக சாகிபவர்கள் பாடிய ஞானரத்தினக்குறவஞ்சி, மஅரிபத்துமாலை முதலான அரியபெரிய நூல்களையும் உரைகளுடன் வெளியாக்கப்பட்டிருக்கின்றது என்று நம்முஸ்லிம் சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் அரிதான வந்தனத்துடன், தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செவ்வல்மாநகரம்.**

இராயபுரம்
31—7-1914

எம். ஏ. நெயினாமுகம்மதுப் பாவலன்
தாற்பரிய உரையாசிரியன்.

## மஅரிபத்துமாலை பொழிப்புரை.

### சூசிகை அட்டவணை.

(இலக்கம்.) (பக்கம்.)

ஒன்றாவது பொருட்பால்:-

1. கலிமா விளக்கம் ... ... (6)
2. பன்னிரண்டு அறிவுகளின் விபரம் ... ... (8)

இரண்டாவது பொருட்பால்:-

3. இமாமுடைய நிலை ... ... (20)
4. பாசிக்கானவர் செயல் ... ... (21)
5. பீர் நிலையறியும் வகை ... ... (24)
6. மசலாக் கேட்கும் விபரம் ... ... (26)
7. தாத்துவகை ... ... (52)
8. சிபாத்து வகை ... ... (56)
9. ஹவ்வா பிறந்தது ... ... (137)

மூன்றாவது காமப்பால்:-

10. நவகாமம் அறியும் வகை ... ... (152)
11. றூஹு வகை ... ... (174)
12. பதினான்கு முஷாஹிதாவின் விபரம் ... ... (194)

மஅரிபத்துமாலை பொழிப்புரை சூசிகை அட்டவணை முற்றிற்று.

பிஸ்மில்லாஹி.

# மஹரிபத்துமாலை

## பொழிப்புரை.

---

முதலாவது பொருட்பால்

காப்பு.

விருத்தங்கள்.

பொன்னுலகு சூழும் புகழிறசூல் சொன்னபடி, பொருட்பா லருட்பால் காமப்பாலுஞ், சொன்னமுறை யெழில் பெருகுந் தீனோர்களெல்லாமறிய வியம்பினேன் மஹரிபத்து மாலையிதாம், எண்ணிலங்கும் பெரும் பொருளை யெழுப்பி நிலைநிறுத்திய பீர்முகம்ம தென்பேரன், நின்னயத்தி விலங்கு பொருணிறைந் திருக்க நிலை நிறுத்து நீதி றப்பில் ஆலமீனே.

(இதன் பொருள் ) பொன்மயமான சுவர்க்கலோகத்தின் மணவாளரான நமது நபி நாயகம் சல்லல்லாஹு அவர்கள் தங்கள் திருவாக்கினுல் அருளிச் செய்த பிரகாரம் பொருட்பால் அருட்பால் காமப்பால் என்னும் மூன்றிலும் நிரைந்து போய்க்கிடக்கின்ற மெஞ்ஞான நிலைகளை நமது சகோதரர்களான தீனோர்களெல்லாம் அறிந்துணரும்படியாக இந்த பீர்முஹம்மது என்பவனுன என் மனதில் பிரியங்கொண்டு செய்தேன் ஆனதால் என் ஞானக்களஞ்சியமான இந்த் மஹரிபத்துமாலையை உற்றுணரும் பேர்களுக்கு ஞான நிலையைக் காட்டுவாயாக நீதியான றப்புல் ஆலமீனே! எ-று.

# நால் முகம்.

மகுட விருத்தம்.

ஆதிபெரியோனே தம்பிரானே யவனி யடங்கலும் படைத்தவனே. யோதிப்புகழயா னுனக்கடுமை யுலக நிறைந்தவா வொளித்தா யெனிற். சோதியிருதயன் குறையாமலே சொல்வேன் முகம்மது மஹரிபத்தை, நீதிதெரிந்தோருந் தீனிலாக நிகழ்த்த வுலகெல்லா முதவிசெய்வாய்.

(இ-ள்):—பூர்வீகத்தில் எழுந்தருளிய பெரிய பொருளானவனே! நாயகனே! பூலோக முதலிய யாவற்றையும் படைத்தவனே உன்னை தோத்திரஞ் செய்கின்ற உன் அடிமையாகிய என் இருதயத்தில் நீ ஒளித்திருக்கின்றாயே ஆனதினாலே நீயறியும் படியான சாட்சியாக உன் ஹபீபான நூறுல் அகுமதிய்யா வாகிய முஹம்மதுடைய அகப்பொருளாகிய ஞானவழியை நான் சொல்கிறேன் இதன் நீதியை தெரிந்த யாவரும் நேர்வழி பெறுவார்கள். எ-று.

உலகம் படைத்தவ னொருவனுயனுரிய படைப்பெல்லாந்தான் படைத்து, நிலைமைதவிராமற் படைப்பனைத்தும் நீதியவன்றனை வணங்கவேண்டிக், கலையிலிறக்கினான் கண்டறியக் கருமமறியார்கள் காபிராகும், விலகுவாரிறை யருளைவிட்டும் வேதமுகம்மதின் பெலனுமில்லை, (2)

(இ-ள்):—இந்த உலகத்தை ஒரு நாட்டமானது தன் ஆசையில் நின்றும் படைத்தது அப்படிப்படைத்த படைப்புகளையெல்லாம் தன்னைவணக்கும் படியாயும், அவ்விதம் வணங்கும் தன்மை இப்படி தான் என்று தான் இறக்கிவைத்த வேதங்களில் அங்கங்கே சயிக்கினைகள் செய்தான் அந்தப் பிரகாரஞ் செய்வதை விட்டு மேனி மினுக்காய் அலைபவர்கள் உள்ளபடியே காபிராக இருப்பதுடன் றசூல்லுல்லா உடைய ஷபாஅத்தும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். எ-று.

பெலனிலாகாத குபிரர்தானும் பேசிடும்பொல்லாச் செயலோர்களும், நிலைவின் பொருணீக்கிப் பலஞானத்தை நினைத்தே யுடையோனை நினைவுகொண்டு, நிலையி லொருகோடி வருடம் நின்று



நினைவுவாக்குடன் வணங்கினாலு, மலையின் குகையுள்ளே யானந்த கால மண்ணி னறையுள்ளே மாளிகையின். (3)

(இ-ள்):—வேதங்களுடையபலனில்லாதவர்களெல்லாம்ஈடேற்ற மற்ற செயல் கேடர்களாவார்கள். இன்னும் காபிரீன் களானவர்கள். கண்ட கண்ட ஞானங்களையும் படித்து அதன்படி, நடப்பார்கள். அவ்விதம் அவர்கள் ஒருகோடி வருஷங்களாக நிலையில் நின்று வணங்கினாலும், இன்னும் அவர்கள் மலை கெபிகளில் இருக்கின்ற குகைகளுக்குள்ளே போயிருந்து வணங்கினாலும் அல்லது மண்ணுக்குள்ளே அறைகள் செய்து இருந்து வணங்கினாலும்.

மாளியிருளுக்குண் மண்டபத்தின் மானங்குலையத்தானுடையில்லாம, லூழிநெடுங்கால முலங்கிழந்தே யூணுஞ்சுகமற்றிங்கோடியோடி, யாளும் வருடத்துக் கொருமூச்சுத்தா னனையுமலைழவேயின் மலையிலேறிப், பாழுங்கிணற்றிலே தலைகீழாகப் பயந்து நடுங்கியே மனங்கலங்கி. (4)

(இ-ள்.):—இன்னும் இருளான மாளிகை களுக்குள்ளிருந்து உடையில்லாமல், ஊணுறக்கமற்று, சுவாசங்களை மேலேற்றி இழுத்து வருஷத்துக்கொரு மூச்சுவிட்டு வணங்கினாலும், இன்னும் பாழுங்கிணறுகளில் போய் தலைகீழாய் நின்று பேய் பிசாசைப் போல் பயமற்றிருந்து வணங்கினாலும், இன்னும் அவர்களுடைய ஆயுசெல்லாம் கண்ணீர் வடித்தழுது நின்று உருக்கத்துடன் வணங்கினபோதைக்கும், இன்னும் கடல நீரெல்லாம் தனக்கஞ்சும் சுபாவத்துடன் கற்பாசனம் கொண்ட சித்தனானாலும், அல்லாஹுத்தஆலாவின் ரகசிய பொருளான கலிமாவை உணராதவரையிலும் அவர்கள் பயன்பெறவே மாட்டார்கள். அவர்கள் செய்த தவங்களெல்லாம் வீணாகத்தான் அழிந்துவிடும். மேலைக்கு அவர்கள் ஆண்டவனுடைய தீதாறையும், ஷபா அத்தையும் காணமாட்டார்கள். சுவர்க்கத்தையும் பார்க்கமாட்டார்கள். கடையாக நரகத்திலேதான் போய்விழுவார்கள். அது ஏனென்றால் கீழே சொல்கிறேன் கேளுங்கள். எ-று.

கலங்கியழுதாலுங் கடனீர் மட்டுங் கற்பமருந்திய காட்சிகண்டே, யிலங்கும் பொருணிலை யறிந்திலார்க்கிங் கெல்லாத்தவமுமே யழிவதாகும், நலங்குந்தீதாறும் ஷபா அத்துட னல்லபதவியு நல்

வழியும், விளங்கிச் சுவர்க்கத்தை நரகந்தன்னில் வீழ்வாரேதென்ருல் விளம்பக்கேளீர். (5)

(இ-ள்): - ஏழுசத்தா சமுத்திரங்களைப் போல் கண்ணீர் வடித்து அலைந்தாலும், கற்பங்களைத்தின்று எக்காலும் இளம் பருவயதாக இருந்து வந்தாலும், (இருநேத்ரங்களிலும்) இலங்கிக் கொண்டிருக்கும்படியான ''தாத்து'' என்னும் சர்ஜோதியை, அதாவது தன்னைத்தெரிந்து தீரமான ஸமாதியைப் பெற்றுக்கொள்ளாத மரபாவிமளுக்கு அவர்கள் செய்த தொழுகை முதலான சர்வதயங்களுந் துலைந்துபோய் கடைசியாக ஞானகுருவாகிய நம்நபியவர்களின் ''கடையுக மன்ருட்டம்'' என்கின்ற (ஷபாஅத்தும்) இல்லாமல் போய்விடும் அவர்கள் ஒதுங்குந் தானமானது ஊழிக்கனல் சுவாலைப்பற்றி எரியும்படியான நரகமே ஆகும். ஏனென்ருல் பின் வருமாறு சொல்கிறேன். எ-று.

விளம்பக் கேளுங்கா ணுலகத்தோரே வேதமிறக்கிய பெரிய நாயன், தழும்பில்லாதபி தமைட்புகழத் தக்ககலிமாவின் படி நடக்க, களிப்பில்லாததோர் கலிமாவுந்தான் கதவுசுவர்க்கத்துத் திறவுகோலாங், குளம்பிமனதிலே யறியார்குபிர் கூறுந்திறவுகோ லில்லாததால் (6)

(இ-ள்.):—யார்காணும் உலகத்தார்களே! கேளுங்கள் அல்லாஹுத் தஆலா உலகத்தார்கள் தன்னை அறியுப பொருட்டு முதல் நபிகளை அனுப்பி அப்பால் வேதங்களை இறக்கி அந்த வேதங்களுக்குள்ளே தன்னை யடக்கிய பொருளான பொக்கிஷமாக கலிமாவென்னும் மூல மந்திரத்தை அடத்து வைத்தான், அதைப் பற்றி 'இந்த கலீமாவாகிறது சுவர்க்கத்து திறவுகோல் ''என்றும் அறிவித்தான். ஆனபடியால் அந்தத் திறவுகோலை மனதில் பதிய வைக்காதவர்களெல்லாம் குபிரியத்தின் பேரிலுள்ள நஷ்டவாளராக இருக்கும். எ று.

ஆனபடியாலே குபிரோரெல்லா மறந்து பாவியா யழிவதாகு, மீனமணுகாத நாயன்ருனு மிறசூல் முகம்மதைப் பார்த்துச் சொல்வான். ஏனுஞ் சுவர்க்கந்தோ ணரகிரண்டி லெதுவே னுமக்கென விறசூல்சொன்ஞர், மானநிறைந்திடுஞ் சுவர்க்கமென்க மன்னு னிறையவன் கொடுத்தே னென்ருன். (7)



(இ-ள்.):—ஆனபடியால் அந்த திறவுகோலை கைப்பிடியாக வைத்துக் கொள்ளாத காபிரீன்களின் தவங்களெல்லாம் ஒரு பயனுங்கொடுக்காமல் போய்விடும். கருமத்தில் அல்லாஹுத் தஆலா றசூலுல்லாவுடைய ஒளிவைப்படைத்து அந்த ஒளி விடத்தில் தன்னிடமிருக்கின்ற உம்முல் கித்தாபைக் காட்டி அதிலுள்ள சுவர்க்க நரகப்பிளான்களைக் காண்பித்து முஹம்மதே! உமக்கு இந்த சுவர்க்கம் வேண்டுமா? அந்த நரகம் வேண்டுமா? ''என்று கேட்டான். அதற்கு அந்த முஹம்மதியா என்னும் ஒளிவானது ''எனக்கு இந்த சுவர்க்கந்தான் வேண்டும்!'' என்று மறுமொழி சொல்லிற்று. அப்போது அல்லாஹுத் தஆலா ''முஹம்மதே? என் ஹபீபே! அப்படியே தந்தேன் நீயும் உன் சேனைகளும் அனுபவியுங்கள்?'' என்று நன்கொடை கொடுத்தான். எ-று.

கொடுத்த சுவர்க்கத்தை மறுத்தும் வாங்கக்கொடுத்தே னிருமொழி கூறலில்லை, யடுத்த நாகந்தான் குபிரோர்க்கென்றே யாதி பெரியவனருளிச்செய்தான், விடுத்தகுபிர்தீனே ரெவரென்ருலும் வேத முகம்மதின் ஷறகை நீக்கிக், கொடுத்தசெயற் குபிர் வணக்கத் தோர்க்குக் கிடைக்கு நரகல்லால் சுவர்க்கமில்லை. (8)

(இ-ள்):— அப்பால் முஹம்மதென்னும் ஒளிவானது, மறுத் தொன்றும் பேசாமல் இருந்து விட்டது. அப்பால் அல்லாஹுத் தஆலா ''அந்த நரகமானது என்னுடைய மூலஸ்தான மந்திரமாகிய கலிமாவைச் சொலலாத காபிரீன்களெல்லாம் ஊழிகாலம் கிடந்து வேதனைப் படுகின்றதர்க்காக ஸ்தாபித்தேன்'' என்ருன். ஆதியாகிய பொருளான அல்லா இவ்விதம் சொல்லிருப்பதாலே முஹம்மது நபியவர்களின் ஷறீ அத்தின்மணித்தீபமாகிய கலிமாவைச் சொல்லி ஈமான் கொள்ளாத காபிரீன் களுக்கெல்லாம் சதாயாதனையுள்ள நரகமே ஒதுங்குந்தான மேயன்றி சுவர்க்க மென்பது மருந்துக்குங் கிடையாது. (எ-று)

சுவர்க்கஞ்சேருவசர் குபிரோரென்று சொன்ன வுடன்காபிரமவனு, மிவர்க்கு மொருதரந் தவுபாச் செய்தே யிபுகா தீமானை நிறுத்தவேணு, மவர்க்குந்தவுபாவைச் செய்யாதாலு மாதிநான் மாறிக்குபிருனலு, மிவர்க்கு நரகல்லால் சுவர்க்கமில்லை யென்ருர் முகம்மது நபியிறசூல் (9)

(இ-ள்):—உலகத்துதில் எவனுவது ஒரு முஸ்லிமானவன் ஒரு காபிரானவனைப்பார்த்து இவன் சொர்க்கவாளி யென்று சொல்வானுனல் உடனே அந்த முஸ்லிமானவன், காபிருக் விடுவான். அவனைத் தவ்பா செய்யசொல்லி குபிர்க்கலிமாச் சொல்லிக்கொடுக்க வேண்டும். அவ்விதம் செய்ய விடாமல் அடாதுடியாக இருப்பானே ஆனால் அவனுக்கும் ஊழியூழிகாலம் நரகமே கிடைக்கும். சுவர்க்கம் கிடையாது" என்று நபிநாயகம் அவர்கள் திருவாய் மலர்ந்து சொல்லி யிருக்கிறார்கள். எ-று.

நபிகள் பெருமானுர் நவச்சுடாரம் நபிகளுயக மான வள்ளல், புவியில் புறுக்கானைப் பார்த்துச் சொன்னுர் போதமிமாம்களுமிதன் கித்தாபின், கலியாமஹறிபா ஆரிபீனிற் கண்டவிசளத்தைக் கவிதை யாகத், தவியாவமுதான மஹறிபத்துத் தானுமெனச் சொல்லி நவிலலுற்ரும். (10)

(இ-ள்):—இந்த மஹபத்துமாலையில் இருக்கின்ற விஷயங்க ளெல்லாம் நபிமார்களுக்கு கிரீடமாகிய நமது நாயகம் ஸல்லல் லாஹு அலைஹிவசல்லம் அவர்மள் திருவாய் மொழிகளான அதீது குதுஸியில் நின்றும் இமாம்கள் தங்கள் கிதாபுகளில் எதிதினர்கள் அவைகளை எடுத்து அனேக ஆரிபீன்கள் விபரித்தார் கள் அதின் கருத்தைக்கொண்டே நானும் சொல்லியிருக்கின்றேன். எ-று,

நவில்வாருலகத்தில் தீனேரெல்லா நல்லபொருளெல்லா மறிந் தோமென்பார், புவியிலருட்பாலும் பொருளின்பாலும் புகலுங்கா மப்பான் முப்பாலையுங், கவியிலறிந்தார்போ லெல்லாஞ்சொல்வார் கடுகுபோனமார்க்கங் கண்டறியார், தவியாப்புறுக்கானிற் சொன்ன படி தமிழானுலகத்தி லறியச் சொன்னேன். (11)

(இ-ள்):—உலகத்திலுள்ள நமது சகோதரர்களான தீனவர்க ளெலலாம் நாங்கள் எல்லாம் அறிந்துவிட்டோம்! என்று கண்ட தெல்லாம் பிதற்றி ஞானத்திலுள்ள பொருட்பால், அருட்பால், காமப்பால் முதலிய யாவற்றும் அறிந்து அதன்படி நடப்பவர் களைப்போல் ஜாடைபண்ணுவார்கள் அந்தசோற்று ராமன்கள் ஒரு கடுகுப்பிரமாணமாவது தன் நிலையைப்பற்றி அறிவார்களா? அறிய மாட்டார்கள், ஆனதால் அல்லாஹுத்தஆலா தன் திருவேத மாகிய குர்ஆனில் சயிக்கினை செய்தபிரகாரம் பிசகாமல் ஜனங்கள்



நடந்து நேர்வழி பெறும்படியாக நான் இந்த மாலையை தமிழ்ப் பாஷையாகச் சொல்லிவிட்டேன். எ-று.

———(x)———

# கலிமா விளக்கம்.

விருத்தங்கள்,

———

சொல்லுங் கலிமாத்தான் லாஇலாக இல்லல்லாகூவென்றி யம்புவது, நல்ல ஷறகுட னெழுத்தீராறந் நான் மூன்றெழுத்தையு நவிலக்கேளுந், தொல்லை யணுகாத முகம்மதுற்ற சூலுல்லாகி யென்றியம்புவது, மெல்லா மறுநான்கென் றிடுமெழுத்தாமிணைத்துக் கலிமாவி வியம்புவதே. (12)

(இ-ள்):—கலிமா என்பது என்னவென்ருல் ஷறஹில் வந்திருக் கின்றபடி, லாஇலாஹ இல்லல்லாஹு என்கின்ற பனிரண்டு அட்சரங் களும் அப்பால் முஹம்மதுர் றசூலுல்லாஹி என்கிற பனிரண்டு அட்சரங்களும் ஆகக்கூடி இருபத்துநான்கு அட்சரங்களாக இருக்கும். எ-று.

இயப்புங் கலிமாவின் முகம்மதுற்ற சூலுல்லாகியென் றெழுத் தின்பொரு ணயம்பெறப் பின்னுற் சொல்லுகிறே னவில்லா இலாக இல்லல்லா வென்று, வியம்பு மீராரென் றெழுத்துமாகு மியல்பா மறுநான்கு மிதுகலிமாப், பயமி லாமலே செய்வதற்குப் பறுலு நாலுண்டும் பகரக் கேளீர். (13)

(இ-ள்):— மேலே சொன்ன கலிமாவிலே முகம்மதுர் றசூலுல் லாஹி, யென்கிற அட்சரங்களின் பொருளைப் பின்னுல் சொல் கிறேன். முதல் வந்த லாஇலாஹ இல்லல்லாஹு என்கிறதாவது பன்னிரண்டு அட்சரங்களைப் பொதித்ததாக இருக்கும். இதுவே இருபத்து நான்கு அட்சரங்களுக்குரிய கலிமா முழுவதும் நிரம்பின தாக இருக்கிறது. இந்தப்பயமற்ற கலிமாவைச் சொல்வதற்கு நான்கு பறுலுகள் இருக்கின்றன. அவைகளைக் கீழே சொல்கிறேன் கண்டுக்கொள்ளுங்கள். எ-று

யகருங், கலிமாவை யுரைக்கும்போது பலதும் நினைவினி னினைந்
திடாம னிகரி லாமனத் தொருநினைவாய் நிறுத்தி வாயினு லுரைக்க
முக்கா, லு கருங் கலிமாவி லருத்தம்பொரு யுவந்தோ யறிவது
பறுவிரண்டா, மிருகங் கலிமாவி லருத்தப்படி யிதமாய் நடப்பது
பறுலுமுன்றே. (14)

(இ-ள்):— அந்தக்கலிமாவைச் சொல்லும்போது மனதில் பல எண்ணங்களையும் நினைக்காமல், நிகரில்லாத ஆண்டவன் பேரில் கதிர்முனைபோல் நிலையாக நிறுத்திய ஒரே நிய்யத்துடன் வாயால் மூன்று தடவை சொல்வது, ஒரு பறுலு. அப்படிச் சொல்லும் போதே அதன் கலப்பறுதலிற்ற தெளிவான அர்த்தத்தை இருதயத்தில் நிர்ணயப்படுத்துவது ஒருபறுலு. அப்படித்தெரிந்து கொண்ட அர்த்தத்தின் பிரகாரம் சாதுவாக நடப்பது ஒரு பறுலு ஆகப் பறுலு மூன்றுடன். எ-று.

மூன்று பறுலையு மறியச் சொன்னேன் மொழிகி றேனுலாம்
பறுலையுந்தான், தோன்றுங் கலிமாவின் முகம்மதுற்ற சூலுல்லாப்
பொருட் பின்னுற் சொல்லே, ளுண்ட பெரியவன் இலாக இல்லல்
லாஹு வொன்றியப்புவது வேண்டும் பன்னிரண் டெழுத்து முண்டும்
விளம்பக் கேளுங்காணறிவதனை (15)

(இ-ள்):—நான்காவது பறுலையும் சொல்லிவிடுகிறேன். அதாவது முஹம்மதுர் றசூலுல்லாஹி, யென்று சொல்வதாக இருக்கும் இதன அர்த்தத்தைக் கடைசியில் சொல்கிறேன். அல்லாஹுத் தஆலா லாஇலாஹ இல்லல்லாஹு என்ற பனிரண்டு அட்சரங்களில்தான் ஒளித்திருககின்ருன். அந்தப் பனிரண்டு அட்சரங்களும் பனிரண்டு அறிவுகளாக இருக்கின்றன. அவைகளையும் கீழே சொல்கிறேன். கேட்பீர்களாக. எ-று.

கலிமா விளக்கம் முற்றிற்று.

———(x)———

# பன்னிரண்டு அறிவுகளின் விபரம்.

விருத்தங்கள்.

அறியும் பன்னிரண்டெழுத்தையுந்தா னறைந்திட்டேன்றிரு
நெறிநீதியு, லுறையாந் திருநெறி யறியாமூடர்க்குரைக்கிறேனிதிற்
சுருக்கமாகச், செறியும் பன்னிரண் டறிவுதனிற் செப்புவேன்



முதலறிவைக்கேளுங், குறியா யிறைவன் றனையறியக் கூறுங் கலி
மாவினெழுத்தொன்ருலே. (16)

(இ-ள்):—நான் இப்போது சொல்லப்போகின்ற பன்னிரண்டு அறிவுகளையும் முன்னமே என்னுடைய நெறிநீதி யென்கிற நூலில் சொல்லிவிட்டேன். அந்த நூலை யறிந்தில்லாத நிற்மூட ஜனங்களுக்காக வேண்டி இந்த நூலிலும் சுருக்கமாகச் சொல்கிறேன். அந்தப் பனிரண்டு அறிவுகளிலும். முதலாவது அறிவைச்சொல்கிறேன் கேளுங்கள். அதாவது அல்லாஹுத்தஆலா தன்மையான இரகசியங்களை அறியும் படியாக வந்த கலிமாவில் உள்ள ஒரு எழுத்தாலே அந்த அறிவு வெளியாகும் எப்படியென்ருல். எ-று.

எழுத்தை யிருத்தினுற் கமலத்துள்ளே யிலங்கும் பொருள் றப்பில்
ஆலமீனுஞ் சுழித்து மூச்சாகவெழுந்தசோதிச் சுடரும் யாகூவென்
றெழுத்துமாகு. மழுத்தி மேல்விழி நிலையைநோக்கி யுருவை யறிவது
முதலறிவாம். ஒழித்துப் பதுக்கின்ற வரிவுதனையோது வேண்
றண்டா மறிவைக்கேளும். (17)

(இ-ள்):— அந்த எழுத்தை இருதயத்தின் கமலத்தில் இருத்தினுல் அங்கே ஒரு ஒளிவு பிரகாசிக்கும் அதுவே றப்புல் ஆலமீன் என்பதாகும். அந்த எழுத்தாவது சுவாசத்தைச் சுழித்து வாங்கும் போது அந்த பிரகாசத்துடன் கலந்து நிற்கின்ற ஹு என்றதாக இருக்கும். இந்த தந்திரத்துடன் கூர்மையான நினைவுடன் கண்ணை புருவமத்தியின் மேலே ஏற்றி அந்த எற்றத்தோடும் அங்கு தோன்றுகிற ஒளிவை எதிர்பார்ப்பது தான் முதலாவது அறிவாகும் இனி இரண்டாம் அறிவைச் சொல்கிறேன் கேளுங்கள். எ-று.

அறியு முடலதை முகம்மதுற்ற சூலுல்லாகி யென்றட்சரத்
தாற், றுகாச் சுருபமா யுடலமைத்தான் சாற்றுங்கோட்டைக்கங்
கரசு நாயன், குறியா முகந்தனில் விழிநடுவிற் கோர்க்கு முயிரறப்
பில் ஆலாமீனு, யுறுவோன் மலக்குக ளுலுபெரு முடையோனே
லலையுரைக்குகிறேன். (18)

(இ-ள்):— இந்த சரீரமானது முஹம்மதுர் றசூலுல்லாஹி யென்னும் கலிமாவினுல் அமைந்திருக்கின்றது, இப்படிச் சமைந்திருக்கின்ற கோட்டைக்கு அரசனுனவன் றப்புல் ஆலமீனுக இருக்கு மென்றும், அவன் முகமானதில் இருகண்ணிலும் நடுவே இலங்கு

கின்ற உயிர் நிலையான ஒளிவாக நிற்கின்ருனென்றும் அவனைச்சூழ பகவதிகளான நான்கு மலக்குகளும், இருக்கிருர்கள் என்றும் இன்னும் சொல்கிறேன், எ-று.

உரைத்த வுடலதி லேந்துவீடு முவந்த பேச்சுடன் மூச்சு
கேள்வி, நிரைத்த பார்வையு முயிர்நிலையு நீதி யெழுத்தைந்து
நற்சிறைந்தும், விரைத்த பொருட்பாலிலுரைக் கொணுது வெளியா
யருட்பாலினிமேற் சொல்வேன், திருத்து மிருவகை யறிவதுதான்
செப்பினேன் ரண்டா மறிவிதமே. (19)

(இ-ள்):—சரீரத்தில் ஐந்து வகை மாளிகையிருக்கின்றன அவைகளில் பேச்சு, மூச்சு, கேள்வி, பார்வை, உயிர்நிலை என்னும் நீதி எழுத்தாகிய புலன்கள் ஐந்தும் இருக்கின்றன என்றும், இன்னும் அவைகளுக்காதாரமாக அணுசிறுகளான பூதங்கள் ஐந்தும் இருக்கின்றன என்றும் இவ்விதம் அறிவது இரண்டாம் அறிவாகும் இவைகளின் விபரங்களை இந்த பொருட்பாலில் சொல்லப்படாது. கீழ் வருகிற அருட்பாலில் சொல்லுகிறேன் கண்டுக்கொள்ளுங்கள் இனி மூன்றும் அறிவைச் சொல்லுகிறேன். எ-று.

அறிவா மூன்றதை யருளக்கேளு மாதிபெரியவன் வேத
நாலு, மறையுஞ் சுருபுகள் பலஞானமு மாதி பெரியவன் வசன
மென்றங், குறியும் வகையுள்ள பொருள்களெல்லாங்குறுவா னித
மொன்றிருப்பதாலே மறையின் வழியெல்லாஞ் சரியேயென்று மனதி
னினைப்பது மறிவுமூன்றே. (20)

(இ-ள்):—நாலுவேதங்களும், தேவகட்டளைகளான ஸுஹ்புகளும், மஅரிபா என்னும் ஞானமும் ஆதிவஸ்து வாகிய அல்லாஹுத்தஆலாவின் திருவசனம் என்றும், அவைகளின் பொருளானது குருமுஹம்மதுடைய திருவாக்கால் வந்ததென்றும், வேதங்களுலுள்ள எல்லா ஆயத்துகளும் வணக்கங்களுக்குரிய ஸாஸனமென்றும் அதைப் பற்றியதெல்லாம் நேர்வழிதான் என்றும், நிர்ணயிப்பது தான் மூன்றும் அறிவு ஆகும். எ-று.

மூன்று வேதாந்த னிறக்கினது முன்னுள்ள நபியனைவோர்க்
குந்தா, ஞண்ட பெரியவ னொளிவில்நபி யன்ன ரூபமாயிருந்த
போது, கூண்ட பெரியவ னபியைக்கண்டு கூறு முகம்மது தீனிலானோர்
தோன்று நபிகண்முன் னொளியொன்ருலே தொகுத்தார் சரியென்னு
மறிவுநாலே. (21)



(இ-ள்): முன்னுண்டான நபிமார்கள் எல்லோர்க்கும் மூன்று வேதந்தானிறக்கி வைத்தான், நமது நபியவர்கள் அன்னத்தின் வடிவாக இருந்த மகாமில் வைத்து நபிமார்களுடைய அறுவாஹுகளை அழைத்து முஹம்மதுக்நக்கலிமாச் சொல்லச்சொன்னுன் உடனே அந்த அறுவாஹுகள் இஸ்லாமிலாகி விட்டன. அப்போதுதான் அந்த அர்வாஹுகளை முஹம்மதுடைய ஒளிவுக்குள், அடைத்தான் என்றும் அறிவது, நாலாம் அறிவாகும். எ-று,

நாலாம் வேதத்தி னிறையோன் சொன்னுனேக்கியாமத்தின்
மையெழுப்பி, யாலம்படைத்தவன் றிருமுன்னுக வைம்பதாயிரம்
வருடமோர்நாள், கால்கை யுறுப்பெல்லாஞ் சாட்சிசொல்லக்கடிய
மருஷிறிற் கனத்தநன்மைப், பாலங் கடந்துதான் சுவர்க்கஞ் சேர்
வார் பகரு மறிவஞ்சா மின்னங் கேளீர். (22)

(இ-ள்.) நாலாம்வேதமாகிய நம்முடைய குர்ஆன் ஷரீபில் அல்லா சொன்னபடி, ஜீவராசிகளை யெல்லாம் நாளைகியாமத்தில் எழுப்பி அல்லாவின் திருச்சமுகமாக நிறுத்தி ஐம்பதினுயிரம் வருஷங்கொண்ட ஒரு பெரிய யுகத்தை ஒரு நாளாக நீளவைத்து சூரிய சந்திரர்களையும் அப்படியே நிற்கவைத்து மனிதர்கள் செய்த நன்மை தீமைகளை அவரவர்களின் கால்கை உருப்புகளான அவயவங்களைக் கொண்டே சொல்ல வைத்து நீதிவிஜாரித்து அந்த கடினவெப்பத்தையுடைய மஹ்ஷர் மைதானத்தை கடந்த நன்மையாளர்கள் சிருத்துல் முஸ்தக்கீன், என்னும் பாலத்தையுங் கடந்துதான் சுவர்க்கஞ்சேரவேண்டுமென்றும், உறுதிகொள்வது ஐந்தாம் அறிவாகும். எ-று.

அஞ்சி டாப்பாவஞ் செய்வதெல்லாம் அஜாசீ றனைச்சேரு
மவனுவந்தே, யெஞ்செய லிந்த வடியானென வெளி நாருக்கங்
கழைத்துச் செல்வான், மிஞ்சிடநம்மை யிறையுவந்து மீசான்
றிராசினிற் கனத்தால் நன்மை யஞ்சி டாதேட்டை வலதுகையி
லருள்வனிஃதறி வாருநமே. (23)

(இ-ள்.):—இன்னும் அந்த மஹ்ஷரில் தீமையான பாவிகளை அதற்குரிய குருவாகிய லாஅத்துப்பெற்ற இப்லீஸானவன் "ஓ! என் கூட்டங்களே வாருங்கள்" என்றழைத்துக் கொண்டுபோய் நரகில் தள்ளுவான் என்றும், மீஜான் என்னும் தேவத்தராசில் பாவிகளையும், சுபாவிகளையும், வைத்து நிறுக்கப்பட்டு நன்மை

யாளருக்கு நன்மைப் பட்டோலையும், தீமையாளருக்குத் தீமைப் பட்டோலையும் கொடுத்தனுப்பப்படும் என்றும் உண்மை கொள்வது ஆரும் அறிவாகும். எ-து.

அறியு முலுமுழுக் கவுலற்காகு மத்தக்கவுலல் நீர்சுடாதப்
போது, திரிந்தங் கலையாமல் சுவர்க்கஞ்சேர்வார் தீங்கு பெருமை
பொய் ஹரு பகீலும், பொருந்தி ராமனம பளிங்கியாகும் பொன்
ஞார்வர்க்கத்தி ன முதருந்த, நிறைந்தகசடச்கதுஞ் செரிக்கா
தென்ற நீதிய நிவிஃ தேழாகுமே. (24)

(இ-ள்.)—குஸால் முழுக்குகள் கௌதர் என்னும் தேவ நதியைச் சேரும். அப்போது அவனை அந்த நதிசுடாது, பெருமை பொய், ஹரும், பகீல் இவைகள் செய்யாமல் நீதியாய் நடந்தவர்கள் எங்குந்திரிந்து அலையாமல் சுருக்காய் சுவர்க்கத்தில் அவரவர்கள் மாளிகையில் போய்ச் சேருவார்கள் மனதில் கசடில்லாதவர்களுடைய மனங்கள் பளிங்கிக் கிண்ணாங்களாக இருந்து சுவர்க்கத்தின் தேவாமிர்தங்களைக் கொண்டுவந்து கொடுக்கும். அவ்விதம் கொடுக்கின்ற அமுதங்கள் துன்யாவில் மனக்கசடுள்ளவர்களுக்கு ஜீரணசக்தியாகாது, என்றும் இவ்வித நீதியிடன் ஒப்பு கொள்வது ஏழாம் அறிவாகும். எ-று.

என்றுந் தொழுகையிலறிவுநேர மிணையமவுத்துக்கங்கதாபில்
லாதார், சென்று மலக்கலின் மவுத்தைச்சேருஞ் செப்யுமுலுநா
கரவுதேட்கா, மொண்ட வுலுநீத மீக்காயிற்காம் ஜிபுரீல்க்கின்று
அன்ஸல்லுவுமாம், தன்ரும் வாங்கிசு ருபீற்காகு விலுங்காமத்தக்
கொடிநிழற்கே (25)

(இ-ள்):— எந்த நாளும் தொழுகைக்குரிய நேரங்களை எதிர்பார்த் திருக்கின்றதாவது, மவ்த்துடைய தருணத்தில் அதாபு என்கிற வேதனை ஒன்றுஞ் செய்யவிடாமல் தடுத்து அப்பால் மலக்கல்மௌத்து என்னும் எமனைச்சேரும் உலுச்செய்த நீரானது நரகத்தின் பாம்பு, தேள் முதலிய கொடியவிஷ ஐந்துக்களின் வேதனைகளைத் தட்டிக்கொண்டு மீக்காயில் என்னும் தண்ணீர் அதிகாரியைச்சேரும். இன்று அன்ஸல்லு என்னும் சூறத்தானது ஹிபுரீல் இடம் போய்ச்சேர்ந்து கொள்ளும். பாங்கு சத்தமானது இசுருபில் மலக்கிடம் சேர்ந்து'கொள்ளும். காமத்துச் சொல்வது லிவாவுல்ஹம்து என்கிற கொடி நிழலில் கொண்டு போய்ச் சேர்க்கும். எ-று.



கருபா தனைக்சேருங் கிபுலாநிலை சத்தன் மகுமுறு தக்பீர்து
ஆ, எகீன் முந்தகா மூன்றுந்தோன்று மேக னிலேல்சேருங்கிரு அத்
தோ தல் தவுபா லெவ்குக்கா முங்கர் நக்கீர் நம்மைச்சேருமாம்
றுக்கூஉ செய்தல், சுகவாச வான சஜதாச் செய்தல் தக்க பிதா
ஆதந்தம் மைச்சேரும். (12)

(இ-ள்):—கிபுலாவை முன்னோக்குதல் கஉபாவைச் சேரும். தக்பீர் கட்டுவது, பைத்துல்மா உமூர்ப்பள்ளியைச் சேரும், துஆ ஓதுவது எகீன் மரத்தையும், சிதுறத்துல் முன்தஹாமரத்தையும் சேரும், கிருஅத்து வோதுதல் ஏகநிலையாகிய அறுவைஷச்சேரும், தவ்பாச்செய்தல் லௌஹைச்சேரும், றுக்கூஉ செய்தல் முன்கர் நக்கீரின் கேள்விக்கு ஜ்வாபு கொடுக்கச் செய்யும், ஸுஜூது நமது ஆதிபிதாவாகிய ஆதம் அலைஹிஸ்லாத்தைச் சேரும். எ-று.

சேருஞ் சமதான பின்னிருப்புச் சிறந்த குறுசத்தகிய்யாத்து
வுங், கூறங் காத்தபீன் கிருமனுக்குக் குணமா யினைந்திடும் சலா
மிரண்டும், மாறுந் தவ்பாவும் கலத்துக்காகும் ஆமீன் கணக்கில்லா
விண்ணோர்க்கென்று, மேரும் வலக்கையிற் றசுபிதொட்டா லிபுலீ
சணுகாத குறடாகுமே, (27)

(இ-ள்.): — பூரணமாக சேருகின்ற கடைசியான இருப்பும், அதில் ஓதுகின்ற அத்தஹியாத்தும் கிருமன், காத்துபீன் என்ற இரண்டு மலக்குகளையும் சேரும், ஸலாங்கொடுத்தலும், தெனபாச்செய்தலும் லௌகை எழுதுகின்ற கலத்தைச் சேர்ந்துவிடும். அப்பால் ஆமீன் சொல்கிறது, கணக்கிலடங்காத வானவர்களுக்காக ஆகிவிடும். வலக்கையில் தொட்டு உருட்டி ஓதுகின்ற தஸ்பிஹு கிறது, இபுலீஸை அணுகவொட்டாமல் ஓட்டுகின்ற குறடாவாக ஆகிவிடும். எ-று.

ஆகும் சலவாத்து மஹுஷர் தனிலங்கந் தளப்பாத பெலத்துக்
காகு, நாவாலுரைதிட்ட பாத்திஹாவு நமது குலத்தார்களிறந்த
வர்க்காம், பூவில் மாலைபோ னபியிறகுல் புயத்திற்றரித்திடுஞ் சுன்
னத்தெல்லா மேவும் செப்பிலி குருபான் செய்ய வினையு மிசுமாயீல்
நபிக்குத்தானே. (28)

(இ-ள்):—அப்பால் ஸலவாத்து வோதுதல் மஹ்ஷர் நாளையில் திரேகம் வாடாதபடி பொறுத்து நிற்க்கிறதாக வேண்டிய பல

மாக வந்துசேரும். அப்பால் ஓதும்படியான பாத்திஹா வானது நமது வங்ஷிஷத்தார்க்குப் போய்ச்சேரும். அப்பால் தொழும் சுன் னத்துத் தொழுகையானது நமது நபிநாயகம் அவர்கள் புயத்தின் பூமாலைபோல் போய்ச்சேர்ந்துவிடும். ஹஜ்ஜுப் பெருநாளையில் கொடுக்கும் செம்பறிக்கிடாவின் குர்பானியானது நபி இஸ்மாயில அவர்களுக்குப் போய்ச்சேரும். எ-று.

தானம் பகர்குரு ஞேதிவிலக்கத் தனிமைக் கபுறினில்வெளிச்ச மாகு, மேணி தனிமேலறிக் கொடுப்பதெல்லா மிணையும் வழிக்கா வற்காரர்க்காகும், பூணும் ஸிபாறத்து நசறுதோஷப் பொன்னூர் வழிகாணப் பொருளுமாகும், ஈன்மனுகாத வுலகத்தோர்க்கு விளபினை னெட்டா மறிவிதாமே, (29)

(இ-ள்):—காபில்களுக்கு திரவியங் கொடுத்து குருஆன் ஓதி பக்ஷ்செய்யச் செய்தல் கபுறுக்கு விளக்காகவருப, றமலான் மாதத் தில் ஸக்காத்து கொடுக்குதல் சுவர்க்கம் போகிறவரைக்கும் இடையில் வருகின்ற மனஜிக்களுக்கு வழித்துணையாளராகவரும். மையத்தை அடக்கி மூன்றும் ஜியாறத்து முதலானது செய்தல், அதற்க்காக சோறு ரொட்டிகள் கொடுக்கிறது எல்லாம் சொர்க்க லோகத்தின் பாதையைக் காட்டுகிற தூதர்களாக இருக்கும். என்று இவ்விதம் மனதில் உறுதி கொள்ளுகிறதுதான். எட்டாம் அறிவாக இருக்கும். எ-று.

ஆன முதல்களுற் பதிலேயொன்றை யளிக்கவெளியோர்கட் கிதுஸக்காதது, வானந் திராசுக்காம் நன்மையேட்டைவாங்கிவலக் கரத் தியப்போதும், பூளப் மினத்தோருக் கீவதெல்லாம் பொறியின் மாலீக்கு கோபமாறத், தானே யுலகத்தை யிழந்தோர்க்கீயத்தருத்தி லிறை முன்னே சேருமதே. (30)

(இ-ள்.):—ஸக்காத்து என்பது நம்மிடம் இருக்கிறது திரவியங் களில் நாற்பது ருபாய்க்கு ஒரு ரூபாய் விதமெடுத்து தர்மம் செய்வது, அது மூன்று வகையாகும் வாரிஸ் இல்லாதவர்களுக்கும் மற்ற எளியவர்களுக்கும் கொடுப்பதாவது கியாமநாளையில், மீஸான் தராசானது நன்மையை முறுகவைக்கும், தன் குடும்ப ஜனங்களுக்குக் கொடுக்கிறதாவது. நரகத்தில் உள்ள மாலிக் கென்னும் செலவிட்டுமலக்கின் கோபத்தைத் தனியச்செய்யும். உலகத்தின் சுகங்ளை விட்டும் ஒதுங்கியிருக்கும் தவசிளுக்குக்



கொடுப்பதாவது அல்லாஉடைய திருசமுகத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும். எ-று.

சேர்ந்த வினமெல்லா மெளியோர்க்கீயச் செம்பொற்பதி செருப்வேளை தனிர், காந்திக் கிதுமீருங் கடிநாய்க்கிது கத்தாவழி தனைக்காட்டிவைக்கும், வாழ்ந்த சுவர்க்கத்திலிருப்பாரென்றுவள ளல் முகம்மது நபிதாஞ்சொன்னர் மாந்த ரறியவே தமிழினுலே மகிழ்ந்திங் குறைத்திட்டே னறிவொன்பதே. (31)

(இ-ள்):—எப்படியும் எளியவர்களுக்கு ஸக்காத்து கொடுக் கும்போது சில பகில்களைப்போல கடிநாய்கள் போல் கோபித்து விழாமல் முகமலர்ந்த குணத்தோடும் கொடுப்பார்களானல் பொதுவாக அதாவது அவர்களை சொர்க்கத்தில்கொண்டு போய்ச் சேர்த்துவிடும், என்று நபிநாயகம் அவர்கள் திருவாய்மலந்து சொல்லினார்கள் என்றும் உறுதிகொள்வது ஒன்பதாம் அறிவாக இருக்கும். எ-று.

ஒன்பதா மிஃதொருபஃது முடையோன் பறுலுக்காய் நோன்பு வைக்க, வின்பமுடன் கோபம் ஹறும்பகிலு மெவர்க்கு மூதச சன முரைத்திடாம. லன்பின் கயல்விழி கூறுல்கீனை யீனயுஞ் சுக மொன்று மறியமாட்டா, ரின்ப நோன்பில்லா வுலகத்தோர்கட் கேழையான்கூற வின்னங்கேளீர். (32)

(இ-ள்.)— றமலான் மாதத்தில் முப்பதுநாளும் நோன்பைப் பறுலாகப் பிடித்திருந்து, பொய்பேசாமலும், ஹறும் செய்யா மலும், பெருமை பேசாமலும், கோபம் வரவொட்டாமலும் பகில் தனம் செய்யாமலும், யாருடைய புறணிகளையும் கழுவிக்குடிக் காமலும் இருக்கவேணும். இவ்விதம் நடக்கத்தவறினுல் சுவர்க் கத்தில் ஹூறுல்ஈன்களைப் போகப்செய்ய சக்தியற்றவர்களாக இருப்பார்கள் என்றறிவது தான் பத்தாம் அறிவு ஆக இருக்கும். எ-று

இன்னம் றமலானி லோரிரவி லீனையோன் லைலத்துல் கதிரி யாகும், தன்னில் வணக்கந்தான் மனுஷர்தனிற்ருபங்களைபோட்டுவ வருத்தமாற்றுஞ் சொன்ன வகையறி பத்துமிதே சுகமாய் அற பாவில்ஹச்சுசெய்யப், பொன்னூர்பசையான நரகந்தனைப் பொங் காதடக்கிடும் அரவுந்தேளும், (33)

(இ-ள்):—இன்னும் றமலான் மாதத்தில் ஒருஇரவையில் லைலத்துல்கதறி யென்கிற தேவ கொண்டாட்டங்கள் உலகத்தில் தோன்றும் அந்த இரவையில் வணக்கஞ்செய்தால் அது மஹ்ஷரில் வருகின்ற பெருந்தாக முதலான எல்லா வருத்தங்களையும் போக்கடிக்கும். மக்காவில்போய் ஹஜ்ஜு செய்தல் நரகத்தை பொங்கவிடாமல் அடக்கி அங்குள்ள கொடிய விஷஜந்துக்களைத் தீண்டவிடாமல் மாற்றிவிடும். எ-று.

தேனு மரவுமே தீண்டாதின்னந் தீனோர் குபகாரஞ் செய்வதெல்லாம், வாளிற் கூர்மையாம் பாலவழி வானினிடங்காணும் வெளிதொலையு. மூழி லுளபதினொன் றுஞ்சொன்னே னுரைக்கும் பனிரண்டா மறிவைக்கேளு, மாளுந் தகப்பன்றாய் தனைவணங்க வாதிபெரியோனைச் சேருமென்றே. (34)

(இ-ள்):—இன்னம் தீனவர்களுக்கும் ஒரு உபகாரஞ் செய்தல் சிறுத்துல் முஸ்தகீன் பாலத்தின் பெருந்தொலையான வழிகளைச் சுருங்கச்செய்யும் என்று இவ்விதம் உறுதிப்படுத்துவதுதான் பதினொன்றும் அறிவாக இருக்கும் இனி பனிரண்டாம் அறிவைச் சொல்கிறேன் கேளுங்கள். அதாவது நம்முடைய அருமையான தாய்தகப்பன் மார்களுக்குப் பணிவிடை செய்து அவர்களை வணங்குவதானது தான். அதுதான் அல்லாவுடைய திருச்சமுகத்தில் போய்ச்சேரும் என்று உறுதிப்படுத்துவது தான் பனிரண்டாம் அறிவாக இருக்கும். எ-று.

சேரு மிறையோனைத் தகப்பன்றாயை சினந்தி டாமனஞ் செய்யுஞ்செய, லாரு மிகுலாத்தி னடையாளம்பத் தறிவு பனிரண்டாயருளினது, கூறுந் திருநெறிப்படலநாலிற்கோர்க்கும் பனிரண்டாந்தொகுதிதனி, லாறு பனிரண்டு பதினாலிறு மறையும் பதினைந்தில் வழியாய்ச்சொன்னேன். (35)

(இ-ள்:)—தாய்தகப்பன் மார்கள் வணக்கந்தான் எல்லா அறிவுக்கு மேலானது, என்றதோடும் பனிரண்டு அறிவுகளும் சுருக்கமாய்ச் சொன்னேன். இதன் விபரங்களை நான் செய்திருக்கின்ற திருநெறிநீதி யென்ற நூலில் சொல்லி இருக்கிறேன். எப்படியானால் நாலுபடலத்திலும், பனிரண்டு தொகுதிகளாக 6-வது கவியிலும் அதிலிருந்து பனிரண்டாம் கவியிலும், பதினாலு பதினைந்தாவது கவியிலும் நல்ல வழிமுறையாகச் சொல்லியிருக்கிறேன். எ-று.



சொன்னேன் றிருநெறி நீதந்தனிற் சோக மணுகாத படலம் ரண்டி, லின்னம் பதின்மூன்றுந் திட்டந்தனி லியம்பினேன் காணியாகுவாறு. மன்ன வறிவார்களைப்பத்தொன்றி லறைந்த பதினாலாந்திட்டந்தனி, லுன்னிடுமிமாம்கத்தீபுதம் முன்மைதான்பத்தொன்பதுமுறைத்தேன்.

(இ-ள்):—இன்னும் என்னுடைய திருநெறி நீதிஎன்கிற நூலில் இந்த விபரங்களை விரித்துஇரண்டு படலங்களிலும், பதிமூன்றாவது திட்டத்திலும் பதினான்காவது திட்டத்திலும், ஐம்பத்தொரு ஞான விஷயங்கள் சொல்லியிருக்கிறேன். அது உலகத்தில் எவராலும் சொல்லப்படாதது. பதினாலாந் திட்டத்தில் கதீபுலெப்பைமார்கள் நடக்கவேண்டிய பத்தொன்பது அறிவிகளையும் சொல்லிவிட்டேன். எ-று.

உரைக்கும் பதினாலாந் திட்டந்தனிலோதினேன் தீன ருயர்த்தியெல்லாந், திறத்தி னாற்பத்தெட்டறிவுமாகுந் தீனோரிருநூற்றைம்பதுமறியத் திறத்தின் வகையான திருநெறியைத்தெளிவாய்ப் படலநால் முழுதறிய வுரைத்த படியேதான் தீனோரெல்லா முலகினடப்பது பொருட்பாலிதே. (37)

(இ-ள்):—இன்னும் அந்தப்பதினாலாவது திட்டத்தில் தீனவர்களுக்கிருக்கின்ற தறஜாக்களை யெல்லாம் விடுவித்துச் சொல்லிப் போட்டேன். இன்னும் அதிலுண்டான நான்கு படலத்திலும் உலகத்திலுண்டான நாற்பத்தெட்டு அறிவுகளையும், இருநூற்றைம்பது விஷய சூசிகையாகக் காட்டிவிட்டேன். யாராவது ஒரு தீனவன் அந்த நாலுபடலத்தையும் உணர்ந்து விடுவானானால் அவனுக்கு உண்மையாகப் பொருட்பாலானது நிரப்பமாயிற்று என்று எண்ணலாம். எ-று.

பொருட்பால்-முற்றிற்று.

ஆக-திருப்பாடல் 37

## இரண்டாவது-அருட்பால்.

—x—

இதுதான் அருட்பாலென் றறிவதாகு மின்னந்தலமுறையெளிதாய்ச்சொல்வே, னிதமுந் தொழுகவே வலுவையில் லாளினைவில் வணக்கந்தானிலே நிறுத்த, மதினமுகம்மதைநாயன் றனை

மகிழ்ந்து புகழவும் வப்பகற்றி, நிதமுந் தகப்பன்ருய் தலைவணங்க
நிகரிலாப் பலனதிகந்தானே. (38)

(இ-ள்)—சகோதரர்களே! இப்போது நான் சொல்லப்போ கிறதுதான் அருட்பால் என்றறிந்து கொள்ளுங்கள். அதாவது— மதுரிபாவின்படி நடந்து வணங்க ஏலாதவர்கள் தங்களுடைய மனதில் றகுமானையும், நபிநாயகம் அவர்களையும் உருக்கத்துடன் வைத்துதியானித்து உலகத்திலுள்ள ஒரு கசடான செயலிலும் மனதை விடாமல் இருந்து தகப்பனையும், தாயையும் வணங்கிக் கொண்டுவந்தால் அதுவே பெரிய நன்மையாகு இருக்கும். எ-று.

தானே கருபாவில் ஹச்சுசெய்யார் தலத்தில் வெள்ளிநாட்ப
கற்ஜெழுக, வான பீசபீல் வெட்டமாட்டா ரறிவுபடித்துத்தான்
கொடுக்கப்போதும், வானே னறுஷோடு கருபாத்தனை வைய
மனுவோர்கள் செய்யவென்ருல், வானேன் வணக்கத்தை யுலகத்
தோர்க்கு வருத்தி யிணைக்கியே திருத்திவைக்க. (39)

(இ-ள்):— மக்காவில் உள்ள கஃபாவிற்போய்ஹஜ்ஜுசெய்யத் திராணியற்றவர்கள், தங்கள் ஊரில் உள்ளபள்ளிகளில் ஜும்ஆ தொழுதால் போதுமானது. தீனுக்காகவேண்டி வாளையெடுத்து காபிரீன்களுடன் அடர்ந்து பீஸபீல் செய்யத்திராணி யில்லாதவர்கள், நாலு சிறுபிள்ளைகளுக்குக் குர்ஆனை யோதிக்கொடுத்தால் போதுமானது, இது ஆனது கஃபாவையும், அறுஷினடியும் தவாபு செய்வதைப்பார்க்கிலும் மேலானது. எ-று.

வையம் பலநோன்பு பிடிக்கமாட்டார் வாய்வம்பளக்காம
லிருக்கப்போது, மெய்யாகிய ஆலி மாகமாட்டா ரெவர்க்குமுகப்
பத்தாயிருக்கப்போதுங், கையால் கைஜெடு ஸக்காத்தியயார்
ஹறமா முடைமையை விலக்கப்போது, வையம் பலதருமங்கள் செய்
யாராதாயமின் றிக்கொடுத்துவாழே. (40)

(இ-ள்):—றமலான் மாதத்தில் முபபதுநாளுப்நோன்பு பிடிக்க இயலாதவர்கள், வாயால் பொய்பொல்லாங்கு சொல்லாமல் இருப்பதுபோதுமானது, இல்மைப்படித்து ஆலிமாக ஏலாதவர்கள் மனிதர்களுடன் அன்பாக இருந்தால் போதுமானது, தமது கையால் பணப்பையை அவிழ்த்து ஸக்காத்து கொடுக்க மனமில்லாத கருமிகள், ஒருவருடைய சொதகை அபகரிக்காமல் இருந்தால்



போதுமானது. ஏழைஎளியவர்களுக்கு தானதர்மங்கள் செய்யாத லோபிப்பயல்கள் வட்டியில்லாமல் கொடுக்கல் வாங்கல் செய்தால் போதுமானது. எ-று.

வாழ வுபகாரஞ் செய்யமாட்டார் வாழ்வோர்க்கிடர் செய்யா
திருக்கப்போது, நாளெல்லாங்குரு ஞேதமாட்டார் நாஹுதிரதிசம்
குல்கூவோது, வாழுமிரவெல்லாந் தொழுகமாட்டார் வடிவு ஹறுங்
கண்டால் விழியைமூடே, வாழுமிறை தீதார்காணமாட்ட ராகாச
செயல் வாரச திருக்கப்போதும், (41)

(இ-ள்):—ஒருவன்பிழைக்கும் பொருட்டு உபகாரமான சகாயஞ்செய்யாத கெடுப்பர்கள், அவன் பிழைக்கும்போது அந்தப் பிழைப்புக்கு யாதொரு இடர்களும் செய்யாமல் இருந்தால் போதுமானது குர்ஆன் முப்பது அத்தியாயங்களையும் ஓதித்தமாம் செய்ய திராணியில்லாதவர்கள் குல்ஹுவல்லாஹு ஹுர்து என்கிற சூருவை ஒரு நாள் ஒன்றுக்கு நான்கு தடவை சொன்னுல் போதுமானது. இராக்காலங்களில் கண்விழித்திருந்து ஆண்டவனை வணக்கஞ் செய்யாதவர்கள் ஹறுமான பார்வைகளை விட்டும் கண்ணைமூடிக்கொண்டால் போதுமானது தவ்ஹீதான ஞானத்தை உணர்ந்து தன்னிலே யளவிற்றரிபட்டு தன் றப்பைத் தெரிசியாத ஈனஜனங்கள் உலகத்தில் ஒருபாவதோஷமும் செய்யாமல் இருந்தால் போதுமானது. எ-று.

மார்க்கமறிவுகள் படித்தறியார் மனதிற் கசடில்லாதிருக்கப்
போது, மூக்க முடைமானங்கொடுக்கமாட்டா ருதாசினஞ் சொல்
லா திருக்கப்போது, மார்க்க மதிலொன் றுமறியமாட்டார் மைவித்
தொருநேரங் குளுப்பாட்டவு, மார்க்குங்கிடையாதேயின்ன மொன
றிங் கல்லா பொருளைத்தான் கொள்ளையிட, (42)

(இ-ள்):—இன்னும்வேதசாஸ்திரங்களைக்கற்று அதன்படி நடக்க மனமில்லாத ஈன ஜனங்கள் மனதில் கெட்ட எண்ணங்களை விட்டும் சாதாசீதாவாக இருந்தால் போதுமானது. இல்லாத ஏழைகளுக்கு உடுமானங்கள் கொடுக்கமாட்டாத லோபிகள் யாருடைய புறணிகளையுஞ் சொல்லாமல் இருந்தால் போதுமானது. ஷரீஅத்தின் விதவிலக்குகள் கண்டு நடக்காதமூடர்களாயுள்ளவர்கள் மையித்துகளை ஒருபோது குளுப்பாட்டினுல்போதுமானது. எப்பேர்ப்பட்ட நாதாக்களுக்குங் கிடைக்க அரிதாகிய

ஒரு வணக்கம் இருக்கிறது. அது தவாபுகளைக் கொள்ளையடிக்கிற தாக இருக்கும் அதாவது கீழே சொல்கிறேன். எ-று.

கொள்ளைக் குமியலா மல்லாபொருள் கொடிய பாவிக்குந்
தவத்தோர்க்குந்தா, னுள்ள வயதெலாம் ஹச்சுப்பல னொருநாட்
கொருகோடி ஹச்சுப்பல, னென்னு மலைபோலே யெண்ணரிதெ
யெக்காலமு முள்ள முழுகுந்தீரும், பள்ளி தனில்ஸனுசாகிடத்திப்
பத்தியாய்நின்று தொழுதபேர்க்கே. (43)

(இ-ன்):—இப்போது சொல்கிறதாவது அல்லாவுடைய ஐஸ்வரியங்களைக் குமியில் குமியலாக வைத்துக் கொள்ளையிட்டதற்குச் சமானமாக இருக்கும். இன்னும் தீராத பாவிகளுக்குப், நாதாக்களுக்கும் சரிசரியாக கோடி ஹஜ்ஜு செய்த பலனைக் கொடுக்கும். இன்னும் அதனால் கிடைக்கும் நன்மைகளானவை உலகத்திலுள்ள மணல்களை பாக்கிலும் கணக்கிலுயர்ந்தது. எந்த காலமுந்திராத முழுக்கான தொடக்குகளுந்தீர்ந்துவிடும். அது என்னவென்றால் பள்ளிவாசலில்வருகிற மையித்துக்களைத்தொழுவிக்கும் கூட்டத்துடன் கூடிநின்று தொழுகிறதாக இருக்கும். எ-று.

தொழுதோ ரெடுந்தவர் துயில்கொடுத்தோர் தோளுந்தலை
மேலுஞ் சுமந்தோர்க்குத்தான், மூழுதுநீர்விட்டு முழுக்காட்டினோர்
முன்னாலேயிமா மாகநின்றோ, ரழுதோரை வேண்டா மெனவே
சொன்னோ ராழக்குழிகல்லி யடக்கிவைத்தோ, ரெழுதமுடுயாதே
யிவர்கள் பல னிமாமுக்குப் பலன் பத்தாகுமே (44)

(இ-ன்):—அவ்விதப் வரக்கூடியமையித்தைக்கூட்டஞ் சேர்த்து தொழுதவர்கள், தொழாமல் நிற்கின்ற ஏமாளி ஜனங்களை தொழவாருங்கள் என்றழைத்தவர்கள், சந்தூக்கைவிட்டும் தூக்கிக்கொண்டு வந்தவர்கள், அநாதியான மைத்துகளுக்குக் சுபன்வஸ்திரங்கள் கொடுத்துதவின சீதேவித் தனமுள்ளவர்கள், கஷ்டத்தைப்பாராமல் தூக்கித் தோள்மேலும், தலைமேலும் சுமந்தவர்கள், கையால் நீரைமொண்டுமொண்டு குளிப்பாட்டினவர்கள், கூட்டங்களுக்கு முன்னால் இமாமாக நின்று தொழுவித்தவர்கள், கண்ணீர்விட்டு அழுகின்ற மையித்தின் சொந்தகாரர்களுக்குத் தேறுதல் சொல்லி அமர்த்தினவர்கள், சட்டப்போல் கபுறுக்குழி வெட்டினவர்கள் முதலான இந்த சகோதரர்களிக்குக்



கிடைக்கும் நன்மையின் பெருக்கத்தை மலக்குகளும் எழுதச் சடைவார்கள். ஆனால் மையித்தை தொழுவிக்கும் இமாமானமானவர்க்குப் பத்துக்காரியம் விதியாக இருக்கும். அவைகளைப் பின்வருமாறு சொல்கிறேன்.

அருட்பால் முற்றிற்று.

# இமாமுடைய நிலை.

பத்து காரிய மில்லாதவர் பகரிமாம்செய்யப்பாவியாவார், நித்தம்
ஷஹறிலே முழிக்கவேண்டு நேரந் தவறுமல் யெழுக வேண்டு
மர்த்தம் பொருளெல்லா மறியவேண்டு மடுத்த சுன்னத்தை விட
வொண்ணுநா, முத்து வுடுமானமுண் ஹறவாயெழுகும் பனிரண்டு
நிலை பொருந்திக் கத்த னறிவுடன் ஹலாலைப் பார்த்துக் கடுந்த
முழுக்காளியாக வேண்டும். (45)

(இ-ள்):—கீழே சொல்கிற பத்துக்காரியமும் இல்லாமல் இமாமத்து செய்கிறவர்கள் யாராயிருந்தாலும் சரியே பாவியாகிப் போவார்கள் அந்தப் பத்துக்காரியங்களாவன பிரதி தினமும் ஸஹர் நேரத்தில் கண் விழிக்கிறதும், ஒரு வேளையாவது கலாவில்லாமல் தொழுகிறதும், குர்ஆனைக் கிருஅத்துடன் வோதுகிறதும், அதன் அர்த்தங்களை விளங்கியிருக்கிறதும், பிக்ஹுவுடைய இல்மில் தேர்ச்சியடைந்திருக்கிறதும், சுன்னத்து தொழுகைகளைத் தவறுமல் தொழுகிறதும், வஸ்திரங்களை ஒஜீபனங்கள் ஹலாலாக்கிக் கொள்கிறதும் சொந்த ஹலாலான பெண்களுடன் ஜிமாஉ செய்கிறதும், எந்தநேரமும் துப்புறவாக இருக்கிறதுமாக இருக்கும். எ-று.

ஆக விரைந்தா மமல்பொருந்தி யஞ்சியிமாமஞ்சி கிபுலாவுடன்
வாகின் மிகுருபு பைந்தரிய வளமாம் பதினைந்து மிமாமுநிலை,
பாகுஞ் சரீர மமுயிருப்புத்தி பகுமு நினைவைந்து பாயிரமாய்,
வாகின் கிபுலாவின் கருபாவினோர் பைத்துல் மகுமூறு குறு
ஷிறுசாம். (46)

(இ-ள்):—இப்படியான பத்து அமல்களும் பொருந்திருப்புதுடன் பாவமானச் செயல்செய்ய இஸ்ராம்பவும் மனதில் அச்சமுள்ளவராகவும் இமாமில் ஐந்தும் கிபுலாவில் ஐந்தும் மிதுருபில்

ஐந்தும், நல்சரீரம் கூர்மையான அக்கில் நல்ல ஞானமும், வியாபக சக்தியும் இருப்பதுடன் பைத்துல்ம உமூர் அறுஷு குர்சு முதலான கிபுலாக்களையும் கூடிய வரையிலுந் தெரிந்திருக்க வேணும். எ-று.

ஆகுநினைவந்து கிபுலா நிலை யைந்து மிகுருபும மலைந்தாமே
யேக இசுலாமு மூமினுமா மில்மு பொருந்திய விஷைதந்தாகும்
மாகு மூமின்க ளறிவுமைந்தும் பாஸிக் கானவர் செயலுமைந்தா
மாகிச்செயல் தள்ளி மூமின்செய லைந்து மறிந்தவர் மூமினாகும். ()

(இ-ள்) நினைவுகளில் கிபுலா மிஹ்ருபுகளைப்பற்றிய அமல்கள் ஐந்து காரியங்களையும் ஞாபகம் வைக்கவேண்டும். இசுலாமாக இருப்பதுடன் முஉமீன் இல்மு முதலான ஐந்து காரியங்களும் பொருந்தி யிருக்கவேண்டும். இன்னும் மூமீன்களுடைய செயல்கள் ஐந்தையும், பாசிக்கானவர்களின் செயல்கள் ஐந்தையும் அறிந்திருக்கவேண்டும். அவைகளில் பாசிக்கீன்கள் உடைய செயல்களை விலக்கிவிட்டு மூஉமீன்களுடைய செயல்களை எடுத்து நடக்க வேண்டும். அப்படிச் செய்கின்ற இமாமே மூமினாவர். எ-று.

இமாமுடைய நிலை முற்றிற்று.

## பாசிக்கானவர் செயல்.

ஆகுமுலகெல்லா மலைந்தலைந்தே யந்தி தனில்மனை யுகந்தபாவி
தாக முலகெல்லா மலைந்திடடாலுந் தனிமை கபுர்நிலை மூமினுக்கே
யாருந் துனியாவை யுவந்தபாவி யாகிர் நிலைநின்றோர் தாங்கள்மூமி
னாகும் ஹயாத்தையே யுவந்தமூமி னவனை யுவந்தவர் மூமினாமே. ()

(இ-ள்) :— ஊர் உலகமெல்லாஞ் சுற்றிவிட்டு அந்திபட்டால் வீட்டுக்கு வந்து ஒரு வணக்கமும் செய்யாமல் அல்லாவுடைய யாது இல்லாமல் இருப்பார்கள். இவர்கள் ஆயுசெல்லாம் அலைந்த போதைக்கும் கடைசியில் கபுரில் வெளிச்சமுள்ளவர்கள் மூமினானவர்கள். தான் பாசிக்கீன்களோ! துனியாவையே உகந்திருப்பார்கள். மூமின்களோ? ஆகிரத்தையே உகந்திருப்பார்கள். பாசிக்கீன்கள் தன் சரீரத்தையும், உயிரையும் உகந்திருப்பார்கள். மூமின்கள் அல்லாவைத்தான் உகந்திருப்பார்கள். எ-று.



மூமீன் றனமெல்லா மழித்துவைக்கு முடுமைப்பாவத்தையு
வந்தபாவி சீமான் றனஞ்செயு நன்மைதனைச் சிந்தைதனில் வைக்கு
மூமினென, ஈமா னிலையுள்ள மூமினென்று மிவரே யிமாமத்
துக்கு கையமென்று, மாமினூர்மக ளுலநபி யண்ணல் முகம்மது
நபியுரைத்தார். (49)

(இ-ள்):—இன்னும் மூமீன்களுடைய அமல்களான செல்வத்தை அழித்துவிடக்கூடிய பாவமாகிய வறுமையைச் சுமந்து திரிவார்கள் பாசுக்கீன்கள், மூமீன்களோ? எல்லா சீமான்தனமும் அல்லாவை யுகப்புவைக்கிறதுதான் என்று ஒரு முயற்சியையுந் தேடமாட்டார்கள் இப்படி யிருந்தால்தான் இமாமத்துச் செய்கிறதற்கு லாயக்காவார்கள் என்று உலகமாதாவாகிய ஆமினா அம்மா அவர்களின் திருப்பாலராகிய நமது நபிகள் பெருமானார் அவர்கள் அருளிச் செய்தார்கள். எ-று.

வேறு

நபியாச முகம்மது மார்க்கமெல்லா நமக்கு நடக்கின்ற விதங்க
ளெல்லா, நபியா முகம்மதுக் கிறையோன்சொன்னலு இமாமத்
நபிசொற்படி, கவியின் பலஞானந் தவநிலையுங் கருத்தின் ஷரீஅத்
தின் வகையுளதும், புவியின் மனுவெல்லாம் நடக்கும்வகை
யுகன்றுரதைப் பொருட் பாலிற்சொன்னேன். (50)

(இ-ன்):—இந்த சபபான கருமங்களை அல்லாஹுத்தஆலா நமது நபியவர்களுக்கு அருளிச் செய்தான். அதையவர்கள் தங்கள் அஸஹாபுகளுக்குக் கட்டளை செய்தார்கள். அவைகளைத் திரட்டி மதுஹபையுடைய இமாம்கள் தங்கள் கிதாபுகளில் கோர்வை செய்தார்கள். அதைப் பார்த்துத்தான் நானும் இந்த மஅரிபத்துமாலையில் பொருட்பாலில் விபரமாகச் சொல்கிறேன். எ-று.

பொருளின் பாலிலே யறியசொன்னேன் புள்ளுமருட்பா
லின் பொருளுரைப்ப, னிருளை விலக்கிய கலிமாத்தனி லியப்புமிரு
பத்து நாலெழுத்து, மருளச்சறகுதான்கறிவதுவுமாதிபெரியோனை
யறிவதுவும், பொருளின் புழச்சியின் புதுமையல்லாம் பிரித்து
விபாமாய் விளம்பலுற்றேன். (51)

(இ-ள்):—பொருட்பாலில் காட்டிய விபரத்தை அருட்பாலிலும் சொல்லிவிட்டேன். அதாவது கலிமாவில் இருபத்து நாலெ

முத்திலும் தன்னையறிவதுவும், தன்றப்பையறிவதுவும் இதுதான் அதன் பொருளென்று திட்டமாக அறிந்துக் கொள்ளுங்கள். எ-று.

விளம்பக் கேளுங்கா ளுலகத்தாரே வேத பெறியவன் றனி யோனுமாந், தழும்பில்லாநபி தாபரமாந் தக்க கலிமாவு முயிர்நிலை யாங், கழிபபில்லாததோர் கலிமாவுந்தான் கதவு கமலத்துத் திற வுகோலா, மெழுப்புஞ் சுழற்சுற்றை யறியார்குபி ரிலங்குந் திறவு கோ லெழுத்தானதால். (52)

(இ-ள்):—இன்னும் சொல்கிறேன். கேளுங்கள் உலகத்தார் களே! அல்லாஹுத்தஆலா என்பவன் நம்மில் தனித்ததோர் மறைபொருளாக நிற்கிறான். முகம்மதாகிறது நம்மில் பிரதான ருஹாக நிற்கின்றது. ஹாவென்னும் திக்ருனது உயிருக்கு அஸ்தி வாரமாக நிற்கின்றது. கலிமாவோ! நமது இருதயமானது திறப் பதற்குத் திறவுகோலாக இருக்கின்றது. இந்த சூட்சாதி சூட் சங்களை யறியாத மனிதர்களெல்லாம் திட்டமாக காபிர்களாக இருக்கும். எ-று.

ஆனபடியகலேயறியாரெல்லாமறுந்த பாவியாயழிவார் திண்ண மீன மணுகாதநாயன்றானுமெல்லாப் படைப்புக்கு முன்னானான், றானேதானவ னுடலுயிராய் தரத்தில் அனைத்துமே நிறைந்த நாயன், வானத்துயர்ந்தவ னொருவனாக வையமனைத்துமே சமதா யினான். (53)

(இ-ள்):— ஆனபடியால் இந்த இல்முகளைப்படித்து அறிய வேண்டியது ஒவ்வொருத்தருக்கும் முக்கிய கடமையாக இருக்க தவரவிட்டார்கள், எல்லாம் கடைசியில் கைசேதவாளராக இருக் கும். அல்லாவின்மேல் பொருப்புவைக்கிறது நல்ல கூர்மையுள்ள புத்திமான்களின் நம்பிக்கையில்ல, ஏனென்றால் அதானது உலகத் திலுள்ள நல்லது பொல்லாதது எல்லா ஜீவருசிகளிடத்திலும் பூதங்கள் வாயிலும் நிரம்பிய சமதானதாக இருக்கிறது. உனக்கு கூலிவண்டுமானால் நீ பிரயாசை யெடுத்துக்கொள் அப்பால் பலாபலன் பெருவாய். எ-று.

சமதாய்நிறைந்தானென் றெவருஞ்சொல்வார் சபது நிலைய தின்விதமறியா, ரிதமாமிருவிழியொளியதாகு மின்னமிருள்காற்று நிரப்பிநின்ற, நிதமுங் குதறத்தைப் பொருந்திப்பார்த்தானிற்குமு



லகெல்லா நிறைந்தசோதி, பதியினிலையெல்லாங் கலிமாவினூற் பாங்காய்ப் பலமொழி யொருமொழியாம். (54)

(இ-ள்):— உலகத்தார்கள் அல்லாவின் ஹிக்மத்தையறியாமல் அல்லா ''ஸமதானவன்'' என்று இப்பதான் கண்டவர்கள் போலச் சொல்லிவிடுவார்கள். ஸமதான விதமும், கோலமும் இன்ன மாதிரிதான், என்று ஒரு கொஞ்சமாகிலும் அறியவே மாட்டார்கள். அவர்கள் இரண்டு கண்ணையும் அடிக்கடி பார்ப்பார்கள். அதன் உள்ளிருக்கும் பாப்பா என்கிற ஜோதியையும் பார்ப்பார்கள். இன்னதுதான் என்று அந்த பைத்தியக்கார ஜனங்கள் அறிவார் களா? அறியமாட்டார்கள். இருளையும் காற்று முதலான வஸ்துக் களையும், காண்பார்கள். அவர்களுக்கு என்னதான் தெரியும்? அது குதுறத்தை அணுகிப் பார்த்தால் அப்போதல்லவா இன்னது இனியது என்று தெரியும், அப்படி அறிந்தவர்களுக்கு அதுவானது கலிமாவில் உள்ள ஒரு மொழியானது பலபல வடிவமாக பலபல பாஷைகளாக பிரிந்து உலகெல்லாம் ஒரே ஜோதி வடிவாகத் தெரியும். எ-று.

மொழியாமொருவொளி யகன்றசோதிமுழியி னொளிவாகும் விருக்ஷமாகுந் தெளிவாய் விருட்சமா யநந்தங்கோடி திரண்ட கனியால் மிருண்டலோக, மொளிவாய்க் கதிர்மதியுருவ மொன்றிங் குலகி நிறைந்திடு முவமைபோலக், குழியினொருகோடி நிறம் பளிங்கின் கோலஞ் சரிகாணுங் கொள்கையாமே (55)

(இ-ள்):— தன்னையறிந்த ஆரிபீன்களுக்கு அந்த ஒரு அட்சர மானது, ஒரு சொருபமற்ற மொழியாக நின்று தொனித்து அப்பால் ஒரு விருட்சமாகி அதில் நின்றும் பலபல பணர்களாகி பலபல கோடான கோடி இலை கிளைகளாகி உலகெல்லாம் நிறைந்து அதில் உள்ள கனிகளானவை சூரிய சந்திரப் பிரகாசம் போல ஜொலித்து தன் இருதயத்தில் ஒரு கண்ணாடி போல நின்று எல்லா ரகசியங்களையுந் தெரியச் செய்யும். எ-று

பாசிக்காளவர் செயல் முற்றிற்று.